411
3

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-26 எண். 1.2.3

ஜூலை முதல் செப்டம்பர் வரை

1937

JL
R65m 211,N12
N37.26.1-3
158113

# SRI VEDANTA DIPIKA

Vol. 28] JULY 1937 [Part 1

471

OFFICE OF THE ... MADRAS
30 OCT 1937

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

ஈசுவர ௵



ஆனி ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியார்

CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

VANI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# விஷய ஸூசிகை


1. சோன்மாலை — 1
 [ஸ்ரீ. உப. C. நரஸிம்மாசாரியர்]

2. யோஜநாரஸாஸ்வாதம் [பத்திராதிபரின் குறிப்பு] — 6
 காளிதாஸனும் பாந்யாஸமும் — 6
 [ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்]

3. ஸேநேச்வராசார்யர் அருளிச் செய்த ந்யாயகலாபஸங்க்ரஹம் — 8
 [ஸ்ரீ. உப. வி. அனந்தாசார்யர்]

4. ஆழ்வாரும் ஸ்ரீ தேசிகனும் — 10
 [ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மாசாரியர்]

5. ப்ரம்ம விசாராதிகார நிர்ணயம் — 17
 [ஸ்ரீ. உப. தி. வீரராகவாசாரியர்]

6. விவாத பாகம் — 28

7. விருத்தாந்தங்கள் — 35

8. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 1—8


---

குறிப்பு :—நம் தீபிகையின் வருஷம் நாளது ஜூன் மாதத்துடன் முடிவு பெறுகிறபடியால் நம் சந்தாதாரர்கள் அனைவரும் பாக்கியுள்ள சந்தாத்தொகைகளை ஸபையின் விலாஸத்துக்கு அனுப்பவேண்டுமாய் கோருகிறோம்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
*Joint Secretaries.*

# வேதாந்த தீபிகை 25ம் ஸம்புடம்

## விஷயங்களின் அகராதி.


அடியார் திருவடிப்பொடி ... ... 440
அஹோபிலமடத்து ஸ்ரீமுகம் ... .... 1
ஆண்டாள் அல்லது சூடிக்கொடுத்த சுடர்கொடி ... 295
ஆதிகாவ்யமும் ப்ரஹ்மமீமாம்ஸையும் ... 411
ஆயுர்வேதம் ஐஹிகாமுஷ்மிக ஸாதநம் ... 576
ஆவ்ருத்யதிகரண ரஸங்கள் ... ...696,71,251
இத்தை முடித்தல் கடத்தல் ... ... 153
ஒரு ஆசார்யன் போதுமா ? அல்லது பலர் வேண்டுமோ ? 597
ஒரு கோபஸ்திரீயின் அநுபவம். ... ... 386
ஒரு நாள் விவாஹமும் தர்ம சாஸ்திரங்களும் ... 702
கழ்பனும் கண்ணனும் ... ... 142
கர்ம ப்ரம்மகாண்டங்களின் ஐகாஸ்யம் ... 672
கீதா மகிமை ... 92,132,189
கொச்சி மஹாராஜாவுக்குப் பாராட்டு ... 568
சமயாசிரியர்களும் தமிழும் ... ... 195
சரீராரோக்யமும் புதுநாகரிகமும் ... ... 269
சித்தூர் ராமாயணோபந்யாஸம் ... ... 330
சௌசம் அல்லது பாரிசுத்யம் ... ... 242, 302
ச்ருதி ஸ்ம்ருதிகள் முற்றும் ப்ரமாணமே ... 416
தமிழ் கிளி ... ... 235
தர்ம.ப்ரமாண விசாரம் ... ... 592
தாய்மொழி பேணல் ... ... 489
திருக்கோட்டியூர் ஸ்வாமி திருவுள்ளம் என்ன ? ... 843
திருப்பதி தீர்மானம் ... ... 409
திருப்பாணாழ்வார் ... ... 349
திருவல்லிக்கேணி தமிழ் சங்கம் ... ... 567
திருவள்ளுவரும் திருமகளும் ... ... 271
திருவள்ளூர் பாடசாலை ... ... 329
திவ்ய சூரி சரிதம் ... ... 241—392
தீபிகையின் புத்தாண்டு ... ... 669
தேசிகன் அவதார ஸ்தலங்களும் உத்ஸவங்களும் ... 161
தேசிகன் திருவவதார வைபவம் ... ... 219
தேசிகன் வாழித் திருநாமச் சிறப்பு ... ... 321

158713




தேவாதிராஜன் ராமகிருஷ்ண உபயமூர்த்தி ... 595
[illegible] வைபவம் ... ... 569
[illegible]பெருமாளின் வடிவழகு ... ... 388
நிகமாந்த தேசிகனும் பாதஞ்சல யோகமும் ... 199
நிகமாந்த மகாதேசிகன் தனியன் ... ... 712
பாதுகா பட்டாபிஷேகம் ... ... 66
புத்தக விமர்சம் ... ... 164
ப்ரம்ம விசாராதிகார நிர்ணயம் ... 368, 420, 470
மகாவீர வைபவம் ... ... 171
மதுராந்தகத்தில் தோன்றின சுதர்சந பாஞ்சசன்னியங்கள் 565
மநுஷ்ய சரீரமும் சாரீரகசாஸ்திரமும் ... 107
மறையின் மறைவிடம் ... ... 365
மன்னு புகழ்மா முனிவன் ... ... 227
மீமாம்ஸா ஸங்க்ரஹம் ... 717, 84, 146, 206
யாகம் செய்வதைப்பற்றி ஓர் அபிப்ராயம் ... 379
ரஹஸ்ய ஸந்தேசம் ... ... 292
வரதராஜ பஞ்சாசத் 704, 89, 165, 220, 315, 427, 467
வாசுதேவாசார்யஸ்வாமி S. ... ... 355
வேத வைபவம் ... ... 688, 76
வேத வைபவ விமர்சமும், ப்ரம்ம விசாராதிகார நிர்ணயமும் 280, 307
வேதாந்த தீபிகையும் தமிழும் ... ... 389
விபரீதம் போலும் சில அநுபவங்கள்.... ... 129
விவாத பாகம் ... .... 152
ஸம்பாதகரின் குறிப்புகள் ... ... 665, 112
ஸித்தாந்த ஸம்பந்த வ்ருத்தாந்தங்கள் ... 476
ஸ்வப்நங்களின் தத்வ விசாரம் ... ... 139
ஸ்ரீ பகவத் ராமாநுஜ மஹோத்ஸவ மலர் ... 491, 564
ஸ்ரீ பாஷ்யத்தில் ஓர் பாடபேதம் ... ... 159
ஸ்ரீமத் ராமாயண ரஸாஸ்வாதம் 121, 181, 269, 331, 357, 445
ஸ்ரீ ராமாவதார வைபவம் ... ... 679
ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம் ... ... 117—138
ஸ்ரீவைஷ்ணவம் ... ... 596
ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தம் ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு ஸங்கிஹிதம் } ... ... 453
சதுஸ் ஸூத்ரீ ஸ்வாரஸ்யம் ... ... 481
ஜகத்குரு அனந்தாசார்ய ஸ்வாமி ... ... 64


# சொன்மாலை

[ஸ்ரீ. உப. C. நரஸிம்மாசாரியர், அட்வகேட், சென்னை]

1. "சூட்டினேன் சொன்மாலை" என்றும் "நமோ நாரணா என்னும் சொன்மாலை கற்றேன்" என்றும் சொல்லுகிறபடியே திருவஷ்டாக்ஷரத் பிரதி பாத்யமான முதல் திருவந்தாதி சொன்மாலை எனச் சிறப்புப் பேர் பெற்றது. "புகை விளக்கும் பூம்புனலுமேந்தி" என்றும் "தொழுதுமலர் கொண்டு தூபம் கை யேந்தி" என்றும் "தாமத்தால் வேள்வியால் தந்திரத் தால் மந்திரத்தால் நாமத்தால்" என்றும் சொல்லுகிறபடியே தூபதீபாதி உபகரணங்களோடு எம்பெருமானைப் பூசிப்பது பண்டை மரபு. ஆகவே முதலாழ்வார்கள் மூவரும் ஞானச்சுடர் விளக்கேற்றி வழிபட்டு "திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று எம்பெருமானை ஸாக்ஷாத்கரித் தார்கள்.

2. இவ்வாழ்வார்கள் கடைச்சங்கக் கவிகள் என்பாருமுண்டு. "பெருந்தமிழன்" என்றார் பூதத்தாழ்வார். இவர்கள் அயோநிஜர்களாய் கச்சி, கடன்மல்லை, மயிலை என்னும் திவ்ய தேசங்களிலே தாமரை, குருக்கத்தி, அல்லி மலர்களிலே அவதரித்தார்கள் என்ப. நம் பூர்வாசாரியர்கள் பலரும் இந்த அவதார ஸ்தல ஐதிஹ்யத்தையே அடியொற்றினார்கள். ஆயினும் பெரியவாச்சான் பிள்ளை "இவர்கள் அவதரித்தது ஓரோ தேசங்களிலே யாகிலும் காலப்பழமையாலே இன்ன விடம் என்று நிச்சயிக்கப் போகாது" என்பர். இதற்குப் பிரபலமான காரணம் ஒன்றுண்டு. பொய்கையாழ்வார் கச்சியில் அவதரித்திருந்தால் அவ்வூரிலுள்ள திவ்ய தேசங்களை பத்தும் பத்துமாகப் பாசுரமிடாமல் இருப்பது வியப்பே. முதல் திருவந்தாதியில் பத்துப் பாசுரம் வேங்கடத்தையும் "திருவேங்கடமுடையான் திருப்பலகையில் அமுது படியிலே மற்றைத் திருப்பதிகள் நாயன்மாருக்கு அளந்து கொடுக்குமாப்போல்" ஒரே பாசுரத்தில் ஸ்ரீரங்கத்தையும் இரண்டொன்றால் திருக்கோவலூரையும் பாடி மூன்றோடு ஒன்றாக "வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்...பூங்கோவல்" என்று கச்சியில் திருவெஃகா எம்பெருமானை மாத்திரம் மங்களாசாஸனம் செய்துளார். மயிலாப்பூரில் அவதரித்ததாகச் சொல்லும் பேயாழ்வார் வெஃகாவோடு வேளுக்கையாளரி, பாடகத்து நாயனார், அட்டபுய கரத்தான் முதலிய கச்சி எம்பெருமான்களுக்கும் பாசுரமிட்டுளார்.

ஆகையால் இவ்வாழ்வார் கச்சியில் அவதரித்தவரோ அன்றோ என்று சங்கிக்க இடமுண்டு. அப்படியிருக்க "காலப்பழமையாலே" என்று வரும் ப்ராசீன பாடத்தை "ஞானப்பெருமையாலே" என்று மாற்ற நாம் முயல்வது யுக்தமன்று. ஞானப்பெருமையாலே "வைகுந்தமோ, வையமோ நம்வியலிடம்" என்பதுபோல் அவதரித்த. இடம் தெரியவில்லை என்பதும் ஸ்வரஸமாயில்லை எனத் தோற்றுகிறது. அவ்வுதாரணம் வியப்புப் பொருளேயன்றி ஐயப் பொருள் அன்று. மேலும் ஞானப் பெருமை இன்னவிடம் என்று நிச்சயிக்க ஒரு காரணமாகுமேயன்றி நிச்சயிக்கப் போகாததற்கு ஒரு காரணமாகாது. அப்படி மாற்றினாலும் கச்சி, கடன்மல்லை, மயிலை என்று நிஷ்கர்ஷித்த பூர்வாசாரியர்கள் திருவுள்ளத்துக்கு விரோதமாக சந்தேகமாகவே நிற்கும். மாற்றியும் பயனில்லை

அன்றியும் "அன்று—கருவரங்கத்துள் கிடந்துகை தொழுதேன் கண்டேன் திருவரங்கமேயான் திசை" என்கிற முதல் திருவந்தாதிப் பாசுரத்தையும். "அன்று—கருக் கோட்டியுள்-கிடந்து கைதொழுதேன் கண்டேன். "திருக்கோட்டி எந்தை திறம்" என்கிற இரண்டாந் திருவந்தாதிப் பாசுரத்தையும் உற்று நோக்கினால் இவ்வாழ்வார்கள் ஸ்ரீ ரங்கநாதன், திருக்கோட்டியூர் நாதன் இவர்கள் அநுக்ரஹத்தாலே யோகிஜர்களாய் கருவிலே திருவுடையாளர்கள் என்று யோசிக்க இடமுண்டாகிறது.

பண்டைச்சங்க நூலான பெரும்பாணாற்றுப் படையை இயற்றிய கவிஞன் கச்சியைப் பலவாறாகப் புகழ்ந்து பேசி "அம் சிலம்பின் களிறு படிந்தாங்கு பாம்பணைப்பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்" என்று வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தைப் பாடியபோது பொற்றாமரைப் பொய்கையில் நற்றாமரைமலரில் பூத்த ஒரு அதிசயத்தைச் சொல்லவில்லை. அறிஞர் ஆராய்க. இதில் விபரீதமான தத்வார்த்த பேதங்கள் இல்லை. அவதாரஸ்தல விஷயமாய் பூர்வாசாரியார்கள் ஸாதித்த இருவகை யோசனையும் நமக்கு உத்தேச்யம் என்று கொள்வது உசிதம்.

3. இனி இப்பிரபந்தத்தில் சொல்லிய தத்வ ஹிதபுருஷார்த்தங்களைச் சிறிது ஆராய்வோம். "முதலாவார் மூவர் அம்மூவருள்ளும் முதலாவான் மூரி நீர் வண்ணன்" என்று வேதப் பிரமாண ப்ரஸித்தமான ஸ்ரீமந் நாராயணனே பரத்வம் என்றும் அதிகார புருஷர்களான பிரம்ஹ ருத்ராதிகள் "ஒருவன் ஒருவனங்கத்து என்றும் உளன்" என்று அவ்வெம்பெருமானுக்கு சரீர ஸ்தானத்தில் நிற்பார்கள் என்பர். "செவி, வாய் கண், மூக்கு, உடல், "இறையும் நிலனும் விசும்பும்!" "உலகும் உலகிறந்த ஊழியும்". முதலிய பாசுரங்களிலே எம்பெருமான் "புந்தியிலாய புணர்ப்பே" ஜகத்தாக பரிணமித்திருக்கிறது என்பர். ஆகவே பிரம்ம ருத்ராதிகள் உள்பட "மாணாய மன்னுயி"ரனைத்துக்கும் சரீரியாக நிற்பவன் ஸ்ரீமந் நாராயணனே யென்று சாரீரக சாஸ்திரம் என்று சொல்லப்பட்ட விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை பாசுரமிட்ட தமிழ்த் தலைவர் இவ்வாழ்வாரேயாவர்.

4. "வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல் செந்நிறீஇ" என்று பஞ்சேந்திரியங்களை அவை இட்ட வழக்காக்காமல் அடக்கி ஆள்வதே மோக்ஷோபாயம் என்பர். அப்படி அடக்குவது அரிது என்பது தோற்ற "மதக்களிறு" என்றார். "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும்" ஐம்புலனாகையாலே. பிள்ளை திருநாறையூரரையர் "புலியின் வாயிலே அகப்பட்ட ப்ரஜை தாய் முகத்திலே விழித்துக் கொண்டு புலியின் வாயிலே கிடந்து நோவுபடுமாப்போலேயாய் இருக்கிறது" என்று பணிப்பர். பற்பல பாசுரங்களால் இவ் வாழ்வார் "முதலாவார்" என்று புகழ்ந்து பேசின ருத்ர மூர்த்தியும் "ஐந்து பொறிவாசல் போர்க்கதவம்" சாத்தாமல் எம்பெருமானை அறியான் என்பர்.

இந்திரிய ஜயம் பெற்று. எம்பெருமானைப் பணிந்தால் அத்தகைய பாகவதர்கள் எவ்வினையராயினும் "நமன்தமரால் ஆராயப்பட்டு அறியார் கண்டர்" என்று யம படர்களாலே அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை என்று அறுதியிடுவர். ஐம்புலனை அடக்கி ஆள்வதின் பலனாய் மனது பரிபக்குவமாகவேணும். அஃதின்றி வேஷதாரிகளாய் ஓடித்திரியும் கபடிகளுக்குச் காரியகரமாகாது என்பதை இவ்வாழ்வார் வற்புறுத்துகிறார். "புந்தியால் சிந்தியாது ஓதி உரு எண்ணும் அந்தியால் ஆம் பயன் அங்கு என்?" என்று காயத்ரீஜபங்களை அந்திப் போதுகளில் கருக்காய் கடிப்பவர் போல் உருப்போடுவது வியர்த்தமே. "ப்ரஹ்மஹத்யாதிகளைப் பண்ணிப் பூணூலை வெளுக்கவிட்டுக் கையிலே பவித்திரத்தையும் இட்டு ஓத்துச் சொல்லித்திரிவாரைப்போல்" என்று நம் பூர்வாசாரியார்கள் பரிஷ்கரித்தார்கள். எம்பெருமான் கர்மபாரவச்யன் என்றும் வத்ஸலன் என்றும் சொல்வதை ஸமர்வயப்படுத்தினால் "ஆர்வம் புரியப்பரிசினால்" புல்குவார்க்கு வத்ஸலனாவனேயன்றி பிறர்க்காகான். "பத்துடையடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரியவித்தகன்" "நன்மை அவனாலே, தீமைநந்தாமாலே" என்று ஆறியிருக்கவேணும்.

5. "பரத்வம் நித்ய முக்தர்க்கு; வ்யூஹம் முக்த ப்ராயர்க்கு; விபவம் புண்ணியம் பண்ணினார்க்கு; அர்ச்சாவதாரம் பாபம் பண்ணின ஸம்ஸாரிகளுக்கே" என்னுமாப்போல் இவ் வாழ்வார் விபவமாகிற ராமகிருஷ்ணாத்யவதாரங்களிலேயும் அர்ச்சாவதாரத்திலும் நெஞ்சுருக்கிக் கண் பனிப்பர். விக்ரஹமும் விக்ரஹ ஆராதனையும் கால்பநிகம் என்றும் மூடர்

கொள்கை என்றும், "Idolatry" என்றும் பலவாறாகச் இகழ்ந்து பேசுகிறார்கள். இது அறியாமையே. எங்ஙனே யென்னில், எவ்வகையான த்யானத்துக்கும் ஓர் உரு வேண்டுவது இன்றியமையாதது என்பது மானஸ சாஸ்திர ஸித்தம். ஒவ்வொருவருக்கும் இது அநுபவ ஸித்தமாயுமுள்ளது. விக்ரஹங்களை எழுந்தருளப் பண்ணாத மதாந்தரஸ்தர்களும் த்யானம் செய்யும்போது ஓர் உருவை மனதில் கொள்வார்கள். சாஸ்திரங்கள் இவ்வனுபவத்தை ஒட்டியே நிற்கும். நஞ்சீயர் பிள்ளானைக் கண்டு, ஈச்வரனுக்கு ஸ்வரூப வியாப்தி தவிர. விக்ரகவ்யாப்தியும் உண்டோ என்று கேட்க அவர் ஈச்வரனுடைய ஸ்வரூப வ்யாப்தியைத்தான் எம்பெருமானார் அருளிச் செய்தார் என்றும் ஆனால் எம்பார், உபாஸகனுக்கு அநுக்ரஹார்த்தமாக ஆச்ரிதருடைய நெஞ்சிலே விக்ரஹத்தோடே வ்யாபித்திருக்கும் என்றும் "பணித்தாராம். மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே" என்கிற பரிபாடல் வாக்யம் இங்கு நோக்கத் தக்கது. விப வாவதாரங்களின் லாவண்யங்களை திருவந்தாதிகள் பரக்கப் பேசினும் அர்ச்சாவதாரத்தில்தான் இவ்வாழ்வார்கள் மனது தேட்டமாய் நிற்கும்.

6. ஸ்ரீ ராமாயணம், மஹாபாரதம் என்னப்பட்ட இதிஹாஸங்கள் ராம க்ருஷ்ணாவதாரங்களிலே மண்டி நிற்கும். இவ்வாழ்வாரும் அப்படியே. பட்டர் ராமாவதாரத்தில் போர பக்ஷபதித்திருப்பாராம். அவரை ஒரு நாள் சிறியாத்தான் கண்டு "கழுத்தில் ஓலைகட்டி தூதுபோ" என்கிற நீர்மை ராமாவதாரத்தில் இல்லையே என்ன அதற்கு பட்டர் "கழுத்தில் ஓலைகட்டி தூது போ என்பாரில்லாமை தவிர்ந்தார் அத்தனைகாண்" என்று அருளிச்செய்தாராம்.

இவ்விரண்டு அவதாரங்களைவிட "அன்றே பிறந்து, அன்றே வளர்ந்து, அன்றே பிக்ஷையிலே அதிகரித்து, அன்றே மஹாபலி யக்ஞவாடத்தளவுஞ் செல்ல பூமி நெளியும்படி பதறி நடந்து சென்றுபுக்கு க்ருஷ்ணாஜிநமும், யஜ்ஞோபவீதமும் முஞ்சியுமான விநீதவேஷ" தாரியான வாமனாவதாரத்திலே இவ் வாழ்வார் மோஹித்துக் கிடப்பர். 'தெள்ளிய சிங்கமாய தேவிலும் அப்படியே. இவ் வவதாரங்களெல்லாம் ஆச்ரித ரக்ஷணார்த்தம் என்றே நிரூபிப்பார்.'

7. இவ்வாழ்வார் மதம் மற்று எந்த தர்சனத்தோடும் முரண்படாது என்பதை இவர் பாசுரங்களே நன்கு விளக்கும்.

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவந் தானே
தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும்" என்றும்,



"அவரவர் தாம்தாம் அறிந்தவாறு ஏத்தி
இவரிவர் எம்பெருமானென்று—சுவர்மிசைச்
சாத்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தி உருவே முதல்" என்றும்.

ஆச்ரிதர்கள் எவ்வுருவத்தால் எப்பேரிட்டு எவ்வண்ணமாய் வணங்கினாலும் அவர்களை எல்லாம் ரக்ஷிப்பன் என்பதாம். இதையே நம்மாழ்வார் "வணங்கும் துறைகள் பலபலவாக்கி, மதி விகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி, அவையவை தோறணங்கும் பலபல நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்" என்பர். அல்பாஸ்திரமான பலன்களைக் கொடுக்கும் தேவதாந்தர பஜனத்தையும் அவற்றின்பொருட்டு ஜீவஹிம்ஸை செய்து "கள்ளும் இறைச்சியும்" தூவும் பூஜையையும் நம் பூர்வாசாரியர்கள் எடுத்துக் கழித்தார்களே யன்றி மோக்ஷோபாயங் காட்டும் மதாந்தரங்களைப் பழிக்கவில்லை. "மற்றும் நுந்தெய்வமும் ஆகின்றான்" என்று அம்மதங்களில் பேசப் படும் தெய்வமும் நந்தெய்வமும் ஒன்றே என்பர்கள். "ஓதுவார் ஓத்து எல்லாம் எவ்வுலகத்து எவ்வெவையும்" என்பதே இந்த தர்சனத்தின் கொள்கை. "அந்தமிலாதி, அம்பகவன் வணக்குடைத்தவநெறி" யான ஸ்ரீ பகவத்கீதையில் சொல்லிய

"எத்தேயத்து எத்திறத்தோர் எவ்வருணத்து எவ்வுருவின் என்னை [ஆய்ந்தார்
அத்தேயத்து அத்திறத்ததோர் அவ்வருணத்து அவ்வுருவின் அவர் [கோவான்

முத்தேவர் முத்தொழிலும் முக்குணமும் மும்முறையின் முடிவின் சோதி வித்தாகி நின்ற பரப்பிரமப்பழம் பொருள்யான் மெய்க் கொள்வாயே" என்கிற பாசுரமும் ஸ்ரீரங்கத்தில் நடுத்தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சில சிறுபிள்ளைகள் சிறின சிற்றையும் தந்த மண்ணையும் எம்பெருமானார் மாதுரகாத்துக்கு ஏன்னும் போது பகவத்ரூபமாகவும் ப்ரஸாதமாகவும் ப்ரதிபத்தி பண்ணினார் என்கிற ஐதிஹ்யமும் இங்கு ஸ்மரிக்கத்தக்கன.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

# யோஜநாரஸாஸ்வாதம்

(ரஸிகசிகாமணிகளான பண்டிதர்களுக்கு மாத்திரமேயல்லாமல் ரசாஹ்லாத பரிசயமுள்ள சாதாரணமாய் படித்தவர்களுக்கும் கூட அவ்வப்பொழுது புத்தியில் சில விஷயங்கள் புதிதுபுதிதாயும் ரஸவத்தரமாயும் யோசனைகள் உண்டாவதும் சிறிது காலம் அசைவு போட்டு அனுபவிப்பதுபோல் அனுபவிக்கப்பட்டு சீக்கிரத்திலேயே ஸ்திரமான நாமரூபங்கள் ஏற்படாமல் மறக்கப்பட்டு மறைந்து விடுவதையும் எல்லாரும் கண்டறிந்திருக்கிறோம். அவ்வித யோசனைகளில் அனேகம் வேதாந்த சம்பந்தமாயிருக்கும். அவைகளில் பல எழுதப் பெற்று காப்பாற்றப்பட்டு பிறர்களுக்கும் புத்திக்கு போக்யமாயும் சந்தோஷகரமாயும் ஏற்படக்கூடும். அவைகளில் பெரிய விஷயங்கள் வியாசரூபங்களாய் ஏற்படக்கூடும். ஆனாலோ சிறிய விஷயங்களும் அனேக முளவாதலால் அத்தகைய விஷயங்களை மேற் சொன்ன தலைப்பெயரின் கீழ் கூடியவரையில் ஒரு பக்கத்திற்கு அதிகப்படாமல் பிரசுரிக்க யோசித்திருக்கிறோமாகையால் இவ் 'வேதாந்தீபிகை'யில் ராசிக்ய புத்திபெற்ற எல்லாரும் தங்கள் தங்கள் மனவில் உற்பவிக்கும் அவ்வித யோசனைகளை சுருக்கமாய் எழுதி இப்பக்கத்தில் பிரசுரப்படுத்த அனுப்பவேண்டுமாறு பிரார்த்திக்கப்படுகிறது—ப)

## காளிதாஸனும் பரந்யாஸமும்

[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்]

சில தினங்களுக்கு முன் பரந்யாஸம் எனப்படும் சரணாகதியையும் அதன் அநுஷ்டானத்தையும் குறித்து தீவ்ரமாய் ஆலோசித்துக் கொண்டிருந்தபோது அடியிற்கண்ட ச்லோகம் ஞாபகத்திற்கு வந்தது.

अर्थो हि कन्या परकीय एव तामद्य संप्रेष्य परिग्रहीतुः ।
जातो ममायं विशदः प्रकामं प्रत्यर्पितन्यास इवान्तरात्मा ॥

என்று

இது காளிதாஸ மகாகவியால் இயற்றப்பட்ட சாகுந்தள நாடகத்தில் உத்க்ருஷ்டம் என்று கொண்டாடப்படும் நாலாவது அங்கத்தில் கடைசி ச்லோகம். கண்வ மஹரிஷியின் வாக்யமாய் எழுதப்பட்டது. இந்த ச்லோகத்திற்கு அவ்விடத்தில் சாதாரணமாய் ஏற்படக்கூடிய அர்த்தம் என்னவென்றால், ஒரு கன்னிகை எப்போதும் அசலாரைப்போய் அடைய வேண்டிய பொருளாகிறாள். சகுந்தலையை அவள் பர்த்தாவின் வீட்டிற்கு



அனுப்பிவிட்டவனாய் இப்பொழுது மனதில் விசேஷ சாந்தியை அடைந்து விட்டேன். ஒருவன், மற்றொருவனால் தன்னிடம் அடைக்கலப் பொருளாக ஒப்பிவிக்கப்பட்டதொன்றை ஜாக்ரதையாய் இரக்ஷித்து சொந்தக்காரனிடம் திருப்பிக் கொடுத்தால் திருப்பிக் கொடுத்தவனுடைய அந்தராத்மா எப்படி ப்ரசாந்தியை அடையுமோ அப்படி என்று. இந்த ச்லோகம், ஸம்ஸ்கிருதபாஷை கொஞ்சம் படித்தவர் முதலாக எல்லாருக்கும் தெரிந்திருந்த போதிலும், அடிக்கடி சொல்லப்பட்டு வந்த போதிலும், அதில் காவ்யரீதியில் அழகான உபமாலங்காரம் ஸ்வபாவ வர்ணனை நிறைந்திருப்பதோடு கூட வேதாந்த தத்துவத்தை த்வனியால் நிதர்சிப்பிக்கிறதாக ஒருவரும் வியாக்யானம் செய்திருப்பதாகத் தெரியவில்லை. அது விஷயமாய் எனக்கு அப்பொழுது மனதில் தோன்றின சில விஷயங்களை நான் தெரியப்படுத்தினால் அதைப்பற்றி விமரிசம் ஏற்படலாமென்று துணிந்து எழுதலானேன். இந்த ச்லோகமே "ஓம் சாந்திச் சாந்திச் சாந்தி:" என்று முறையிடுகிற ஸ்மிருதிகளின் அத்யுத்தமமான சாந்திரஸ பூயிஷ்டமானது. அர்த்த: என்று ஆரம்பிக்கும் இந்த ச்லோகம் புருஷார்த்த ஸூசகம்: இந்த த்வனியர்த்தத்தை மஹாகவி இவ்விடத்தில் உத்தேசித்திராவிட்டால் சந்தர்பத்தில் அவ்வளவாக உசிதமில்லாத அர்த்த சப்தத்தை உபயோகித்தும் அதையும் முதல் பதமாகவைத்தும் கவனம் செய்ய அவசியமில்லை. "கன்யா" சப்தத்தினால் புருஷோத்தமன் விஷயத்தில் ஜீவாத்மாக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்திரீபாவம் சூசிப்பிக்கப்பட்டது போலும். "பரகீய" சப்தமானது கதாசந்தர்ப்பத்தில் அனுபயுக்தம் எனக்கூட சொல்லலாம். பர்த்ரு: முதலான பதங்களே ஸ்வரஸமானதாய் ஏற்படக்கூடும். ஆகையால் பரகீய என்கிற சப்த பிரயோகத்தினால் மகா கவி பரப்பிரம்மம் தொனிக்கப்படவே எழுதினதாக நினைக்க இடமிருக்கிறது. "ஹி" சப்தத்தினால் அவிவாதமான தத்வ நிர்ணயமும் சூசிக்கப்படுகிறது. "ஏவ" சப்தமும் அவ்விதமே அன்யதா அபாவத்தை நிர்த்தாரணம் செய்கிறது. கவி சகுந்தலாம் என்று அழகாக அன்புடன் வாய்நிறையக் சொல்லாமல் தாம் அவளை என்று ஒரு சாதாரண ஸ்திரீ பாவத்தை மாத்திரம் காட்டி உபயோகப்படுத்தியிருப்பதும் பொருத்தமாகும். "அத்ய" என்பதினால் எப்பொழுதும் பிராப்தமான ரீதியாயிருந்தபோதிலும் ஒரு கால விசேஷத்தில் நேரிடக் கூடியதாகவும் "சம்பிரேஷ்ய" என்கிற பதத்தினாலும் "சம்யக் பிரேஷ்ய" என்று ஒரு காரிய விசேஷத்தையும் சூசிப்பித்திருக்கிறார். பரிக்ரஹீது: என்கிற பதமானது த்வன்யர்த்தம் பிராப்திக்கிறதற்காகவே பொருக்கப்பட்ட பதமோவென்று நினைக்க விடமிருக்கிறது. பாணிக்ரஹணம் பண்ணபர்த்தாவைவிட ஜீவாத்மா வந்தடைய வரப் பெற்றுக் கொள்ளும் பரமாத்மாவிற்கு இந்த பதம் ரஸதரமாகும். அடுத்த பாதத்திலும்

ஜாத: என்கிற பதத்தின் ஸ்வாரஸ்யத்தையும் பொருவாய் சொல்லலாம் அயும் என்கிறதினால் அனுரூபமான ஸ்திதியையும் விசத: என்கிற சப்தத்தால் அந்த ஸ்திதியின் வைசித்ரயத்தையும், கவி தெரிவிக்கிறார். பிரகாமம் என்கிற பதமானது சக்யார்த்தத்தை விட த்வன்யர்த்தத்திற்கே அதிகம் உபயுக்தமானது. கடைசி பாதத்தில் ந்யாச சப்தத்தை கவி உபயோகித்தது அர்த்தத்தை சூசிக்க உத்தேசத்துடன் என்றே நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. பரந்யாசமென்பது எது பரமாக கருதப்பட்டதோ அதனுடைய ந்யாசமேயாம். பரனுடைய சொத்தை நாம் காப்பாற்றி திரும்பவும் ஒப்புவிக்கவேண்டுமென்று ஏற்பாட்டின் கீழ் நாம் வைத்திருந்ததை திரும்பவும் சொந்தக்காரனிடம் ஒப்புவித்து பாரத்தை நிவர்த்தி செய்து கொள்வதும் அழகான யோசனையாகும். ஜீவாத்மா பரமாத்மாவினுடைய சொத்தென்பதும் அதனுடைய ந்யாசத்தை பரந்யாசமென்று வழங்குவதும் பழமையே யாகிலும் பிரத்யர்ப்பிதந்யாஸ என்கிற பதப்பிரயோகத்தினால் இரண்டு முக்யமான விஷயங்கள் ஸூசிதப்படுத்தப்படுகின்றன. அவையாவன—முதலில் ஒரு மனுஷ்யனுக்கு ஜீவாத்மா கிடைப்பதே ஒரு ந்யாசத்வாரம். அதாவது பகவானால் கொடுக்கப்பட்டு சரிவர பாதுகாக்கப்பட வேண்டிய விஷயத்தில் நம்பிக்கை ரூபமான பகவதாஜ்ஞை. இரண்டாவது அது சரிவர காக்கப்படாமல் திரும்பவும் ஒப்புவிக்கப்படாமல் போகுமானால் அதனாலுண்டாகும் பாபம் நம்பிக்கைத் துரோகமும் அசலார் சொத்தை திருட்டுத்தனமாய் ஆக்ரமித்துக் கொள்ளுவதும்.

இந்த ஆச்சர்யமான அர்த்தங்களையெல்லாம் தொனிக்க காளிதாஸ மகாகவி செய்த மேல் கண்ட ச்லோகத்தில் உள்ள அர்த்த விசேஷங்கள் யாவற்றும் ரஸிகர்களால் சிந்தித்து ஆனந்திக்கத்தக்கவை.

## ஸேநேச்வராசார்யர் அருளிச்செய்த ந்யாயகலாப ஸங்க்ரஹம்

[ஸ்ரீ. உப. வி: அனந்தாசார்யர்]

இப்பெயர் பூண்ட க்ரந்தம் அடியேனுக்குக் கிடைத்திருக்கிறது. இதுவரை இம்மஹானுடைய பெயர் மாத்திரம் கர்ணாகர்ணிகையாய் கேழ்க்கப்பட்டிருந்ததே ஒழிய இவர் அருளிச்செய்த க்ரந்தம் இன்னதென்றாவது இப்படிப்பட்டது என்றாவது அனைவர்க்கும் தெரிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன். அநேக வித்வான்களிடத்தில் இந்த க்ரந்தத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்தபோது, அவர், "அப்படியா? இப்படி ஒரு க்ரந்தம் இருக்கிறதா?" என்று இதை ஒரு ஆச்சர்ய விருத்தாந்தமாக பாவித்தார்களே



தவிர, இதை ஏற்கனவே தெரிந்த விஷயமாய் பாவித்தவர் இல்லை. அதிகரண ஸாராவளிக்கு வ்யாக்யாநம் செய்த ஸ்ரீ குமாரவரதாசார்யருக்கும் இவர் பெயர் மாத்திரம் தெரிந்திருந்ததே ஒழிய இவர் அருளிய க்ரந்தத்தின் பெயர் புலப்படவில்லை எனத் தோன்றுகிறது. ஏனெனில், அதிகரண சிந்தாமணியில் **सेनेश्वरार्याः शारीरकाधिकरणार्थसंग्राहक प्रबन्धनिर्मातारः** ஸேநேச்வரார்யர், சாரீரக சாஸ்திரத்தில் அதிகரணார்த்தங்களை சுருக்கமாய் தெரிவிக்கிற க்ரந்தம் ஒன்றை இயற்றினவர் என்றார். க்ரந்தத்தின் பெயர் தெரிந்திருக்குமானால் அதை உதாஹரித்திருக்கக்கூடும். ப்ரும்ம ஸூத்திரத்தில் முதல் நான்கு ஸூத்திரங்கள் சாரீரக சாஸ்திரத்திற்கு முன்னுரையாக நிற்கின்றன. என்ற விஷயத்தை நிரூபிக்கும்போது ஸ்ரீ தேசிகன் அதிகரண ஸாராவளியில்,

**यत्तत्सेनेश्वरार्यैरगणि वकुलभृत्किङ्करैरङ्घ्रयकारि** என்று இந்த வித்வானுடைய திருநாமத்தை ப்ரமாண கோஷ்டியில் முதலாக உதாஹரிக்கிறார். இப்படி நம் பரமாசார்யனான ஸ்ரீநிகமாந்த மஹா குருவினால் கௌரவிக்கப்பெற்ற இம் மஹானுடைய க்ரந்தம் இதுவரை துர்லபமாயிருந்தது ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்திற்கு ஒரு பெருங்குறையாக இருந்தது.

அநேக வருஷ காலமாய் அடியேன் வித்வத்கோஷ்டியில் சென்றபோதெல்லாம் இந்த க்ரந்தத்தைப்பற்றி ப்ரஸ்தாவிப்பதுண்டு. அதன் பயனாகவே இந்த க்ரந்தம் இப்போது அடியேன் கையில் அகப்பட்டது. அது அடியேனுக்குக் கிடைத்ததற்கு முக்கிய காரணம், சென்னையில் வக்கீலாக இருந்து வரும், ஆஸ்திக உதார சிகாமணியான ஸ்ரீமான் N. T. சாமண்ணா ஸ்வாமி. மைசூரில் இருந்து தனக்கு இந்த புஸ்தகம் கிடைத்ததாகவும், இதை நீர் வாங்கிக்கொள்ளவேணும் என்றும் மேற்சொன்ன சாமண்ணா ஸ்வாமி அடியேனுக்கு சொல்லி அனுப்பினார். அடியேன் நேரில் போய் வாங்கிக்கொண்டு வந்தபோது அடியேனுக்கு உண்டான ஸந்தோஷத்திற்கு அளவே இல்லை. இது கன்னடம் கலந்த தெலுங்கு அக்ஷரத்தில் எழுதப்பட்டிருந்தது. இதை தேவநாகர அக்ஷரத்தில் பெயர்த்து எழுதும்போது சிற்சில விடங்களில் சில பதங்கள் விடப்பட்டிருந்தன. மூலத்தின்படியே ப்ரசுரப்படுத்துவது உசிதம் எனக் கருதி அப்படியே 'வேதாந்த தீபிகை'யில் பாகம் பாகமாய் ப்ரசுரிக்க உத்தேசிக்கிறேன். இந்த க்ரந்தம் இருநூற்று இருபது (220) ச்லோகங்கள் அடங்கியது. விருத்தங்கள் பல உண்டு. ஸ்ரீ பாஷ்யத்தில் சொல்லப்பட்ட பொருள்களை சிற்சில விசேஷங்களோடு ப்ரும்ம ஸூத்திரத்தின் கிரமத்தில் தெரிவிக்கிறது. க்ரந்தசைலீ மிகவும் லளிதம். சிஷ்யர்களுக்கு க்ரந்த காலக்ஷேபம் அநுக்ரஹிக்கும் ஆசார்யர்களும் மற்றுமுள்ள வித்வான்களும் இதைக் கடாக்ஷித்து அடியேனுடைய ப்ரயத்நத்தையும் மநோரதத்தையும் ஸபலமாக்க வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ

# ஆழ்வாரும் ஸ்ரீதேசிகனும்.

[தேவனார் விளாகம். ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மாசாரியர்]

குருவை சிஷ்யன் வணங்க வேண்டுமென்பது வைதிக மதத்தில் முக்கியமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதிலும் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் குருவணக்கத்திற்கு தனியாக ஒரு சிறப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. வணக்கம் என்பது மானஸம், வாசிகம், காயிகம் என்று மூன்று வகைப்பட்டதாக இருக்கிறது. அதில் வாசிகமான வணக்கத்தையே தனியன் என்று வழங்கிவருகிறோம். 'தனியன்' என்ற சொல்லுக்கு தனித்து நிற்பது என்று பொருள்; அதாவது இணையற்றது என்று. இதே பொருளிலேதான் எம்பெருமானிடத்திலும் இந்த பதத்தை "தனியன் சேயன்" என்று பிரயோகித்திருக்கிறார்கள். ஆனால் இத்தப் பொருளோடு ஒரு கிரந்தத்திலும் சேராமல் தனியாக நிற்கிறது என்ற பொருளும் கொண்டு அதன் பேரிலும் சங்கேதத்தினாலும் குருவணக்கத்தைச் சொல்லுகிற சுலோகங்களிலோ பாட்டுக்களிலோ இது பிரயோகிக்கப்பட்டு வருகிறது. குருவணக்கத்தைச் சொல்லும் எல்லா சுலோகங்களுக்குமோ பாட்டுக்களுக்குமோ இந்தப்பெயர் கொடுக்கப்படவில்லை; சிலதுகளுக்கேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத் தனியன்களின் அனுஸந்தானமானது வாசிக நமஸ்காரத்தில் சேர்ந்து வைதமாக வந்திருக்கிறது. காலக்கிரமத்தில் மீமாம்ஸா சாஸ்திரத்தில் மந்திரங்களுக்குச் சொன்ன நியாயத்தை இதிலும் கொண்டுவந்து, குறிப்பிட்டதுகளைத்தான் சொல்லவேணும் என்றும் வற்புறுத்தும்படி கூட வந்துவிட்டது போலிருக்கிறது. இந்த வற்புறுத்தலும் நம் தேசிகனுக்குக்கூட அபிமதம் என்று சொல்லலாம்படி நம் தேசிகன் யதிராஜ ஸப்ததியில் ஒரு கோர்வை அருளிச்செய்திருக்கிறார். அதற்குமுன் பூர்வாசார்யர்கள் எதை அநுசந்தித்து வந்தார்கள் என்பதைக் காட்டக்கூடிய ப்ரமாணம் ஸ்பஷ்டமாக இல்லாதபடியால் நிச்சயிக்க முடியாவிட்டாலும் இப்பொழுது இதையே அநுஸந்தித்து வருகிறார்கள்.

அந்த கோர்வையில் ஒவ்வொரு ஆசாரியர் விஷயமான சுலோகத்திலும் அவ்வாசார்யர் நம் ஸம்பிரதாயத்திற்குச் செய்த அரிய உபகாரத்தைக் குறிப்பிட்டு இருக்கிறபடி இதுவும் ஓரளவு மீமாம்ஸா நியாயத்திற்கு ஒத்ததே. தனியன்களுக்கு மந்திரங்களுக்குள்ள மகிமையைக் கொடுத்தால்



அதன் மூலமாகவே குருக்களை ஸ்மரித்து வணங்கவேண்டும் என்று ஏற்படுகிறது. அவர்களை ஸ்மரிக்கும்போது அவர்கள் செய்த உபகாரத்தை முன்னிட்டு ஸ்மரிப்பதுவும் மிகவும் அவசியம். இதில் பகவான் செய்த உபகாரத்தை 'ப்ரவக்தா + ஸ்வயம்' என்று குறிப்பிட்டார். பிராட்டியின் உபகாரத்தையும் விசதமாகக் காட்டியிருக்கிறார். எம்பெருமான் பிராட்டி இவர்களால் பிரவர்த்திக்கப்பட்ட சம்பிரதாயத்தை ஸேனை முதலியார் உலகத்தில் பரவச்செய்த படியை அவர் அதிகாரத்தையும் ஸாமார்த்தியத்தையும் காட்டி அனுசந்தித்தார் 'ஸம்ப்ரவ்ருத்தவதீ ஸ்வயம்' என்று இரண்டு பேரும் சேர்ந்து அனுஷ்டித்துக்காட்டி பிரசாரம் செய்தார்கள் என்பதும் 'பஶ்சாத்' இத்யாதியால் அதிகாரதோரணியிலும் நிலைநாட்டினரென்பதும் ஆசார்ய சப்தத்தின் பொருள் தோன்றும்படி காட்டப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஏற்பட்ட பரம்பரை எல்லாக் காலத்திலும் பொதுவாக இருக்க இக்கலியுகாரம்பத்தில் நம் ஸம்பிரதாயம் பெருகின வழியைக் குறிப்பிட்டு தந்முகமாக ஆழ்வாரைக் கொண்டாடுகிறார்—

"யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோதோ வகுளாமோத வாஸிதம் ।
ஶ்ருதீநாம் விஶ்ரமாயாலம் ஶடாரிம் தமுபாஸ்மஹே ॥"

நம் தேசிகன் ஆழ்வார் விஷயமாக 'வகுளாலங்காரை:' என்று பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸாக்ஷாத்தாகவும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் விவேகன் முகமாக 'நிரஸ்ய நம்யம் ஜநா:' என்று பெரிய விருத்தத்தில் நமஸ்காரத்தை அனுசந்தித்திருக்கச் செய்தேயும் அவைகள் நிற்க சின்னவிருத்தத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இதுவே சிறிய கண்ணாடி என்கிற ரீதியில் சகல அர்த்தங்களையும் காட்டக் கூடியதாய் தனியன் என்ற பெயருள்ளதாக இருக்கிறது.

சம்பிரதாயத்தைத் தழைக்கச் செய்யும் வழிகளில் உபதேசத்தால் பரவச்செய்வது தத்காலம் உள்ளவர்களுக்கே பிரயோஜனப்படும். கிரந்தமுகமாகச் செய்யும் வகை எக்காலத்திலும் பயன்படும். ஆகவே அம்முகமாகவும் உபகாரம் செய்தவர்களில் பெருமாளுக்கு அடுத்தபடி இவரே ஆகையால் அவ்வித உபகாரத்தையே இதில் குறிப்பிட்டிருக்கிறார். (யஸ்ய - யாதொரு ஆழ்வாருடைய வகுளாமோத வாஸிதம் - வகுள புஷ்பத்தின் வாஸனையால் வாஸிதமான ஸாரஸ்வத ஸ்ரோத: - அருளிச் செயல் ரூபமான பிரவாஹமானது. ஶ்ருதீநாம் - வேதங்களுடைய விஶ்ரமாய - இளைப்பாறுதலின் பொருட்டு அலம் - போதுமோ, தம் - அப்பேர்ப்பட்ட, ஶடாரிம் - சடாரி என்ற பெயர் பூண்ட ஆழ்வாரை, உபாஸ்மஹே - உபாஸிக்கிறோம்; அனவரதம் சிந்தனம் செய்கிறோம்.) ஆழ்வார் அருளிச்செயலால் வேதங்களுக்கு விஶ்ரமம் ஏற்பட்டது என்று

தால் அருளிச் செயலில் சேர்க்கை இல்லாத சமயங்களில் அவைகளுக்கு நேர்ந்த கஷ்டங்கள் இரண்டு வகை; ஒன்று புறம்புள்ளார்களினாலும் மற்றொன்று உள்ளுள்ளார்களினாலும். அவைகளினால் நம் இனத்தில் சேர்ந்ததாக பாவித்துக் கொண்டவர்களால் ஏறபடும் கஷ்டமே பெரிதும் அஸஹ்யம். அவ்வித கஷ்டம் தீர்வதில் சுருதிகளுக்கு பெரிதும் உபகரித்தது அருளிச்செயல். இத்தைக் கணிசித்தே 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று சாதித்தார். சுருதிகளுக்குள் ஒன்றுக்கு அதிகமான ப்ராதான்யத்தைக் கொடுத்து ஒன்றுக்கொன்று கிளர்ச்சியை உண்டு பண்ணி விட்டார்கள் மற்ற சமயாசிரியர்கள். ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்கு சண்டை ஏற்படுத்தி குடும்பத்தை சீர்குலைக்கும் வழிகள் சேர்ந்ததாயிற்று அவைகளின் சமயங்கள். நம் ஸித்தாந்தத்திலோ அவ்வண்ணம் ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்பட்டது. இதையே 'ஸவ-்ஶ்ராகைத்ரகாஸ்ய ப்ரணயிஹி:' என்று சாதித்தார். 'வொகாஸ்ய' என்றும் 'தெளியாத என்றும் விழுந்திருக்கும் பதஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால் ஒன்றுக்கொன்று கிளப்பி விடப்பட்ட சண்டையினால் கலக்கம் நேர்ந்ததென்றும் அவைகளுக்கு ஐகாஸ்யமும் தெளிவும் அருளிச்செயலின் ஸாஹாய்யத்தினால் ஏற்பட்டது என்று சொல்லும்படி இருக்கிறது. சுருதிகளுக்கு ஐகாஸ்யத்தை பிரதிபாதிக்கக் கூடிய வழியும் சுருதியின் ஏகதேசத்தால் ஏற்படக்கூடியதாயிருக்கும் அதை எடுத்துக் காட்டுவதில் முக்கியமான ஸ்தானத்தை வகித்தது அருளிச்செயலே என்பதைக் கணிசித்து விஶ்ரா, யாவு' என்று சாதித்தார். நம்ஸித்தாந்தத்திற்கு பிரதான பிரதிதந்த்ரமான சரீராத்மபாவத்தை அருளிச் செயல்கள் அதிலும் நம்மாழ்வார் அருளிச் செயல்போல் அவ்வளவு அழகாக சுருதிகள் பிரதிபாதிக்கவில்லை. திருவாழ்மொழி முதல் பத்து முதல் சதகத்தில் 'உடன் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்று ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கிறார்.

சுருதிகளுக்கு ஐகாஸ்யம் ஏற்பட்ட பிறகும் அவைகளுக்கு சிரமம் தீர்ந்த பாடில்லை. சுருதிகள் பிரஜைகளின் நன்மைக்கு ஏற்பட்டவை;

'வெடெஷாநாஜி நியடைநஃ ஶ்ருதிஹிஸ்தீய ஷிவ்யாவதாரா வரிடெதஃ ஶாஹயா வ ஜ்ஞவஷ்யா। நிஶ்ரேய ஸம் யத்ாவகஜயஷி ப்ரஜாநாடு।'

என்று நிஶ்ரேயஸத்திற்கு முதல் சாதனமாக வேதங்கள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. வேதங்களால் பிரஜைகள் நிச்சிரேயஸத்தை அடைவதாவது அவைகளில் சொல்லப்பட்ட வழியைப் பின்பற்றி நிச்சிரேயஸஸாதமான உபாயங்களை அநுஷ்டித்து நிச்சிரேயஸத்தை அடைவது தான். அப்படிப்பட்ட வேதங்கள் ஸர்வோபஜீவ்யமாயில்லாமலும்,



த்ரைவர்ணிகர்களுக்குள்ளேயும் அனேகமாய் ஜ்ஞான சக்த்யாதிகள் உள்ளவர்களுக்கு மட்டும் பயன் படக்கூடிய வழியிலிருக்கின்றன. அஜ்ஞான சக்த்யாதிகளுள்ளவர்களுக்கு வேண்டிய வழிகளை அவைகள் ஸ்பஷ்டதரமாய் பிரதிபாதிக்கவில்லை. ஆகவே அவைகள் ஸகல பிரஜைகளுக்கும் நிச்சிரேயஸத்தை உண்டு பண்ணவேண்டிய வழியில் சிரமப்பட்டுக் கொண்டே இருந்தன. அருளிச்செயலோ

'டெவஃ ஸ்ரீஶாநு ஷஷிஶஃ காணத்ிகி வடிநு வக்ஷயே-ம் ஸஹடெஸ'

என்ற ரீதியில் ப்ராதான்யேன அஜ்ஞான சக்த்யாதிகள் உள்ள அகிஞ்சனாதிகாரிகள் ஈடேறும்படியான வழியையே நமக்குக் காட்டிக்கொண்டு வெறும் சாஸ்திரமாகமட்டுமில்லாமல் தாத்காலிக அனுபவத்திற்கு ஸாதனமாயுமிருக்கிறது. அதில் சொல்லப்பட்ட வழி கேவலம் உபதேசமாகமட்டுமில்லாமல் அனுஷ்டித்தும் காட்டப்பட்டது. பிரபன்ன ஜன ஸந்தான கூடஸ்தரன்றோ ஆழ்வார். 'கூடஸ்தோ நஃ' என்றார் தேசிகனும். ஆக அருளிச்செயலால் வேதங்களுக்கு ஸர்வ ஜனங்களுக்கும் பரம நிச்ரேயஸ பர்யந்தமான பலங்களை உண்டு பண்ணுவதில் ஏற்பட்ட சிரமம் தீர்ந்தபடி. அந்தணாந்தியொல்லையில் நின்ற வனைத்துலகும் வாழ உபகரித்ததாயிற்று.

இப்படியே பரதேவதா நிஷ்கர்ஷமானது வேதங்களை ஓதும் ரீதியில் நமக்கு எளிதில் ஏற்படாதபடி கஹனமாயிருக்கிறது.

'வஷ ஶாஸ ஐதி நிண-யா த்ுயீ ஶாமயெய ஈஷிடெதஷ டெநா ஷிடெஶக।'

என்று அதன் கஹனத்வத்தை அநுசந்தித்தார்கள். அருளிச்செயலோ முதல் எடுப்பிலேயே எம்பெருமானுடைய பரத்வத்தைச் சொல்ல ஆரம்பித்து விட்டது. 'ஶிக்ஷாத்ரியாகஸ்ய விஷாத் ஸஂஶூ' என்கிறபடி வேதங்களுக்கு பிறருக்கு உபதேசிக்கும் திறமை போதாதுதான். 'ப்ரஹவதி த்ுயாவி டெவொகாஷீ' என்று ஸ்பஷ்டமாகவே ஸ்வாமியே சாதிக்கிறார். ஆகையால் வேதமானது தன் பாவத்தை பிறருள்ளத்தில் பதியவைக்கப்படும் பாடு அதிகமாகவே இருக்கிறது. அதனால் ஏற்படும் பலமோ மட்டு. தவிர தனக்கே தன் திறமை போதாது என்பது ஏற்பட்டிருக்கிறது.

'விடெஹத்யஜ ஶ்ராதாடெஷஃ ஶாஜயம் ப்ரதரிஷ்யதி'

என்று சொல்லப்படுகிறது. மேலும் தான் ஒரு அர்த்தத்தைச் சொல்லப் புக்கால் அது பொருந்திற்றோ பொருந்தவில்லையோ அதையே பெரிதும் தூக்கிவைத்துப் பேசிவிடுவது வேதத்தின் வழக்கம். ஆகையாலேயே அந்த பாகத்தை அர்த்தவாதம் என்று ஒதுக்கிவைத்து இருக்கிறார்கள்.

அதற்கு ஒரு சாரார் ஸ்வார்த்தே ப்ராமாண்யம் கூட கிடையாது என்று சொல்லும் நிலை வந்துவிட்டது. இப்படி சிரமப்படுகிறது வேதம். நம்மாழ்வார் அருளிச்செயலில் இந்த ந்யூனதை கிடையாது. ஆகையாலே 'பொய்யில் பாடலாயிரம்' என்று கொண்டாடப்பட்டது. இந்த விசேஷம் தோற்றும்படியாகவே 'வகுளாமோத வாஸிதம்' என்ற விசேஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆழ்வார் விஷயமாக அநுசந்திக்கிறவர்கள் யாவரும் அநேகமாக இந்த விசேஷணத்தை ஒவ்வொரு பிரகாரமாக அநுசந்திக்கிறார்கள். 'நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன்' என்று தானே தன்னைச் சொல்லுகிறார். இதில் என்ன உயர்வு என்று ஆராயுமிடத்து மகிழினிது கந்தம் என்று உயர்வு பெற்ற மகிழம் அணிந்தவர் என்று சொன்னால்,

'யதா வ்ருக்ஷஸ்ய ஸம்புஷ்பிதஸ்ய தூராத் கந்தோ வாதி ஏவம் புண்யஸ்ய கர்மணோ தூராத் கந்தோ வாதி'

என்கிற சுருதியில் சொல்லப்பட்டபடி ஆழ்வார் புண்ய கர்மா உள்ளவர் என்பதும் மேல்கண்ட சுருதியிலேயே கடைசியில் 'ஸஹஸ்ரதா ராதாதீர்ணம் ஜுஹோமி' என்றபடி பொய்கலவாதவரென்பதும் குறிப்பாகக் காட்டப்படுகிறதுபோல் ஏற்படுகிறது. அருளிச்செயலுக்கே 'வகுளாமோத வாஸிதம்' என்று விசேஷணம் கொடுத்திருக்கிறார்; ஆழ்வாருக்கு அந்த விசேஷணமும் இந்த விசேஷத்தை காட்டுவதற்காகவே ஏற்பட்டதாகையால் அருளிச்செயலுக்கே நேராக விசேஷணத்தைக் கொடுப்பது உசிதம் என்று திருவுள்ளம் போலும்,

'வகுளஸௌரபேண வாஸநா ஸஹஜேந ஸம்ஹிதாம்'

என்று அங்கும் ஸம்ஹிதைக்கே அந்த விசேஷணம் கொடுத்திருக்கிறார். வகுள புஷ்பதாரணத்தைச் சொல்வதெல்லாம் ஸூக்திக்குள்ள ஏற்றத்தைக் காட்டவே என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு போலும். வகுள புஷ்பத்திற்குக் கூட வாஸனை ஸ்ரீ ஸூக்தியால் ஏற்பட்டதென்று ஸ்ரீ ஸூக்தியின் ஏற்றத்தை நேரிடையாகவே,

'ஶ்லக்ஷ்ண ஸரஸ்வதீ ஸுதா ஹி கேஸரஶ்ரீவிநே'

என்று ஸாதித்தருளினார். இதுவும் 'ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம்' என்ற ரீதியில் ஏற்பட்டிருக்கிறது. 'ஶ்ருதீநாம் விஶ்ரமாய' என்றதால் செவிக்கினிய செஞ்சொல்லான திருவாய்மொழியானது செவிசுடு கீழ்மை வார்த்தைகளையே கேட்டு வரும் செவிகளுக்கு ஒரு விச்ரமத்தைக் கொடுக்



கிறது என்வும் கொள்ளலாம். செவியுள் நாவின் சுவை கொள்ளலாமன்றோ.

'வகுளதர ஸரஸ்வதீ விஷக்த ஸ்வரரஸ பாவயுதாஸு கிந்நரீஷு। த்ரவதி த்ருஷதபி ப்ரஸக்தகாநாஸு'

என்றல்லவோ பூர்வர்களின் ஈடுபாடு.

'யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோத:—ஶடாரிம்' என்கிறதுகளால் அங்கப்பொழுதே அவள் வியத்தோன்றிய என் சிங்கப் பிரான் பெருமை' என்று ஆழ்வாரும்,

'நரஸிம்ஹ தநூஜாமணி ஸுஸேவ்ய ஸூக்திஹ்ருத்வஸ்து ஹஸ்தமிஸ:।
ஸ்தம்ஹே ச ஸம்ஹவஸ்ஸு விஶோதயதி பராஶதாம் வாத:॥'

என்று ஆழ்வானும் அவதார விசேஷத்தில் ஈடுபட்ட மாதிரி ஆழ்வார் விஷயத்தில் ஈடுபடுகிறார். அவதரித்த முதற் கொண்டே எம்பெருமான் பரத்வம் வெளியானபடி ஆழ்வாருடைய பிரதமசப்தோச்சாரணம் முதற் கொண்டே உக்திகள், சுருதி விச்ரமத்திற்கு ஹேதுமாகி அவருடைய ஏற்றமும் வெளியானபடியை 'யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோத:' என்றும் எம்பெருமான் தோன்றின போதே சத்ரு நிரஸனம் பண்ணினபடி இவரும் சட நிரஸனம் செய்தபடியை 'ஶடாரிம்' என்றும் காட்டியருளுகிறார். இரண்டு அவதாரங்களிலுமுள்ள இந்த சேர்த்தியை நாம் நினைவில் கொள்ளவே அநேகமாக இரண்டு அவதார தினமும் ஒன்று பட்டு வருகிறது. 'உபாஸ்மஹே'—வந்தே தம் ஶடவைரிணம்' என்கிற ரீதியில் வந்தே என்று பிரயோகிக்காமல் 'உபாஸ்மஹே' என்று பிரயோகித்தபடியால் கிரந்த முகத்தாலும் உபகாரம் செய்தருளின பகவதுபாஸனம்போலே இவருடைய உபாஸனமும் வேண்டியதென்றாயிற்று. முன்னும் பின்னும் ஏகவசனமாக இருக்க இங்கு பகுவசனமாகப் பிரயோகித்து நம் ஸித்தாந்தஸ்தர்கள் எல்லாரும் எப்போதும் ஆழ்வார் உபாஸனம் செய்யவேணும் என்ற திருவுள்ளத்தாலே என்றும் சொல்லலாம். கூடஸ்தரை பின்புள்ள அவர் பரம்பரையினர் ஸதா அநுஸந்திக்க வேண்டியதுதானே. ஆழ்வார் உபாஸனத்தின் பலஸித்தியாலேயே நம் தர்சனம் தழைத்து வந்தது என்ற பாவத்தை ஸூசிப்பித்திருக்கிறார். 'திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே' என்றன்றோ இவர் திருவுள்ளம். 'ஶடாரிம்' என்பதால் மாயா வ்யாமோஹம் இவருக்கு ஏற்படவே இல்லை என்பதையும் குறிப்பாகக் காட்டி ஆழ்வார் பெருமையை வெளிக்காட்டியருளினார். இவரை உபாஸிப்பதில் பகவதுபாஸனத்

தில் போல் அதிகாரி நியமம் இல்லை. ஸர்வாதிகாரமான பிரபந்த பிரவக்தா வானபடியால் இவர் உபாஸனமும் ஸர்வாதிகாரமே. மேல் நாதமுனிகள் விஷயத்திலும் உபாஸனத்தினால் ஏறப்பட்ட ஏற்றத்தையே அநுசந்தித்திருக்கிறார்.

'ஶ்ருதீநாம் விஶ்ராமாயாஸ்து' என்பதால் வேதத்தையே புறக்கணிப்பதாகவும் கொண்டு சுருதி மந்திரங்கள் சொல்ல வேண்டுமிடத்தும் கூட பாசுரங்களையே தத்ஸ்தானத்தில் சொல்லலாமென்பது அதிவாதமாகவே போகிறது. 'ஶ்ருதீநாம் விஶ்ராய' என்பதால் இதன் ஒத்தாசையைக் கொண்டு மறையின் பொருளை ஸுலபமாக அறிய முடியும் என்பதில்தான் தாத்பர்யமேயொழிய மறையைத் தள்ளிவிடவும் அபிப்ராயப்பட்டதாகச் சொல்லுவது அதிவாதமே. இப்படி ஆழ்வார் விஷயமான அனுசந்தானத்தில் ஆழ்வார் செய்தருளிய உபகாரங்களில் கிரந்த முகத்தால் செய்தருளினதையே பிரதானமாகத் திருவுள்ளத்தில் கொண்டு அனுசந்தித்தார். ஆகையாலே அக்கிரந்தத்தின் பெருமையை 'த்ரமிடோபநிஷத்ஸார' ரத்னாவளி இதுகளில் ஸங்கிரஹமாகவும் காட்டியருளினார். அவ்விடத்தில் தனித்து ஆழ்வார் விஷயமாக பிரணமம் செய்வதாக ஒரு சுலோகமும் சாதிக்காததற்குக் கூட காரணம், இந்த சுலோகத்திற்கு அவைகளை உபபாதகமாகவே திருவுள்ளங் கொண்டுதான் என்று கூடச் சொல்லலாம். இப்படிப்பட்ட ஆழ்வார் உபாஸனத்தைச் செய்து காட்டி பலம் பெற்று ஸித்தாந்தத்தைத் தழைக்கச் செய்த ஏற்றத்தாலேயே 'நாயொவஜூம் ஞூவாத்தூ' என்று கொண்டாடினார்.

ஶ்ருதீநாம் விஶ்ரய என்பதைக் காட்டவே சுவாமி செய்தருளின பிரபந்தங்களில் முக்கியமானவற்றை மணிப்பிரவாள நடையில் அமைத்து ஆங்காங்கு அருளிச் செயலைப் பிரமாணமாகக் காட்டியருளியிருக்கிறார்.

இந்தத் தனியனையே உபாஸன மந்திரமாக வைத்துக் கொண்டு அனவரதசிந்தனம் செய்தால் இதில் அடங்கியிருக்கும் ஆழ்வாரின் அரிய பெருமைகளை இன்னும் விசதமாகக் காணக்கூடும்.

---

ஸ்ரீ

# ப்ரம்ம விசாராதிகார நிர்ணயம்

[ஸ்ரீ உப.மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசாரியர்
ந்யாய வேதாந்த சிரோமணி]

சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி

'கயெூதவெூாவெூகஷெஶாயதி ஸவ⁻ம் ந ஶக்யதெ' என்று முன் உதாஹரிக்கப்பட்ட பாராசரஸ்ம்ருதியின்படி ஏகதேசாத்யயனம் செய்த நான்கு ஆச்ரமிகளுக்கும் ப்ரம்ம விசாரம் சாஸ்த்ராநுமதம். ஶ்ரோத்ரியம் என்று பூர்வோதாஹ்ருத ச்ருதியில் ஆசார்ய விசேஷண பரமான ச்ரோத்ரியம் என்கிற சப்தத்துக்கு

'வன்காம்ஶாவாஃயீதூ ஶ்ரோத்ரிய உதூ⁻ஷ்கஸூாயீத ஹுாயூாய ஶர்த்ருஸூ ஶூகூதாந⁻வகாஶக்தயா வெஷாஙவெதிநஂ'

என்று ஸோபபத்திகமாக அர்த்த வர்ணநம் தாத்பர்யடீகையில் செய்யப்பட்டது. வேதாந்த வேதிநம் என்று அர்த்தஞ் செய்யாமற் போனால் அர்த்தஞ்ஞானமன்றியில் கேவலைக சாகாத்யாயியையும் ச்ரோத்ரிய சப்தம் போதிக்குமாகையால் அது ப்ரக்ருதோப யுக்தமன்று. வேதாந்த வேதிநம் என்று வ்யாக்யானம் பண்ணால் விததாதுவோடு ஸமபிவ்யாஹ்ருதமான வேதாந்த சப்தத்துக்கு வேதாந்தார்த்தத்தில் நிரூட லக்ஷணை சாஸ்த்ரஜ்ஞரால் ஸமர்த்திக்கப்பட்டிருப்பதால் வேதாந்தார்த்த மறிந்தவன் என்று அர்த்தமாவதால் ப்ரக்ருதோப யுக்தம் என்று திருவுள்ளம். ஸம்ஸ்ரவெயாவெடிநஂ என்று வித தாதுவுக்கு அர்த்த ஜ்ஞான பரத்வம் மஹாபாஷ்ய வ்யாக்யானவைபடத்தில் சொல்லப்பட்டது. ச்ருதப்ரகாசிகையில்

வஶஸ்ஸூஸூாயெதாதூவம் யயா வெஷவிக ஶாஸ்ரவிசு உதூாஷள வெஷாதி ஶஸூாநாஂ,

என்று வேத சப்தத்துக்கு வேதார்த்தத்தில் நிரூட லக்ஷணை ஒப்புக்கொள்ளப்பட்டது. இரண்டு பக்ஷத்திலும் வேத வித சப்தம் வேதார்த்தமறிந்தவனையே போதிக்கும் என்று ஸ்ரீ தேசிகனுக்குத் திருவுள்ளம்.

'ஜந்நா ஶாஹணொஜ்ஞயஜ்ஞாஂரொஜ்ஜ உஷ்யதெ ।
விஷ்யா யாதிவிஶுக்ஷம் ஶ்ரோத்ரிய ஸ்ரிஷிரெவ வ ॥'.

என்று அத்ரி ஸம்ஹிதையிற் சொல்லிய ச்ரோத்ரிய பத நிர்வசனம் இங்கு அபிப்ரேதம்

'ஸம்ஹிதே ப்ரவ்ருத்தம் வேதவேதாந்தவேதிநி ப்ரயுஜ்யதே ।
விப்ராணாம் வர்ணஜ்யேஷ்ட்ய ப்ராஹ்மணே ச்ரோத்ரிய பதம் ॥'

என்று ந்யாயாசார்ய வசனத்தினுலும்

'ச்ரோத்ரியஞ்சந்தோऽதீதே, இத்யநேந ஸூத்ரேண சந்தோऽத்யேத்ரு ப்ராஹ்மணவ்ருத்தி: 'ஜந்மநா ப்ராஹ்மணோ ஜ்ஞேய:, இதி ச்லோகோக்தஜந்ம ஸம்ஸ்கார வித்யா ஸமுதாயவத் ப்ராஹ்மணவ்ருத்திவாசீ ச்ரோத்ரிய பதம் ஸமர்த்யா,

என்று அதின் வ்யாக்யானத்தினுலும் ஜன்ம ஸம்ஸ்கார வித்யா ஸ்முதாயத்தோடு கூடிய வ்யக்த்தியிடத்தில் ச்ரோத்ரிய சப்தம் ப்ரயோகிக்கப்படுவதாய் ஏற்படுகிறது. வேதாந்த வேதிநம் என்கிற வ்யாக்யானத்தில் வேதாந்தார்த்த மறிந்தவன் என்று ஏற்படுவதால் ச்ரோத்ரிய சப்தார்த்தமான வித்யாவத்வம் சொல்லப்பட்டதாகிறது. ச்ருதவேதாந்தம் என்று ச்ருத ப்ரகாசிகையிலும் வ்யாக்யாதம்.

அத்ரி ஸம்ஹிதா வசனத்தின்படி வேதாந்த மாத்ராத்யயனத்தால் வேதாந்த ச்ரவணம் பண்ணினவனுக்கும் ச்ரோத்ரியத்வம் கூடுமாகையால் இவ்வதிகாரி ப்ரம்ம வித்யோபதேசம் செய்யத் தட்டில்லை.

'ச்ரோத்ரியஞ்சந்தோऽதீதே' என்கிர அனுசாஸனத்தினுல் வேதாத்யேத்ரு ஸாமான்யத்திலும் ச்ரோத்ரியத்வம் ஏற்படுவதாலும் விரோதமில்லை.

ஷை ச்ருதியில் சிஷ்ய லக்ஷணத்தைச் சொல்லும் ப்ராஹ்மண சப்தமானது வேதாநாம் கிஞ்சிதத்யேத்ரு ப்ராஹ்மண: என்கிற போதாயன வசனத்தின்படி ஏக தேசாத்யயனம் செய்த சிஷ்யனையும் போதிக்கக் கூடுமாகையால் இப்படிப்பட்ட சிஷ்யனுக்கும் ப்ரம்ம விசாரத்தை சாஸ்த்ரம் பாதிக்க மாட்டாது. 'அதீத ஸாங்கஸசிரஸ்கவேத:' என்று ப்ராஹ்மண சப்தத்துக்கு வ்யாக்யானம் செய்தது முக்யாதிகாரியை இங்கு விவக்ஷிப்பது உசிதம் என்கிற திருவுள்ளத்தினுலே. ஆனுலும்.

"வேதாநதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம் ।
அவிப்லுத ப்ரஹ்மசர்யோ க்ருஹஸ்தாச்ரமமாவிசேத் ॥"

என்றுமனு வசனத்தினுல் ப்ரம்மசர்யம் கெடாமைக்காக ஒரு வேதத்தையாவது அத்யயனம் செய்து க்ருஹஸ்த்தாச்ரமத்தை அடையவேண்டும்



என்று ஏற்படுவதால் ஏத தேசத்தை மட்டும் அத்யயனம் செய்தவனுக்கு க்ருஹஸ்தாச்ரம ப்ராப்திக்கே அதிகாரமில்லாமையால் கைமுதிக ந்யாயத்தாலே அவ்வாசரமத்தில் ப்ரம்ம விசாரம் நிரஸ்தம் என்கிற சங்கையும் உசித மன்று.

'அநதீத்ய த்விஜோ வேதம் ஸ்நாத்வா தாராந் ஹரேத் யதா ।
அதீதே ஸ ப்ரஹ்மசர்யேண ஸாங்கம் வேதம் க்ருஹாச்ரமே ॥'

என்று நிர்ணய ஸிந்துவில் உதாஹரிக்கப்பட்ட ஸத்யவ்ரத வசனத்தினுல் வேதாத்யயனமன்றியில் க்ருஹஸ்தாச்ரம ப்ராப்தியும் அவ்வாச்ரமத்தில் அத்யயனமும் அனுமதிக்கப்பட்டிருப்பதால் ஏக தேசாத்யயனம் செய்து க்ருஹஸ்த்தா ச்ரம ப்ராப்தி கைமுதிக ந்யாய ஸித்தமாகிறது, வேதமதீத்ய ஸ்நாயாத், வேதாநதீத்ய என்றுப்போலுள்ள ச்ருதி ஸ்ம்ருதி வசனங்கள் வித்யாஸ்நாதகனைப் பற்றியவை என்று பராசரமாதவீயாதிகளில் சொல்லப்பட்டது. மீமாம்ஸ காக்ரேஸரரான அனந்த தேவரால்ச் செய்யப்பட்ட ஸ்ம்ருதி கௌஸ்துபம் என்னும் நிபந்தனத்தில்

'நச க்ருஹஸ்தஸ்ய ப்ரஹ்மாத்யயநாபாவ: 'ஸமாவ்ருத்தோ ப்ரஹ்மசாரி கல்பேந யதா ந்யாயமிதரோ, ஜாயாமுபயச்சேத், இத்யாச்வலாயந ஸூத்ரேண க்ருஹஸ்தாநாமபி க்ருஹ்யாத்யயந விதாநாத்'

என்று க்ரஹஸ்தனுக்கும் க்ரஹணுத்யயனத்தில் ப்ரமாணமாக ஆச்வலாயன வசனத்தை உதாஹரித்து அதற்கு வ்ருத்திகார வ்யாக்யானத்தையும் காட்டி மேலும்,

"வேதம் வ்ரதாநி வா பாரம் நீத்வா ஹ்யுபயமேவ வா, இத்யாதி ஸ்ம்ருதிஷு வேதஸமாப்த்யநந்தரம் ஸமாவர்த்தந விதாநேந ப்ரஹ்மசர்ய ஸமாப்தி விதாநாத் வேதாத்யயந ஸமாப்தநாத் ।

என்றும் ப்ரமாணுந்தரம் சொல்லப்பட்டது.

பராசரமாதவீயத்திலும் ஸமாவ்ருத்தோ ப்ரஹ்மசாரிகல்பேந என்றும் வேதம் வ்ரதாநி வா என்றும் பூர்வோதாஹ்ருதங்களான இரண்டு ப்ரமாணங்களையும் உதாஹரித்து மேலும்

'உபாகரணஸ்ய க்ருஹஸ்த யஜ்ஞோபவீதிந: ஸ்வாத்யாயவிதே: ஸ்மார்த்தாக்நௌ க்ருஹஸ்த ப்ரஹ்மசாரிணோரப்யநுஷ்டேயத்வம் பவதி ॥

என்று யுக்த்யந்தரமும் சொல்லப்பட்டது. வேதாநதீத்ய என்று உதாஹ்ருதமான மனுஸ்ம்ருதி வசனத்தின் வ்யாக்யானத்திலும் 'வேதம் வ்ரதாநி

[illegible] வா என்று யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியை உதாஹரித்து மேலும் 'த்ரய: ஸ்நாதகா பவந்தி' என்று ஆரம்பித்து வேதத்தை மாத்திரம் முடித்து ஸ்நாநத்தை அனுஷ்டிப்பவன் வித்யா ஸ்நாதகன், வ்ரதங்களை முடித்து ஸ்நாநம் அனுஷ்டித்தவன் வ்ரதஸ்நாதகன், இரண்டையும் முடித்து ஸமாவர்த்தனம் செய்து கொள்ளுமவன் வித்யா வ்ரத ஸ்நாதகன் என்று சொல்லும் ஹாரீதவசனத்தையும் உதாஹரித்து வேதஸமாப்தியன்றியில் க்ருஹஸ்தாச்ரமப்ராப்திக்கு ப்ரமாணம் சொல்லப்பட்டது. மேலும்,

'[illegible]
[illegible] ॥

என்று முண்டகோப நிஷத்திலும்,

'[illegible]'

என்கிற ஸர்வ வேதாந்த ப்ரத்யயாதிகரண ஸூத்திரத்திலும் க்ருஹஸ்த விசேஷத்துக்கு உபநிஷத் விசேஷாத்யயனம் சொல்லப்பட்டது. அந்த ந்யாயத்தினால் சௌனகரால் சொல்லப்பட்ட நியமங்களோடு கூட க்ருஹஸ்தரும் அத்யயனம் செய்யலாமென்று ஏற்படுகிறது. இப்படி சௌனக யாஜ்ஞவல்க்ய ஸத்யவ்ரதாதி ப்ரமாண வசனங்களாலும் பராசர மாதவீயம் ஸ்ம்ருதி கௌஸ்துபம் முதலிய நிபந்தன வசனங்களாலும் க்ருஹஸ்தாச்ரமத்தில் அத்யயனமும் வேதாத்யயன ஸமாப்தியன்றியில் க்ருஹஸ்தாச்ரம ப்ராப்திக்கு அதிகாரமும் ஸ்பஷ்டமாவதால் ச்ருத ப்ரகாசிகையில்

'[illegible]
[illegible]
[illegible] ॥

என்று க்ருஹஸ்தனுக்கு அத்யயன நிவ்ருத்தியை அருளிச் செய்திருப்பது அத்யயனத்தை முடித்து க்ரஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரித்தவன் விஷயமாகக் கொள்ளவேண்டும். இப்படி தத்வடீகா ஸ்ரீ ஸூக்திக்கும் இப்படியே நிர்வாஹம்.

பராசர ஸ்ம்ருதியின்படி ஏக தேசாத்யயனம் அனுமதமாகையால் தர்ம ஸிந்துவென்னும் நிபந்தனத்தில் '[illegible]' என்று ஆரம்பித்து



'[illegible]
[illegible]
[illegible] ॥

என்று கொஞ்சமேனும் வேதத்தை அத்யயனம் செய்து க்ருஹஸ்தாச்ரமத்தை அடைகிறவனையும் வித்யாஸ்நாதகனில் பரிகணநம் செய்தார். மேலும்

[illegible]
[illegible] ।

என்று சௌனக வசனார்த்தத்தை ஸங்க்ரஹித்தார். ஆக இவ்வளவால் வேத ஸமாபனம் அன்றியிலேயே க்ருஹஸ்தாச்ரம ப்ராப்தி யோக்யதையுண்டாகையால் ஏகதேசாத்யயனத்தால் அவ்வாச்ரமத்தில் ப்ரம்ம விசாரம் சாஸ்த்ரீயம் என்று உபபாதிக்கப்பட்டது. ஸ்வ வேதத்திலோ வேதாந்தரத்திலோ உள்ள இரண்டாவது சாகையையும் ஸ்வசாகையைப் போல் அத்யயனம் செய்யாவிட்டால் ப்ரம்மசர்யம் கெட்டு விடும் என்று மீனு ஸ்ம்ருதி வசனத்துக்கு பாவ வர்ணநம் சிலர் செய்திருப்பது அனுபபன்னம் என்பதே வேதவைபவ விமர்சத்தில் நிரூபித்திருக்கிறேன். மீமாம்ஸகரும்

'[illegible]
[illegible] ।

என்று மன்வாதிகளும் ஒரே வேதத்தில் இரண்டாவது சாகையை அத்யயனம் பண்ணிருப்பார்கள் என்கிற நியமம் இல்லை என்றார்கள்.

[illegible]
[illegible] ।

என்றும் நியமித்தார்கள். இவ்வர்த்தம் மீமாம்ஸா கௌஸ்துபம் தந்த்ர வார்த்திகம் முதலியவைகளில் ஸ்பஷ்டம்.

இவ்வாறே க்ருஹஸ்தர்களுக்குப் போல் துர்யாச்ரமிகளுக்கும் ஏக தேசாத்யயனத்தால் ப்ரும்ம விசாரம் உபபன்னம்.

[illegible] ।
[illegible]
[illegible] ॥

என்றிவை முதலியவை விரக்தியில்லாதவன் விஷயம் என்று பாமதியில் வாசஸ்பதி மிச்ரரால் உபபாதிதம்.

‘ [illegible] ’

என்று அர்த்த வர்ணநம் செய்து,

‘ [illegible] ’

என்று ஸமர்த்திக்கப்பட்ட அர்த்தம் இங்கு அநுஸந்தேயம், ‘வேதவாதரதோ ந ஸ்யாத்’ என்று ஸ்ரீ பாகவதத்தில் ஸந்யாஸாச்ரமிக்கு கர்ம காண்டாத்யயனமும் அதின் அர்த்த விசாரமும் நிஷேதிக்கப்பட்டாலும் உபநிஷத்தின் அத்யயனமும் அதின் அர்த்த விசாரமும் ப்ராமாணிகமாயிருப்பதோடு, ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய ஆசார்யர்களால் ப்ரும்ம விசாரம் செய்யப்பட்டும் இருப்பதாலும் ஸாம்ப்ரதாயிகமாகவும் ஏற்படுகிறது. இப்படி மூன்று ஆச்ரமிகளுக்கும் ஏகதேசாத்யயனத்தால் ப்ரும்ம விசாரம் ஸமர்த்திக்கப்பட்டது. மற்றொரு ஆச்ரமத்தைப் பற்றிய சர்ச்சை ப்ரக்ருத காலத்துக்கு அவச்யமில்லை.

இந்த கர்ம ப்ரம்ம விசாரங்கள் நித்யம் என்று வேத பாஷ்யகாரர் முதலியவர்களின் பக்ஷம்.

‘ [illegible] ’ என்றும், ‘ப்ராஹ்மணேந நிஷ்காரணோ தர்ம: ஷடங்கோ வேதோऽத்யேயோ ஜ்ஞேயச்ச’ என்கிற விதியில் ‘ [illegible] ’

என்றும் ‘[illegible]’ இத்யாதி நிஷேதத்தினால் அர்த்தாத் ‘[illegible]’ என்றும் இவ்வாறாக அர்த்த ஜ்ஞானம் நித்யமென்பதில் பல ப்ரமாணங்கள் ருக்வேதபாஷ்ய பூமிகையில் பாஷ்யகாரரால் உதாஹரிக்கப்பட்டது. ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: என்று விதிக்கப்பட்ட அத்யயனம் அக்ஷரக்ரஹண விச்ராந்தமானாலும் ‘ஜ்ஞேயச்ச’ இத்யாதி வாக்யாந்தரத்தால் அர்த்த ஜ்ஞானம் விதிக்கப்படுகிறது என்பது இவர் பக்ஷம். ‘ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:’ என்கிற விதியே அர்த்த ஜ்ஞான பர்யந்தம் என்பது பூர்வ மீமாம்ஸகர் பக்ஷம். தர்மஸிந்து என்னும் நிபந்தனத்தில்



‘ [illegible] ’

என்று வேதாந்திகளின் பக்ஷம் சொல்லப்பட்டது.

‘ [illegible] ’ என்றும்,
‘ [illegible]
[illegible] ’

என்றும் இந்த நிபந்தனகாரராலேயே சொல்லப்பட்டபடியே ச்ரௌத கர்ம விசேஷானுஷ்டானம் அர்த்த ஜ்ஞானமன்றியில் கூடாதாகையால் அர்த்த ஜ்ஞானத்தை ஆக்ஷேபிக்கின்றது என்று இவர் அபிப்ராயம். ஸ்வாத்யாய விதியே அர்த்த ஜ்ஞான பர்யந்தம் என்று ஒப்புக்கொண்ட மீமாம்ஸகரும் அர்த்த ஜ்ஞானமன்றியில் அநுஷ்டானத்தில் அதிகாரமில்லையென்றார்கள்.

‘ [illegible] ’

என்று இவ்வர்த்தம் தர்ம ஸிந்துவிலும் சொல்லப்பட்டது. நித்யங்களான க்ரத்வநுஷ்டானங்களுக்கு உபயோகியான அர்த்தார்ஜனம் முதலியவை எப்படி ராகப்ராப்தமோ அப்படி மீமம்ஸா ச்ரவணத்தினாலேற்படும் அர்த்த ஞானம் ராகப்ராப்தம் என்பது ஸித்தாந்திகளான நம்முடைய பக்ஷம்.

இப்படிப்பட்ட அர்த்த ஜ்ஞானம் ராகப்ராப்தமேயாகிலும்,

‘ [illegible] ’

என்கிற ச்ருதியை உதாஹரித்து தத்வடீகையில்,

‘ [illegible] ’

என்று அருளிச் செய்திருப்பதாலும் தேவதாதிகரண ச்ருத ப்ரகாசிகையிலும்

‘ [illegible] ’

என்று நியமித்திருப்பதாலும் பதார்த்த பூத தேவதாதி ஜ்ஞானம் அவச்யாபேக்ஷிதமென்றே ஸித்தாந்தம்.

'ஆரம்பே ஸர்வவேதாநாம் ஶ்ருத்யர்தம் நோதிதேவ ஹி ।
விநியோகம் ப்ரதிஜ்ஞாநம் ஸம்யக்ஜ்ஞாநாய லக்ஷணம் ॥'

என்றிவை முதலிய ஸ்ம்ருதி வசனங்களால் இந்த ச்ருதிக்கு உப ப்ரும்மணம் செய்யப்பட்டது. இவ்வர்த்தம் ஸ்வாவஸரத்தில் விசாரிக்கப்படும். ஆக இவ்வளவால் கர்ம ப்ரும்ம விசாரம் நித்யம் என்கிற பக்ஷாந்தரமும். ராகப்ராப்தம் என்கிற நம்முடைய ஸித்தாந்தமும் உபபாதிக்கப்பட்டது.

'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற விதியின்படி ஸாங்காத்யயனத்தால் ஏற்படும் ஆபாத ப்ரதீதியினால் சாஸ்த்ராரம்பம் ஸித்தாந்திகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அந்த ச்ருதியைப் பற்றிய ஸித்தாந்தத்தை உபபாதித்து இவ்வியாஸத்தை உப ஸம்ஹரிக்கிறேன். ஸ்வாத்யாய ப்ராம்மணம் என்று வழங்கப்படும் தைத்திரீயாரண்யகம் இரண்டாவது ப்ரச்னத்திலுள்ள 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற ச்ருதிக்கு பாஷ்யம் செய்யுமிடத்தில்

'க்ரஹணாத்யயநம் ப்ரஹ்மயஜ்ஞாத்யயநம் ச கர்தவ்யம் ।

என்று வேத பாஷ்யகாரரால் சொல்லப்பட்டது.

(1) இவரே பாராசரமாதவீயத்தில் ப்ராபாகரமதோபந்யாஸாவஸரத்தில். 'யத்ருசோऽதீதே' இத்யாதியால் சொல்லப்பட்ட பய: குல்யாதி பலன்களில் காமனையுடையவன் க்ரஹணாத்யயனத்துக்கு அதிகாரியாகலாமே என்று ஆக்ஷேபித்து

'பய:குல்யாதே: ப்ரஹ்மயஜ்ஞவிதிஶேஷத்வாத்'

என்பதனால் பய: குல்யாதி பலன்கள் ப்ரம்ம யஜ்ஞவிதி சேஷங்களாகையால் க்ரஹணாத்யயநத்துக்குப் பலன்களாக மாட்டா என்றார். (2) மேலும் ப்ராபாகரமத நிராஸாவஸரத்திலும்

'யத்யபி தைத்திரீய ஶாகாயாம் ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: இதி வாக்யஸ்ய ஸமீபே ப்ரஹ்மயஜ்ஞப்ரகரண பதிதத்வாத் ப்ரஹ்மயஜ்ஞவிதிரேவேதி, ததாப்யஶேஷஸ்ம்ருதிஷு ப்ரதிபந்நஸ்யாத்யயநஸ்ய மூலவசநத்வேநாஸ்ய ஶ்ருதித்வம் அநுமாதவ்யம்,

என்று ஸ்வஸித்தாந்தத்தை வெளியிட்டார். ப்ராபாகரர் சொல்லியபடி தைத்திரீய சாகையிலுள்ள ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: என்கிற வசனம்



ப்ரம்ம யஜ்ஞத்தையே விதிக்கிறது: ஆனாலும் உபநயந பூர்வகமாக அத்யயனம் எல்லா ஸ்ம்ருதிகளிலும் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுவதால் அந்த ஸ்ம்ருதிகளுக்கு மூலமான க்ரஹணாத்யயன விதி கல்பிக்கவேண்டும் என்று தாத்பர்யம். (3) ஸ்வாத்யாயமதீத என்கிற ச்ருதி வாக்யத்தை விட பரிணமத்தால் க்ரஹணாத்யயன விதாயகமாகக் கொள்ளவேண்டுமென்று விவரணகார மதத்தையும் மேலே ப்ரதர்சனம் பண்ணிவிட பரிணம பக்ஷமானாலும், மூல ச்ருதி அனுமிக்கப்படுவதானாலும் பக்ஷ த்வயத்திலும் க்ரஹணாத்யயனத்துக்கு ச்ருதி உண்டு என்று நிகமனம் செய்திருக்கிறார்.

'.................................ஸ்வாத்யாயேऽபிஹிதே: ।
அதிஸந்நாயமாநாம் வேதார்தஸ்ய ப்ரகாஶநே ॥' என்றும்

'ஸ்மார்தாசாரவ்யவஸ்தாநாம் வேதார்தம் ஸம்ப்ரதர்ஶித: ।'

என்றும் இவரே சொல்லியிருப்பதால் வேத பாஷ்யம் செய்தவரும் பாராசர ஸ்ம்ருதி வ்யாக்யானம் செய்தவரும் மாதவரே என்று வியர்சகர் நிர்ணயம். இவரேயானாலும் மற்றொருவரேயானாலும் தைத்திரீயசாகையில் க்ரஹணாத்யயன விதியில்லை என்பதற்குச் சொல்லிய உபபத்தி நமக்கு க்ராஹ்யம். (4) மேலும் இங்கு க்ரஹணாத்யயனம் விதிக்கப்படுவதானால் 'தஸ்ய வா ஏதஸ்ய யஜ்ஞஸ்ய த்வாவநத்யாயௌ' என்று ஆரம்பித்து அமாவாஸ்யை முதலிய அனத்யயனம் இதற்குக் கிடையாதென்று ச்ருதியில் சொல்லியிருப்பது உபபன்னமாகாது.

(5)'அத்யேஷ்யமாணோ நைவகார்யம் உக்தம் பலம் ஶ்ருதி: ।
யாவதே ஜயதேऽஸ்ய ஹவிஶ்ருதிரியம் யத: ॥'

என்று மீமாம்ஸகரும் க்ரஹணாத்யயனத்துக்கு ச்ருதியில் பலம் சொல்லப்படவில்லை என்றும்

'யம் யம் க்ரதுமதீதே........தேநைவாஸ்யாபிஷ்டம் ஸ்வஸ்ய ஸாயுஜ்யம்

ஜயதி ।'

இத்யாதிகளிற் சொல்லிய பலம் ப்ரும்ம யஜ்ஞத்தைச் சேர்ந்தவை என்றும் நிஷ்கர்ஷித்தார்கள். (6) நம்முடைய ஸித்தாந்தத்தை நிரூபித்தாலும் தைத்திரீயசாகையில் க்ரஹணாத்யயன விதியில்லை என்று ஏற்படுகிறது. ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: என்கிற ச்ருதிக்கு வ்யாக்யானம் செய்யுமிடத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் ஆசார்யோச்சாரணாநூச்சாரணமே அத்யயனமென்றும் அக்ஷரராசி க்ரஹணமே அத்யயன பலம் என்றும் ஸமர்த்திக்கப்பட்டது. ப்ரும்ம யஜ்ஞாத்யயனம் இப்படிப்பட்டதன்றே (7) ஶ்ராவண்யாம் ப்ரௌஷ்டபத்யாம் வா, இத்யாதியால் ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:

என்று சொல்லப்பட்ட அத்யயனத்துக்குக் கால நியமம் பண்ணியதும் ப்ரும்ம யஜ்ஞபரமானுல் பொருந்ாது, (8) ச்ருத ப்ரகாசிகையிலும் 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற உதாஹ்ருத வசனத்தினுல் ஜப யஜ்ஞத்திலும் அத்யயன சப்தம் ப்ரயோகிக்கப்படுவதால் அது இங்கு விவக்ஷிதமன்று என்று அருளிச் செய்யப்பட்டது. (9) ஸச்சரித்ரரக்ஷையில்

யம் யம் க்ரதுமதீதே தேந தேநாஸ்யேஷ்டம் பவதீதி தத்க்ரது பலஸ்ய ஸாத்யத்வ ஜபாத்யயநே விநியோகஸ்யாபி ப்ராஹ்மண ஸாமர்த்யாத்

என்று தைத்திரீயசாகையில் க்ரஹணத்யயன விதியில்லாமையாலேயே ஜபாத்யயனத்துக்கே யம் யம் இத்யாதியால் சொல்லப்பட்ட பலம் என்று அருளிச் செய்யப்பட்டது (10) தத்வடீகையில் உதாஹரிக்கப்பட்ட ந்யாய ஸுதர்சனத்தில்

'தத்ர...ஸ்வாத்யாயமதீயீத, ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:, இத்யாதிஷு ப்ராப்தஸ்யாபி கர்மவிசேஷப்ரதிபாதக வாக்யஸ்யாபி ஸம்ஸ்காரக ஸ்ருதி ஸஞ்ஜிகா உபநயநம் இத்யேவ ஸம்ஸ்காரகத்வாத் தஸ்ய ஸம்ஸ்காரத்வம் ஜபாதேஸ்து தந்த்ரஸ்யாபி விஷயத்வாதர்ஷ்டம் ஸாதகம்...ஸக்ருத் ச்ரவணாது தத்ர ஸம்ஸ்கார வர்ணிதம்।'

என்றருளிச் செய்திருப்பதால் பலச்ரவணத்தோடு கூடிய தைத்திரீயசாகையில் ப்ரம்ம யஜ்ஞவிதியே யல்லது க்ரஹணத்யயன விதியில்லை என்று தெளிவாகிறது. (11)

'ஸ்வாத்யாயம் நாத்ர ப்ராக் ஸம்ஸ்கார கர்தார் கர்மசோதித:।
ஸ்வாத்யாயஸ்யாவிரோதேன ஸக்ருத்ச்ரவணதோபி வா ॥'

என்று க்ரஹணத்யயனத்தின் பலம் ச்ருதியில் சொல்லப்படவில்லை என்றும் கண்டோக்தம். (12) தத்வடீகையில் ஸ்ரீ தேசிகனும்,

'ஜபாத்யயநம் ச்ருதம் தத்த்ஸு ஸமுதிதம்।
நிர்தேசம் பலஸம்பந்தம் க்ரஹணாத்யயநே கிம் வசநம் ॥'

என்று காரிகையினுல் ச்ருதியில் சொல்லப்பட்ட பலத்தோடு கூடியது ஜபாத்யத்யயனமே என்றும் அப்படி பலம் சொல்லப்படாத க்ரஹணத்யயனத்துக்குக் கேட்கவேண்டுமோ என்றும் அருளிச் செய்தார். ஜபாத்யயநம், நிர்தேசம் என்று பாடங்காணப்படுகிறது. ஆக இவ்வாருன ப்ரமாணங்களால் தைத்திரீயசாகையில் பல ச்ரவண முள்ளதால் ஸ்வாத்யாயோऽத்



யேதவ்ய: என்கிறது ப்ரும்ம யஜ்ஞ விதியே யல்லது க்ரஹணத்யயன விதியன்று என்று ஸித்தாந்திகளின் பக்ஷம் உபபாதிதம் (13)

'அவஹத வாஜ்ஞஸ்வாத்யாயோ தேவ பவித்ரம் வா வர்த்தம் யோ நவிஸ்ருஜதி'

இத்யாதி நிந்தாச்ரவணத்தினுல் ப்ரம்ம யஜ்ஞம் நித்யமென்றும் அநயா நாவ்ராத்யா பவதி—என்கிறதால் க்ரஹணத்யயனம் நித்யமென்றும் மீமாம்ஸகரும் நிபந்தனகாரரும் பிரித்துச் சொல்லியிருப்பதாலும் இப்ப்ரகரணம் க்ரஹணத்யயன விஷயமன்று என்று ஏற்படுகிறது. இவ்வர்த்தங்களை விரிவாக மற்றொரு ப்ரகரணத்தில் நிரூபிக்கலாமென்று இதோடு நிறுத்திக்கொள்ளுகிறேன் (14) சதபத ப்ராம்மணத்தில் 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்று க்ரஹணத்யயன விதி என்று ஆகாரம் காட்டியிருக்கிறார்கள்,

"வேதாங்கானாம் ச வேதஸ்ய விசாரோऽப்யஸநம் ஜப:।
தத்தானம் சைவ சிஷ்யேப்யோ வேதாப்யாஸோ ஹி பஞ்சதா ॥"

என்கிற ப்ரமாணத்தின்படியே இந்த ப்ரம்ம விசாரம் வேதாப்யாஸ ரூபமானபடியாலே ஸ்ரீ பாஷ்யகாரர் 'சாரீரக ப்ரவசந பரதயாऽஸ்து யோக:' என்று நியமிக்க நம் ஆசாரியன் 'பத்ரப்ரவசநாதீந ஸஹஸ்ரேண நீதம் வய:' என்கிறபடியே காலத்தைப் போக்கியது. ஸ்ரீ வைஷ்ணவ தினசரியில் ஸ்வாத்யாயத்தை அருளிச் செய்யுமிடத்தில் உபப்ரும்மண நிரபேக்ஷாதிகாரிகளுக்கு 'மறைகளின் மறையெனு முறைகளாகிய வேத ஸாரங்களாகிய அஷ்டாக்ஷராதிகளையும் தத்ஸாபேக்ஷரான நமக்கு விசேஷித்து ஸம்ஸ்கிருத ரூபமாயும் த்ரமிடபாஷாத்மகருமான உப ப்ரம்மணங்களையும் நித்யானு ஸந்தேயங்களாக நிரூபித்தருளினர். ஆகையால் அகஸஙயாத்யாத்ம குணங்களைக் கைப் பிடித்தவர்களும் ஆசாரவான்களாயும் ஆசார்யவான்களாயும் மற்றும் சாரீரகார்த்த ச்ரவணத்துக்குக்கு வேண்டிய த்ருஷ்டாத்ருஷ்ட ஸாமக்ரீமான்களுமான மஹான்க்ள் யதாதிகாரம் ப்ரம்ம விசாரோப யோகியான பாக மாத்திரத்தையாவது அத்யயனம் செய்து ப்ரம்ம விசாரஞ் செய்து க்ருதார்த்தராகப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்வாத்யாயஸம்ப்ரதாய ப்ரஜ்ஞாவதாமிதேநாபதிஷ்டோऽர்த்ய:।
ஸுஹ்ருதிவாத்ரோபி க்ருதார்த்தபவத்யதீ ப்ரியோ ஹி ந:॥

---

ஸ்ரீ:

# விவாதபாகம்

## ஓர் ஸந்தேகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த த்ரமிடோப நிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை" (3—5) என்னுந் திருவாய் மொழியின் ஸாரார்த்த ஸங்க்ரஹமாக அருளிச் செய்துள்ள "ப்ராஹப்ராஜ்ஞோ ஸௌரிகேஷு" என்னும் ஶ்லோகத்தில் "கோதாஹேதோருக்ஷாவலேடா" என்பதில் பாடம் மாறுபட்டிருக்குமோ என்கிற ஸந்தேஹம் அடியேனுக்கு உண்டாகியிருக்கின்றது. "வம்பவிழ்கோதை பொருட்டா மால் விடை யேழு மடர்த்த" என்கிற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி "கோதாஹேதோருக்ஷாவலேடா" என்கிற பதம் அருளிச் செய்யப்பட்டிரா நின்றது. கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் ஏழு எருதுகளை வலியடக்கினது கும்பர் மகளான நப்பின்னைப் பிராட்டியின் பொருட்டாகவேயாம் என்பது ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலிய வற்றில் மிகவும் ப்ரஸித்தமாகவுள்ளது. ஆழ்வார்களும் பல விடங்களில் இங்ஙனமே அருளிச் செய்திருக்கக் காண்கிறோம். "தளவேழ் முறுவல் பின்னைக்கா வல்லானுயர் தலைவனாய், இளவேறேழுந்தழுவிய வெந்தாய்" என்றும் "காம்பணை தோள் பின்னைக்காய் ஏறுடனேழ் செற்றதுவும்" என்றும், "தோளி சேர்பின்னை பொருட்டு எரு தேழ்தழீஇக் கோளியார்" என்றும் பலபல பாசுரங்கள் ஸ்பஷ்டமாகவேயிருப்பது காணலாம். ஆண்டாளுக்காக எருதேழ் அடர்த்ததாக எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லை. நம்மாழ்வார்க்குப் பிற்பட்டவளான ஆண்டாளுடைய விஷயம் திருவாய்மொழியில் வருவதற்கு ப்ரஸக்தியுமில்லை. "வம்பவிழ் கோதை பொருட்டா மால்விடை யேழு மடர்த்த" என்ற ப்ரக்ருத பாசுரத்தை வியாக்கியானித்தருளின [திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதற்கொண்டு] ஸகல ஆசார்யர்களும் "நப்பின்னைப் பிராட்டிக்காக" என்றே வ்யக்தமாக வியாக்கியானமருளி யுள்ளார்கள். மூலத்தில் "கோதை பொருட்டா" என்பதற்கு—'கோதையையுடையளான நப்பின்னையின் பொருட்டாக' என்பது பொருள். கோதையென்கிற தமிழ்ச் சொல் தலைமயிர் முடியையும் பூமாலையையும் சொல்லும். இப்பொருளில் ஆயிரக்கணக்கான பிரயோகங்கள் ஆழ்வார்களது அருளிச் செயல்களிலும் இதர பிரபந்தங்களிலும் மலிந்துள்ளன. ஆண்டாளுக்கு வாசகமான கோதா என்கிற வடசொல் கோதை என ஆவது உண்டானாலும், திருவாய்



மொழியிலுள்ள கோதை யென்கிற சொல்லுக்கு கோதா என்னும் வடசொல் பிரகிருதியன்றென்பது விவரித்துரைக்க வேண்டாத விஷயம்.

பிரகிருதத்தில் (கோதாஹேதோருக்ஷாவலேடா என்பதில்) கோதா என்கிற பிரயோகம் எங்ஙனே பொருந்தும்? கோதா என்னும் வடசொல் ஆண்டாளைச் சொல்லுமேயல்லாது நப்பின்னையைச் சொல்ல கில்லாதே. ஆண்டாளைப் பற்றின பரஸ்தாவம் இங்கு கிடையாதே.

மூலத்தில் கோதை பொருட்டா என்றிருப்பதனால் ஸ்வாமி (கோதாயை) என்று பிரயோகித்தருளினர் என்று ஸமாதானம் சொல்வது அழகியதாகுமோ? மூலத்திலுள்ள கோதை யென்ற சொல்லுக்கும் கோதா என்கிற வட சொல்லுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்பதைப் பிரமாணிகர்களான விவேகிகள் உணர்வார்கள்.

தேசிகன் "நீளாயை" என்று அருளிச் செய்திருந்து, அது "கோதாயை" என்று பாடம் மாறியிருக்கக்கூடுமோ என்று சிற்றறிவினனான அடியேனுக்குத் தோன்றுகிறது. நப்பின்னைப் பிராட்டிக்கு (நீளா) என்று திருநாமமாதலால் (நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம் இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளும் காண்பதால்) இங்கு ஸ்வாமி "நீளாஹேதோருக்ஷாவலேடா" என்று ஸாதித்திருக்கக்கூடும், அது பிறழ்ந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இவ் விஷயத்தில் பிராமாணிகர்களான மஹான்களின் நிர்ணயம் தீபிகை மூலமாக வெளிவருமாயின் உலகுக்குப் பேருதவியாகும்.

ஸ்ரீ காஞ்சி. ப்ர. அண்ணங்கரார்ய தாஸந்.

## ஸமாதானம்

கோதை என்னும் சொல் தமிழ் பாஷையைச் சேர்ந்தது என்பதில் ஸம்சயம் இல்லை. गोदा என்னும் பதம் வடமொழிக்கு அஸாதாரணமான பதம் என்று ஒப்புக்கொள்ள ப்ரபல ப்ரமாணம் இருப்பதாகத் தெரியவில்லை. கோதை என்னும் சொல்லுக்குப் பல பொருட்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. गोदावरी என்னும் பெயர் ஏது காரணம்பற்றி வந்தது என்பதை விசாரித்தால் ப்ரகிருத விஷயத்திற்கு கொஞ்சம் வெளிச்சம் உண்டாகலாம். ஆண்டாளுக்கு கோதை என்று திருநாமம் வாய்த்ததற்குப் பலர் பல படியாய் காரண நிரூபணம் செய்கிறார்கள். நப்பின்னைப் பிராட்டிக்குக் கோதை என்ற பெயர் உண்டு. அந்தப் பெயரையே ஆண்டாளுக்கும் வைத்திருக்கக்கூடும். கோதை என்ற தமிழ்ச் சொல்லை வடமொழியில் அநுகரணம் செய்யும்போது गोदा என்று மாறு

வது இயல்பு. கோதை என்னும் பெயர் நப்பின்னைப் பிராட்டிக்கும் ஆண்டாளுக்கும் பொதுவான பெயராக இருக்கக்கூடுமாகையால், **गोदा** என்ற வடமொழிப்பெயரும் இருவருக்கும் பொதுவாக இருக்கக்கூடும் என்று ஒப்புக்கொள்வதில் விரோதம் ஒன்றும் தென்படவில்லை. ஆகையால் கோதை பொருட்டு என்ற சொல்லை **गोदार्थं** என்று கீர்வாணபாஷையில் சொன்னது நன்று என்றே தோன்றுகிறது. இந்த நப்பின்னைப் பிராட்டிக்குப் புராணங்களில் **नीळा, सत्या, नाग्नजिती** முதலிய பல பெயர்கள் காணப்படுகின்றன. அவைகளோடு **गोदा** என்ற பெயரும் இருக்கக்கூடும். அப்படி இராவிட்டாலும் புராண ப்ரசித்தமான பெயர்களைக் காட்டிலும் ஆழ்வார் வைத்த பெயரே ச்லாக்யம் எனக்கருதி—ஸ்ரீ தேசிகன், கோதை என்ற பெயரை ஸம்ஸ்கிருதப்படுத்தி அருளிச் செய்தார். **नहि सूत्रकृता ऋषिणैव भवितव्यम् इति राजाज्ञास्ति** என்று பேசுந் திறமை வாய்ந்த நம் தேசிகன் ஒருத்திக்குப் பெயர் ஏற்படுத்தும் விஷயத்தில் தீரமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் நடக்கத்தட்டென்ன? இருபாஷைகளிலும் ஸம்ப்ரதாயமான வல்லமை வாய்ந்தவர் விஷயத்தில் அவர் பேசியது சரி என்று இருப்பது உசிதம்.

---

[ஸ்ரீ. உப. வ. சே. ஸ்ரீநிவாசய்யங்கார் B. A. எழுதியது.]

ஸ்ரீ காஞ்சீபுரம் உ. வெ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய "விஜயத்வஜ, வைஜயந்தி"யில் உள்ள நிர்வாகங்களின் ஆராய்ச்சி.

ஷை "வைஜயந்தி" பக்கம் 6ல் பெருமாள் திருமொழியில் "வாளும்" பாசுரத்தில் பெரியவாச்சான் பிள்ளை கீழ்க்கண்ட அவதாரிகையை அருளிச் செய்திருக்கிறார் :—

"திருமலையில் சிகரமானால் ஏறவல்லார் அனுபவித்து, மாட்டாதார் இழக்குமதாயிருக்குமிறே" அப்படியின்றியே எல்லார்க்கும் அனுபவ யோக்யமாயிருக்கும் கானாறு ஆக வேணும் நானென்கிறார்.

"கானாறாய்ப்பாயுங் கருத்துடையனாவேனே" என்றும் ஈற்றடியின் வியாக்கியானத்தில் "ஸஹ்யம் பற்றினதாகில் கீழே போமிறே". அங்கே சுவறிப்போகும் காட்டாறு குமிழிநீரை யுடையேனாக வேணுமென்கிறார். மேல் கோடிட்ட "அனுபவ யோக்யமாயிருக்கும்" என்னும் வார்த்தைகளையும் "அங்கே சுவறிப்போகும்" என்னும் வார்த்தைகளையும் ஸமந்வயப்படுத்தத் தெரியாமல் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்



கின்றதென்று மருண்டு, ரோஜாப்பூமாலையில் எருக்கம் பூக்களை நுழைப்பதுபோல் தன்னுடைய சொந்த வாக்கியக்களை ஆசார்ய திவ்ய ஸூக்திகளின் நடுவே நுழைக்கப்பார்க்கிறது.

இப்பாசுரத்தின் கருத்தென்னவெனில் ஆழ்வார் தான் திருமலையில் ஏதேனும் ஒரு வஸ்துவாக அமையப் பெறின் தனக்கு திவ்ய தேசவாசமும் பகவத் சம்பந்தமும் பாகவத ஸம்பந்தமும் ஒருங்கே கிடைக்கப்பெறுமென்று விரும்புகிறார். ஒரு ப்ரபந்நன் தான் பகவத் பாகவதானுபவம் பண்ணுகையன்றிக்கே அவர்களுக்குத்தான் அனுபவ யோக்யமாய் இருக்கவேண்டும். ஸ்வானுபவத்தில் ஸ்வாதந்திரிய தோஷம் ஸம்பவிக்குமாகையால் தான் அவர்களுக்கு அனுபவயோக்யமாய் அவர்கள் இஷ்ட விநியோகார்ஹமாய்பாரதந்திரியமாகிய ஸ்வஸ்வரூபம்ஸத்தை பெற நிற்பதே ப்ராப்தம். ஆழ்வார் உத்தம ப்ரபந்நராகையால் அசேதனவத்பாரதந்திரியத்தோடு அனுபவ யோக்யமாயிருக்கையையே "அடியார்கள் குழாங்களுடன் கூடுவதென்று கொலோ" "அடியார்தம் ஈட்டங் கண்டிடக்கூடுமேல்" என்று மிகவும் விரும்புகிறார். ஆழ்வார் பாகவத ஸம்ச்லேஷத்தைத்தான் அனுபாவ்ய மாயிருக்கும் படியாலேயே அபேக்ஷிக்கிறவராகையாலே கானாறாய்ப்பாயுங்கருத்துடையானார். "திருமலையில் தம்முடைய பிறவி பிறரொருவர்க்குப் பயன்பட வேண்டுமென்பது இவருடைய திருவுள்ளமல்ல" என்கிற வைஜயந்தியின் பேச்சு விரஸமாயும் ஆழ்வார் கருத்துக்கு நேர்விரோதமானவற்றைக் கூறுவதுமாகும். சைதன்யமுள்ள ஒவ்வொருவனும் தன்னலத்தைத் துறந்தாயினும் பிறர் நலத்தையே விரும்பவேண்டும். பிறர்க்கு உறியனாகுதலே பெறுதற்கரிய பேறு. அதுவே பிறவிப்பயன். உலகில் புகழ் பெற்ற புருஷர்கள் பிறர்க்குறியராயிருந்தமையாலேயே மஹநீயரானார்கள். இது வேத சாஸ்த்ரங்களின் கோஷம். தம் பிறவி பிறர்க்குப் பயன்படா வாழ்க்கை ஒரு வாழ்க்கையோ?

ஆழ்வார் பாகவதரனைவற்கும் தாம் அனுபாவ்யமாயிருக்கும் படியையே விரும்புகிறார். சிகரம்போல் சிலர்க்குமட்டும் பயன்படாமல் அனைவர்க்கும் பயன்படுவதான "கானாறாய்ப்பாயும் கருத்துடையேனாவேனே" என்கிறார்.

இங்கு "பெரிவாச்சான் பிள்ளை" ஏன் கானாறாய்ப் பாயவேண்டும்? பெருக்காறாய்ப் பாய்ந்தால் கானாற்றைவிட விசேஷமாக அனுபவயோக்யமாயிருக்குமே என்கிற சங்கையை மேற் கொண்டு ஆழ்வாரது கருத்தை அழகாக வெளியிடுகிறார். பெருக் காற்றைவிட கானாற்றின் சிறப்புத்தோற்ற "ஸஹ்யம்பற்றின்தாகில் கீழே போமிறே" என்கிறார். அதாவது ஸஹ்யபர்வதத்திற் பிறந்த பெருக்காறு போல

திருமலையிற்பிறந்த பெருக்காறுக ஆனால் பெருக்கின் மிகுதியால் மலையைவிட்டு நீங்கிக் கீழே பாய்ந்து செல்லநேரும். ஆதலால் மலை விச்லேஷம் ஸம்பவிக்கும். ஆழ்வார் இறைப்பொழுதும் தத்விச்லேஷத்தைத்தரிக்க வொண்ணுதாராகையாலே மலையை விட்டுக் கீழே பாயவேண்டும்படியான அளவு ஜலப் பெருக்கில்லாத காறுகவேண்டுமென்று விரும்புகிறார். இன்னமும் பெருக்காறுனல் மலையை விட்டுப் பிரிகையுமன்றிக்கே உவர்க்கடலில் வீழ்தலாகிய அத்யசேஷத்வமும் ஸம்பவிக்கும். இவ்விரண்டையும் தவிர்க்கவேண்டுமென்றே ஆழ்வார் திருமலையிற் பிறந்து அதிலே தவழ்ந்து பெருகி அனைவற்கும் அனுபாவ்யமாய் குள்ளக்குளிரக்குடைநது நீராட வேண்டும்படியான ஜலப்பெருக்கையுடைத்தாய் மலைமேலேயே பாய்ந்து, ஆனால் அதைவிடக் கீழே பாயவேண்டிய அளவு ஜலமில்லாமல் மலையின் ப்ரதேச எல்லைக்குள்ளேயே வற்றிவிடும்படியான காறுப் பிறக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். "கீழே போமிறே" என்பதற்கு எதிர் மறையாக "அங்கே சுவறிப்போம்" என்றார்.

அங்கே:—மலையின் எல்லைக்குள்ளேயே. "சுவறிப்போமென்பதற்கு ஊற்று ஊறின உடனேயே ஜலம் சிறிது மின்றி வற்றிவிடும் என்று வைஜயந்தி" பொருள் கொண்டு எப்படி அநுபவயோக்யமாயிருக்குமென்று மயங்குகிறது. எவ்வளவு சிறிய ஆறுயினும் சிறிதுதூரம் கூட ஜலம் பாயாமல் வற்றவே வற்றாது. ப்ரவாஹம் ஒரு சிறிதுமில்லாவிட்டால் ஆறு என்ற பெயர் எப்படி வரும்? "காறுய்ப்பாயும்" என்று பாயும் என்றதினாலேயே ஜலப்ரவாஹம் உண்டு என்று அர்த்தமாகவில்லையா? "பாயும் கருத்து" என்றதனால் ஆழ்வாருக்கு காறுய்ப் பெருகி பிறர்க்கு அநுபாவ்யமாயிருக்கும்படி பாய்ந்து செல்லவேண்டுமென்று அபிஸந்தியென்று தோன்றவில்லையா? மேலும் அடுத்த பாட்டின் வியாக்யானத்தில் "நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேனுவேனே" என்பதற்கு ஆறுனல் ஒருக்கால் பெருகினல் விநியோகப்பட்டு வற்றினல் விநியோகப்படாதிறே. அங்ஙனன்றியே எப்போதும் ஒக்க வைஷ்ணவர்கள் சஞ்சரிக்கையாலே அவர்கள் பாதரேணு படும்படி "வழியாய்க் கிடக்கும் நெறியுடையேனுவேனே" என்று அருளிச் செய்கிறார். ஆதலால் பாகவதரனைவர்களுக்கும் அநுபாவ்யமாயிருக்கும்படி திருமலையிலே தேறும் ஒருபடியாக இருக்கவேண்டுமென்றே ஆழ்வார் கருத்தென்று தோன்றவில்லையா?

இன்னமும் திருமலையில் சிகரமானல் எவரேனும் பெயர்த்துக் கொண்டு செல்லநேரும், அதனல் அயோகமும் அத்யயோகமும்ஸம்பவிக்கும். "ஆதலால் காறுய்ப்பாயும் கருத்து" என்கிற வைஜயந்தியின் பேச்சும் அபஹாஸ்யமேயாம். எங்ஙனேஎனில் தம்பகமாய் நின்றால் சிறிது காலத்திலேயே அழிவுற்று அல்லது எவரேனும் எடுத்தேகிப் பிரிய நேரும். மலையின் பிரதான அவயவமாகிய சிகரமானல் என்றும் சேர்க்கப் பிரிக்க முடியாதபடி மலையுள்ள வரையில் வர்த்திக்கலாம் என்று "அன்னனைய பொற்குவடாமருந்தவத்தனுவேனே" என்றார். இங்ஙனே அர்த்த ஸ்வாரஸ்யம் தோற்றத் தெளிவாகவே வியாக்கியானமிருக்க அர்த்தமாக வில்லையென்று நடுவில் சில வாக்கியங்கள் விடப்பட்டுப போயினவென்று நுழைந்தப்பார்ப்பது வியப்பினும் வியப்பே.

ஸ்ரீ

# ஓர் ஸந்தேகம்

"வேதவைபவ விமர்சமும் பிரம்ம விசாராதிகார நிர்ணயமும்" என்கிற வியாஸத்தை வாசித்தேன். அதில் அர்த்தஜ்ஞாநமில்லாமல் கர்மாநுஷ்டானம் செய்தால் பலஸித்தி இல்லையென்று பல கிரந்தகாரர்களின் அபிப்ராயமென்றும், பிரம்மயஜ்ஞத்தில் வேதத்துடன் அங்கங்கள், ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் முதலியது சொல்லவேண்டுமென்றும் பிரம்ம விசாரத்திற்கு ஸ்வசாகாத்தியயனம் பண்ணவேண்டிய நிர்ப்பந்தமில்லையென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இம் மூன்று விஷயங்களில் முதல் விஷயம் ஸரியில்லையென்று ஆர்யதர்மத்தில் நிரூபித்து விட்டபடியால் பின் இரண்டு விஷயங்களில் ஸந்தேகம். பிரம்ம யஜ்ஞத்தில் நான்கு வேதங்களுடைய ஆரம்பமும், ஸ்வசாகையினுடைய அத்யயனமுமே ஆஹ்நிகங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சிஷ்டாசாரமும் அப்படியே இருக்கிறது. இது பிராமாணிகமா இல்லையா? பிராம்மணனுக்கு ஸ்வசாகாத்யயனம் அவசியமென்று தெரியவருகிறது. "ஸ்வாத்தியாயோத்யே தவ்யஹ" என்ற தைத்திரீயாரண்யக வாக்கியத்திற்கு அதன் பாஷ்யத்தில் பிதா பிதாமகன் முதலியோர்களிடமிருந்து வந்தவேதத்தின் அத்தியயனத்தையும் பிரம்மயஜ்ஞத்தின் அத்தியயனதையும் செய்யவேண்டுமென்றும் ருக்வேத பாஷ்ய பூமிகையில், வெதா நய்ீதூவெதளவாவெதம்வாவியமாகூ உ௦, என்கிற மனுஸ்மிருதியில் சொல்லப்பட்ட, ஒரு வேதத்தை அத்யயனம் செய்வது என்னும் பக்ஷத்தில் பிதா பிதாமகன் முதலியோரிடமிருந்து வந்த வேதத்தையே அத்யயனம் செய்யவேண்டுமென்று நினைத்து ஸ்வாயா யொயெதவ்யஃ, என்கிற இடத்தில் ஸ்வ, என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டது என்றும் 'ஃநயீயாநாவ்ராதா ஹவதி, யொநயீதூ ஷிஜொவெடு௦ என்ற பிரமாணப்படி; ஸ்வசாகாத்யயனம் நித்யமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாஷ்யத்தில் அத்யயன விதியை நிரூபித்து, ஃஷ்டவஷ௦ ஸ்ராஹ்ணமுவநயீத தமத்யாவயெத, ஸ்ராவண்யா௦ வெராஷ்வவத்யா௦வா உவாகூதூயமாவியயாஃஹூநா௦ ஸ்யயீத ஸாவாவிவெராயவெஷஸாநு, என்கிற வசனங்களால் எட்டாவது வயதில் பிராம்மணனுக்கு உபநயநம் செய்யவேண்டுமென்றும் உபநயநம் உபாகர்மம் முதலிய வ்ரதம் மற்றும் சில நியமங்களும் ஸ்வசாகாத்தியயனத்திற்கு அங்கமென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன; வெடாவ்யா ஃஷாராவெரஹணம். என்கிற ஸ்ரீ பாஷ்யத்திற்கு வியாக்கியானமான

வெதாவ்யஸ வெநக்ஷ்ஸூாயயநம் ஸஹிதம் ।
'நஹிவெதாஜ ஸாமா௦ ஸ்வாயயாயஸ்வாமும் ॥

என்ற ச்ருத ப்ரகாசிகையாலும், ஃயயநஸ்ஹீத ஸ்வாயயாயெயஃவெ ஸாவநிஷ ஸாவெக்ஷ் என்கிற; ஸ்ரீபாஷ்யத்தாலும், ஃயயநஸ்யக்ஷ்ஸூ ஸ்வாயயாய விஷயகவாஃ உவநிஷஷ்ஸ்வாயயாய ஸாஜ ஹஷ்தகாஷி

ஸாங்க:. என்ற அதன் வியாக்கியானத்திலும் ஸமந்வயாதிகரணத்தில், அதீதவேதஸ்ய என்கிற ஸ்ரீபாஷ்யத்திற்கு யதா அதீதஸாங்கஸஶிரஸ்கவேதஸ்ய விஜ்ஞாதஸாதஸ்ய க்ருதவஸாந:. வேதாந்தவாக்ய ஜந்ய ப்ரஹ்மஜ்ஞாநாயைவ வேதஸ்ய நகர்ம விசாராபேக்ஷா தாதீதவேதஸ்ய த்விதீய:. அத்யாபயேத்விப்ர:. நாந்யோ அத்யாபயேத்விப்ர:, ஸ்ருத்வேதாத்யய நாத் 'வேதாதிதவேதாந்த ஸாரஸ்ய ஸதவேதஸ்ய' என்கிற ஸ்ருதப்ரகாஶிகாவ்யாக்யாநத்தாலும் வேதாந்தாத்யயந நஸ்யாஸா ஸ்ரீயஸாதந. யதா அதீதஸாங்கஸஶிரஸ்கவேதஸ்யாபீதி. என்கிற ஸாவ்ய காஶிகையாலும் நதாவத நதீதவேதஸ்ய...................தந்த்ராத்யயந விப்ரஸ்ரவணாத். என்கிற சததூஷணீ க்ரந்தத்திலும். கேஷாஞ்சி கேவலமேவாத்யயந உபநிஷதாம் தாத்பர்யஸத்தா:. என்கிற தீபஸாரார்த்தஸங்க்ரஹியாலும், அதன் வியாக்கியானத்தாலும் கர்மப்ரஹ்மம் ப்ரஹ்மம். இரண்டுமே ஸ்வாத்யாயஶப்தவாச்ய மென்றும் கர்மபாகத்தை மாத்திரமோ ப்ரஹ்மபாகத்தை மாத்திரமோ அத்தியயனம் செய்வது ஶாஸ்த்ரீய மன்று என்றும் அது ப்ரஹ்மவிசாராதிகாரமாகாது என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அபிவாதநத்தில் நாம் ருக்சாகையையோ யஜுஸ்சாகையையோ, ஸாமசாகையையோ, அத்யயனம் செய்பவன் என்று வம்ச பரம்பரையை அனுஸரித்து சொல்லிவருகிறோம். உபாகர்மத்தில் கர்மகாண்டத்தை ஆரம்பிக்கிறோம். இப்பொழுதும் சிலர் ஸ்வசாகாத்ய யனம் அவச்யமன்று என்றால், அதற்கு அங்கங்களான உபநயனம், உபா கர்மம் முதலியது அவசியம் செய்யவேண்டுமா? அங்கத்தை மாத்திரம் அனுஷ்டிப்பது எந்த கர்மாவிலும் கிடையாதே. கலியுகத்தில் பராசர ஸ்மிருதியின்படி உபநிஷத்தை மாத்திரம் அத்தியயனம் செய்து பிரம்ம விசாரம் செய்யலாமென்று ப்ரஹ்மவிசாராயிகார நிர்ணயத்தில் நிஷ்கர் ஷிக்கப்பட்டிருக்கிறதே. மேற்படி ஸ்மிருதியை ஸ்ரீ பாஷ்யகாரர் முதலி யோர் கடாக்ஷிக்காமலிருக்க முடியுமா. ப்ரஹ்மவிசாரத்திற்காக உப நிஷத்தை மட்டிலும் அத்யயனம் செய்வது என்றால் நித்ய நைமித்திக கர்மாக்களை அனுஷ்டிப்பதற்காக கர்ம பாகாத்யயனம் வேண்டாமா, கர்மமத்தில் உபயாகதாத்யயநம் செய்வதென்றால் உபநிஷத்தில் விஷய வாக்யத்தை மாத்திரம் அத்யயனம் செய்தால் போராதா ஸ்வ சாகாத்யயனம் அவச்யமன்று என்றால் அபிவாதநவாக்யத்தை மாற்ற வேண்டாமா. இம்மாதிரியான சங்கைகளுக்கு "வேதாந்த தீபிகையின்" மூலம் ஸமாதானத்தை எழுதும்படி வித்வான்களை பிரார்த்திக்கிறேன்.

தேரெழுந்தூர் கனபாடி
திருமலாசார்யதாஸ:

# விருத்தாந்தங்கள்

## அத்திவரதர் மண்டலாராதனம்.

மண்மகளார்க்கு அலங்காரமாய் விளங்கும் காஞ்சி க்ஷேத்திரத்தில் இப்போது ஒரு விசேஷம் நடைபெறுகிறது. மாதங்காசலமௌளி மண்டன மணியென்று பூர்வர்கள் கொண்டாடியிருக்கும் அத்திகிரிக்கணி கலமான வரதனுடைய பிராசீனமான மூலவர்திருமேனி இப்பொழுது சேவையாகிறது. ஸ்தலவாசிகளான பெரியோர்கள் கரிகிரியில் ஸேவை ஸாதிக்கும் மூலவர் திருமேனியை அங்கே எழுந்தருளப்பண்ணும் முன்னர் அத்தியென்றும் தாருவாலமைந்த திருமேனியுடன் ஒரு மூலவர் ஸாந் நித்யம் செய்தருளியதாகும். இப்போது இத்தனை வருஷங்களுக்கு முன் பென்று கணக்கிழந்த காலவிசேஷத்தில் அவர் ஆஜ்ஞையால் அந்தத் திருமேனியை ஸன்னிதியின் புராதன புஷ்கரணியாகிய அநந்த ஸரஸ்ஸில் எழுந்தருளப் பண்ணி அந்த ஸ்தானத்தில் இப்போது ஸேவை சாதிக்கும் மூலத் திருமேனியை பிரதிஷ்டை செய்ததாகவும் சொல்லி வருகிறார்கள். இதைப்பற்றிய சாஸநம் ஒன்றும் கோயிலில் எழுதப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. இந்த மூர்த்தியையே சுமார் 45 வருஷங்களுக்கு முன் வெளியில் எழுந்தருளப் பண்ணி ஸேவை செய்வித்தது இப்போது இருக்கும் அநே கருக்குக் கூட ஞாபகமிருக்கக்கூடும். ஆதலால் சுமார் 40 அல்லது 50 வருஷங்களுக்கொருதரம் இவ்விதம் எழுந்தருளப்பண்ணி ஆராதிப்பது பூர் விகர்களுடைய அநுஷ்டாநத்தையும் ஒத்ததா யிருக்கிறது. அதை அநுச ரித்து தேவஸ்தான தர்மகர்த்தர்கள் சென்ற ஜூலை மாதம் 12 உ திங்கட் கிழமை அனந்தஸரஸ்ஸின் ஜலத்தை இறைத்துவிட்டு அத்திவரதரை வெளியில் எழுந்தருளப் பண்ணி கோவில் வஸந்த மண்டபத்தில் சேவை சாதித்தருளச் செய்திருக்கும் ஏற்பாடுகள் ரொம்பவும் திருப்திகரமா யிருக்கின்றன. ஆராதன வைகரிகளும் இரண்டு காலங்களிலும் வேதபா ராயணமும் ஸகஸ்ர நாமார்ச்சனைகளும், பூவாலங்கி முதலான அலங்காரங் களும் இன்றும் ஸேவார்த்திகளுடைய சௌகர்யார்த்தம் செய்யப்பட் டிருக்கும் ஏற்பாடுகளும் எல்லாம் மிகவும் பஹுமானிக்கத் தக்கவை. இது காரணம் பற்றி அநேக வருஷங்களாய் சுத்தப்படுத்தப்படாத அனந்த ஸரஸ்புஷ்கரணியும் சுத்தமாவதும்கொண்டாடத்தக்கது.

அபூர்வமான எத்தனையோகாலத்தில் ஒரு முறைமட்டில் நேரிடக் கூடி யதாயு மிருக்கிற இந்த பெரிய விசேஷத்தைக் கண்டு ஆனந்திக்க ஸேவா

ர்த்திகள் நாற்றிசையினின்றும் திரண்டு வருகின்றனர். ஸ்ரீ ஆளவந்தார், திருக்கச்சிநம்பி, பகவத் ராமாநுஜன், கூரத்தாழ்வான், ஸ்ரீதேசிகன் இவர்கள் இந்த பூமியை அலங்கரித்திருந்த காலங்களில் அவர்களுக்கு ஸேவை ஸாதித்து அவர்களால் மங்களா சாஸனம் செய்யப்பெற்ற மூலபேரம் இந்தப் பெருமாளுயிருத்தல் வேண்டும் என்று நம்பத் தடையில்லை. அப்படியாயின் இந்தப் பெருமாளின் பெருமை சொல்லி லடங்குமோ ?

ஸேவிக்க வருபவர்களில் மூர்த்தியின் பிராஸந்நதையையும் சௌந்தர்யத்தையும் காம்பீர்யத்தையும் கண்டு வியக்காதவர் ஒருவரும் இல்லை.

அத்திவரதன் இப்பொழுது பள்ளிகொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸேவையை ஸேவிக்க ஸ்ரீ தேசிகன் மங்களா சாஸநம் செய்தருளினரீதியில் இப்பொழுது ஸ்ரீ வைஷ்ணவர்களில் பெருமாள் கோவில் என்று கொண்டாடப்படும் இந்த க்ஷேத்திரம் கோவில் திருமலை எனப்படும் மற்ற இரண்டு திவ்ய க்ஷேத்திரங்களையும் கூட தன்னிடம் சேர்த்துக்கொண்டு பிரகாசிக்கிறது போலும்.

ஸ்ரீயை நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

நாயிஞசார்யர் அருளிச்செய்தது

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் ।
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ॥

(ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச்செய்தது)

சீரொன்று தூப்பிற் றிருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

(பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்தது)

(மு) தம்பரமென்றி ரங்கித்தளராமனந்தந் தருளால்
உம்பர் தொழுந் திருமாலுகந்தேற்கு மூபாய மொன்றல்
நம்பிற வித்துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்
சம்பிரதாய மொன்றிச் சதிர்க்குந் நெறி சார்ந்தனமே!

ஸ்ரீ:

ஸ்ரீமத் கோடி கன்னிகாதானம் அய்யா கிருஷ்ண தாதாசாரிய அருளிச் செய்த வ்யாக்யாநம்

மஹிதாஸ்யாம் மஹேக்ஷ்யைஸ் ஸ்வாநாநாஸ்யாதிதம் ஜநம் ।
ஸ்ரீ ... க்ருஷ்ண தாதார்ய பதாப்யாம் நமோ நம: ॥

அஜ்ஞாநத்வாந்த விந்யஸ்த காந்திஸ்தோமோ ப்ரதர்ஶித: ।
அஸ்மிந் ஶேஷாஶேஷோத்ரும் ஸாம்ப்ரதாயிக ஸேவிதம் ॥ ௧ ॥

ப்ரதீக்ஷித தத்ஸ்தாநோ ஸ்வாதீக்ஷித ஸந்தர்ஶநாத் ।
அநவத்யாம் ப்ரவக்ஷ்யே தாத்ருஶாய ஸங்கதிம் ॥ ௨ ॥

அஹித விஹதிதக்ஷ ஶ்ரேயஸாய ஸ்வபக்ஷ
காந்தி வர்ணித ஜாதயே: ஶோபிதே ஸம்ப்ரதாயே ।
வ்யாதநோத் க்ருபயா ய: ஸம்ப்ரதாயஸ்ய ஶோதநம்
கவிதார்க்கிகஸிம்ஹம் ஸததம் தம் ஸ்மராமி: ॥ ௩ ॥

ஶ்ரீராமாநுஜ ஶ்ரீக்ருஷ்ணதாஸேநா ஜயதி பஹுவிதாநு ஶ்ரேயஸாய ஸ்வபக்ஷ
ப்ரதிஷ்டாநுஸம்ப்ரதாயார்த்தநி விதயதாரோ திவ்யஹஸ்தா ஸமம்பாது ।
வேதவேதாந்த தத்த்வப்ரயவஶ்யஸ்ய நவஸ்ய நநீய
ப்ராஜ்ஞப்ரஜ்ஞாஸ்ஸ நாதோஜ்ஞாநவ நிஷேதாவஸ்தாயாம் வ்யாப்தவதேய: ॥

ஸாராஸ்த்ரீயஜ்ஞாவாம் ப்ராசாம் அதபாம் ஹாஹாஹா தாஸ்ஸ்த்ரக்ஷா:
ப்ராக்ஷயா உதாஶாநாம் ஹ்ருதயவிநிஹிதப்ராதவீயம் ஸமீரா: ।
தத்த்வஜ்ஞாநபஜாதாவிததிவவஸ்தேவாதே ஶக்தா
ஹந்தாய ஸ்வாப்ராநாரோசாநயா ரஹணிதய: க்ருஷ்ணதாதாய
ஸந்தேஹ: ।
ஶேஷாதிவாஜ்ஞாம் உஹதாம் தயா ந: ஶோபாவதா தாயஸ்ஸதோ
ஶ்ருதாயஸ: ।
தஸ்யோ ப்ராகாஶவைஶிஷ்ட்ய ஸம்ப்ரதாயஶாஸ்திரம் விவ்ருண்வநவிதா
ஸூயந்த்: ॥

பாதுகாசாரணிகளான தூப்புல் பிள்ளை விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த மென்கிற நம்பிராமாநுஜ ஸித்தாந்தத்திலுள்ள சில கலுஷிதாபாக்ஷேபங்களை நிவர்த்திப்பிக்கத் திருவுள்ளம் பற்றி முந்துற ஸம்ப்ரதாயபரிஶுத்தி யென்கிற ரஹஸ்ய மருளிச்செய்யத் திருவுள்ளமானார். தத்ஸம்ப்ரதாயவாசா ஷாயங்களிலே ரஹஸ்யத்ரயாவலம்பியாயிருந்த விந்தஶாஸ்த்ரத்திலே உபேக்ஷ்யமான ஸ்வஸம்ப்ரதாயஸாதநா ஸந்தியாதிகளைக் கைப்பிடித்து வளரவிட்ட க்ஷோபங்களை நிவர்த்திப்பியாத வன்று ரஹஸ்யத்ரயார்த்த நிர்ணயமும் ஶாஸ்த்ரவஶ்ய ராஜஸாரண பாரமார்த்திகருக்கு அப்ரத்யயகமாகாது. ஸ்ரீ பாஷ்யகாரர் தர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டு போரா நிற்கச் செய்தே ஶிவாயஜ்ஞாவலீ தங்களை த்யஜித்து ஸாக்ஷிணிவேஷதாரியா யிருந்த யாதவப்ரகாஶன் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ பாதத்து முதலிகளுடைய ஸம்ஸ



ஸ்வபுத்தாலே தாம் பரிக்ரஹித்தவேஷம் தப்பென்று தேறி ஸ்ரீ பாஷ்ய காரருக்கனுகூலராய் வர்த்திக்க நம்பி ராமாநுஜனும் திருவுள்ளமுகந்து “ஸ்வபுத்த்யாதத்ர தயாபிவ ப்ரகாஶ:” என்கிறபடியே இவனை உபநயனம் பண்ண இதுகண்டு ஸஹிக்கமாட்டாதே. “ஶ்ருதம் ஹாஸ்யாஸ்பதா:” என்கிறபடிக்கு ஶ்ருதப்ரக்ருதிகளாய் பண்டிதம்மந்யர்களாயிருந்த தத்த்வஶிஷ்யர்கள் “ப்ரஜ்ஞாவஸ்யாஹ கர்மணா: க்ஷயாய ஜநதாஸ்தா:” என்கிறபடிக்கு க்ருத்ரிமர்களாய் இத் தர்ஶநத்திலே அநாதரித்து ஸம்ப்ரதாயவிருத்தங்களாய் ஶாஸ்த்ரீயங்களான வர்த்தங்களுக்கெல்லாம் விரோதமாக “விதவிநைதிஹ்யஸஹஸ்ர வணர்நத விதோஷாதவி தோஷாவஹதே:” என்கிறபடிக்கு புள்ளொருபசையற்றுப் பசுத்தோல் போர்த்தும் புலிப்பாச்சல் பாயும் கணக்கிலே வேண்டினபடிக்கர்த்தநம் பண்ணி இது பரமரஹஸ்யங்களென்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் முதலானோ ரருளிச் செய்ததென்றும் சொல்லி சில க்ரந்தங்களைக் கற்பித்து ஸாகாந்த மாக அநுஷ்டாநபரர்களாக வாக்கி ப்ரவர்த்திப்பியா நிற்க, இது கண்டு ஸ்ரீ பாஷ்யகாரரும் குபிதராய் அவர்களை முனிந்து தண்ட்யராக வாக்கி அந்த க்ரந்தங்களை வாங்கிக் கிழித்து தக்தமாக்கினார்.

அவ்வளவிலுமடங்காதே சிலர் அந்த க்ரந்தங்களை சேமித்து வைத் திருந்து ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பின்பு ஸ்வதோஷிக் அநுகூலமானருக்கு இதுவே பரம ஹிதமென்று உபதேஶித்து இந்த ஸம்ப்ரதாயத்தை கலக்கினார்களாயிற்று.

“கேசித்தத்தாவாவ்யாநதாவ்யர்த்தஹரணாக்ஷரா: ।
கஶ்சித்காலாஹலக்ரூராம் வர்த்தயந்த்யாதவாதத: ॥”

என்றிறே பெரிய ரஹஸ்யத்திலே பிள்ளையருளிச் செய்தது. இவ்வர்த்தத்தை விலக்ஷணதோக்ஷாயிகாரி நிர்ணயத்திலே எரும்பி அப்பா வெளியிட்டபடி காணலாம். “விஶ்வஸ்யாவிந்யாயே பதிந்யவதி வஶம்வதேகாண வேதவிந்த ஶ்ரீஜாஸ்ஜாவஶா வேஷஸ்ஸஹ திஸிரவஸ வெங்கடே ஶாஹிஷீக:” என்றருளிச் செய்கையாலே நம் தர்ஶநத்திலே அப்ர ஹதிகளாய் ஶ்ரத்தையற்று கபடாவதாரிகள் சிலருண்டென்று கொள் ளத் தட்டில்லை. கலியும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருமுன்பே இத் தர்ஶநத்தை க்ஷோபம் பண்ணுவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணினனென்றும் ப்ரஸித்தி யுண்டிறே. இப்படிகளால் இஸ் ஸம்ப்ரதாயத்தில் கலக்கமுண்டென்றத் தட்டில்லை. ஆகையாலிதை ஶோதிக்கை ஆவஶ்யகமாயிருந்தது.

இதுக்காக வாயிற்று முந்துறவித்தை யருளிச்செய்தது. ஆகையா லிறே—

ஆசார்யஜ்ஞாநஸம்பந்தாத் ப்ரகாசதே
ரவ்ருத்த்யா ஸஹ ஸ்வீயம் ஸம்பாவயந்தீ ।
தேஷாம் நித்யம் ஸம்ப்ரதாயஸ்ய ஸுத்திஃ
ஸம்பாத்யா பாதகாந்யாயநிஷ்டைஃ ॥

என்றிதினருமை தோற்ற வருளிச்செய்தது.

இந்த ரஹஸ்யத்திலே தத்வோபாயபுருஷார்த்தங்களிலே உண்டான கலக்கங்களை விஸ்தரேண பரிஹரிக்கக்கோலி முந்துற உபாயாம்சத்திலுண்டான ஆக்ஷேபத்தை

“இஷ்டம் ஹி விதுஷாம் லோகே ஸமாஸவ்யாஸதாரணம் ।”

என்கிற கணக்கிலே ஸங்க்ஷேபேண பரிஹரித்துக் காட்டுகிறார்.—ஒருவனை ஆச்ரயித்தே உபாயாநுஷ்டாநம் பண்ணவேண்டுமென்று நிர்பந்தமுண்டோ? ப்ரஜாபதியை ஆச்ரயித்து விரோசநன் அஸுரஸ்வபாவத்திலே ஸ்திரப்ரதிஷ்டிதபாதியாய்க் கெட்டானன்றோ. “ஸர்வக்ஷேணவ்யஸநஸ்ய கோ ஹேதுஃ பரக்ஷணே.” என்கிறபடிக்குத் தன்றேடொக்க ஒழுகு சங்கிலியிலே கட்டுண்டுழல்கிற க்ஷேத்ரஜ்ஞர் காலிலே விழுந்தால் யதாசாஸ்த்ரமான உபாயாநுஷ்டாநம் ஸித்திப்பதெங்ஙனே. “ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீ நஸம்சயஃ” என்றும் “ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும் மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா” என்றும் ஆசார்யனை க்ஷேத்ரஜ்ஞவிலக்ஷணபகவதவதாரமாகச் சொல்லுகையாலும் “ஆசார்யஃ பாவிதாத்மா தஸ்ய ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே” என்கிறபடியே ஜ்ஞாநவானான ஆசார்யனையாச்ரயித்து வ்யுத்பந்நனான ஸச்சிஷ்யனுக்கு யதாவஸ்திதோபாயத்தில் தெளிவுண்டாமென்றில் இவன் தெளிவாலாசார்யனுக்கொரு ப்ரயோஜனமில்லாமையாலே “ப்ரயோஜநமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே” என்கிற கட்டளையிலே ஆசார்யோபதேசம் ஸித்திப்பதெங்ஙனே? அது நேரிட்டாலும் ஸ்வாதிகாரவிருத்தங்களான உபாயங்களை யநுஷ்டிக்கும்படி யுபதேசித்தால் அந்த அநுஷ்டாநம் ப்ரத்யவாயமாகாதோ? இத்யாதிசங்கைகளை யொரு பாட்டாலே பரிஹரிக்கிறார்.

அருளால் — க்ருபையாலே ஞானப்பெருந்தகவோர்.—பெருமென்கிறது ஞானம் தகவு இரண்டிலுமந்வயிக்கும். பெருத்த ஞானவான்களாய் பெருத்த க்ருபாசாலிகளான ஆசார்யர்கள். இது கர்த்தாவாயுமாகிறது. ஷஷ்டியாயிருந்து ஸம்பிரதாயத்திலுமந்வயிக்கிறது. இரங்கி ஸம்ஸாரிகளுடைய துர்கதிக்குத் தாங்கள் மிகவும் பரிதபித்து. இரக்கம் பரிதாபம்-தம்பரமென்று இவர்களுடையரக்ஷணம் தங்களுடைய பரமென்று நினைத்து. தளராமனம் தந்து—தளர்ச்சியடையாத மனஸ்ஸைக்கொடுத்து. அதாகிறது—“அநந்யோபாயக்ரஹணவசஃ” என்கிறபடியே அசக்தரான நமக்கு ஸகலவிரோதிநிவ்ருத்திபூர்வகமாக பரமப்ராப்யப்ராப்தியிலே ஆசார்யஸம்பந்தமே அமையும். இதிலொரு ஸம்சயமில்லை என்றும் நிச்சயத்தைக் கொடுத்து. தளர்தல் ஸம்சயித்தல். மனம்—த்ருடாத்யவஸாயமான நிச்சயம். உம்பர் தொழும் திருமாலுக்கேற்கு முபாயமொன்றால். உம்பர்—நித்யஸூரிகளாலே; தொழும் ஸேவ்யனான திருமால். பெரியபிராட்டியாரிடத்திலே வ்யாமோஹமுள்ள ஸர்வேச்வரன் உகந்து—ஸந்தோஷித்து ஏற்கும்—நமக்குத் தருந்தான, உபாயமொன்றால்—ஒருபாயத்தாலே. அதாகிறது

“பக்த்யா பரயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமதே ।
ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ மம கைங்கர்யலிப்ஸுபிஃ ॥”

என்று ஸர்வேச்வரன் விகல்பித்து வைத்ததாய் தன்னதிகாராநுரூபமாயிருந்ததோருபாயத்தை அநுஷ்டாநபர்யந்தமாகவாக்கி, அத்தாலே என்றதாயிற்று. நம்பிறவித்துயர் மாற்றிய - நம் - ஸம்ஸாரத்திலே நுவலுகிற நம்முடைய பிறவித்துயர் பிறவி ஜந்மம் இது உபலக்ஷணமாய் கர்ப்பஜந்மஜராமரணநரகாதிவக்ஷ்யமாணபரிவர்த்திகளாலே உண்டான துஃகங்களை மாற்றிய—போக்கடிக்குமதான. சம்பிரதாயமொன்றி ஞானப்பெருந்தகவோருடைய ஸம்ப்ரதாயத்திலே சேர்ந்தமையால். சதிர்க்குமெறி. உதாரமான சரமம் பகவத்ப்ராப்திக்கு ஸாதநமான சரமத்தை யென்றபடி சார்ந்தனம்—அடைந்தோம் தளரா மனம் தந்து என்கையாலே “ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்” என்கிறபடிக்கு ஆசார்யாவலம்பநமின்றிக்கே வித்யைக்கு ஸாபல்யமில்லையென்றும் ஞானப்பெருந்தகவோரென்கையாலே “க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்” என்கிற படியே காருண்யபாத்ரரான ஆசார்யர் இவர்கள் பெறுகிறபேறே தங்களுக்குப் பொன்னுலகையும் புவனி முழுதையுமாளுகையாக வுகந்து உபதேசிப்பார்களென்றும் விரோசநனுக்கு ப்ரஜாபத்யுபதேசம் அநர்த்தமாக மேலே விவரிக்கப் புகையாலும் ஏற்குமுபாயமொன்றாலென்கையாலே ஸ்வாதிகாரவிருத்தோபாயோபதேசம் காருணிகராயிருந்த ஆசார்யர் செய்யமாட்டார்களென்றும் கீழ்ச்சொன்ன சங்கைகளுக்கு பரிஹாரம் கண்டுகொள்வது.

அமிர்தாஞ்சலியிலே இப்பாட்டை அநுஸந்திக்கும்போது அருளிச்செய்தபடி.

ப்ரவேஶ: ॥

எம்பெருமான் தனக்கடியாராயிருந்த ஸர்வஜந்துக்கெல்லாம் வேதத்தைக் கொடுத்தது தன்னை உள்ளபடி அறிந்து ஆஶ்ரயிக்கைக்காகவாயிற்று. இவன் தான் வேதஜ்ஞனாயிருந்த வாசிக்கு வேதார்த்தம் கொண்டு காரியம் செய்யவேண்டுமே. அதிலிவன் ஶாஸ்த்ரவிருத்தமாக வர்த்திக்கும் போது தனக்கு அநர்த்தமவஶ்யமாயிருக்கும். ஶாஸ்த்ராநுஸாரமாக வர்த்திக்கும்போது "ஶாஸ்த்ரே ஸுஸ்தித தாத்பர்யம்" என்கிறபடிக்குத் தனக்கு ஶ்ரேஷ்டார்த்தவ்யவஸாநமுண்டாயிருக்கும். இத்தை கணிசியாதே "வாதியர் மன்னுதர்க்கச் செருக்கில் மறை குலையச்சாது சனங்கள் நடுங்கத் தனித்தனியே பிணைத்த சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும் தாக்கிய நூல்களிலே மண்டி அநர்த்தத்தை விளைத்துக் கொள்ளுகிறார்களே. இதென்ன படு கொலை. அல்லாதார் கண்டபடி செய்கிறார்கள். நாம் முந்துற முன்னம் இவ்வநர்த்தத்தைத் தப்பி வைதிக ஸம்ப்ரதாயத்திலே அவகாஹிக்கப் பெற்றோமேயென்று ஸந்தோஷத்தைப் பேசி இனியருகிறார், "ஒரு மாத்தெய்வம் மற்றுடையமோயாமே" என்று ஆழ்வார் தேவதாந்தர ஸம்பந்தமற்றிருக்கையைப்பற்றி ஹர்ஷித்தாற்போலே தேவதாந்தர ப்ரயோஜநாந்தர ஸம்பந்தங்களற்ற ஆசார்யர்கள் காட்டித் தந்த ஸம்ப்ரதாயத்திலே அவகாஹிக்கப் பெற்றோமே. இப்படிக்கும் நமக்கொரு அதிஶயமுண்டாகப் பெற்றதே என்று ஹர்ஷிக்கிறார்.

பாட்டு. தம்பரம்—

தம்பரமென்று இவனுக்கு பரமில்லை. இவன் பரம் தங்களதாகவாயிற்று. இவன் தான் மார்பிலே கை வைத்துக்கொண்டு கிடந்துறங்குவானாயிறே இருப்பது. பிராட்டி அஶோகவநிகையிலே ஒன்றும் செய்தாளில்லையே. எல்லாம் பட்டார் திருவடி.

"யாம் க்ருதீநாம் ஸஹஸ்ராணி ஸர்வஸஹாந்ருத்யந்தாநி ச ।
ஶிக்ஷார்த்தம் ஸகலார்த்தம் ச ராமஸ்தே வேதஸாக்ஷிதா யயா ॥"

இரங்கி—இவர்கள் துர்த்தஶையைக் கண்டு தாங்கள் பரிதபித்து பிராட்டி துர்த்தஶையைக் கண்டு திருவடி தபித்தாப்போலே

"ஹா தாஸ்யாமி விநஶ்யந்தி ஶோகாவிரோதிதா: ।
விக்ஷம்ய து ஶராஸாத்ய தஸ்மிந் ஶோபித யயா ॥"

இத்யாதி. தளராமனம் தந்து. இவ்வாசார்ய ஸம்ப்ரதாயம் பண்ணினோமென்னை. நமக்கொரு குறை வாராதென்று த்ருஷ்டாந்தவஸாயத்தை உண்



டாக்கி "தேவதேவ தேவஸர்வஸ்வம்" "ஸம்ஸாரவதி வா நதி, ஸம்ஸாரோ ப்ரஹ்மதேஹி நாம் ந ஸம்ஸாரோ ஸ்தி கஶ்சந பரிஹர்த்தா நாஸ்தி ॥" "எத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்" நேரே பெருமானை ஆஶ்ரயித்தார் உடையவர். ஸாந்தீபம் ஶங்கி தஸ்யாவஸ்। இப்படியன்றிக்கே வடிகவாஸஸ்மாக "நிவேதயத" என்று வந்தார் விபீஷணாழ்வான். "விபீஷணோ மஹாப்ராஜ்ஞ:" என்றான் உத்தமன். இதிறே தளராமனம் "ததநந்தரமுத்பபாத" என்னும் படியிறே ரக்ஷகாவஸரத்திலுண்டான தேற்றமிருப்பது. "ஸக்ருதேவ ப்ரபந்நாய" வததமேதத்" "ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே । ஜ ।" "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட" என்று ஸ்ரீவிபீஷணாழ்வானையும் அர்ஜுனனையும் பற்றிச் சொன்ன திருமுகப் பாசுரங்களைக் கொண்டு "ஶாஸ்த்ரோக்தஸாஸ்த்ர ஸமர்ப்பிதே" "ந தே ஸோபம் ஸவோ ஹ்ருதே" இத்யாதிகளாலே ப்ரத்யாயநம் பண்ணிவைத்து "அத்ஸம் தவ தவதாந்ஜா நஶயந்த ப்ரோக்ஷ நிஸ்ஸம்ஶயஸ்ஸ்வாஸ்ய ॥" என்று எம்பெருமானாருக்கு எம்பெருமான் தந்த வரத்தை கிடாம்பி அப்புள்ளார் ஸ்ரீபாதத்திலே பெரிய ப்ரஸாதத்தாலே கேட்டேன்.

இக் ப்ரஸாதத்திலுண்டான ஸம்வாதம் ஜநிதாநந்தமாக இருந்தது. அக்ஷீபதேவதேவதேஶிகயதீந்த்ரயோஸ்ஸ ஸம்வாத ஸஜ்ஜநிஷ்ட ஜநிதாந்த ॥ இப்படி நமக்குமெம்பெருமானுக்கும் ஸம்பந்தமுண்டாகப் பெற்றதே என்று அநவதந்தனேன், இந்த அநுஸந்தாநத்தாலே இதில் அருளிச் செய்த வசநங்களிலொன்றும் பழுதாகாதென்று கொண்டு மேந்கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம் என்கிறபடியே ஸக்ருதுச்சாரணத்தாலே பேறு தப்பாதென்று தேறி "ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை யிலே முயன்று "ஸபோகாஷ்டாயம் விஷ்வக்ஸேநதாஹம் ஸ்ரீமத்ராமாநுஜார்யாதிப்படியே கைங்கர்யம் பண்ணித் திரியும்படியான தமாயிற்று யெனக்குள்ளது. தாவமிதே. இம்மதமொழிய காணுருத்த னுண்டென்று தனியே காணப்போகாது. ப்ரமேயஸாக்ஷாத்காரமில்லாதே தனியே த்ரவ்யஸாக்ஷாத்காரமில்லை கண்டீர். "உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயாதே ப்ரத்யாயிதம் க்ஷணதமேந: ஸவதா விதீர்ணம் । ஶ்ருதிஸ்வரம் ததநந்தரமுத்பபாத ॥" இப்படி தளரா மனம் தருகைக்கு ஹேது வென்னென்ன. அருளால்—க்ருபையொழிய வேறில்லை. "க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்।" ஸர்வஜ்ஞன் தன் மேன்மை பாராதே நம்முடைய துர்க்கதிக்கிரங்கி "க்ருபயா பர்யபாலயத்" என்றிருந்தால் அவனுக்காளாரும் யஸ்ஸ்ய ஸ்வஸ்ய தஸ்யைவ தாஸ: என்கிறபடிக்கி யாகவேண்டாவோ இவர்கள் தான் ஹரிய ந்யாய நிஷ்டரிறே. "கருணாகாகு காரண்யம் ஜ்ஞாநாவித ஶரியாது।" இவன் களித்தால் செய்வதென்னென்ன.

உம்பர்தொழும்—உத்⁴ராதிர எம்பெருமானுக்கும் அவிதேயமாய் தனக்கும் தகுதியானதொருபாயத்திலே மூட்டி நம்முடைய மஹாவிஶ்வாஸதௌர்ப³ல்யத்தைத் தவிர்ப்பார்களாயிற்று. உம்பர்தொழும்—நித்யஸூரிகளை ஸதா³பஶ்யந்தி யான வநாஸவத்துக்குப் போக்குவிடாக "நித்யாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதி³ந:" என்கிறபடிக்கும் பிடி கொள்ளுமவன். திருமால்—இந்த கும்பிடு பாழ்படாதபடிக்கு ஸாக்ஷாத்காரஸமுத்³ரையாயிருந்த பெரிய பிராட்டியாரிடத்திலே வ்யாமோஹனவன் இந்த வ்யாமோஹகாதெள இவன் தான் சித குறைக்கிலும் என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்றிறே! உகந்து—தன் பூஜைகள் அநாதியாகத் தன்னைக் கிட்டாதே இழந்து கிடக்கிற இழவு தீருகிறுளித்தாலே என்று ஸந்தோஷித்து அனேவர்ணமாயிருந்த வஸ்ரூ அஸநாயாவிவாஸாத்யதிஷ்டா நமிதமாயிருந்த பிறவிக்கடலிலே கரைகாண வழியில்லாதே அநாதியாக அமர்ந்து கிடந்து இன்னொரு ஶவத்தைக் கிட்டப்பெற்றதென்றாயிற்று. "உகப்பு ஏற்கும் உபாயங்கள் தான் பலவுண்டு பண்டே கற்பித்துவைத்தது. பக்தி ப்ரபத்தி என்று, பக்தி தன்னிலும் ஸத்³வித்³யா த³ஹரவித்³யாதி பேதத்தாலும், ப்ரபத்திதன்னில் ஸ்வநிஷ்டை உக்திநிஷ்டை ஆசார்யாபிமாநநிஷ்டை ஸாமாந்ய நிஷ்டை என்று இந்த பேதத்தாலும் இவன் தன் அதிகாரமும் ப்ராசீந கர்ம ப்ரவாஹ விபாகத்தாலே பலவகையாயிருக்கும். எல்லாருக்கு மெல்லாவுபாயத்திலதிகாரமுண்டென்ன வொண்ணாது. ஞானிகளும் உடலிலே அவ்வவதிகாராநுகுணமாய் பல ப்ரகாரமாய் படகுகள் கற்பித்து வைப்பதுண்டிறே இதிலே ஸ்வாதிகாராநுகுணமாக வொன்றையாயிற்று இவனவலம்பிக்கவேண்டிற்று உபாயம். இதுகள் வேதநப்ரவ்ருத்திஸாத்யமாயிருந்து மஹாவிஶ்வாஸத்தையுமுடைத்தாயிருக்கையாலே ஸாயநமாயிருக்கும். ஸ்வாதீநாய ஸ்வப்ரவ்ருத்தியாகாதென்பார்க்கு மேல் காலில் ஸ்வாதீநாய ப்ரவ்ருத்தியில்லாதே ஸம்ஸாரத்திலகப்பட்டாப் போலே இப்போதும் ப்ரவ்ருத்திகூடாமையாலே ஸம்ஸாரத்திலழுந்துபோயித்தனையே ஸபிப்பது. அன்றிக்கே ஏற்குமுபாயம். ஸ்வஸ்த்திற்கு ஜ்யோதிஷ்டோமாதிகள் போலன்றிக்கே உபேயதெஶயிலே தெங்கலத்திற்கு அவன் விஷயமானப்போலே ஸாதநாநுஷ்டாநதெஶயிலே அநுஷ்டாநத்திலும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களிலுமவனே விஷயமாகையாலே ஸ்வரூபத்திற் கேற்குமாயிற்றுபாயமும். ப்ராப்யத்திற்கேற்கு மென்று மிடம் மாதெஸ்வஸ்வேஷ்யமாகையாலே "உபாஸீத" "வ்ரஜ" என்று ஸ்வப்ரவ்ருத்திஸாத்யமாக விதித்வத்தை ப்ராப்யநநாரூபமென்று வைதிகர் சொல்லவொண்ணாது. ஒன்றால்—உபாயங்கள் தான் "நாநா ஶப்³தா³தி³ பே⁴தா³த்" என்று பலவகையாயிருக்கச் செய்தே "விகல்போவிஶிஷ்டப²ல

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மென்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மென்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. CONFECTIONARY,**
Sales Depot:—West Chitrai St., Madura.

*MADRAS OFFICE*:—**Phone No. 3658.**
Y. M. I. A. Buildings, Armenian St., Madras

L காயம்—பெருங்காயம் G

இதை ஹிங்கு—ஹிங் என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபனம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

"हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तवर्धनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥"

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं

प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"

"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"




தலைவலி, ஜலதோஷம்,

சுளுக்கு முதலான சகல

நோய்களையும் தீர்க்கவல்ல

ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக

*சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்*

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

**சுவையில் தேனினும் இனிது.**

**வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,**

*ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப் பட்டது.*

*சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீ, கர்தம், அயக்காந்த பஸ்மம், ஸிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.*

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

**வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.**

**வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.**

*சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.*

**ஆர்யன் பார்மஸி,**
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्त्रैर्युत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகும் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras

# SRI VEDANT DIPIKA

Vol. 26] AUGUST 1937 [Part 2


OFFICE OF THE ... 8th OCT 1937 MADRAS

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

ஈசுவர ௵



ஆடி ௴


பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியார்



CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

# ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ப்ரசார சபா லிமிடெட்

4—5, வாணி விலாஸ், பத்திரய்யன் தோட்டத் தெரு,
பார்க்டவுன், **Madras.**

## விளம்பரம்

---

இனி, வேதாந்த தீபிகையின் சந்தா பாக்கிகளையும், தீபிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வியாசங்களையும், மற்றுமுள்ள தீபிகா ஸம்பந்தமான எல்லா கடிதங்களையும் 'மானேஜர்,' வேதாந்த தீபிகா, வாணி விலாஸ், 4-5 பத்திரய்யன் தோட்டத் தெரு, சென்னை பார்க்கு டவுன். என்னும் விலாசத்திற்கே அனுப்பவேணும். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ஸபையைச் சேர்ந்த மெம்பர்களின் சந்தாத் தொகைகளையும், சபா ஸம்பந்தமான கடிதங்கள் எல்லாவற்றையும் சபையின் ஜாயிண்டு செக்ரடரி விலாசத்திற்கு அனுப்பவேணும்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
*Joint Secretaries.*

अमृताजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।”

“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।”




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. CONFECTIONARY,**

Sales Depot:—West Chitrai St., Madura.

*MADRAS OFFICE*:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

ஸ்ரீ

ஶ்ரீ ஶைலேஶ நம:

ஶ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரேப்யோ நம உக்திமதீமஹே ।
ரவிகர மளரவரா ஊரம் ஷயாதே ।
வவாரஹககாரூவ்ரு தாநாஜே
விஜயஸவெ ரதிரவூ ஜெஉநவஷ்ரா ॥

## விஷய ஸூசிகை


| | | |
|---|---|---|
| 1. | பள்ளிக்கூடப் படிப்பின் சீர்திருத்தம் [பத்திராதிபர்கள்] | 37 |
| 2. | காலானுகுண ஆஹ்நிகம் [பத்திராதிபர்கள்] | 39 |
| 3. | நீதி ரத்நங்கள் [பத்திராதிபர்கள்] | 42 |
| 4. | ஸ்ரீ த்வயோபநிஷத் [ஸ்ரீ. உப. வே. A. ஸ்ரீநிவாசராகவாசார்யர்] | 44 |
| 5. | ஏகாதசீ விரதத்தின் சிறப்பு [ஸ்ரீ. உப. வி. அனந்தாசார்யர்] | 50 |
| 5. | ஸமாதாந விமர்சம் [ஸ்ரீ. உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்] | 54 |
| 7. | ஸௌந்தர்யகலா சாஸ்திரம் [ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார்] | 75 |
| 8. | ஸ்ரீமத் அண்ணயார்ய மகா தேசிகன் வைபவம் [ஸ்ரீ. உப. தி. க. ச. நரசிம்மாசாரியர்] | 62 |
| 9. | ஸந்தேஹ பரிஹாரம் [ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசாரியர்] | 66 |
| 10. | கண்டா ப்ரபாவம் [ஸ்ரீ. உப. A. ரங்கசாமி பட்டர்] | 69 |
| 11. | அத்தி வரதன் வைபவம் [ஸ்ரீ. உ. வே. அய்யாகிருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி] | 75 |
| 12. | யாக பசுஹிம்ஸையைப் பற்றி ஆசார்யர்களின் ஸித்தாந்தம் [ஸ்ரீ. உ. வே. ராமாநுஜ தாதாசார்யன்] | 80 |
| 13. | உலகச் செய்திகள் | 84 |
| 14. | ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி | 9—16 |
| 15. | திவ்விய சூரி சரிதம் | 363 |

# பள்ளிக்கூடப் படிப்பின் சீர்திருத்தம்

## (பத்திராதிபர் குறிப்புகள்)

சில வருஷ காலமாய் தற்காலத்திய பள்ளிக்கூடப் படிப்பில் ஏதோ சில குறைகள் இருப்பதாக வதந்தி உலாவி வருகின்றது. ஆனால் அக்குறைகளைத் தீர்க்கும் வழி இன்னதென்று கண்டு பிடிக்கப்பட்டதாகக் காணவில்லை. பள்ளிக்கூடங்களில் படிக்கப் படவேண்டிய புஸ்தகங்கள் அளவுக்கு மிஞ்சி மாணவர்களின் தலையில் சுமத்தப் படுகின்றன. ஆனாலும் நாளுக்கு நாள் அறிவு குறைந்து வருகின்றது. இவ்விஷயத்தை ஒவ்வொரு மாணவனின் பெற்றோரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இக்காலத்திய உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு அறிவு ஊட்டுவது எப்படி இருக்கிறது என்றால், ஒரு சிசுவினிடம் மிக்க அபிமானம் வாய்ந்த ஒரு தாதி அச்சிசுவை விரைவில் மனிதனாக ஆக்கக் கருதி அளவுக்கு மிஞ்சி பலவிதமான ஆகாரங்களை கால நியமம் இல்லாமல் வாயில் இட்டு திணிப்பதுபோலாகும்.

முன் காலத்தில் பிள்ளைகள் ஸர்வ கலாசாலைப் பட்டத்திற்காக படித்துக்கொண்டிருக்கும்போதே, உலக வாழ்க்கைக்குப்போதுமான பொது அறிவையும், விசேஷமான சாஸ்திர ஆராய்ச்சிக்குரிய நுட்பமான புத்தியையும் பெற்றார்கள். இப்போது மாணவர்களுக்கு ஸர்வ கலாசாலையில் பட்டம் பெற்று வெகு நாள் ஆகியும் அப்படிப்பட்ட அறிவு வருகிறதைக் காணோம். இக் காலத்திய படிப்பு முறை, அஸ்தி வாரத்தை உறுதிப் படுத்தாமல் மேல் கட்டிடத்தைக் கட்டி அதில் விசேஷமான சிங்கார வேலைகள் செய்வதுபோல் ஆகிறது. முற்காலத்தில் ஆரம்பக் கல்வியை உபாத்தியாயர்கள் எந்த முறையில் கற்பித்து வந்தார்கள் என்பதை கவனிக்கும்போது அந்த முறை இப்போது தலை கீழாக மாறிக் கிடக்கின்றது என்பதை ஸம்சயமின்றி ஒப்புக் கொள்ளவேண்டியிருக்கிறது. கல்வி கற்றல் என்னும் ஒரு கட்டிட வேலைக்கு அஸ்திவாரம் மதக்கொள்கையை உறுதிப்படுத்தல் ஆகும். முதன் முதல் சிறுவருக்கு நாய், பூனை, எலி, இவைகளின் தத்வத்தை போதிப்பதைக் காட்டிலும் கடவுள் எப்படிப் பட்டவர்? கடவுளை வணங்குவது எப்படி? என்ற விஷயங்களை போதித்தால் பிள்ளைகளின் அறிவு விரைவில் கூர்மை அடைந்து நுட்பமான விஷயங்களை கிரஹிக்க சக்தி வாய்ந்ததாகும். ஆனால் இக் காலத்திய பள்ளிக் கூடங்களில் மதக்கொள்கையை போதிக்க பெரிய இடையூறு ஒன்று

உண்டு. பலவித மதக் கொள்கையைச் சேர்ந்த அநேகம் பிள்ளைகளை ஒரே வகுப்பில் உட்கார்த்தி படிப்பிக்க வேண்டியது நவீந நாகரீகத்தால் வந்த பிரதான கார்யம். இதனால் அறிவு குறைந்தாலும் குறையலாம். இந்த நவீந நாகரீகத்திற்குச் சிறிது அளவும் குறைவு வரக்கூடாது அல்லவா!

நான் அநேக பள்ளிக்கூட அதிகாரிகளை சந்தித்து, ஏன் சிறுவர்களுக்கு மதப் படிப்பை ஊட்டக்கூடாது? என்று கேட்டதற்கு எல்லாரும் மேற்சொன்ன கஷ்டத்தையே சொல்லி மயங்குகிறார்களே யன்றி, முக்கியம், இன்னது அமுக்கியம் இன்னது என்பதை கவனித்து கூடியவரையில் மேற் சொன்ன அஸௌகரியத்தைப் பரிஹரித்து தீரமாய் இறங்கினவர் காணப்படவில்லை.

இப்படிப்பட்ட துர்தசையில் ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷனில் நடக்கும் பள்ளிக்கூடங்களைப் பற்றி நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்பள்ளிக்கூடங்களில் மதப் படிப்பு கொஞ்சங் கொஞ்சமாய் ஓங்கி வருவதால் மேற் சொன்ன கல்விச்சாலைகள் மிகச் சிறந்தவை என்று கொண்டாடப்படுகின்றன. இவ்விதமான கல்வியை கற்ற மாணவர்களும் திருப்திகரமான குணம் வாய்ந்து விரைவில் முன்னுக்கு வருகிறார்கள். ஆகையால் நமது சென்னை ராஜதானியில் கல்வி இலாகா அதிகாரிகள் கல்வி முறையை சீர்திருத்தம் செய்யும்போது இவ்விஷயத்தை முக்கியமாய் கவனிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

நமது நாட்டில் தோன்றி, நமது நாட்டில் வளர்ந்த நம் குழந்தைகளுக்கு சிறு வயதில் நமது நாட்டிற்குரிய கல்வியை போதிக்காமல் அன்னிய நாட்டுச் செய்திகளையே கற்பிப்பதனால் நமது சிறுவர் இங்கும் உபயோகப்படாமல், அங்கும் உபயோகப்படாமல் திண்டாட வேண்டி வருகிறது. நமது நாட்டிற்குரிய நூற்களைக் கற்றபின் அன்னிய நாட்டு நூற்களைக் கற்பதில் விரோதமில்லை. இவ்விஷயத்தை கவனிப்பது உலக முன்னேற்றத்திற்கு முக்கிய ஸாதநமாகும்.

---

# காலானுகுண ஆஹ்நிகம்

## பத்ராதிபர்கள்

இம்மாத இச்சஞ்சிகை தொடங்கி மேற்குறித்த தலைப்பெயருடன் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்காக அனேக காலமாய் ஏற்பட்டு ஸ்ரீ வைஷ்ணவ தினசரி என்றும் ஆஹ்நிகமென்றும் ப்ரசம்ஸிக்கப்படும் நியமங்களை குறித்து தத்காலத்தில் அவ்வித நியமங்களை எவை எவை எவ்வளவு அனுஷ்டிக்க வேண்டியவை அனுஷ்டிக்கக்கூடியவை என்னும் விசாரரீதியில் சிறு வியாசங்கள் எழுதி ப்ரசுரிக்க யோசித்திருக்கிறோம்.

அவ்விஷயத்தில் அடியோங்கள் விக்ஞாபித்து கொள்ளவேண்டிய அம்சங்கள் இரண்டு மூன்று உள. முதலில் ஸ்ரீ பகவத் ராமானுஜன் தொடங்கி அனேக ஆசார்யர்கள் இது விஷயமாய் அனேக கிரந்தங்களை அனுக்ரஹித்திருக்கிறார்கள். ஆதலால் புதிதாய் ஒரு ஆஹ்நிகம் எழுத வர்த்தோமல்லோம். அப்படியாயினும் நம்முடைய தென்னிந்தியாவில் கூட நியதமான ஆஹ்நிக கர்மாக்களை கால தேசக் கிரியா வைகுண்யமில்லாமல் சரிவர நடத்திக்கொண்டு வருகிற மகான்கள் வெகு வெகு சிலரே என்று நிர்ப்பயமாய் சொல்லக்கூடும். மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரையும் நாலு வகுப்பாராக நாம் பிரிக்கக்கூடும்.

அவையாவனவெனில் :—

1. விஹிதமான ஆஹ்நிக கர்மாக்கள் இவை இவ்வகை என்று தெரிந்திருந்தபோதிலும் எவ்வித அசக்தியினாலேயோ அல்லது தாரதம்மியக்கியானத்தால் சில விடப்படலாமென்கிற தீர்மானத்தினாலேயோ வேறெக்காரணத்தினாலேயோ அனுஷ்டிக்க வேண்டியவைகளின் சில அம்சங்களை மாத்திரம் அனுஷ்டிக்கிறவர்கள்.

2. பூர்ணக்கியான மிருவிட்டாலும் அனுஷ்டிக்க வேண்டிய அம்சங்களை ஒருவாறு அறிந்திருந்தபோதிலும், அனுஷ்டிக்க வேண்டியவை என்று நியமிக்கப்பட்டிருக்கும் காரியங்கள் யாவற்றையும் நியமித்திருக்கும் ரீதியில் அனுஷ்டிப்பது இக்காலத்தில் சர்வதா அசாத்யமென்று தீர்மானித்துக்கொண்டு ஸ்ரீ வைஷ்ணவத்வம் சுத்தமாய் தவறிப்போகாமல் இருக்க யாதோ சில சில கர்மாக்களை மாத்திரம் கூடியவரையில் ச்ரத்தையுடனும், செய்யாமல் விடப்பட்டிருக்கும் விஷயங்களில் சிறிது அனுதாபத்துடனும் அனுஷ்டித்து வருகிறவர்கள்.

3. ஆஹ்நிக நியமங்கள் என்று ஏற்பட்டிருக்கும் விஷயமே கிஞ்சித்கூட தெரியாமல் யாரோ பெரியவர்களால் சிறு வயதில் அப்யாசம் செய்யப்பட்ட சில கர்மாக்களையும் வீட்டில் இருப்பவர்கள் நிர்ப்பந்தத்தாலும் பொது ஜனங்கள் அபவாதத்திற்கு பயப்பட்டு சில கர்மாக்களையும் யாதாமொரு ரீதியில் அனுஷ்டித்து வருகிறவர்கள்.

4. தத்கால ப்ரகிருதி சாஸ்த்ரங்களும் நாகரீகமென கருதப்படும் யதேச்சையான முறைகளே அனுஷ்டிக்கப்படவேண்டியவை என்று தீர்மானித்துக்கொண்டு நம்முடைய ப்ராசீனமான ஜாதிமத ஆசாரங்களில் சர்வதா அணுவளவும் ஆஸ்திக புத்தியே இல்லாமல் ஜனனம் பெயர் இது மாத்திரமாகவே ஸ்ரீ வைஷ்ணவர்களாக வ்யகரிக்கப்படுமவர்கள்.

இந் நான்கு வகுப்பில் கடைசி வகுப்பாக நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பினர் எண்ணில் பகு பாகமாக இருப்பரென்று நினைக்கக் கூடுமாயினும் சர்வதா ஜாதிமத ஆசாரங்களில் எள்ளளவும் நம்பிக்கையாவது விஸ்வாசமாவது இல்லாமல் த்வேஷ புத்திகூட இருப்பவர்கள் வெகு சிலர் என்றே தீர்மானிக்க இடம் இருக்கிறது. அப்பேர்சொற்றவர்களுக்குக்கூட 'இப்பொழுது ஆரம்பிக்கப்படும் வியாசங்கள் எவ்வளவிலும் உபயோகப்படுமென்று நம்பமுடியாதானாலும் அவர்களிலும் அனேகர் யாதாமொரு கால விசேஷத்தில் தங்கள் மனதை சிறிது மாற்றி தத்வ விசாரம் செய்யவாவது பகவத் சங்கல்பத்தினால் நேரிடுமேயானால் அப்பேர்கொற்றவருக்குங் கூட இந்த வ்யாசங்கள் பயன்படக் கூடியவை. இதை எல்லாம் யோசிக்குமிடத்து அனுஷ்டேயமான ஆஹ்நிக கர்மாக்களைக் குறித்து காலானுகுண விசாரம் பொதுப்பட எல்லார்க்குமே பயன்படுமென்று நிஸ்ஸந்தேகமாய் நம்பலாம். அதுவுமல்லாமல் தத்காலத்தில் நமது தேசத்தில் ஸ்வராஜ்யமடியாக ஸ்வமதாபிமானமும், ப்ராசீன ஆசார விமர்சன விசாரங்களும் பதே பதே வ்ருத்தி யடைந்து வருவதையும் யோசிக்க இவ்வித வியாசங்கள் சாதாரண ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவர்க்குமே உப யுக்தமாகு மென்பதில் ஸந்தேகமில்லை.

காலானு குணம் என்று சொல்லப்புகும் ஆஹ்நிகத்திற்கு விசேஷம் சொல்லப்படுவதும் அவசயமென்றும் ந்யாயமென்றும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படலாம். ஏனெனில், தத்காலத்தில் ஜீவனோபாயத்துக்காக எல்லா ஜாதியர்களாலும் முக்யமாய் ப்ராம்மணர்களாலுங் கூட ஜன பூயிஷ்டமான நகரங்களில் வாசஞ் செய்யவும் விவிதமான வாஹனங்களில் யாத்திரை முதலானது செய்யவும், காலதேச நிர்ணயமில்லாமல் செய்ய வேண்டியவையை செய்ய் முடியாமையும், செய்யாதனவையை செய்ய



வேண்டுவதும் நிர்ப்பந்தமாகநேரிட்டிருப்பதையும் யோசித்தால் காலானுகுண விமர்சம் அத்யாவச்யகம் என்பதில் சந்தேகமுண்டாக இடமில்லை.

நியதமான கர்மாக்கள் யாவற்றையும் நியமித்த ரீதியில் சரிவர ஒருவருங் கூட நடத்துவதில்லை நடத்தமுடியாது என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் எடுத்துக் கொள்வதும் விட்டு விடுவதும் ஒருவனுடைய யதேச்சையை பொருத்ததானால் அதில் நியதம் என்று சொல்வதற்கும் இடமில்லை. தாரதம்மிய விவேசனத்திற்கும் அவகாசமுமில்லை. எதெதை எவ்வளவு விடக்கூடும் எதெதை எவ்வளவு எவ்வகையாய் செய்யவேண்டும், காலதேச வர்த்தமானங்களை கணிசித்து எவ்வகையான மாறுதல்கள் உதாசீன மூலமாவது அனுமதிக்கப்படலாமென்பதும், எந்தெந்த அம்சங்களின் எவ்வளவு யதேச்சா நிர்ணயத்திற்கு இடங் கொடுக்கப்படலாமென்றும் இன்னும் ஏதத் சம்பந்தமான அநேக விசாரங்கள் காலானுகுண ரீதியில் செய்வது, நம்முடைய சநாதனவர்ணாச்ரம தர்மானுஷ்டானங்கள் சுத்தமாய் லோபித்து விடாமல் பின்னொரு காலத்திலாவது விருத்தி அடைவதற்காக ஏதன் மத்தியில் காப்பாத்தப் படுவதற்காக இவை எல்லாம் உத்தேசித்தே இது சம்பந்தமான வியாசங்கள் கோர்வையாக எழுதிப் ப்ரசுரிக்க யோசித்திருக்கிறோம். மறு சஞ்சிகையில் ஆஹ்நிகம் என்கிறதைப்பற்றி சப்தார்த்த விஷய விசாரம் கூடிய வியாசம் ஒன்று ப்ரசுரிக்கப்படும். இப்போது பூர்வ பீடிகையைமாத்திரம் சொல்லி நிருத்திவிடுகிறோம்.

ஆந் ஹிகத்தை கால்நுகுணம் என்ற விசேஷணத்துடன் கூட்டினதைப் பார்க்க அநேகம் நண்பர்களுக்கு மனதில் ஸம்சயம் ஜநிக்கக்கூடும். இந்த வ்யாசத்தில் தர்மசாஸ்திரத்திற்காவது அதை பொட்டின பூர்வர்களின் ஆசாரத்திற்காவது விரோதமான விஷயங்கள் எழுதப்படப்போவதில்லை என்று நமது தீபிகாபிமானிக விடத்தில் நிச்சயமான உறுதி மொழி கூறுகிறோம்.

ஆந்ஹிகத்தில் நியமங்கள் பலபடியாய் சாஸ்திரங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. கால தேசங்கள் எப்போதும் ஏக ரூபமாகவே இருக்கும் என்று சொல்ல சாத்தியப்படாது. மாதா பிதாக்கள் மக்களிடத்தில் எப்படியோ அப்படியே சாஸ்திரங்கள் நம்மிடத்தில் மிக்க அன்பு வாய்ந்தவை என்பதை நாம் மறக்கக்கூடாது. நமக்குச் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட காரியங்கள் அனைத்தும் நமக்கு நன்மையையே பயன் படுத்தும் என்பதை உறுதியாய் நம்பவேண்டும். தர்மத்தை நாம் இரக்ஷிக்க அது நம்மை இரக்ஷிக்கும் என்பது முன்னோர்களின் உபதேசம், காலதேச வைஷம்யத்தால் தர்மானுஷ்டானங்களில் ஸங்கடங்கள் வந்தபோது பலாபல விசாரம் செய்து நிர்ணயிப்பது சுலுவான காரியமல்ல. ஒரு தேஹத்

தில் ஒன்றுக்கொன்று விரோதமுள்ள இரண்டு வ்யாதிகள் உத்பவித்தால் வைத்யருடைய மனம் எப்பாடுபடும் என்பதை கவனியுங்கள். இந்த ந்யாயத்தையே தர்மாநுஷ்டானத்திலும் கொள்ளவேணும். சாஸ்திர ஆராய்ச்சியில்லாதவர் தர்ம ஸங்கடங்களில் ஸங்கடப்படுவார்கள். ஆகையால் விமர்ச ரீதியால் நாங்கள் எழுதப்போகும் விஷயங்களை வாசித்து, தீபிகாபிமானிகள் அனைவரும் எங்களுடைய பரிச்ரமத்தை ஸபலமாக்குவர் என நம்புகிறோம்.

---

## நீதி ரத்நங்கள்

[பத்திராதிபர்கள்]

**वयसः कर्मणोर्थस्य श्रुतस्याभिजनस्य च**
**वेषवाग्वृत्ति सारूप्यम् आचरन् विचरे दिह ॥** (மநு)

1. **वयसः**-வயதுக்கும், **कर्मणः**-தொழிலுக்கும், **अर्थस्य**-ஐச்வர்யத்துக்கும், **श्रुतस्य** - படிப்புக்கும், **अभिजनस्य** - குலத்திற்கும், **वेषवाग्वृत्तिसारूप्यम्** - வேஷத்திலும், பேச்சிலும், மனோபாவத்திலும், ஒற்றுமையை, **आचरन्** - அநுஷ்டித்துக்கொண்டு **इह** - இவ்வுலகில் **विचरेत्** - ஜீவந காலத்தைக் கழிக்கவேணும்.

இந்த நீதி வசனமானது, ஒவ்வொருவராலும் கவனிக்கத் தக்கது. உடைகளை தரித்தல், வார்த்தை சொல்லுதல், மனதில் உண்டாகும் பலவித அத்யவஸாயங்கள், இவைகளை கால தேசாநுகுணமாகவும் தனக்கும் உலகத்திற்கும் பயன்படக்கூடிய நிலைமையிலும் அப்போதைக்கப்போது மாற்றிக்கொண்டு, உலக வாழ்க்கையை நடத்துக என்று இந்த மநு ஸ்ம்ருதி வசநம் விதிக்கிறது. இதில் பூர்வார்த்தத்தில் சொன்ன ஐந்தில் குலம் ஒன்று தவிர, மீதி நான்கும் அப்போதைக்கப்போது வேறுபடுந் தன்மை வாய்ந்தவை. அவைகளுக்குத் தக்கபடி வேஷம், வாக், புத்தி, இவைகளை மாற்றிக் கொள்ளவேணும். வயதின் சிறுமை முதுமைகளுக்குத் தக்கபடி மனோபாவம் மாறி வருவதை அநுபவத்தில் காண்கிறோம். அதற்குத் தக்கவாறு மற்ற விரண்டிலும் மாறுபாடு வேணும்.

இக்காலத்திய வைதிகர்கள், லௌகிகர்கள் அனைவர்க்கும் இந்த நீதியில் கவனிக்கவேண்டிய பாகம் அநேகம் உண்டு. புத்திமான்கள் தாங்களே கண்டறிந்து, தங்களுடைய ஜீவிதம் உலகத்திற்குப் பயன்படுமாறு செய்து கொள்வது நன்று.



தொழிலாளிகளும் உத்யோகஸ்தர்களும் ஜீவநோபாயத்தை தேடி அதில் அமர்ந்து சாஸ்திரப் படிப்பை முற்றும் மறந்து விடுகிறார்கள். அது தவறு. எப்போதும் எந்த வயதிலும் உலக வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய சாஸ்திரங்களைப் படித்துக் கொண்டு வரவேணும் என்று கீழ்க் குறித்த ச்லோகத்தில் மநு விதிக்கிறார்.

**बुद्धिवृद्धिकराण्याशु धन्यानि च हिता नि च ।**
**नित्यं शास्त्राण्यवेक्षेत निगमांश्चैव वैदिकान् ॥**

**आशु** - சீக்கிரத்தில், **बुद्धिवृद्धिकराणि** - புத்தியை கூராக்கக்கூடிய, **धन्यानि** - தநம் ஸம்பாதிக்க உபயோகப்படுமான, **हितानि च** - உலகத்திற்கும் தனக்கும் நன்மையைத் தரக்கூடியவையுமான, **वैदिकान्** - வேதத்தின் பொருளை விரித்து உரைக்கும், **निगमांश्चैव** - ஆகம சாஸ்திரங்களையும், இப்படிப்பட்ட, **शास्त्राणि** - சாஸ்திரங்களை, **नित्यं** - எப்போதும், **अवेक्षेत** - பார்க்கவேணும்.

கிருஹஸ்தர்களுக்குப் பலவிதமான சாஸ்திரங்களில் பயிற்சி வேணும். வேதம் அல்லது தர்க்க வேதாந்த மீமாம்ஸைகளில் ஒன்றையே பரிசயம் செய்துகொண்டு ஆயுள் முழுவதையும் கழிப்பது நன்று அல்ல. தங்களால் இயன்றவரை, உலக நன்மைக்குப் பாடுபட வேண்டியது முக்கிய தர்மம். பிராம்மணன் சாஸ்திர அறிவைக்கொண்டு உலக நன்மைக்கு உதவக் கடமைப்பட்டவன். மற்றவர் தங்கள் தங்கள் தொழிலைக்கொண்டு உலக நன்மைக்குக் கிஞ்சித்தேனும் உபகரிப்பது அவச்யம் என்பதில் சாஸ்திரங்களின் நோக்கு. மநு முதலிய ஆசிரியர்களால் இயற்றப்பட்ட நூற்களில் தற்கால உலக வாழ்க்கைக்கு அவச்யமான அறிவு உபதேசிக்கப்படவில்லை என்று சொல்லுவது சரியல்ல. அவைகளை நன்கு பரிசயம் செய்து ஆராய்ந்தால் அவைகளைக் கொண்டே அரசாங்க நிர்வாகத்தையும் உலகத்தின் முன்னேற்றத்தையும் நன்கு பயன்படுமாறு ஸாதிக்கலாம். நமது தேசத்து வித்வான்கள் வேத வேதாந்தங்களையே முக்கியமாய் எடுத்துக் கொண்டு லௌகிக காரிய நிர்வாஹத்திற்கு உபயோகமான அர்த்த சாஸ்திரம், ஜோதிஷம், வைத்யம், தர்ம சாஸ்திரம், ஆகமம் இவைகளை பெரும்பாலும் புறக்கணித்து இருப்பது நமது வைதிக மதத்திற்குப் பெருங் குறையாகும். ஆகையால் மஹா மேதாவிகளான நமது தேசத்து பண்டிதர்கள் வேத வேதாந்தங்களைப்போல் இதர சாஸ்திரங்களையும் பரிசீலித்து அவைகளில் உள்ள அருமையான விஷயங்களை பல வழிகளில் ப்ரசுரப்படுத்த வேணும் என்று இதன் மூலமாய் ப்ரார்த்திக்கப் படுகிறார்கள்.

---

# ஸ்ரீ த்வயோபநிஷத்

[ஸ்ரீ. உப. வே. A. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர் புதுக்கோட்டை]

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாக பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராதே ஆள்கின்ற ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம்; நாகணைமிசை நம்பிரான் சரணமே சரண் என்று நம்பி அவனடிக்கீழ் அடைக்கலம் புகுவதே பரமஹிதம் (உபாயம்). ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமையை திருமால் திருவடிகளில் செய்துகொண்டு அந்தமில் பேரின்பத்தை அடியார்கள் குழாங்களோடு அநுபவிப்பதே பரமபுருஷார்த்தம்; இவையே ஸகலச்ருதிஸ்மிருதிகளின் ஸாரபூதமான அர்த்தம்; இவையே நம் ஸித்தாந்தத்தின் முக்யமான கொள்கைகள் என்று ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அறுதியிட்டார்கள். இவை உபநிஷத்துக்களிலும் ததுபப்ருஹ்மணங்களிலும் அங்கங்கு பரந்து கிடப்பதால், ஒருவன் தெரிந்துகொள்வதே அரிது; தெரிந்து கொண்டாலும் அவற்றை சிக்கென அநுஸந்திப்பது அரிது. பரந்த நிலத்தில் விளைந்த தானியத்தை தன் உபயோகத்தின் பொருட்டு தன் வீட்டுக் களஞ்சியத்தில் சேமித்துவைத்துக் கொண்டு வேண்டும்போது எடுத்து ஆளுவாரைப் போலே அந்த பரமனின் பெருமையையும் தான் அநுஷ்டித்த உபாயத்தின் சீர்மையையும், தான் பெறப்புகுகிற புருஷார்த்தத்தின் மேன்மையும் நாளும் எண்ணி உகக்கும் பொருட்டும், ஸுலபமாக அநுஸந்தித்து உஜ்ஜீவிப்பதற்காகவும் இவ்வர்த்தங்களையெல்லாம் பொதிந்து கொண்டிருக்கிறதும் ஸர்வஸங்கிரஹமும் ஸாரதமமுமான "ரஹஸ்யத்ரயம்' என்கிற மூன்று மந்திரங்களை உபதேசித்துவைத்தார்கள்.

அவையாவன: மூலமந்த்ரம், த்வயம், சரமச்லோகம். இவற்றுள் மூலமந்திரம் அல்லது திருமந்திரம் என்னும் திருவஷ்டாக்ஷரம் ஜீவாத்மஸ்வரூபத்தையும் பரமாத்மஸ்வரூபத்தையும் தெளிவாகக் காட்டும். இப்படி ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை அறிந்தவனுக்கு பரதத்வமான சரண்யன் கோலத்திருமாமகளோடு பிரிவிலாதிருப்பதையும், பரமஹிதமான சரணாகதியையும், பரமபுருஷார்த்தமான தத்கைங்கர்யத்தையும் விசதமாக்கிக்கொண்டு சரணாகதியை அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தை ப்ரதானமாக ப்ரகாசிப்பிக்கும் த்வயம். திருமந்திரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாயத்தை அதிகாரம், அதன் வேறொன்றின் உதவியை எதிர்பார்க்காத தன்மை, விரோதி நிவ்ருத்தி முதலானவற்றோடேகூட விதி முகத்தாலே வெளியிடும் சரமச்லோகம்.



இவற்றுள் சரமச்லோகம் கண்ணனருளின கீதையில் கடைசி அத்யாயத்தின் இறுதியிலுள்ளது. திருவஷ்டாக்ஷரம் ஆதர்வணம் கடம் (आथर्वणकठादि) முதலான உபநிஷத்துக்களிலும் மற்றும் மந்வாதி தர்மசாஸ்த்ரங்களிலும், நாராயணாத்மக-ஹைரண்யகர்ப்ப-நாரதீய-போதாயநாதி கல்பங்களிலும் ஸுப்ரஸித்தவைபவமாயிருக்கும். த்வயம் கடவல்லியில் (कठवल्ली) ஓதப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. த்வயத்தைப் பற்றிக் கூறவந்த ஸ்ரீதேசிகன் (कठश्रुत्यादि)கடச்ருத்யாதிகளில் திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலே த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களைப் பிரிய ஓதிச்சேர ஒருக்கால் உச்சரிக்க விதித்தது", என்று ஸாரஸாரத்திலும், "த்வயமும் கடச்ருத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தன்னை ஒருக்கால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்கவல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கும்". "இது கடவல்லியிலே பிரிய ஓதிச் சேர்த்து அநுஸந்திக்க விதிக்கையாலும் பகவச்சாஸ்த்ரத்திலே ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதாதிகளே வர்ணோத்தாராதிகளும் பண்ணி ப்ரதிபாதிக்கையாலும் ஶ்ருதிமூலமான தாந்த்ரிக மந்த்ரம்" என்று ரஹஸ்யத்ரயத்திலும் ஸாதித்தருளினார். ஆதலால் இந்த மந்திரத்திற்கு மூலம் कठश्रुति என்று தெரிகிறது.

'இந்த இடத்திற்கு வ்யாக்யானம் செய்யவந்த ஸாராஸ்வாதிநியில் பின் வருமாறு இருக்கிறது: "கடவல்லியில் அஷ்டாக்ஷர ப்ரகரணத்திலேயே த்வயத்தினுடைய பூர்வகண்டத்தை ஓதி 'पूर्णात्' இத்யாதியை ஓதி, அநந்தரம் உத்தரகண்டத்தை ஓதி, பரமபுருஷார்த்தேச்சையையுடையவன் இரண்டு கண்டத்தையும் சேர்த்து ஒருக்கால் உச்சரிக்கக் கடவன் என்று விதிக்கப்படுகையால் என்றபடி." "सकृदुच्चार : संसारतारको भवति."

ஸாரப்ரகாசிகையிலோ என்றால்: अथातः श्रीमद्द्वयोत्पत्तिः । वाक्यो द्वितीयः। षट् पदानि। अर्थाः दश। पञ्चविंशत्यक्षराणि।..............द्व्यक्षरः षष्ठः" என்று காண்கிறது. மேலும்

अकारेणोच्यते विष्णुः सर्वलोकेश्वरो हरिः ।
उद्धृता विष्णुना लक्ष्मीरुकारेणोच्यते तथा ।
मकारस्तु तयोर्दास इति प्रणवलक्षणम् ॥"

[ஸர்வ லோகேச்வரனான பகவான் அகாரத்தினால் சொல்லப்படுகிறான்; அப்படியே (ஸர்வலோகேச்வரியாய்) விஷ்ணு வக்ஷஸ்தலத்தில் உறையும் லக்ஷ்மி உகாரத்தினால் சொல்லப்படுகிறாள்; மகாரத்தினால் சொல்லபடுகிற ஜீவன் அவ்விருவருக்கும் சேஷபூதன். இதுதான் ப்ரணவத்தின் லக்ஷணம் (அர்த்தம்) என்று கடவல்லியில் ஓதப்படுவதாக பூர்வாசார்யர்களால் பிரமாணமாக கையாளப் பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது ப்ரசாரத்தில் இருந்து வருகிற கடோபநிஷத்தில், அஷ்டாக்ஷரமாவது, த்வயமாவது, இந்த ப்ரணவார்த்தத்தைச் சொல்லும் ஶ்லோகமாவது இல்லை. ஸாராஸ்வாதினீ ஸாரப்ரகாசிகையிலுள்ள வாக்யங்களும் காணப்படவில்லை. ஸர்வஜ்ஞரும் ஸத்யவாதியுமான தேசிகன் போன்றவர்கள் சொன்னது பொய்யாக இருக்கமுடியாது. கடோபநிஷத்தின் ஒரு பாகமோ அல்லது ‘கடவல்லி’ என்று பெயர் பெற்ற ஒரு தனி உபநிஷத்தோ ப்ரசாரத்தில் இருந்து இப்போது நமக்குக் கிடைக்காமலிருக்கவேண்டும். அவ்விதம் இருப்பதும் ஸம்பாவிதமே. ப்ரசாரத்தில் இருப்பதும் உபநிஷத் பாஷ்யகாரருக்கு மூலமான முண்டகோபநிஷத்திற்கும் நம் ஸ்ரீ பாஷ்யகாரரும் ஶ்ருத ப்ரகாசிகாசார்யரும் கையாண்ட முண்டகத்திற்கும் பாடபேதங்கள் இருக்கின்றன. சில மந்திரங்களே இதில் இல்லை. அந்தப் பூர்ணமான முண்டகோபநிஷத் வேறு இடங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. அவகாசம் ஏற்பட்டால் அதைப்பற்றி மற்றொரு ஸமயம் நிரூபிப்போம். அவ்விதமே கடவல்லியில் பாடபேதம் இருக்கவேண்டும் என்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது.

இப்போது ‘த்வயோபநிஷத்’ என்று ஒரு சிறிய உபநிஷத் அச்சிலிருக்கிறது. அதில் ஸாரப்ரகாசிகையில் கூறியிருக்கிறபடி த்வய மந்திரத்தின் பதங்களும், ஒவ்வொரு பதத்தின் அக்ஷரங்களும் கணக்கிடப்பட்டிருக்கின்றனவே யொழிய ஸ்ரீ தேசிகன் ஸாதித்தபடி த்வய மந்த்ரம் ஓதப்படவில்லை.

“த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்களைப் பிரிய ஓதிச்சேர ஒருக்கால் உச்சரிக்க விதித்தது” என்றும், “பிரிய ஓதிச் சேர்த்து அநுஸந்திக்க விதிக்கையாலும்” என்றும் இருப்பதற்கு இணங்க இதற்கு மூலமாக இருக்கக் கூடிய ஒரு த்வயோபநிஷத் அரியக்குடியில் ஒரு ப்ராசீன ஓலையேட்டில் இருந்து தனக்குக் கிடைத்ததாக கோஷ்டீபுரம் ஸ்ரீ. ஸ்ரீராம தேசிகாச்சார்ய ஸ்வாமி அடியேனுக்கு அநுக்ரஹித்தார். இதில் மந்திரத்தின் பூர்வோத்தர கண்டங்கள் பிரிய ஓதப்பட்டிருக்கின்றன; இரண்டும் சேர்த்து ‘த்வயம்’ என்று இருக்கிறது. அது பரம ஸாகத்தைக் கொடுக்கும் என்றும் கூறியிருக்கிறது. ஆதலால் இதுவே ஸ்வாமி தேசிகன் ப்ராமணமாகக் கொண்டதாயிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனாலும் “தன்னை ஒருக்கால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்கவல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கும்” என்று ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்தில் சொன்னதற்கு மூலமான “सकृदुच्चारः संसारतारको भवति” என்ற வாக்யம் இதில் இல்லை; மற்றதிலேயே இருக்கிறது. இதில் குறைவற்ற ஆநந்தம் ஒரு தரம் உச்சரிப்பதால்



ஏற்படுகிறது என்றுமட்டுமே ஓதப்பட்டிருக்கிறது. இரண்டிலும் ப்ரணவார்த்தத்தைச் சொல்லும் ச்லோகம் இல்லை. இருந்தாலும் அறிவாளிகளான தீபிகாவாசகர்கள் தாங்களே விமர்சநம் செய்து அறிந்துகொள்ளும் பொருட்டு அச்சிலிருப்பதை முதலிலும் அரியக்குடியில் அகப்பட்டதை இரண்டாவதாகவும் ஸமர்ப்பிக்கிறேன்.

## द्वयोपनिषत् (१)

(सह नाववतु.........शान्तिः शान्तिः शान्तिः ।] हरिः ओं । अथातः श्रीमद्द्वयोत्पत्तिः । वाक्यौ द्वितीयः । षट् पदानि । अर्था दश । पञ्चविंशत्यक्षराणि । पञ्चदशाक्षरं पूर्वम् ; दशाक्षरं परम् । नवाक्षरं प्रथमपदे ; द्वितीयतृतीयचतुर्थे ऽयक्षराणि ; पञ्चाक्षरं पञ्चमं ; द्व्यक्षरः षष्ठः । एकाक्षरं प्रथमपदे ; एकाक्षरो द्वितीये ; चतुरक्षरः तृतीये ; चतुर्थपञ्चमषष्ठसप्तम एते ऽयक्षराणि ; अष्टमपदस्तृतीयः ; द्व्यक्षरो नवमे ; दशमे द्व्यक्षराणि । एतन्मन्त्रस्य प्रतिपत्तिः ।।

पूर्वो नारायणप्रोक्तः अनादिसिद्धो मन्त्ररत्नः आचार्यमूलः ।
आचार्यो वेदसंपन्नो विष्णुभक्तो विमत्सरः ।
मन्त्रज्ञो मन्त्रभक्तश्च सदा मन्त्राश्रयः शुचिः ।।
गुरुभक्तिसमायुक्तः पुराणज्ञो विशेषतः ।
एवं लक्षणसंपन्नो गुरुरित्यभिधीयते ॥
गुशब्दस्त्वन्धकारः स्यात् रुशब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ।।
गुरुरेव परं ब्रह्म गुरुरेव परा गतिः ।
गुरुरेव परा विद्या गुरुरेव परं धनम् ।।
गुरुरेव परःकामो गुरुरेव परायणम् ।
यस्मात् तदुपदेष्टाऽसौ तस्मात् गुरुतरो गुरुः ।।

सकृदुच्चारितः संसारमोचनं भवति । सप्तजन्मकृतं पापं तत्क्षणादेव नश्यति । सर्वपुरुषार्थसिद्धिर्भवति । य एवं वेद । इत्युपनिषत् ।। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥
हरिः ओं ।।

इति श्रीमद्द्वयोपनिषत् ।।

[ஓதப்பட்ட மந்த்ரம் (குரு சிஷ்யர்களான) எங்கள் இருவரையும் தோஷமில்லாமல் செய்யட்டும்; எங்கள் இருவரையும் ரக்ஷிக்கட்டும்; நாங்கள் ஓதினது தேஜஸ்ஸுள்ளதாய் இருக்கட்டும்; நாங்கள் பரஸ்பரம் த்வேஷமற்றவர்களாய் இருப்போமாக; மற்ற தோஷங்களுக்கும் சாந்தி உண்டாகட்டும்; சாந்தி உண்டாகட்டும்; சாந்தி உண்டாகட்டும்.]

பிறகு ஆகையால் த்வயத்தில் உத்பத்தி (சொல்லப்படுகிறது). (த்வய மந்த்ரத்திற்கு) இரண்டு வாக்யங்கள், ஆறு பதங்கள்; பத்து அர்த்தங்கள்; இருபத்தைந்து அக்ஷரங்கள்; முற்பாகம் பதினைந்து அக்ஷரம்; பின் பாகம் பத்து அக்ஷரம். முதல் பதத்தில் ஒன்பது எழுத்துக்கள்; இரண்டாவது, மூன்றாவது, நான்காவதுகளில் மூன்று எழுத்துக்கள்; ஐந்தாவதில் ஐந்து எழுத்துக்கள்; ஆறாவது இரண்டெழுத்துக் கொண்டது. (முதல் ஸமஸ்தபதத்தில்) முதல் பதத்தில் ஒரு எழுத்து; இரண்டாவதில் ஒரு அக்ஷரம்; மூன்றாவதில் நான்கு; நாலாவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவதுகளில் (ஒவ்வொன்றிலும்) மூன்று அக்ஷரங்கள்; எட்டாவதில் மூன்று; ஒன்பதில் இரண்டு; பத்தாவதில் இரண்டு எழுத்துக்கள். இது மந்த்ரத்தை அறியும் முறை.

இது முதலில் நாராயணனால் உபதேசிக்கப்பட்டு அநாதிகாலமாய் ஏற்பட்டு இருப்பதான மந்த்ரரத்னம்; ஆசார்யமூலமாய் (அறிய வேண்டியது.)

ஆசார்யனும் வேத (ஞானம்) நிறைந்தவனும், விஷ்ணு பக்தனும், (ஒருவரிடத்திலும்) பொறாமையற்றவனும், மந்த்ரத்தை அறிந்தவனும் அதில் பக்தியுடையவனும், எப்போதும் மந்த்ரத்தையே அண்டினவனும் (ஆதாரமாக உடையவனும்) சுத்தனும் இருக்கவேண்டும்.

(தனக்கு மந்த்ரத்தை உபதேசித்த) குருவிடத்தில் பக்தி உடையவனும், விசேஷித்து பழைய ஸம்ப்ரதாயங்களை அறிந்தவனும், இம்மாதிரி லக்ஷணமுள்ளவன் குரு என்று சொல்லப்படுகிறான்.

'கு' என்றால் இருட்டு (அதாவது அஜ்ஞானம்); 'ரு' என்றால் அதை நீக்குபவன்; அஜ்ஞானத்தைப் போக்குவதால் அவன் குரு என்னப்படுகிறான்.

குருவே பரப்ரஹ்மம்; குருவே சிறந்த உபாயம்; குருவே மேன்மையான வித்யை (ஞானம்); குருவே சீரிய தனம்.

குருவே ச்ரேஷ்டமான இன்பம்; குருவே மேலான அடையவேண்டிய இடம்; நன்மையை உபதேசிப்பதாலேயே அவன் குரு எனப்படுகிறான்.

(இப்படி பெருமை பொருந்திய குருமுகமாகப் பெற்ற மந்த்ரத்தை) ஒரு தடவை உச்சரித்தால் ஸம்ஸாரத்திலிருந்து வீடு பெறுகிறான்.

ஏழு ஜன்மங்களில் செய்த பாபம் அந்தக்ஷணமே நாசமடைகிறது; ஸகலவித புருஷார்த்தங்களும் ஸித்திக்கின்றன. இதை அறிந்தோனுக்கும் (இப்பலமே) என்று உபநிஷத் கூறப்பட்டது.

சாந்தி: சாந்தி: சாந்தி:



(२)

हरिः ओं ॥ स वा एष महानज आत्मा अन्नादो विन्दते वसु ।
यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ॥
तं ह देवमात्मबुद्धिप्रसादं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥

इति होवाच । ऋग्वेदं प्रपद्ये । यजुर्वेदं प्रपद्ये । सामवेदं प्रपद्ये । इतिहास-पुराणानि प्रपद्ये । सत्यं प्रपद्ये । श्रद्धां प्रपद्ये । परमात्मने प्रपद्ये । भागवताय प्रपद्ये । वासुदेवाय प्रपद्ये । ओं प्रपद्ये । नमः प्रपद्ये । श्रीं प्रपद्ये श्रियं प्रपद्ये ।

यद्वेदा दिव्यगायत्री जपति-तदेषाऽभ्युक्ता । तदेव भूतं तदुपासितव्यम् । तत् पूर्णसौन्दर्यं लक्ष्म्याः । तदेवममृतं सदानन्दम् । सत्यं तत् द्वयम् । सर्वं तत्सकृदुच्चारणा भवति । श्रीमन्नारायण चरणौ शरणं प्रपद्ये । इदं पूर्णमदः पूर्णं पूर्णात् पूर्णमुच्यते । पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥ सर्वं पूर्णमिति । स होवाच । श्रीमते नारायणाय नमः ॥

त्वं ब्रह्म । त्वं वायुः । त्वं पुराणम् । त्वं इतिहासः । त्वं ग्रायणीपुत्रः । वेदोयं ब्रह्मणो विदुः । वेदेनानेन वेदितव्यमिति । य एवं वेद । इत्युपनिषत् ॥ हरिः ओं ।

---

## *த்வயோபநிஷத் (2)

இவனே பிறப்பிலியாய் ஸகல வஸ்து போக்தாவாய், ஸகலத்தையும் தனக்கு போக்யமாக அடையும் பரமாத்மா.

யாவனொருவன் முதலில் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, அவனுக்கு வேதங்களையும் உபதேசிக்கிறானோ, ஆத்மாக்களின் புத்திக்குத் தெளிவை உண்டு பண்ணும் அந்த தேவனை முமுக்ஷுவான நான் சரணம் அடைகிறேன் என்று சொன்னான் (வேத புருஷன்). ரிக்வேதத்தை சரணமடைகிறேன்; யஜுர்வேதத்தை சரணமடைகிறேன்; ஸாம வேதத்தை சரணமடைகிறேன்; இதிஹாஸ புராணங்களை சரணமடைகிறேன்; (இவைகளுக்கு ப்ரதிபாத்யனான பரமாத்மாவை எனக்குக் காட்டும்.) ஸத்யத்தை

* இதற்கு உரை ஒன்றும் கிடைக்கவில்லை. என் சிற்றறிவிற் கெட்டியவரையில் மொழி பெயர்த்திருக்கிறேன். இதன் ஸரியான அர்த்தத்தை அறிஞர்களான பெரியோர் வெளியிட்டு உதவும்பொருட்டு அவர்களைப் பிரார்த்திக்கிறேன். இது யதார்த்தமாக இருக்கிறதே யொழிய அவ்விதமாக இராத குறை அடியேனுக்கும் தெரிந்ததே. பெரியோர்கள் பூர்த்தி பண்ணி வைப்பார்களாக.

சரணமடைகிறேன்; ச்ரத்தையை சரணமடைகிறேன்; பரமாத்மாவின் பொருட்டு சரணமடைகிறேன்; பாகவதனின் பொருட்டு சரணமடைகிறேன்; வாஸுதேவனின் பொருட்டு சரணமடைகிறேன்; ஓங்காரத்தை சரணமடைகிறேன்; நமஸ்ஸை சரணமடைகிறேன்; ஸ்ரீ மந்த்ர பீஜத்தை சரணமடைகிறேன்; ஸ்ரீயை சரணமடைகிறேன். (எல்லோரும் எனக்கு அருள் புரிவாராக).

வேதத்தில் தைவ வன்மையுள்ள காயத்ரீ சிறப்புற்று விளங்குகிறது. அது கூறப்படுகிறது. எல்லாரும் உபாஸிக்கப்படவேண்டியது அதுவே. அதுவே லக்ஷ்மியின் பரிபூர்ணமான ஸௌந்தர்யம்; அதுவே அம்ருதம், ஸத், ஆநந்தம், (இவற்றைக் கொடுப்பது). உண்மையாக அதுதான் த்வயம் (என்பது). (கீழ்ச் சொன்ன அம்ருதம் ஆநந்தம்) எல்லாம் ஒரு முறை (இதை) உச்சரிப்பதாலேயே உண்டாகிறது. ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை சரணமடைகிறேன். இந்த பரப்ரஹ்மமே பூர்ணம்; இதிலிருந்தே பூர்ணமான ஜகத் உண்டாகிறது; நிறைந்த பொருளிலிருந்தே நிறைந்தது வந்ததாகக் கூறப்படுகிறது. நிறைந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து நிறைந்த உலகம் வந்தும் நிறைந்த ப்ரஹ்மம் நிறையுள்ளதாகவே இருக்கிறது. அந்த வேத புருஷன் கூறினான்—ஸ்ரீமானான நாராயணனுக்கே, எனக்கு இல்லை.

ஆகாசம் ப்ரஹ்மம் (ஸர்வவ்யாபி); ஆகாசம்போன்ற பரஹ்மமே ஜகத்ப்ராணனான வாயுவாகவும் இருப்பவன். அளவற்ற பெருமையையுடைய பரப்ரஹ்மத்தைச் சொல்லுவதால் புராணம் ஆகாசம் (அளவற்றது); இதிஹாஸமும் க்ராயணீ புத்ரனும் அதுவே. ப்ரஹ்மத்தின் மஹிமையை வேதமே அறியும்; வேதத்தைக் கொண்டே அறியவேண்டும். இதை அறிந்தவனுக்கும் அதே என்று உபநிஷத் கூறப்பட்டது.

---

## ஏகாதசீ விருதத்தின் சிறப்பு

[ஸ்ரீ. உப. வி. அனந்தாசாரியர்]

இவ்வுலகில் இன்பமுற வாழவேண்டும் என விருப்பமுள்ள மானிடர்களுக்கு விருதங்களை அநுஷ்டிப்பது இன்றியமையாததோர் ஸாதநமாகும். சரீரத்திலோ, மனதிலோ, வன்மையுள்ளவனே சிறந்தவனாகிறான். சரீரத்தில் வன்மையைக் காட்டக் கூடிய ஜாதியர் சிலர். மனதில் வன்மையைக் காட்டக் கூடிய வகுப்பினர் சிலர். இரண்டிலும் வன்மை பெற்றிருப்பது சிறந்தது என்பதில் ஸந்தேஹம் இல்லை. என்றாலும் அவரவருடைய



உரிமைக்குத் தக்கபடி இரண்டிலுமோ ஒன்றிலோ வன்மையை அடைந்திருப்பது முக்கியம். மனோ வன்மையில்லாதவன் மிருகங்களுக்குச் சமானம். மனத்தின் உறுதியே மனோவன்மை எனப்படும். இந்த உறுதியை ஜாதி மதங்களுக்கு ஏற்றபடி சில கார்யங்களில் காட்டவேணும். இந்த மனோவன்மை, அல்லது மன உறுதியையே விருதம் என்ற பெயரால் வழங்குகிறோம். மானிட ஜாதியில் பிறந்த ஒவ்வொருவனும், ஏதாவது ஒரு விருதத்தைக் கைக் கொண்டு, தன்னுடைய ஜீவித காலம் முழுவதும் விடாமல் நிறைவேற்றவேண்டும். ஒருவன் அநேக விருதங்களை அங்கீகரிக்கலாம். ஆனால் அவைகளில் ஒன்று பிரதானமாகவும் மற்றவை அப்ரதானமாகவும் இருக்கவேண்டும். பலவற்றை முக்கியமாக வைத்துக்கொண்டால், அவைகளில் பரஸ்பரம் முரண்பாடு வரும்போது நமக்கு கஷ்டம் நேரிடும். ஸ்ரீ ராமபிரானிடத்தில் அநேக விருதங்கள் காணப்பட்டபோதிலும் அவைகளில் சரணாகத ரக்ஷணம் ஒன்றையே முக்கியமாய் கைக்கொண்டார். இவ்விஷயம் एतद् व्रतं मम என்ற அவர் பாசுரத்தால் நன்கு விளங்கும். “சரணாகத ரக்ஷணமும் குடும்ப ஸம்ரக்ஷணமும் ஒன்றோடொன்று முரண்படுமானால் குடும்ப ஸம்ரக்ஷணத்தைப் புறக்கணித்து சரணாகத ஸம்ரக்ஷணத்தையே நிறைவேற்றுவேன்” என்று சொல்லுகிற ஸ்ரீ ராமபிரானுடைய மனத்திடத்தைப் பாருங்கள். இப்படி நம்முடைய புராதந நூல்களில் ஒவ்வொருவருடைய சரித்திரத்தையும் ஆராய்ந்துபார்க்குமளவில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிருதத்தைக் கைக்கொண்டு நிறைவேற்றியதாகவும் அதற்காகவே படாத பாடுகள் பட்டதாகவும் தெரிய வருகிறது. அதுபோல் நாமும் சில விருதங்களை மேற்கொண்டு நிறைவேற்றவேணும். விருதங்கள் பலவுண்டு. இகத்திலும் பரத்திலும் நன்மையைத் தரக்கூடிய விருதங்களைத் தெரிந்தெடுப்பது புத்திசாலிகளின் கார்யம். நாம் தெரிந்தெடுக்கும் விருதம் நமது ஜாதி தர்மங்களுக்கும் மதக் கொள்கைகளுக்கும் விரோதமின்றி இருக்கவேணும். விருதங்களில் மூன்று வகை உண்டு, நித்யம், நைமித்திகம், காம்யம் என்று. நித்யம் என்பது ஏகாதசீ விருதம் முதலியது. அதாவது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதும், ஒரு பலத்தைக் கருதி விதிக்கப்படாததும், காலம் தேசம் முதலான விசேஷ ஸம்பவங்களால் ஏற்படாமல் எத்தகைய காரணங்கள் கொண்டும் விடக்கூடாததும், செய்யாவிட்டால் மகாதோஷத்தை விளைவிக்கக் கூடியதுமானது.

நைமித்திகமாவது: ஸூர்ய க்ரஹணம், சந்திர க்ரஹணம் முதலியது. அதாவது காலம் தேசம் முதலிய சில விசேஷ ஸம்பவங்களால் உண்டானது. மீதி விஷயங்களில் நித்ய கர்மங்களை ஒற்றது.

காம்யமாவது: பலங்களில் இச்சை உள்ள அதிகாரிக்கு விதிக்கப்பட்டது. செய்தால் பலன் உண்டு, செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் இல்லை. ஐச்வர்யம், சுவர்க்கம் முதலான பலங்களில் விருப்பமுள்ளவர் சில யாகங்களை செய்யவேணும் என்று வேதங்களில்விதி. அந்த யாகங்களைச் செய்தால் வேதங்களில் கூறியபடி சுவர்க்கம் முதலான பலங்கள் உண்டு. பலத்தில் விருப்பமில்லாதவர் அந்த யாகங்களை செய்யாமல் இருக்கலாம். ஏகாதசி விருதம் அப்படிப்பட்டதன்று. செய்யாவிட்டால் மஹத்தான ப்ரத்யவாயம் உண்டு. ஏகாதசீ விருதமும், துவாதசீவிருதமும் ஒன்றோடொன்று சேர்ந்துஅநுஷ்டிக்கத் தக்கது. ஏகாதசீ விருதத்தை முதல் தினம் அநுஷ்டித்து மறு தினம் துவாதசீ தினத்தில் பாரணை செய்து விருதத்தை முடிக்கவேணும். ஏகாதசீ தினத்திற்கு ஹரிதினம் எனப் பெயர். இந்த விரதம் ஏற்பட்டதற்கு இரண்டு ஐதிஹ்யங்கள் உண்டு.

1. ஆதிகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்தபோது ஸ்ரீதேவி அவதரித்தாள். அவர்கள் ஏகாதசி தினத்தில் உபவாஸமிருந்து புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், விஷ்ணுஸஹஸ்ரநாமம் இவைகளைப் பாராயணம் செய்து கொண்டு ஸமுத்திரத்தைக் கடைந்தார்கள் என்றும், துவாதசீ தினத்தில் சூர்யோதயகாலத்தில் ஸ்ரீதேவி அவதரித்தாள் என்றும் புராணங்களில் சொல்லப்பட்டது. இந்த ஐதிஹ்யத்திற்கு அறிகுறியாக நாமும் ஏகாதசியில் உபவாஸம் இருந்து, துவாதசியில் பாரணை செய்யவேணும் என்று புராணங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. துவாதசி தினத்தில் லக்ஷ்மிதேவி அவதரித்ததுமன்றி அன்றைய தினம் லக்ஷ்மிதேவியோடுகூட ஸமுத்திரத்தில் நின்றும் உதித்த அமிருதத்தை தேவர்கள் பானம் செய்தார்கள். ஆகையால் நாமும் பாரணை செய்வது உசிதம் என்று அறியத்தக்கது. இவ்விஷயம் பாத்மமகா புராணத்தில் உத்தரகண்டத்தில் 260-261வது அத்தியாயங்களில் காணலாம்.

இதற்கு ஹரிதினம் என்று நாமதேயம் வந்ததற்கு மற்றொரு ஐதிஹ்யமும் உண்டு.

2. அதாவது ஆதிகாலத்தில் முரன் என்று அசுரன் ஒருவன் இருந்தான். அவன் இந்திரனையும் மற்ற தேவர்களையும் ஜயித்து சுவர்க்கத்திலிருந்து துரத்திவிட்டான். தேவர்கள் அனைவரும் பரமசிவனிடம் சென்று இக்குறையை முறையிட்டார்கள். அவர், “திருப்பாற்கடலில் பள்ளிக்கொண்டிருக்கும் திருமாலிடத்திற்குச் செல்லுங்கள். அவர் இக்குறையை நீக்குவார்” என்றார். அப்படியே தேவர்கள்சென்று பகவானைத் துதித்தார்கள். பகவான் ப்ரத்யக்ஷமாய் தோன்றியபோது தேவர்கள் முரன் செய்த உபத்ரவத்தைத் தெரிவித்தார்கள். பகவான் முரனைத் தான் வதைப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து தேவர்களை அனுப்பிவிட்டு, முரன் வசிக்கும் இடமாகிய சந்திராவதீ என்னும் பட்டணத்திற்குச் சென்றார். அங்கு பகவானுக்கும் முரனுக்கும் ஆயிரம் வருஷங்கள் யுத்தம் நடந்தது. முரனுடைய வேண்டுதலுக்கு இணங்கி இருவருக்கும் கைச்சண்டையே நடந்தது. முடிவில் பகவான் தோல்வியடைந்தார். முரனுடைய முன் நிற்கமாட்டாமல் ஓடி ஹிமாலயத்தில் பதரிகாச்ரமத்திற்கு அருகில் ஸிம்ஹாவதீ என்னும் குஹையுள் நுழைந்து யோகமாயையால் உறங்கலானார். முரனும் பகைவனுடைய அடிச்சுவடு பின்பற்றிச் சென்று குகைக்குள் உறங்கிக்கொண்டிருக்கும் விஷ்ணுவைக்கண்டு அவரை கொல்ல யத்தநித்தான். அப்போது தடீர் என்று விஷ்ணுவின் திருமேனியிலிருந்து பெண்வடிவமான ஒரு தேவதை தோன்றியது. ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் என்று பாகவானுக்கு ஆறு குணங்கள் உண்டு. அவைகளில் கடைசி குணமாகிய தேஜஸ்ஸின் அம்சத்தால் இந்த தேவதை உதித்தது. இதுவே ஏகாதசீ என்னும் ஹரிதினம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. அந்த தேவதை, மிக்க அழகுவாய்ந்ததும், யுத்தத்திற்குரிய எல்லா ஆயுதங்களையும் கையில் தரித்துக் கொண்டும் இருந்தது. அதனால் மூரன் அந்த தேவதையோடு போர் செய்ய விரும்பினான். தேவதையும் சம்மதித்தது. இருவருக்கும்போர் நடக்கவே ஏகாதசீ தேவதை தனது வாயிலிருந்து, ஹூங்காரத்தால் நெருப்பைக் கிளப்பி முரனை எரித்தது. அவன் எரிக்கப்பட்டு பூமியில் விழவே பகவான் விழித்துப்பார்த்து ஆச்சர்யமடைந்தார். அந்த தேவதையும் பகவானுடைய தேகத்தில் மறைந்தது. பகவான் வியந்து “இந்த அருமையான கார்யத்தைச் செய்தது யார்?” என்று கேட்டார். அந்த தேவதை ஆகாசவாணியாகத் தோன்றி பகவானே! “ உம்முடைய மஹிமையால் விசேஷசக்திவாய்ந்த நான் இந்த துஷ்டனைக் கொன்றேன் என்றது. மிகவும் ப்ரீதிவாய்ந்த பகவான், “உன்னுடைய செயலால் நான் மிகவும் திருப்தியடைந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுவது கேட்டுக்கொள்” என்றார். அப்போது தேவதை கேட்டதாவது ‘எனக்கு ஹரி தினம் என்ற பெயர் தருக. என்னை உம்முடைய பக்தர்கள் அனைவரும் புண்ணியதினமாகக் கொண்டாடவேணும். என்தினத்தில் உபவாஸமிருப்போருக்கு, ஸ்ரீ, தர்மம், அர்த்தம், மோக்ஷம், இவைகளைத்தந்தருளவேணும்.’ அப்படியே பகவான் ஏகாதசி தினத்திற்கு வரங்களை அளித்து மறுதினம் காலையில் பாரணை செய்பவர்க்கே இந்த பலங்கள் சித்திக்கும் என்று ஏற்பாடு செய்து மறைந்தார். இந்தக் கதை பாத்மபுராணம் உத்தர கண்டம் 40வது அத்தியாயத்தில் விஸ்தாரமாய் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஏகாதசி தேவதை, முதன் முதல் தோன்றியது அதாவது முராசுரனைக் கொன்றது, மார்கசீர்ஷ மாதம், சுக்ல பக்ஷம் 11 வது தின

மாகையால் அதற்கு உத்பத்யேகாதசி எனப் பெயர் வழங்குவதும், அன்றைய தினம் பகவான் விழித்த தினமாகையால் பகவானுக்கு விசேஷ உத்ஸவங்களைச் செய்வதும் வேதச்ரவணாதிகளைச் செய்துவைப்பதும் மிகப் பொருந்தும். இவ் வைதிஹ்யத்தின் அறிகுறிகளை தென் தேசத்தில் ஆழ்வார் திருநகரி முதலிய சில திவ்ய க்ஷேத்திரங்களில் காணலாம். அதாவது அன்றைய திநம், காலையில் உத்ஸவ எம்பெருமானுக்கு சயநோபசாரம் ஸமர்ப்பித்து ஸாயங்காலம் எழுப்பி உத்ஸவங்களைக் கண்டருளப் பண்ணுவதற்கு இந்த ஐதிஹ்யமே காரணமாய் இருக்கலாம்.

தர்ம சாஸ்திர வசனங்கள் பலவிதமாய் புறப்பட்டு இவ் வேகாதசியில் பற்பல பேதங்களை உண்டாக்கிவிட்டன. நிபந்தநக்காரர்களும் தர்ம சாஸ்திர வசனங்களை ஒருமைப் படுத்த முயன்று தங்கள் இஷ்டம்போல் வ்யாக்யாநம் செய்து அநேக மதபேதங்களை உண்டாக்கினர். அதைப்பற்றி பின்னே விவரிப்போம்.

ஸ்ரீ

# ஸமாதாந விமர்சம்

[ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம் அணங்கராசாரியர்]

"வம்பவிழ் கோதை பொருட்டா" என்கிற திருவாய் மொழிப் பாசுரத்தை யடியொற்றி ஸ்வாமி தேசிகன் அருளிய ச்லோகத்தில் "கோதாயா:" என்றிருப்பதைப் பற்றி ஓர் ஸந்தேஹம் விஜ்ஞாபனம் செய்திருந்தேன். அதற்கு ஸமாதாநம் என்று வெளியிட்டிருப்பதில் தோன்றின விஷயங்களை ஈண்டு விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். 'கோதா' என்னும் பதம் வட மொழிக்கு அஸாதரணமான பதம் என்று ஒப்புக்கொள்ள ப்ரமாணம் துர்லபம்' என்று ஸமாதாநவக்தா திருவுள்ளம் பற்றுகிறார். சப்த கல்பத்ருமம் என்னும் ஸம்ஸ்க்ருத கோசம், ஸுப்ரஸித்தம். இதில் கோதா என்னும் பதம் எடுக்கப்பட்டு வ்யுத்பத்தியும் காட்டப்பட்டுள்ளது. அது ஸம்ஸ்க்ருத பதமல்லாவிடில் பட்டர் தேசிகன் முதலிய ஆசார்யர்கள் இப் பதத்தை யிட்டு ஸ்லோகங்கள் அருளிச் செய்வர்களோ? கோதாஸ்துதி என்றே திருநாமமிட்டு ஒரு ஸ்தோத்ர மருளிச் செய்யப்பட்டுள்ளதன்றோ. 'தமிழில் கோதை என்றிருந்ததை அப்படியே கோதா



என்று ஸம்ஸ்க்ருதப் படுத்திக் கொண்டார்களத்தனை' என்று கொண்டாலும் [காஹதீதி கோதா] என்று வ்யுத்பத்தி காட்டி 'ஸ்ரீ ஸூக்திகளை அருளிச் செய்தவள்' என்று பொருள் கூறி ஆண்டாளுக்கு இது கோதாபிதாநம் என்னும் ப்ரஸித்தியை நம் பூருவர்கள் ஆதரித்துள்ளார்கள் என்பது அபலபிக்க வொண்ணாதது. மங்கை, நங்கை என்னும் தமிழ்ச் சொற்களை (மங்கா, நங்கா) என்றிப்படி யாரும் ஸம்ஸ்க்ருதப் படுத்தி யிருக்கவில்லை. ஆகவே, நன்கு ஆராயுமளவில் கோதா என்னுஞ் சொல் ஆண்டாளை யன்றி நப்பின்னையைச் சொல்லகில்லாது.

குருகா என்னும் வட மொழிப் பெயர் தமிழில் 'குருகை' என வழங்கப்பட்டதுபோல கோதா என்பதும் கோதை யென்பதாயிற்று என்று கொண்டாலும், கோதை யென்கிற தமிழ் மொழியே கோதா என்று நாதமுனி ப்ரப்ருதிகளால் வட மொழி யாக்கிக் கொள்ளப்பட்டது என்று கொண்டாலும் இது திருநாமச் சொல்லாகதால் ஆண்டாளைத்தான் குறிக்குமென்று கொள்வது கடமையாகும்.

நப்பின்னைக்குக் கோதை யென்றாவது கோதா என்றாவது பெயர் இல்லை. அல்பஜ்ஞரான நாம் 'இல்லை' என்று எங்ஙனம் சொல்லக்கூடுமோ? என்னில்; யதிஸ்யாத் வதது என்பதைக் கொண்டே சொல்லுகிறோம். ஸந்தேஹாஸ்பத ஸ்தலத்தையே ஸம்வாத ப்ரமாணமாகக் காட்டுதல் கூடுமோ? கோதை யென்று தமிழ் நூற்களிலாவது, கோதா என்று வட நூற்களிலாவது நப்பின்னைப் பிராட்டியைக் குறித் திருக்குமிடம் ஒன்றாவது காட்டப்பட்டால் த்ருப்தி பெறுவோம். 'புராணங்களில் நப்பின்னையின் பெயராக கோதா என்பதும் இருக்கக்கூடும்' என்று அனுமானம் பகர்வது பயன்படுமோ? "புராணத்தில் இல்லாவிட்டாலும் ஆழ்வார் வைத்த பெயரே ச்லாக்யமெனக் கருதி ஸ்ரீ தேசிகன் பிரயோகித்தார்" என்று ஸாதிப்பது சிறிது விமர்சிக்கத்தக்கது. ஆழ்வார் நப்பின்னைக்குக் கோதை யென்று திருநாமம் சாத்தி யிருப்பதாக மஹநீயர்கள் திருவுள்ளம்பற்ற இடமேது?

'வம்பவிழ் கோதை' என்ற ஆழ்வார் பாசுரத்திற்கு என்ன பொருள் என்பதை உற்று நோக்கவேணும். வடமொழியில், ஸுதநூ:, ஸுததீ, இத்யாதிபதங்கள் ஸ்த்ரீஸாமாந்யவாசிகள் என்பதைப் பலருமறிவர். அதுபோலவே 'வம்பவிழ் கோதை' என்பதும் பெண்டிர்க்குப் பொதுப் பெயராய் உதாரணம் நோக்கிச் சிறப்புப்பொருள் கொள்ளத்தக்கதாகும். கூந்தல் என்றும் பூமாலை என்றும் இருபொருள்களையுடையதான கோதை யென்னுஞ் சொல் இங்கு பஹுவ்ரீஹிஸமாஸம் பெற்றிருக்கிறது. தமிழர்

இதனை அன்மொழித்தொகை என்பர். (4—2—8) "கேள்வினையாட்டியேன் கோதையே" என்ற விடத்திலும், (5—6—10) "கோலந்திகழ் கோதையென் கூந்தலுக்கே" என்றவிடத்திலும் கோதையென்கிற சொல்லுக்கு நம்மாழ்வாரே பொருளாகிறார். இதனால் நம்மாழ்வார்க்கும் கோதையென்று திருநாமமுண்டென்று கருதக்கூடுமோ?

ஆதலால் ஆழ்வார் நப்பின்னைக்குக் கோதையென்று பெயர் சாத்தினரென்பதும் அதை ஸ்ரீதேசிகன் அப்படியே அநுவதித்து ஹாஹா என்றார் என்பதும் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

"இருபாஷைகளிலும் ஸம்ப்ரதாநமான வல்லமை வாய்ந்த தேசிகன் ஒருத்திக்குப் பெயர் ஏற்படுத்து' விஷயத்தில் தீரமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் நடக்கத் தட்டென்ன?" என்றதைப்பற்றி நீசனேன் என்ன விண்ணப்பம் செய்வேன்? தேஶிகனுடைய ஸூக்திவைதுஷ்யாதிஶயத்தில் ஆர்க்கும் விவாதமில்லை. அதற்குக் குறைகூறப் புகுந்தோமாகவும் நினைக்கவொண்ணாது. நிரங்குஶஸ்வதந்த்ரனான எம்பெருமானும் தன்னுடைய ஸ்வாதந்திரியத்தை ஶாஸ்த்ரவரம்புக்கு உட்படுத்தியே செலுத்துவதாக தேசிகன் முதலிய ஆசார்யஶிகாமணிகள் அருளிச் செய்கிறார்கள். அது போலவே ஸர்வதந்த்ரஸ்வதந்திரரான தேசிகனும் தமது ஸ்வாதந்திரியத்தை யதேஷ்டமாக விநியோகப்படுத்தியருளக் காண்கின்றிலோம்.

"அவர் பேசியது சரி என்று இருப்பது உசிதம்" என்று ஸமாதானத்தின் உபஸம்ஹாரம் காண்கிறது. ஹாஹாயை என்றே தேசிகன் அருளிச் செய்தார் என்று நமக்குத் திண்ணமாகத் தெரிந்து விடுமாயின் அப்படியேயிருக்கத் தடையிராது. அப்போதும் உபபத்தியைத் தெரிந்து கொள்ள ஆவல் உண்டாகாமற்போகாது. ஸ்ரீராமாநுஜ பக்தர்களும் ஸ்ரீபாஷ்யாதிகளில் விசாரம் பண்ணாமலிருக்கவில்லை. "உடையவருடைய ப்ரயோகத்தில் நாம் விசாரம் செய்யலாமோ? அதுவே சரி என்றிருக்க வேண்டாவோ" என்று யாரும் விடையிறுப்பதில்லை.

ப்ரக்ருத ஸந்தேஹ ஸ்தலத்தில் (நீளாயை) என்கிற பாடம் உள்ளதாக அடியேனுக்குத் தெரிய வந்தமையால் தான் இந்த ஸந்தேஹமே ஜனித்தது. 'அங்ஙனே பாடமிருந்தால் அதுவே அழகியதாகும்' என்றுமென்று அடியேனுக்குத் தோன்றவில்லை. மஹான்கள் தெரிவித்தருளி இருக்கும் ஸமாதான வ்யாஸத்திலிருந்து மூன்று வகையான ஸமாதானம் ஏற்படுகிறது.



1. ஹாஹா என்னும் பெயர் நப்பின்னைக்கும் இருந்திருக்கலாம்.

2. கோதை யென்கிற திருநாமத்தை ஆழ்வார் நப்பின்னைக்குச் சாத்தினபடியால் அதனையே தேசிகன் ஆதரித்தார்.

3. முன்பு இல்லாதிருந்தாலும் ஒருவர்க்கு ஒரு திருநாமத்தை ஸ்வதந்திரமாகச் சாத்த தேசிகனுக்கு அதிகாரமுண்டு.

என்கிற இம்மூன்று வகையான ஸமாதாநங்களிலும் ஔசித்யமிருப்பதாகத் தெரியவில்லை.

1. அநுமாநம் அப்ரயோஜகம்.

2. ஆழ்வார் நப்பின்னைக்குக் கோதையென்று திருநாமம் சாத்தியருளவில்லை. "கோவைவாயாள் பொருட்டு ஏற்றினெருத்த மிறுத்தாய்" என்ற பாசுரத்தைக் கொண்டு நப்பின்னைக்குக் 'கோவை வாயாள்' என்று ஆழ்வார் திருநாமம் சாத்தினர் என்றும் சொல்லவேண்டிவரும்.

3. "ப்ரமாணஶரணராய்ப் போருகிறோம்" என்று தாமே யருளியுள்ளபடி ப்ரமாண பாரதந்திரராகவே செல்லா நின்ற தேசிகன் இச் சிறு விஷயத்தில் ஸ்வாதந்திரியத்தை அவலம்பித்தார் என்பது தகுதியோ?

1. அநுமாநத்தையும் நாம் பிரமாணமாக ஒப்புக்கொள்பவர்களன்றோ? ஹாஹா என்கிற ஶப்தத்தினால் இதற்குத் தகுதியாக ஒரு புராணப்ரஸித்தியை ஏன் அநுமிக்கலாகாது? என்கிற இந்த ஒரு வாதம் ஸமாதாதாக்கள் செய்யலாம்.

ஸம்ஜ்ஞைதுவைக் கொண்டு என்ன செய்ய முடியும்?

---

# ஸௌந்தர்யகலா சாஸ்திரம்

[உ. வே. வி. வி. ஸ்ரீ நிவாஸய்யங்கார்]

இதென்ன புதிதான சாஸ்திரம்? 'பெயர் கூட கேட்டதில்லையே' இருக்கிற சாஸ்திரங்கள் போதாதா? இன்னும் புதிது புதிதாக சாஸ்திரங்கள் உண்டாகவேண்டுமோ? என்று இவ்விதமாயும் இன்னும் பல விதங்களாகவும் மேலெழுதியிருக்கும் பெயரை வாசிப்போர்கள் கேழ்ப்பார்கள். அல்லது நினைக்கவாவது நினைப்பார்கள் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆனால் அந்த சாஸ்திரம் இதைப்பற்றியது என்றும் இத்தன்மையது

என்றும் உடனே இப்பொழுதே சொல்லவியலாது. பொறுத்துப் படிக்
கப்புலப்படும்.

நாம் இவ்வுலகில் அநேக வஸ்துக்களை அழகாயிருக்கின்றனவென்று
சொல்லுகிறோமல்லவா? தாமரைப்பூ அழகு என்றும் எல்லாரும் ஒப்புக்
கொள்வார்கள். அவ்விதமே ரோஜா புஷ்பம் அழகானது என்பதில்
விவாதமிராது. ப்ரதிதினமும் தவறாமல் நேர்ந்திடினும் சூர்யாஸ்தமனத்
தின் அழகை எப்பொழுதாவது சிறிதாவது கண்டு ஆநந்திக்காதவரும்
உண்டோ? அவ்விதமே சந்த்ரோதயமென்ன, நக்ஷத்திரங்கள் நிறைந்த
ஆகாசமென்ன, இந்திரவில்லென்ன, ஸமுத்திரமென்ன, பெரிய நதிகள்
என்ன, உன்னதமான பர்வதங்கள் என்ன, இவையும் இன்னும் எண்ணிலா
வஸ்துக்களும் காக்ஷிகளும் உலகத்தார் அனைவராலும் அழகானவை என்று
ஆக்ஷேபமில்லாமலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படியே
மிருகங்களில் மான்களும் பக்ஷிகளில் மயில் கிளி முதலியனவும், அழகல்ல
வென்று சொன்னவரைக்கண்டதில்லை. உலகத்தில் கோடாநுகோடி ஜனங்
கள் இருந்தாலும் அவர்களில் சில ஸ்திரீபுருஷர்களையாவது அழகுடைய
வர் என்று சொல்லுகிறார்கள் அல்லவா. இது மாத்திரமோ தாஜமகால்
முதலான கட்டிடங்களின் அழகைப்பற்றி எவ்வளவு வர்ணித்திருக்கிறார்
கள். அவ்விதமே சித்திரங்களும் வர்ணப் படங்களும், ஸங்கீதம் காவ்யம்
நாட்யம் முதலானவைகளும் மிகவும் அழகாயிருக்கின்றனவென்று, அடிக்
கடி பலர் சொல்லக்கேட்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் அழகுள்
ளவை என்று, எல்லாரும் ஒப்புக்கொள்வது எந்த காரணம் பற்றி? அழ
கென்பது யாது? எத்தன்மைய குணம் வாய்ந்தது? அதைப்பிரித்தும்
விவரித்தும் சொல்லக் கூடுமோ? இல்லாவிடில் நாம் அறிவதெப்படி? வஸ்
துக்களின் தன்மையையும் தத்வத்தையும் விசாரித்து அறிந்து வெளியிடு
வதே சாஸ்திரம் எனப்படும். ஜோதியால் விளங்கும் சூர்ய சந்திரர்கள்
மற்ற கிரஹங்கள் நக்ஷத்திரங்கள் ஆகாசத்தில் அந்தரமாய் சஞ்சரிக்கும்
ஸ்ருஷ்டி விசேஷங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்து அவைகளின் அமை
ப்பு, தன்மை, சலநீதி முதலான குணவிசேஷங்களைக் கண்டறிந்து, வெளி
யிடும் சாஸ்திரம் ஜ்யோதிஷ சாஸ்திரமெனப்படும். அவ்விதமே நாம்
வசிக்கும் கோளத்தைப்பற்றிய சாஸ்திரத்தை பூகோளசாஸ்திரம் என்
கிறார்கள். நம்முடைய இந்த பூமியானது எவ்வித வஸ்துக்களுலாயது?
என்கிற விசாரம் மேற்கொண்ட சாஸ்திரத்தை பூதத்வ சாஸ்திரம் என
லாம். அவ்விதமே, விருக்ஷ சாஸ்திரம், மிருக சாஸ்திரம் பௌதிக சாஸ்
திரம், ரஸாயந சாஸ்திரம், ஜீவதத்வ சாஸ்திரம் தேஹதத்வ சாஸ்திரம்,
மனோதத்வ சாஸ்திரம், என்று ஒவ்வொரு ஸ்திதிஸமூகத்திற்கும், உரித்



தான சாஸ்திரங்கள் இருப்பது, எல்லாருக்கும் தெரியும், அவ்விதமே நம்
முடைய புத்தியைக்கொண்டு, தத்வநிர்ணயம் செய்யும் ரீதியை ஆராய்ச்சி
செய்யும் சாஸ்திரத்திற்கு ந்யாச சாஸ்திரம் என்று, பெயரிட்டிருக்கிறார்கள்.
அதேவிதமாகவே மனிதர் செய்யும் கார்யங்கள் நல்லவை, கெட்டவை
என்று வ்யஹரிக்கும் தத்வத்தை ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரத்திற்கு
தர்ம சாஸ்திரம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

மனிதர்களுடைய மனதில், புத்தி, இச்சை, க்ருதி, என்று மூன்று
கரணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று ஆதிகாலம் முதல் எல்லா தேசங்
களின் தத்துவ சாஸ்திரிகளும் பிரித்துச் சொல்லி இருக்கிறார்கள். இவை
மூன்றில் புத்திக்கு ஸம்பந்தமான சாஸ்திரம் ந்யாய சாஸ்திரமென்றும்,
கிருதி அல்லது கார்யத்திற்கு சம்பந்தமான சாஸ்திரம் தர்ம சாஸ்திரம்
என்றும் கூறினோமல்லவா? அதே விதமாய் மனதின் மூன்று கரணங்
களில் ஒன்றான இச்சைக்கு ஸம்பந்தமான சாஸ்திரம் ஏதென்று கேட்
க்கக்கூடும். புத்திக்கு எவ்விதம் சத்தியமோ. கிருதிக்கு எவ்விதம் தர்ம
மமோ, அவ்விதமே இச்சைக்கு ஸம்பந்தித்தது ஆநந்தம் என்று சொல்ல
லாம். இந்த ஆநந்தம் என்னும் மனோரீதியை செவ்வனே விசாரித்து
கண்டறிந்து வெளியிடும் சாஸ்திரமே ஸௌந்தர்ய சாஸ்திரம் எனப்படும்.

அதெப்படி என்று கேட்கலாம். ஆநந்த சாஸ்திரம் என்று சொல்
லாமல் சௌந்தர்ய சாஸ்திரம் என்று வேறு பெயர் இடுவானேன். என்று
ஆக்ஷேபிக்கவும் கூடும். அதற்குக் காரணமுண்டு அதெப்படி என்றால்
புத்திக்கு சம்பந்தித்த சாஸ்திரத்தை புத்தி சாஸ்திரம் என்று பெயரிடா
மல் ந்யாய சாஸ்திரம் அல்லது தர்க்கசாஸ்திரம் என்று பெயரிட்டிருக்கும்
காரணத்தை விசாரிப்போம். மனிதன் புத்தியினால் கண்டறியக்கூடியது
உண்மை அதாவது ஸத்யம் எனப்படுவது புத்தியைக் கொண்டு நாம்
ஆராய்ச்சி செய்யும்போது பல விஷயங்களிலிருந்து ஒரு பொதுதன்மை
யையோ ரீதியையோ, விதியையோ. ஊகித்து அறிகிறோம். அவ்விதமே
பொது தத்துவங்களிலிருந்து யாதாமொரு வஸ்துவின் குணத்தை ஊகிக்
கிறோம். இவ்விதமெல்லாம் வஸ்துக்களின் உண்மையை நாம் அறிய
முயலுங்கால் நம்முடைய புத்தியானது தவறாமல் சரியான வழியில்
ஊகை முதலான வியாபாரங்களைக் குறித்த சாஸ்திரத்தையே ந்யாய சாஸ்
திரம் என்று சொல்லுகிறார்கள். அதாவது ந்யாய வழியாய் போனால்தான்
உண்மையை அறியலாம். அவ்விதமே நாம் செய்யுங் கார்யங்களை தர்மம்
இதென்று கண்டறிந்து செய்தால் நலம் பெறலாம். அவ்விதமே தான்
ஆநந்தம் அடையவேண்டுமானால் அதற்கு உபாயமும் வழியும் சௌந்தர்
யமே என்று ஏற்படுகிறதல்லவா? அது நிஜமாவென்று விசாரிப்போம்.

உலகத்தில் ஸந்தோஷம் என்று கருதப்படுவதெல்லாம் துக்கஸம்பந்தம் உள்ளவைகளே ருசிகரமான சாப்பாடு கொஞ்சம் அதிகமானால் அஜீர்ணம் உண்டாகிறது. பணம் அதிகரித்தால் கவலை அதிகரிக்கிறது. மகுடமணிந்த மன்னவன் தலையில் கவலையே குடி கொண்டிருப்பதென்று கவிகளும் சொல்லியுளார். ஸம்ஸாரசுகம் எனக்கருதப்படும் யாவையுமே துக்கம் கலந்தவை என்று ப்ரசித்தமல்லவா?

அதுவுமன்றி, பாலுக்குச் சக்கரை யில்லை யென்பார்க்கும் கூழுக்கு உப்பில்லை என்பார்க்கும் துக்கம் ஒன்றே என்றும் பழமொழி உண்டு. ஆதகால் அவ்வித ஆநந்தம் சௌந்தர்யாநுபவத்திலேயே கிடைக்கக் கூடும் என்று சொல்லலாம். அதெவ்விதமென்று நாம் கண்டறிந்து நிச்சயிக்கக்கூடும். ஜனங்களும் உன்னதமான கட்டிடங்களும் நெருங்கிய நகரத்தில் வாஸம் செய்யும் ஒருவன் எப்பொழுதும் கீழேயே பார்த்துக்கொண்டிருப்பதுபோ லல்லாமல் மாடிமீது சென்று தலையை உயர்த்தி அகண்டமாயிருக்கும் கருத்த ஆகாயத்தில் எண்ணிறந்த நக்ஷத்திரங்கள் ப்ரகாசித்துக்கொண் டிருப்பதைப் பார்த்தானாகில் அவனுக்கு ஓர் ஆனந்தம் உண்டாகும் அல்லவா?

அவ்விதமான ஆனந்தத்தில் எவ்வித துக்க ஸம்பந்தமாவது இருக்கக் காரணமில்லை. அவ்விதமே நல்லதொரு ஸங்கீதத்தைக் கேழ்ப்பதனாலுண்டாகும் ஆனந்தம், அழகான சித்திரப் படங்களைப் பார்ப்பதனால் உண்டாகும் ஆனந்தம், சுவை நிறைந்த காவ்யகளை வாசிப்பதால் உண்டாகும் ஆநந்தம், நல்ல நாட்யத்தையாவது நாடகத்தையாவது பார்ப்பதாலுண்டாகும் ஆநந்தம், இவ்விதமான ஆநந்தங்களில் துக்கத்தின் ஸம்பந்தம் லேசம்கூட கிடையாதென்று நிச்சயமாய் சொல்லக்கூடும். ஆகையால் இந்த பகவத் ஸ்ருஷ்டியி லிருக்கும் எல்லா வஸ்துக்களின் காக்ஷிகளும் மநுஷ்யர்களால் செய்யப்படும் காவ்யம், சித்திரம் முதலான க்ருதிகளும் மனிதர்களுடைய மனதில் துக்கத்துக்கு சிறிதுகூட இடமில்லாமல் உண்டாக்கும் ஸந்தோஷத்தையே ஆநந்தம் என்று சொல்லலாம். அவ்விதம் ஆநந்தம் உண்டாக்கும் வஸ்துக்களின் தன்மைக்குப் பொதுவாய் ஸௌந்தர்யம் என்று பெயரிட்டறியலாம். ஆதலால் ஸௌந்தர்ய சாஸ்திரம் என்றால் துக்கமில்லாத ஆநந்தத்தை நமக்கு உண்டாக்கிற வஸ்துக்களின் தன்மையை விசாரித்து அறிய ஏற்பட்ட சாஸ்திரம் எனப்படும். ஆனால் நாம் இப்போது விசாரிக்கப் புகுந்த சாஸ்திரம் சௌந்தர்ய சாஸ்திரமல்ல. சௌந்தர்ய கலா சாஸ்திரம் என்று



சொன்னோம். கலை என்றால் இயற்கையாய் இல்லாமல் மனிதர்களுடைய செயலால் உண்டாவது. இயற்கையில் அநேக சௌந்தர்யம் அமைந்த வஸ்துக்கள் ஸ்ருஷ்டியில் நிறம்பியுள்ளன. ஆனால் சௌந்தர்ய முள்ள வஸ்துக்களை மனிதன் ப்ரயத்நத்தால் உண்டாக்குவானே யாகில் அதை சௌந்தர்ய கலை என்று சொல்லலாம். கலைகளில் மநுஷ்யனுக்கு அவச்யமானவையும் உபயோக முள்ளவையுமான அநேக கலைகள் உண்டு. வீடு கட்டுதல் தச்ச வேலை, கருமான் வேலை முதலியனவை உபயோக ப்ரதாநமான கலைகள் என்று அறிகிறோம். அவ்வித கலைகளின் முக்கிய கருத்து, மனிதர்களுக்கு அவச்யமானவையும், உபயோகமானவையுமான வஸ்துக்களை நிர்மாணித்துக் கொடுப்பது.

அது நிற்க காவ்யம் எழுதுதல் சித்திரப் படம் வரைதல் பாட்டு பாடுதல் முதலான கார்யங்கள் மனிதற்கு முக்கியமாய் ஆநந்தத்தை உண்டாக்குவதற்காக ஏற்பட்டவை. ஆகையால் இவ்வித ஆநந்தத்தை மனிதற்கு உண்டாக்குவதற்கு முக்கியமாய் ஏற்பட்ட கலைகள் சௌந்தர்ய கலைகள் எனப்படும், அவ்வித கலைகளின் தன்மையையும் தத்துவத்தையும் விசாரிக்க ஏற்பட்ட சாஸ்திரம் சௌந்தர்ய கலா சாஸ்திரமாகும். இவ்வித சாஸ்திரத்தைப்பற்றி நமது நாட்டில் ஒரு பாஷையிலாவது விசேஷமாய் க்ரந்தங்கள் ஏற்பட் டிருப்பதாகத் தெரியவில்லை. மேல்நாட்டு பாஷைகளில் சிறிது காலம் முதல் இவ்வித விசார ஸம்பந்தமான புஸ்தகங்கள் அநேகம் ப்ரசுரிக்கப்பட் டிருந்தும் அந்த க்ரந்தங்களை அவ்வளவாய் திருப்திகரமாய்ச் சொல்லமுடியாது. ஆதலால் இந்த சௌந்தர்ய கலா சாஸ்திரம் என்று நவீனமாய் நாமகரணம் செய்யப்பட்ட இந்த சாஸ்திரத்தைக் குறித்து அவ்வப்பொழுது எனக்குத் தோன்றிய வரையில் எழுதிவரலாமென்ற ஆசை கொண்டிருக்கிறேன்.

---

ஸ்ரீமத் அண்ணயார்ய மகாதேசிகன் வைபவம்.

# श्रीमदण्णयार्यापराभिधान श्रीरङ्गनाथ महादेशिक वैभवम् .

கூத்தபாக்கம். ஶ்ரீ. க. ச. நரசிம்மாசார்யர்

आदौ नाथमुनि प्रभावमहिते दीप्तान्तरे सत्कुले
श्रीमद्यामुनयोगिवर्यकुरुकाधीशादिभिर्देशिकैः ।
संसारानलदह्यमान जनता संजीवनायोदितः
जीयादण्णयदेशिकापरतनुः श्रीमान् हयास्यो हरिः ॥ १ ॥

श्रीमद्यक्षनृसिंहतातयगुरोः पादाब्जसेवारतं
श्रीमद्वेदवतं स लक्ष्मणमुनेः लब्धागमान्तान्वयम् ।
श्रीमन्नाथमुनेरुदीतमनघे वंशे जगद्भाग्यतः
श्रीशैलाण्णयतात देशिकमणिं वन्देय मद्दैवतम् ॥ २ ॥

कालेऽस्मिन् कलिदोषतः सुचरित भ्रष्टे जने भाजने ।
दोषाणामति भङ्गुरे मुनिगणप्रोक्ते सुमार्गे नृणाम् ।
श्रीमानाविरभूद्दयास्य भगवान् उद्धर्तुकामो जनान्
यद्रूपेण सदेशिकोण्णयसुधीर्जीयात्सहस्रं समाः ॥ ३ ॥

श्रीमदण्णयसूरीन्द्रसच्चरित्रसुधाम्बुधेः ।
कृतार्थयामि सारांशैः मन्दस्याप्याविलां गिरम् ॥ ४ ॥

यस्मिन् ग्रामे वसन्तः सुचरितनिधयः सर्वशास्त्रप्रगल्भाः
साङ्गे वेदे नितान्तश्रमविमलधियः नाटकालंकृतिज्ञाः ।
तस्मिन् जम्बूपुराख्ये विहरति भगवान् वेङ्कटक्ष्माभृदीशः
त्यक्त्वा नित्यानुभाव्यं परममपि पदं विस्मरन्नञ्जनाद्रिम् ॥ ५ ॥

என்று கொண்டாடப்பட்டதும், திருவேங்கட முடையானுக்கு விளையாடுமிடமான ஜம்பூபுரம் அதாவது நாவல் பாக்கம் என்னும் கிராமத்தில் ஸ்ரீமன் நாதமுநியின் வம்சத்திற்கு அலங்காரமாயும், ஸ்ரீபாஷ்யகாரருடைய ப்ரிய சிஷ்யரும், திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி வ்யாக்யாநம் செய்தருளினவருமான திருக்குருகைப் பிரான் பிள்ளானுடைய ஸந்ததியில் உதித்த



வருமான குமாரதாதாசாரியர் என்ற வித்வான் எழுந்தருளி இருந்தார், அவர் நான்கு வேதங்களையும் முறை தவராமல் அத்யயநம் செய்தவர். நூறு யாகங்களை அநுஷ்டித்தவர். இந்த வம்சத்தில் உதித்தவருக்கு மேற் சொன்ன விரண்டும் ஸாதாரணமாய் இருந்தன. அதனால் இந்தக் குலத்திற்கு சதுர்வேதி சதக்ரது என்ற பிருது உண்டாயிற்று. அந்த குமாரதாதாசார்யருக்கு ஏழு குமாரர்கள் அவர்களில் ஜ்யேஷ்டர் நீலமேகாசார்யர். நற்குணங்களில் தந்தையை விடச் சிறந்தவர். என்று அனைவராலும் கொண்டாடப் பெற்றவர். அந்த நீலமேகாசார்யருக்கு இராமாநுஜாசார்யர் என்ற ஒரு குமாரர். அவருக்கு இரண்டு பார்யைகள். மூத்தவளுக்கு நான்கு குமாரர்களும், இளையவளுக்கு ஒரு குமாரரும் ஜநித்தார்கள் இளைய பார்யையின் வயிற்றில் தோன்றினவர் யஜ்ஞ நரஸிம்மாசார்யர். அவருடைய ஜ்யேஷ்ட குமாரர் ஸ்ரீநிவாஸாசார்யர். அந்த ஸ்ரீநிவாஸாசார்யரிடத்தில் ஸ்ரீமத் அணணயார்ய மகா தேசிகன் அவதரித்தருளினர்.

## அவதார காலமும் க்ரமமும்

இந்த ஸ்வாமி அவதரித்தது ஸாதாரண ஸம்வத்ஸரத்தில். இவருடைய திருத்தகப்பனார் ஸ்ரீநிவாஸஸூரி. திருத்தாயார் கநகவல்லீ. அவள் சக்கிரவர்த்தி குலத்தில் உதித்தவள். ஸ்ரீநிவாஸ ஸூரிக்கு இரண்டு பார்யைகள் உண்டு. அவர்களில் கநகவல்லீ மூத்தவள். இவள், ஜ்யேஷ்ட குமாரனை ப்ரஸவித்து, சில வருஷங்களுக்கப்பால் இந்த ஸ்ரீமத் அண்ணயார்ய மகாதேசிகனை கர்ப்பத்தில் தரித்தாள். இவர் கர்ப்பத்தில் வளர்ந்து கொண்டிருக்கையில் அந்த த்தாயாருடைய திருமேனியில், பூர்ண சந்திரன் உதிப்பதற்கு முன் கிழக்கு திக்கில் ஒரு காந்தி விசேஷம் உண்டாவது போலேயும், கிருஷ்ணாவதாரத்திற்கு முன் தேவகீயினுடைய மேனி ஒளி யிட்டருந்தாப்போலேயும், விலக்ஷணமானதோர் காந்தி விசேஷம் தோன்றியது அனைவர்க்கும் வியக்கத் தக்கதாய் இருந்தது, ப்ரஸவகாலம் நெருங்கின போது, மஹம்மதியர்களுடைய ஆக்ரமண காலமாயிருந்தது. குதிரையின் மேல் சவாரி செய்துகொண்டு துருக்கர்கள் கிராமங்கள் தோறும் புகுந்து கோயில்களைக்கொள்ளை அடிக்கும் காலமாயிருந்தபடியால், தூரத்தில் குதிரைக்காரரைக் கண்டதும் க்ராமீணர்கள் உயிர்தப்ப வழி தேடுவதன் நிமித்தம் வீடு வாசல்களை விட்டு சடக்கென கானகத்தை நோக்கி ஓடுவது வழக்கமாயிருந்தது. இந்த பதிவ்ரதா சிரோமணியான அம்மணி, பூர்ண கர்ப்பவதியாய் இருக்கும்போது நாவல் பாக்கம் கிராமத்திற்கு இந்த துர்தசை நேர்ந்தது. திருமலை நல்லான் சக்கிரவர்த்தி, கொத்தி மங்கலம் ராகவாசாரியர் என்பவர் இந்த அம்மணியின் ஜேஷ்ட ஸஹோதரர். அவர் தற்காலம் நாவல் பாக்கம் வந்திருந்தபடியால் அவரை ஸஹாயமாய் அழைத்

துக் கொண்டு புறப்பட்டாள். ஓரத்தி என்னும் கிராமத்தின் அருகில் பெரிய வநம் ஒன்றுண்டு. அங்கு வரும்போது இந்தக் கநகவல்லிக்குப் ரஸவவேதனை அதிகமாயிற்று, ஸஹோதரை தாரத்தில் இருக்கச் சொல்லி त्वमेव माता च पिता त्वमेव என்று சொல்லுகிறபடி, ஸர்வேச்வரனையே ஸகல வித பந்துவாய் நினைத்து, அவனிடத்திலேயே ரக்ஷண பாரத்தை ஒப்புவித்து, ஒரு சிலாதலத்தில் உட்கார்ந்தாள். பதரீ வநத்தில் பாதராயணன் அவதரித்தாப்போல் இந்த மஹா வநத்தில் இந்த ஸ்வாமி அவதரித்தார். அப்போது இராத்திரியாயிற்று. ஸ்ரீநிவாஸ ஸூரியும் இவர்களைத் தேடிக்கொண்டு கையில் சுளுந்து வெளிச்சத்தை வைத்துக்கொண்டு இக் காட்டில் புகுந்தார். இந்த நிலைமையில் இருக்கும் பத்நியைக் கண்டு, சடக்கென ஒரு பர்ணசாலையை நிர்மாணித்து அதில் அவளை வஸிக்கச் செய்தார். குதிரைக்காரரின் உபத்திரவம் ஓய்ந்துபோன பின்பு, ஸ்ரீநிவாஸ ஸூரி பத்நீ ஸமேதராய் திரும்பவும் நாவல்பாக்கம் சென்று பால சந்திரன்போல் மநோஹரமான திருமுக மண்டலத்தால் காண வந்தவர்களின் திருஷ்டியையும் சித்தத்தையும் அபகரிக்கின்ற இந்த மூர்த்திக்கு க்ரமேண ஜாதகர்மம் நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களை முறைப்படி செய்தார். ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்கு விரை முதல் இட்டவரான ஸ்ரீமன் நாத முநிகளே தான் ப்ரவர்த்திப்பித்த சித்தாந்தத்திற்கு காலவிப்ர கர்ஷத்தால் வரும் மாலிந்யத்தை நீக்கி தழைப்பிக்கக் கோலி இப்படி அவதரித்திருக்கக் கூடும் என்ற ஊஹத்தால், அநேக வித்வான்கள் கூடி ஆலோசித்து தீர்மானித்ததை அநுசரித்து பிதா இக் குழந்தைக்கு ரங்கநாதன் என்று சர்மன் இட்டார். எட்டாவது வயதில் உபநயநம் செய்த பின்பு பிதா. மஹான் யஜ்ஞ நரஸிம்மாசார்யர் இவருக்கு பஞ்ச ஸம்ஸ்காராசார்யனானார் தனது பிதாவினிடத்திலேயே ஸாஹித்யம், வ்யாகரணம் இவைகளை அதிகரித்தார். பதினாறுவது வயதில் இவர் பிதா திருநாட்டுக்கெழுந்தருளினார். அதன்பின், காவேரீதீரத்தில் சிரோமணி வெங்கடாசார்யர் என்ற மஹாவித்வானிடத்தில் சென்று தர்க்க சாஸ்திரத்தில் பாண்டித்யத்தை ஸம்பாதித்தார். இந்த வெங்கடாசார்யர் திருமலை நல்வான் சக்கிரவர்த்தி வம்சத்தில் உதித்தவர். ராமருத்ரபட்டன்முதலான மஹாவித்வான்களை ஜயித்து சிரோமணி என்ற பிருதம் வாய்ந்தவர் ஸதாசாராநுஷ்டாநத்தில் மிகச்சிறந்தவர் அத்தருணத்தில் இந்த ஸ்வாமிக்கு, எல்லா சாஸ்திரங்களிலும் சிறந்த அறிவைப்பெறவேணும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஹயக்ரீவதேவதையை உபாஸநம் செய்து அதனால் நிகரற்று விளங்கும் தமது குருவை அணுகி அடியேனுக்கு ஹயக்ரீவ மந்திரத்தை ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்தித்தார். அந்த ஸ்வாமிக்கு திருக்குடந்தையில் பாட்டாசார் வீதியில் சதக்ரதுகுல திலகரான ஸ்ரீவேதாந்தாசார்யர் என்ற ஸ்வாமி



ஸந்நிதியில் இந்த மந்திரம் உபதிஷ்டமாயிருந்தது. தமது ஆசார்ய குலத்திற்கு உபகரிப்பது பெருத்த ஆசார்யகைங்கர்யமாகும் என்று எண்ணி, வெங்கடாசார்யரும் திருவுள்ளம் உகந்து உபதேசித்தார். மந்த்ரோபதேசம் ஆனபிறகு, ப்ரதிதிநம் காவேரீ ப்ரவாஹத்தில் கழுத்தளவு ஜலத்தில் நின்று கொண்டு, ஆயிரம் ஆவ்ருத்திக்குக் குறையாமல் ஜபம் செய்து வந்தார். அந்த வெங்கடாசார்யர் திருநாட்டுக்கு எழுந்தருளின பின்பு ஸ்வதேசம் எழுந்தருளி, தற்காலத்தில் காஞ்சீபுரத்தில் இருந்த ப்ரசித்த வித்வானான ஆஸூர் நரஸிம்ம சாஸ்திரியினிடம் சிரகாலம் ந்யாயசாஸ்திரத்தில் பரிசயம் செய்துவந்தார். ஸாதாரண மநுஷ்யர்களிடம் காணப்படாத விசேஷங்களைப் பெறவேணுமானால் பகவானுடைய அநுக்ரஹம் வேணும் அறிவில் சிறப்பைப்பெற, அதற்கென்று அவதரித்த ஸ்ரீ ஹயக்ரீவனை உபாஸிப்பதே நன்று, என்று தீர்மானித்து மந்த்ரோபாஸநம் செய்ய விஷ்ணு ஸந்நிதி விசேஷமானது, அங்கு ஜநநெருக்கம் இல்லாத ஏகாந்தம் நேர்ந்தால் மிகவும் நன்று என்று ஸ்தலாந்வேஷணம் செய்யும்போது திருக்கடல்மல்லை, மிகவும் தகுதியுள்ள இடமாக அவர் மனதில் தோன்றியது, ஸமுத்ரதீரம், விஷ்ணு ஸந்நிதி, வநத்தின் நடுபாகம், புண்யதீர்த்தம் என்று ப்ரசித்தமான புஷ்கரிணீ, இவற்றில் ஒவ்வொன்றும் மந்த்ரசித்திக்குப் போதுமான ஆதாரமாக மந்த்ரகல்பங்களில் கூறப்பட்டிருக்கிறது அவை எல்லாம் ஒன்று கூடி இருக்கும் இவ்விடத்தைக் கண்டதும் அந்த ஸ்வாமியினுடைய மனதில் உண்டான ஸந்தோஷத்திற்கு அளவே இல்லை. அங்கு தீவ்ரதமமான வ்ரதத்தை அநுஷ்டிப்பதாக ஸங்கல்பம் கொண்டார். அப்படியே வெகுகாலம் வ்ரதாநுஷ்டாநத்துடன் மந்த்ரஜபத்தை செய்துவந்தார் ஹயக்ரீவகல்பத்தில் விதிக்கப்பட்ட வ்ரதத்தை உள்ளபடி அநுஷ்டித்தார்.

அதாவது :—

ப்ரதிதிநம் மூன்று வேளைகளிலும் ஸ்நாநம், ஹயக்ரீவமந்த்ரஜபமே ஸ்நாநமந்த்ரம். அடிக்கடி பஞசகவ்யத்தால் ஸநாநம் அடிக்கடி பஞ்சகவ்யபாநம் அபராஹ்ண காலத்தில், கோமூத்திரத்தில் பக்வம் செய்யப்பட்ட அன்னத்தை புஜிப்பது ஞானப்பிரானுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்த துளசிதளமே அந்த அன்னத்திற்கு உபதம்சம். ஒரே வேளை போஜநம் புஷ்கரிணியில் கழுத்தளவு ஜலத்தில் நின்றுகொண்டு மந்த்ரஜபம் செய்வது அங்கந்யாஸகரந்யாஸங்களை செய்து ஹயக்ரீவகல் போக்தமானபடி ஹயக்ரீவமூர்த்தியை வெகு நேரம் இடைவிடாமல் த்யாநிப்பது. மாநஸமாக ஸ்நாதிகளான உபசாரங்களை ஸமர்ப்பிப்பது இராத்திரியில் பயங்கரமான துஷ்ட ஜந்துகளின் சப்தத்தைக் கேட்டும் பயப்படுவதில்லை. இப்படி வெகுகாலம் குரூரமான தபம் செய்து வந்தார்.

(தொடரும்)

# ஸந்தேஹ பரிஹாரம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசார்யர்]

தீபிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அடியேன் வ்யாஸத்தைப்பற்றிய தோர் ஸந்தேகத்துக்குப் பரிஹாரம் சொல்லப்படுகிறது.

(1) வேத வைபவ வ்யாஸத்தின் நான்காவது தூஷணத்தை நிரூபிக்குமிடத்தில் (286 × 287) கர்மாநுஷ்டாநம் அர்த்தஜ்ஞாநமில்லாமல் நிஷ்பலம் என்று மஹா பாஷ்யகாரர் முதலியோர் பக்ஷம் என்று விமர்சத்தில் ஸப்ரமாணமாகக் காட்டியிருக்கிறேன். இவ் விஷயம் ஸரியில்லை யென்று ஆர்யதர்மத்தில் நிரூபித்து விட்டதாக நம் ஸுஹ்ருத்து எழுதியிருக்கிறார். இது உண்மையற்றதோர் வார்த்தை. ந்யாய ரத்நமாலை முதலியவைகளில் அர்த்தஜ்ஞாநம் கர்மாநுட்டாநத்துக்கு அங்கம் என்று மீமாம்ஸகர் கண்டோக்தியும், 'ஊயீதவெஜொஹி விஜித வெஜாயஃ வெஜாயெஷ்யிகி யமெத' என்றுப்போலுள்ள ஸ்ரீ சங்கர பாஷ்யாதி வசநங்களும் ஸ்பஷ்டமாயிருக்க இவைகளைப் பராமர்சியாத சாஸ்த்ரி ஒருவர் அர்த்தஜ்ஞாநம் அங்கம் என்பதில் ப்ரமாணமில்லை என்றும் அது அவச்யமில்லை என்றும் ஆர்யதர்மத்தில் பிரசுரித்துள்ளார். அதற்கு நான் தீபிகையில் பிரசுரித்துள்ள ப்ரமாணங்களைக் காட்டியதின் பேரில் அவர் சாந்தரானார் தீபிகையில் அடியேன் உபபாதித்த விஷயமே ஆர்யதர்மத்திலும் யாதொரு ஆக்ஷேபணையன்றியில் சாஸ்திரியால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது ஆகவே ஆர்யதர்மத்தில் நிரூபிக்கப்பட்ட விஷயம் என்ன வென்பதை வாசகரே அரியலாம்.

, ஊயூய நவியி ஷிஜஷூாயூாபாயிமதஜ்ஞா நவெஷூவ ஷ வெஜாவாஷ ஷெநாவாயகூாஷ' என்றிவ்வாறுக ஸ்ரீ பாஷ்யாதிகளில் அபசூத்ராதிகரண நிஷ்கர்ஷம் ஸ்பஷ்டமாயிருக்க ஓர் சாஸ்த்ரியின் ஆபாத ப்ரதீதி மூலமான வாக்யத்தைக் கொண்டு ஸித்தாந்த ஸரணியை இவர் கைவிடுவது சரியன்று. 'வஷெவஷ்காணூாமஷ்ஜ்ஞாநம கூஷ்ாநஷூாநாகஷிஷூம' ஐதூாதூரதீ ஊாமஸகாே, என்று தர்மஸிந்துவில் சொல்லப்பட்டிருக்கிறதே. அர்த்தஜ்ஞானமின்றியில் அநுஷ்ட்டானம் கூடுமானல் கர்மாநுஷ்ட்டாநத்தால் அர்த்தஜ்ஞாநத்தை எப்படி ஆக்ஷேபிக்க முடியும்?

(3) ப்ரம்மயஜ்ஞத்தில் அங்காத்யயநமும் கர்த்தவ்ய மென்பதற்கு விமர்சத்தில் 284 பக்கத்தில் ப்ரமாணங்களைக் காட்டியிருக்கேன். ஸ்ரீ தோழப்பர் ப்ரம்ம யஜ்ஞத்தில் அங்காத்யயனம் காம்யம் என்று சொல்லியிருப்பதாலும் நிதெதூஷு யயா ஶதிங்யாயத்தை அநுஸரித்தும் இப்போதைய சிஷ்டர்கள் அங்கிலை மாத்திரம் ப்ரம்ம யஜ்ஞத்தில் ஜபிப்பது ப்ராமாணிகமே.

4. விமர்சம் 341 × 342 பக்கங்களில் வேத வைபவ வ்யாஸத்தைப் பற்றிய ஒன்பதாவது தூஷணத்தை உபபாதிக்குமிடத்தில் 'வெஜாநயீதூ ஊவெயூதவெயூாஷி' இத்யாதி ப்ரமாணங்களின்படி சக்த்திதாரதம்யத்தை யிட்டு 4. 3. 2. 1. சாகைகளோ ஏகதேசமோ அவச்யம் அத்யயனம் செய்யப்பட வேண்டுமென்று நிரூபித்திருக்கேன். 'தஷூாஜெநம ஷவஷ் வெஜாநயீதூ விவாயஷ வஜ்ஞாதாஷிஜெஷஊ' இத்யாதிகளின் படி ஷடங்கங்களோடு நான்கு வேதங்களையும் அத்யயநம் செய்து கர்ம விசாரம் செய்தவர்களே ப்ரம்ம விசாரத்துக்கு அதிகாரிகளாக ஸூத்ரகாரருக்கு விவக்ஷிதம். ஆனாலும் வியூஷஜூாZயீதூ வெஜாநு என்கிறதினல் கர்ம விசாரமன்றியிலும், ப்ரம்ம விசாரம் செய்வது உசிதமே என்று நம் ஆசார்யன் ஸமர்த்தித்திருப்பதுபோல் தத்வடீகையில் அங்காத்யயந மன்றியில், ப்ரம்ம விசாரம் செய்துவரும் அதிகாரிகளையும், மீமாம்ஸா பாதுகையில் பூர்ணாத்யயநமன்றியில் ஏகதேசாத்யயநத்தால் ப்ரம்ம விசாரம் செய்யு மதிகாரிகளையும் நிரூபித்து அப்யுபகமம் செய்திருப்பதாலும் சூவதூதம வா தூயூஜஊாதூாயூயநம இத்யாதி கண்டோக்தியாலும் இக் காலத்தில் சில மகான்கள் ஸ்வசாகையை பூர்ணமாக அத்யயநம் செய்தும், சிலர் அதிலும் ஏகதேசாத்யயநம் செய்தும் ப்ரம்ம விசாரத்துக்கு உபயோகியான சாகாந்தரத்திலுள்ள பாகங்களை மட்டும் அத்யயநம் செய்து விசாரம் செய்துவருவதும் சாஸ்த்ராநுமதமே என்பதை ப்ரம்மவிசாராதிகார நிர்ணயத்தில் ஸப்ரமாணமாக உபாதித்திருக்கிறேன். உவநிஷதூாதூாயூயநம அதிகாரி விசேஷத்திலும் அசாஸ்திரீயமாகில் ஏகசாகாத்யாயிகள் சாகாந்தரத்திலுள்ள பாகங்களை எடுபார்த்து விசாரிப்பது உசிதமா! ஒவ்வொன்றிலும் பூர்ணாத்யயநம்சக்யமா? உவநிஷதூாதூாயூயநாதிகளைக் கொண்டுதானே நிர்வஹிக்கவேண்டும்?

(5) ஷூாயூாய சப்தத்துக்கு கர்ம ப்ரம்ம பாகங்கள் இரண்டுமே அர்த்தம் என்பதில் யாதொரு விவாதமுமில்லை.

(6) வெஜாநயீதூ என்கிற வசநத்திலுள்ள வெஜம வா என்கிற பக்ஷத்தில் இரண்டு சாகைகள் அத்யயநம் விவக்ஷித மென்கிற பக்ஷத்தை விமர்சத்தில் நிரஸித்திருக்கிறேன்.

(7) பூர்ணமாகவோ ஏகதேசமோ ஸ்வசாகாத்யயநம் அத்யாவச்யக மாகையால் அங்கங்களான உபநயநம் உபாகர்மம் முதலியவை அவசியம் செய்யப்படவேண்டும்.

(8) ஸாவித்ரீ பதிதா வ்ராத்யா: என்று இவ்வாறாக வேதாத்யயந மன்றியிலும் உபநயநாதிகளின் ஆவச்யகதை சொல்லப்பட்டிருக்கிறது

(9) ச்ரௌதஸ்மார்த்த நித்யகர்மாநுஷ்டாநயோக்யதா ஸித்த்யர்த்தம் என்று ஸங்கல்பித்து யஜ்ஞோபவீததாரணஞ் செய்யப்படுகிறதே ஸோம யாகம் முதலிய ச்ரௌதகர்மங்களை அநுஷ்டியாதவருக்கு யஜ்ஞோபவீத தாரணம் ஆவச்யமா? என்கிற ஸந்தேஹத்துக்குள்ள பரிஹாரத்தையும் நினைத்து சமாதானம் அடையலாம்.

(10) 'ஸ்வாத்யாயோத்யேதவ்ய:' என்கிற ஸ்ம்ருதியை ஸ்ரீபாஷ்யகாராதிகள் கடாக்ஷித்து இருக்கிறார்கள்.

(11) ஸர்வாபேக்ஷாதிகரணத்தில் 'ச்ருதிஸ்ம்ருதி சோதிதேஷு கர்மஸ்வேகஸ்யாப்யேகஸ்ய சேத் அநநுஷ்டிதாநாமபி நிஷ்பலத்வம்' ச்ருதிஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டகர்மங்களில் ஒன்றை அநுஷ்டிக்கா விட்டாலும் மற்றவை அநுஷ்டித்தாலும் நிஷ்பலம் என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறாரே.

"ச்ரௌதே கர்மணி நோ சேத்ஸக்தோ ந ப்ராஹ்மணோ பவேத் : |
ஸ்மார்த்தகர்மண்யஸாமர்த்யாச் சக்த்யா ஸாரம் ஸமாசரேத் ||"

என்றுப்போலுள்ள வசநங்களை அவர் கடாக்ஷிக்காமலிக்கமுடியுமா? என்று கேட்பாருண்டோ?

(12) நித்யநைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பதற்காக கர்மபாகாத்யயநம் அவசியம் வேண்டும். அசக்தர் உபநயநம் முதல் அத்யயந காலம் வரையில் உபதேசத்தால் அநுஷ்ட்டித்து வருவது போல் அநுஷ்ட்டிக்கலாம். அது முக்யகல்பமன்று

(13) ஸம்பூர்ணமாக ஒரு சாகையை அத்யயநம் செய்தவரும் சாகாந்தரத்திலுள்ளவைகளை ஏடு பார்க்க 'ஷிவிதவாம்ஸ:' இத்யாதி நிஷேதமிருப்பதால் விதிவாக்ய மாத்ரத்தையாவது அத்யயநம் செய்ய வேண்டும். ஏகதேசாத்யயநபக்ஷத்திலும் இந்த ந்யாயம் துல்யம்.

(14) ஸ்வ சாகையைப் பூர்ணமாகவோ ஏகதேசமோ அத்யயநம் செய்யவேண்டியது அவச்யம் என்று வ்யாஸத்தில் பல விடங்களில் நான் நிரூபித்திருக்கிறபடியால் அபிவாதநவாக்யத்தை மாற்றவேண்டியதில்லை.



(15) அத்யயநாரம்பமில்லாமலிருக்கச் செய்தேயும் உபநீத மாத்ரனுக்கும் அபிவாதநவாக்யம் உண்டன்றோ? அப்படியே

"வேதாத்யயநஹீநோபி ப்ராஹ்மணோ ஜிதேந்த்ரிய: |
ஸ்வாசாரநிஷ்டோ விப்ரஸ்ஸ்யாத் ஸந்த்யாஜபபராயண: ||"

இத்யாதியிற் சொல்லப்பட்ட அதிகாரிக்கும் அபிவாதநம் கூடும். ஏகதேசாத்யயநத்தில் கைமுதிகந்யாயஸித்தம்.

(16) த்வாபரயுகாவஸாநத்தில் வ்யாஸர் சாகாவிபாகம் செய்தபடியால் அதற்கு முன் அபிவாதநவாக்யத்தை மாற்றியதாகக் கேள்வியுண்டோ?

(17) மீமாம்ஸகர் விதிர் விதாஹே க்ருத்ஸ்நப்ராப்த வேதத்ரயமேதேகைக சாகாத்யயநம் அவச்யம் என்றார்கள். அவர்களுக்கு அபிவாதநவாக்யமெப்படி? ஆகையால் குயுக்திவாதங்களைவிட்டு சாஸ்த்ரசரணியைப் பின் பற்றுவதே ஆஸ்திக்யமாகும்.

---

## கண்டாஸ்தவ: ||

[ஸ்ரீரங்கம் அர்ச்சகர் A. ரங்கசாமி பட்டர்]

ஸர்வேஶ்வரம் ஶ்ரீரங்கம் வந்தே ஸர்வாபீஷ்டப்ரதாயிநம் |
ப்ரபந்நா ரக்ஷகம் வந்தே ஶரண்யம் ஸ்வயம் ||

ஶ்ரீரங்கநாயகீநாதம் விஷ்ணும் ஸர்வேஶ்வரம் |
அபீஷ்டதம் வந்தே ஸம்ப்ரதாயம் ப்ரவர்த்தகம் ||

யஸ்ய கண்டாம் வாஸுதேவேந ஸாக்ஷாத்
ஜ்ஞாநம் போதம் ஸர்வஶக்திஸம்யுக்தம் |

வேதஸ்ய ஜ்ஞாநஸ்ய ப்ரவர்த்தகம் ஸர்வகாமதம்
தத்ஸ்வரூபம் ஸந்ததம் ப்ரபத்யே ||

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible]

[illegible]

பகவச்சாஸ்த்ரமாகிற ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் கண்டாப்ரபாவத்தை பகவானே அருளிச் செய்திருக்கிறார். அத்திருமணியின் நாதமே

“ ஆகமார்த்தம் து தேவாநாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் ।
குர்யாத் கண்டாரவம் தத்ர தேவதாஹ்வாந லாஞ்சநம் ॥

[illegible] ।
[illegible] ॥

என்ற பகவதாஜ்ஞைப்படி ஸமஸ்த தேவதைகளைத் தருவிப்பதற்காகவும் அவர்களின் ஸாந்நித்யத்திற்காகவும் பிசாச ரக்ஷஸ்ஸு முதலியதுகளை வெரட்டுவதற்காகவும் பகவத்ப்ரீதிகரமாயும் உள்ள ஓர் சிஹ்நம் என்று ஏற்படுகிறது. அதின் நாதமே அவ்வளவு மஹிமையுள்ளதெனில் அந்த நாதத்திற்கு ஆதாரமான அத்திருமணியாழ்வானின் ப்ரபாவம் எப்படிப்



பட்டதாயிருக்கும் என்பதை நாம் யோசிக்கத் தேவையில்லை. அதையும் அந்த பகவச்சாஸ்த்ரத்தைக்கொண்டே நிரூபிப்போம். அதற்காதாரம் என்னவெனில்.

(2) [illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

என்ற வசநப்படி கண்டையானது சப்த ப்ரஹ்மஸ்வரூபமென்றும், ஷாட்குண்யாத்மகமாயுள்ள பகவச்சக்தியென்றும், ஸதா ஸகல அக்ஷர ராசிகளும் அதை ஆச்ரயித்து நிற்கின்றனவென்றும் தேஜஸ்ஸினால் ப்ரகாசிக்கிறதென்றும் மோக்ஷாபேக்ஷிகள் அறியவேண்டுமென்று ஏற்படுகிறது.

(2) நிற்க, அந்த கண்டையில் நித்யவாஸம் செய்யும் தேவதைகள் யாரெனில்—

“ [illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

என்றபடி கண்டையானது காலவைசுவாநராதிகளான ஸகல தேவதைகளுக்கும், ஸகல தத்வங்களுக்கும், ஆதாரமாயுள்ளதென்றும் ஏற்படுவது

டன் மேலும் அத்திருமணியின் ஸ்வரூபமும் அதில் நித்யவாஸம் செய்யும் [illegible]யும் மேலே சொல்லப்படுகிறது. அதாவது—

(4) " [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।

என்றபடி அந்த கண்டையில் ஜகந்நாதாவான [illegible]யும் நித்யவாஸம் செய்கிறான்.

(5) நிற்க, பின்னும் அந்த கண்டையின் [illegible]மும் சப்தமும் எப்படிப்பட்டதெனில்

" [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥



[illegible] ।
[illegible] ॥

என்று கண்டையின் ஸ்வரூபமும் பகவானாலேயே சொல்லப்பட்டது. ஆகவே திருமணி என்பது எல்லாராலும் கொண்டாடப்பட வேண்டிய [illegible]வென்பது வ்யக்தமாயிற்று.

(6) இதுவும் தவிர

" [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।

இத்யாதி [illegible]களினாலேயே கண்டையானது ஸகல தத்வங்களும், ஸகல தேவதைகளும், ஸகல மந்த்ரங்களும் அடங்கிய [illegible]மான [illegible]மாயுள்ள ஓர் வஸ்து விசேஷமென்பதும் இந்த கண்டையை உபாஸிப்பதனாலேயே யாரும் எவ்விதமான [illegible]ங்களையும் போக்கி [illegible]மான ஸர்வ க்ஷேமங்களையும் அடையலாமென்பதும் வ்யக்தமாயிற்று.

(7) இப்படிப்பட்ட கண்டையானது

" [illegible] ।
[illegible] ॥ "

என்றபடி ஸகலமான [illegible]மன்னியில் [illegible]தமான [illegible]மாயுள்ள ஓர் வஸ்து விசேஷமாயிருக்கையிலேயே அதின் மஹிமை மேலே சொன்ன ப்ரகாரம் அளவிடமுடியாததா யிருக்க அப்படிப்பட்ட கண்டையே வடிவெடுத்து உலகத்தில் வந்து அவதரித்தது என்றால் அதின் மஹிமையை நாம் என்னவென்று சொல்வது.

"யஜ்ஞத்ராணாய யோ ஹி ஜஜ்ஞே ஸ ஜயது ஹயவதனோ விஷ்ணுரவதாரஶ்ச" என்றபடி உலகத்தை யஜ்ஞத்தினால் காப்பாற்றவே வந்து ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகிறதென்பதை யார் தான் ஆக்ஷேபிக்கமுடியும். அப்படி அவதரித்தது நம் போலவர்களுடைய அத்ருஷ்டமென்றே சொல்லவேணும்.

8. இப்படி அவதரித்தெழுந்தருளியிருந்த காலம் நிற்க பின்னுள்ளோரான நாமனைவரும் உஜ்ஜீவிக்க வேணுமென்றே திருவுள்ளம் பற்றி ஸகல ஸ்வரூபமாயும் நமக்கு தைவ ப்ரதிஸேவை ஸாதித்தருளுகிறார். இப்படிப்பட்ட ஹயக்ரீவர்கள், ஆசார்யர்கள், இவர்களை ஆலயங்களில் ப்ரதிஷ்டிப்பிக்கவேண்டியது அவசியமென்றும், அப்படிக்கில்லாத ஸந்நிதிகளில் தீர்த்தஸ்வீகாரம், செய்யக்கூடாதென்றும், இப்படிப்பட்ட உத்ஸவங்களினால் தான் ஆலயங்களுக்கு கௌரவமென்றும், ஹயவதனஸூத்ரம் கூறுகிறதுடன் அப்படிப்பட்ட உத்ஸவங்களை ப்ரதிஷ்டிப்பது ஸர்வார்த்தமென்றும், அதாவது மற்ற எல்லா, உலகத்தாருக்குமாகவென்றும், அவர்களுக்கு உத்ஸவம் செய்விப்பது நம்முடைய க்ஷேமத்திற்காகவென்றும், கூறப்பட்டிருக்கிறது. இது விஷயங்களையெல்லாம் விசதப்படுத்துவதானால் விரியுமென்றஞ்சி பின்னால் அவசியம் நேருங்கால் விரித்துரைக்கலாமென்றெண்ணி இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

நிற்க, முக்கியமான மற்றோர் விஷயம், யாதெனில். மேலே சொன்ன ஸம்ப்ரோக்ஷணம் யாவும் ப்ரதிஷ்டிதமான ஸந்நிதிக்கேயாம். அப்ரதிஷ்டிதமான ஸம்ப்ரோக்ஷணத்தினால் துர்பிக்ஷம் முதலியதுகள் வஹிக்கும் என்பதற்குரிய ப்ரமாணம் அடியில் வருமாறு. "அஸம்ஸ்க்ருதாயாஞ்சைவ துர்பிக்ஷாதி ஸம்பவேத் ஜகத்" என்றிருக்கிறது. தத்காலம் ஸ்ரீரங்கம் முதலிய ஸந்நிதிகளில் அடிக்கப்பட்டுவரும் மணிகள் யாவும் ப்ரதிஷ்டை பண்ணப்படாதவைகளேயாம். ஆகவே ஊருக்கு நேரும் அசௌகர்யங்களுக்கெல்லாம் இம்மாதிரியான கார்யங்களே ஆதாரம் என்பதையும்

"அப்ரதிஷ்ட்யாய ப்ரதிஷ்ட்யந்தே ப்ரதிஷ்ட்யாஞ்சாவ்யவஸ்திதா: ।
தத்ர ப்ரயாதி நித்யம் ஸ்யாத் துர்பிக்ஷம் மரணம் பயம் ॥"

என்ற வசனத்தையும் "யதா ராஜா ததா ப்ரஜா:" என்ற நிலைமையில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்பதை உலகத்தார் யாரும் அறிய வேண்டியது அவசியமே. ஆகவே உலக க்ஷேமத்திற்காக ஏற்பட்ட ஸர்வார்த்தமான ஆலயங்களில் கூடியவரையில் அசாஸ்த்ரீய கார்யங்களை விலக்கினால் உலகம் க்ஷேமமாயிருக்கும் என்பதை இதனால் தெரிவிக்கலானோம்.

ப்ரதிஷ்டா ஸர்வகார்யாணாம் ஆசார்யா: ஸமுதாஹ்ருதா: ।
யாஜ்ஞவல்க்யாதயோ ஹ்யேதே ஸர்வே தே ஸம்மதா: ॥

# அத்தி வரதன் வைபவம்

[ஸ்ரீ உ. வே. வித்வான் அய்யா கிருஷ்ண தாதாசார்யஸ்வாமி]

महिताभ्यां महस्सङ्घैः पुनानाभ्यामिमं जनम् ।
श्रीमद्भ्यां कृष्णताताचार्य पदाब्जाभ्यां नमो नमः ॥
यस्य प्रसादकलया बधिरः शृणोति पङ्गुः प्रधावति जवेन न च वक्तिमूकः ।
अन्धः प्रपश्यति सुतं लभते च वन्ध्या तं देव मेव वरदं शरणं गतोऽस्मि ॥

என்று பெரிய முதலியாரென்று நம் ஸம்ப்ரதாயத்திலே கொண்டாடப்படும் ஆளவந்தார் இராமானுசனை இத்தர்சநத்திற்கு ப்ரவர்த்தகராக்க வேணும் என்று ப்ரபத்தி பண்ணியருளின ச்லோகம் இதுவாயிருக்கும். இது தான்பேரருளாளன் விஷயமாய் நம்மாசார்ய கோஷ்டியில் முதல் அவதரித்த ச்லோகமென்பர். இந்த ச்லோகம் இப்போது அநந்தஸரஸ்ஸிலிருந்து மேலே எழுந்தருளி மண்டலாராதநம் கண்டருளும் அத்திவரதர் விஷயமாகவே அவதரித்திருக்கலாம் என்று ஊஹிக்க இடமுண்டு. நான்முகன் செய்த அச்வமேத யாகத்தில் ஆவிர்பவித்த பேரருளாளன் திவ்ய சௌந்தர்யத்துடன் ஸேவை சாதிக்க, நான்முகன் இப்பெருமாளை விபவாவதாரமாகவே எழுந்தருளி இருக்கச்செய்து பூர்ணாநுபவம் செய்துகொண்டு தன்னுடைய ஜீவிதகாலம் முழுவதையும் கழிக்கவேணும் என்று அபேக்ஷித்தார். அப்போது பெருமாள் ப்ரக்ருதி மண்டலத்தில் இக்கார்யம் கைகூடாதாகையால், தன்னை அர்ச்சாரூபத்தில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ பாஞ்சராத்திரப்ரக்ரியையாலே ஆராதித்து மநோரதப்படி உத்ஸவாதிகளையும் பண்ணி அநுபவிக்கலாம் என்று நியமித்தார். அப்படியே ப்ருமனும் வெகுகாலம் செய்து, இவ்வேழுமலை நாயகனிடம் விடைபெற்று விண்ணுலகம் சென்றார். இப்படி நான்முகன் திருப்ரதிஷ்டை செய்த தினமே- சித்திரையில் அத்தநக்ஷத்திரம் அவதாரோத்ஸவ தினமாகக் கொண்டாடப்படுகிறது என்றது அனைவருக்கும் அறிந்த விஷயம். அப்போது பிருமதேவன்தான் ஏரியருளப்பண்ணின திருமேனி தாருமயமானது என்று ஸ்ரீ காஞ்சி மாகாத்ம்ய புராணத்தில் தெளிவாய் காணப்படுகிறது. ஸ்ரீ தேசிகனும் இந்த திருமேனியை அநுஸந்திக்கும்போது "स्वपयतपरिकर्मवारवाणम्" என்று காப்பிடு திருமேனி அன்று என்றார். மூவ பேரம், திருமஞ்சனத்திருமேனி அதாவது சிலாமயம். இல்லாமல் போனால் அத்திருமேனியில் காப்பிடு திருமேனி சாத்துவதில்லை என்கிற அநுஷ்டானம் இருக்கிறது. ஸ்ரீ பாஞ்சராத்திர வைகாநஸாகமங்களில்

சுதை, சிலை, தாரு, இவைகளில் ஒன்றை மூல பேரத்திற்கு உபாதாநத்ரவ்யமாக சொல்லப்பட்டிருக்கிறது. கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று ப்ரசித்தமான இம் மூன்று திவ்யதேசங்களை முறையே மூல பேர வடிவமாக ஸேவிக்கப்படுகின்றன. கோயிலில் சுதையும் திருமலையில் சிலையும் ப்ரத்யக்ஷமாய் காணப்படும்போது பேரருளாளன் திருமேனி தாருமயமாக வேண்டியிருக்க திருமஞ்சனத்திருமேனியாய் காணப்படுவதற்கு காரணமில்லை. இங்கு அநாதிகாலமாய் தாருமயமான திருமேனியே இருந்தது என்று ஊஹிக்க இடமுண்டு.

அடியேனுக்கு இவ்விஷயத்தில், ப்ரும்மாண்ட புராணாந்தர்கதமான ஸ்ரீ காஞ்சீ மாஹாத்ம்ய பாராயணம் பண்ணும்போது ஸந்தேகம் உண்டாயிற்று. அப்போது அடியேனுக்கு பரமோத்தேச்ய பூதராய் எங்கள் வம்சத்தில் உதித்தவராய், எண்பது பிராயம் நிறைந்தவருமான தண்டரி தாதாசார்யஸ்வாமியிடம் விண்ணப்பம் செய்தேன். அவரும் பரம கிருபையோடே அடியேனை கையைப் பிடித்தழைத்துக் கொண்டு பேரருளாளன் துவஜஸ்தம்பத்தின் கீழ் பக்கம் இருக்கும் உதயபாநு மண்டபத்தில் ஒரு சிலாசாஸநம் தெலுங்கு லிபியிலுள்ளதைக் காட்டி வாசிக்கச் சொன்ன போது அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"சாலீவாஹந சகாப்தம் 1703 ப்லவநாம ஸம்வத்ஸரம் ஆஷாட சுத்த தசமி சனிவாரம் அநந்த ஸரஸ்ஸின் நீரிரைத்தார்கள். அப்போது நீராழி மண்டபத்திற்கு தென்மேற்குக் கம்பத்திற்கு சரியாக அத்திகிரி வரதர் சயனித்திருக்கிறார்- என்று. இந்த ஈச்வர வருஷம் சாலீவாஹநம் 1860 ஆகையால் சிலாசாஸநம் செய்து 157 வருஷங்கள் ஆகின்றன. இத்தால் பெருமாள் தீர்த்தத்தில் எழுந்தருளின காலம் இன்னதென்று அறியக் கூடவில்லை. அதற்கு அந்த ஸ்வாமி சரித்திரம் ஒன்றை அருளிச் செய்தார். அதாகிறது—ஸ்ரீ தாத தேசிகன் காலத்திற்குப் பின்பு அவர் திருக்குமாரனை திருமலை தாததேசிகனும் வேங்கடவரத தாததேசிகனுமாய் பேரருளாளன் ஸ்ரீ கார்யம் நிர்வஹித்துக்கொண்டு போகும் காலத்திலே துருக்கரின் உபத்திரவத்தாலே பேரருளாளன் ஸன்னிதிக்கு என்ன வருமோதோவென்று பயந்து ஒருவருக்கும் தெரியாமல் பெரிய பெருமாளை திருவநந்த ஸரஸ்ஸிலே ஜலாதி வாஸப்படுத்தி, மற்ற திரு மூர்த்திகளையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, பெருமாளுக்குப் பாங்கான இடம் ஏதென்று தேடிக்கொண்டு, காடு பாய்ந்துபோகும்போது உடையார் பாளையம் ஜமீனுக்கருகே சென்று, இது மிக்க மஹாரண்யமாயிருக்கையால் இங்கு வருவார் யாருமில்லை என்று எண்ணி, அந்தக் காட்டிலேதானே கொஞ்சகாலம் திருவாராதநம் நடத்திக்கொண்டு மெல்லமெல்ல அத்தேசத்துக் கடவரை அநுவர்த்தித்து இந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, பெருமாளுக்குத் திருவாராதநங்கள் துருக்கர் உபத்திரவம் வாராதபடி நடத்தி வைக்க வேணுமென்ற பேக்ஷிக்க அவரும் இவர் வேண்டுகைக் கிசைந்து, தன்னுடைய திறமையை இவர்களுக்குக் காட்டி ப்ரத்யயம் செய்து வைத்து பெருமாளை தன்ஸ்வாதீநப் படுத்திக்கொண்டு, ஊரைச் சுற்றிக் காவலிட்டு, துருக்கர் ஒருவரும் ப்ரவேசிக்க வரிதாம்படி செய்து, இவர்கள் நியமநப்படி திருவாராதநங்களை நடத்தி வைத்து வந்தார், அப்போது இவர் ஸந்ததியில் ஒருத்தரும், தேனை மயிலூர் ஸ்ரீ பாஞ்சராத்திரம் பட்டரில் ஒருவருமாக அவ்விடத்திலேயே இருந்து திருவாராதநங்களை செய்து வந்தார்கள். இப்படியே 40 ஸம்வத்ஸரங்களுக்கு மேல் நடந்தது! அப்போது துருக்கருடைய ராஜ்யம் மேன்மேல் வ்ருத்தியாகி வந்தது,

துருக்கரும் காஞ்சிபுரம் வந்து சுவர்ணமயமாயிருந்த ஸ்ரீ புண்ய கோடி விமாநத்தையும், கல்யாண கோடி விமாநகவசங்களையும் அபஹரித்து, மண்டபப்ராகார கோபுரங்களை சின்ன பின்னங்களாக்கி, திருப்புளியடியையும், பெரிய கச்சியிலுள்ள, பேரருளாளன் கங்கை கொண்டான் மண்டபத்தையும், கைவசப்படுத்திக் கொண்டார்கள்.

வெகு காலத்திற்குப் பின் இந்த உபத்திரவம் கொஞ்சம் அடங்கியது. அப்போது பெரிய பெருமாளை சேமித்துவைத்த பெரியோர்களும் தன்னடிச்சோதியை அலங்கரித்தார்கள், வெகு காலமாய் விட்டபடியால் இச்செய்தியறிந்தார் ஒருவரும் இல்லாதேயாயிற்று. நாற்பது வருஷங்களுக்கு அதிகம் இந்த திவ்யதேசம், பெருமாள் இல்லாதே பாழாய்க்கிடந்தது அப்போது வேங்கடவரததாத தேசிகன் திருக்குமாரரிலொருவர் திருமலை தாதாசார்யர் என்பவர் வாசாலகராயும் ப்ரமுகராயும், இருந்தார். அவருக்குப் பெருமாளை எழுந்தருளிப்பண்ணி முன்போல் திருவாராதநங்களை நடத்த வேணுமென்று விருப்பமுண்டாயிற்று. எவ்வளவு ப்ரயத்நம் செய்தும் பெரிய பெருமாள் எழுந்தருளி இருக்கும் இடம் தெரியவில்லை. அந்த ஜமீன்தாரனும் எவ்வளவு அநுவர்த்தித்த போதிலும் பெருமாளைத் திருப்பிக் கொடுக்க ஸம்மதிக்கவில்லை. அந்த ஸ்வாமியும் வேறுகதியில்லாதவராய் வேறு திருக்கோலங்கள் உகந்தருளப் பண்ணுவதாய் உத்யோகித்து, இது புதிய ப்ரதிஷ்டையாலே பெரிய பெருமாள் திருமேனி வேறு த்ரவ்யத்திலாவாமென்று கருதி, சீவரம் அக்கிரஹாரத்தார் உதவியைக் கொண்டு அவ்வூர் மலை உச்சியிலேயே சிலையாலே பெரிய பெருமாளையும் நாச்சிமாரையும் உகந்தருளப் பண்ணிவைத்தார். அப்படியே உத்ஸவர் திருமேனியையும் உகந்தருளப்பண்ணினர்.

அப்போது, லாலா தொண்டரமல்லன் என்ற ஜமீன்தார் பலாட்யனும், துருக்கருக்கு சேனாதிபதியாயிருந்து ஸ்ரீவைஷ்ண ஸம்ப்ரதாயத்தில் நோக்கமுள்ளவனும், திருப்பதிக்கருகில் வசித்துக் கொண்டு, பெரிய ஜீயரிடத்தில் நல்வார்த்தை கேட்டு வந்தான். திருமலை தாதாசார்யரும் இந்த விருத்தாந்த மறிந்து அந்த பெரிய ஜீயரிடம் சென்று அநுவர்த்தித்து தான் வந்த கார்யத்தை தெரிவிக்க, அவரும் உகந்து, இதொரு பெரிய கைங்கர்யமென்று எண்ணி, தொண்டரமல்லனை வரவழைத்து, எப்படியாவது இவர் திருவுள்ளத்தை நிறைவேற்ற வேணும் என்று நிர்பந்திக்க அவனுமிசைந்து ஹைதராபாத் நபாபு பரமானா என்று கல்பித்து, தன் பிருதிகளோடு உடையார் பாளையம் சென்று, ஜமீன்தாருக்குக் காட்டி பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொடுக்கும்படி கேழ்க்க, அவனுமிசைந்து கொடுக்க, நடுவே ஆர்க்காடு நபாபு இச்செய்தியறிந்து, இவர்களை ஹிம்ஸிப்பதாக நிச்சயித்து, சைன்யங்களை அங்கங்கே நிறுத்தின போது, இவர்கள் ஒன்றும் செய்யத் தோன்றாமல் ஒளித்திருந்து, ஒரு காலத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து, நாம் எல்லாரும் தனித்தனியே இருந்து 'அடோ பய்யா' என்று சப்தம் சொன்னால் ஒத்தைத் திருச்சின்னம் ஊதவேண்டியது, உடனே எல்லாரும் ஒன்று சேரவேண்டியது, முன்னே ஒரு நெருப்புச் சட்டியும் பின்னே அழுகையுமாய் நடுவில் சவம் போலே பெருமாளை ஆசந்தியில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு காடு தாண்டவேணும் இப்படி வந்தால்தான் நடுவில் துருக்கர் தொந்தரவு இல்லாமல் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போகலாம் என்றும் நிச்சயித்து, ஸங்கேதப்படியே தொண்டரமல்ல ஜமீன்தார் ஸஹாயத்தால் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்து திருவத்திமாமலையிலே சேர்த்தார்கள். இப்படி எழுந்தருளப்பண்ணின காலம், சாலீவாஹநசகாப்த மானத்தால் இத்தனாவது வருஷம் என்று தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு விரோதி நாம ஸம்வத்ஸரம் பால்கு நமாஸம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் சனிவாரம் அமாவாஸ்யைதிதி விருஷபலக்னம் என்று சிலாசாஸநத்தால் தெரிகிறது. இந்த சிலாசாஸநம் பெருந்தே வித்தாயார் ஸன்னதி வடவண்டைத் திருமுத்தத்திலிருக்கும் குத்துக்கல்லில் தெலுங்கு லிபியில் இருக்கிறது இப்போதும் எல்லாரும் பார்க்கலாம்.

மேற் சொன்ன ஐதிஹ்யத்திற்கு அறிகுறியாக நாளைக்கும் இந்த ஸந்நிதியில் பங்குனி உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் அந்த ஜமீனிலிருந்து பிரதிவருஷமும் நூறு ரூபாய்களுக்கு மேல் செலவு செய்து விசேஷமாக ஒரு உத்ஸவத்தை நடத்தி வருகிறார்கள். அந்த திருமலை தாதாசார்யர் உத்ஸவத்திருமேனி கிடைத்து விட்டபடியால் தாமுகந்தருளப்பண்ணின விக்ரஹத்தை ஸந்நிதியிலேயே சேமப்படுத்தி, திருமஞ்சனத் திருமே-



னியான மூல பேரத்தை, தேனம்பிலூர் பட்டரைக் கொண்டு ஸ்ரீ பாஞ்சராத்திர சாஸ்திரப்படிக்கு திருவாராதநாதிகளை நடத்தி வந்தார். மூலபேரத்திற்கு நாச்சிமார்கள் முன்னிருந்ததில்லை என்று தெரிந்து கொண்டு, நாச்சிமார்களை சேர்த்து மலையில்தானே நிறுத்திவைத்தார். ஆகையால் இப்போது திருவத்திமா மலையில் எழுந்தருளி இருக்கும் த்ருவபேரம் நவீநம். அதாவது 157 வருஷங்களுக்கு முன் ப்லவவருஷத்திற்கு முந்தின விரோதி வருஷத்தில் எழுந்தருளினவர் என்று கொள்ளலாம். அதற்கு முன்னெழுந்தருளி இருந்த திருமேனி இப்போது அனந்தஸரஸ்ஸிலிருந்து வெளியேறி ஸேவைஸாதிக்கும் தாருமயமான திருமேனியே என்பதில் ஸம்சயம் இல்லை. இப்படி இருக்க சிலர், இந்த ப்ராசீந பெருமாளுக்கு நடக்கும் மஹோத்ஸவத்தில் அசூயை கொண்டு, இத்திருமேனியைப் பற்றி வாயால் அநுவதிப்பதற்குக் கூடத்தகாத சிவ தூஷண வார்த்தைகளைச் சொல்லி சென்னை முதலான விடங்களில் உபந்யஸிப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவைகளை ப்ராமாணிகர்கள் செவியுத்தக் கேழ்க்கலாகாது. இந்த திருமேனியில் ஒருவிதமான அவத்யமும் இல்லை. அப்படி அங்கபங்கம் நேரிட்டாலும் அதை ஸந்தாநம் செய்து ஆராதிக்க வேணுமே ஒழிய அந்த திருமேனியை உபேக்ஷிக்கக் கூடாதென்று ஸ்ரீபாஞ்சராத்திராதி ஆகமங்கள் விதிக்கின்றன. ஸந்தாநம் செய்யக்கூடாத நிலைமையில் பங்கம் ஏற்பட்டால் ஒருவருக்கும் தெரியவொட்டாமல் மறைத்து விடவேணும். என்று சாஸ்திரங்களில் விதி. அப்படி மறைத்ததை சிலாசாஸநம் இட்டிருப்பது தகாது.

ஆகையால் இப்போது ஆச்சர்யமான திவ்யசௌந்தர்யத்தோடு சேவை ஸாதிக்கும் தாருமயமான பெருமாள் திருமேனியில் வேறுவிதமான அதிசங்கை செய்வதற்கு இடமில்லை. ஆழ்வார்களும், ஸ்ரீமன் நாதமுனிகளும் இராமாநுசன், ஸ்ரீ தேசிகன் உள்ளிட்ட மற்ற ஆசார்யர்கள் அனைவரும் மங்களாசாஸநம் செய்து அநுபவித்த திருமேனிதான் தீர்த்தத்தில் எழுந்தருளி இருப்பதால் திருவநந்தாழ்வானே நித்யாராதநம் செய்தருளுவதாக பெரியோர்களின் கொள்கை, இதைப்பற்றி தூஷிப்பது மஹாபசாரமாகும்.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீயஜ்ஞ வராஹ பரப்ரஹ்மணே நம:

# யாகபசு ஹிம்ஸையைப்பற்றி ஆசார்யர்களின் ஸித்தாந்தம்

[அக்னிஹோத்ரம் ஸ்ரீராமாநுஜ தாதாசாரியன்]

ஜ்யோதிஷ்டோமாதி வைதிக யாகங்கள் நித்யங்களென்று நம் பூர்வாசார்யர்கள் நிர்ணயித்திருப்பதை முன் வியாசத்தில் வெளியிட்டோம். மேற்படி யாகங்களில் ஆவச்யமாக விதிக்கப்பட்டுள்ள பசு ஹிம்ஸையானது, அஹிம்ஸையே என்றும், பசுவுக்கு ஹிததமமென்றும், ரக்ஷணமென்றும் நம் ஸ்ரீ பாஷ்யகார, ஸ்ரீ தேசிகாதிகளுடைய உறுதியான ஸித்தாந்தத்தை அவர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டே இந்த வியாசத்தில் நிரூபிக்க விரும்புகிறோம்.

நமது தீபிகையில் சென்ற தை மாஸத்திலும், மூன்று வருஷங்களுக்கு முன்பும் ஒரு ஸ்வாமியால் யாக பசு ஹிம்ஸா விஷயமாக ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் பெயரால் பரப்பப் பட்டுள்ள துரபிப்பிராயங்களை நிவிர்த்தி செய்யவே இந்த முயற்சியில் நாம் இறங்கினோமே யல்லது வேறு காரணமில்லை. இவ் விஷயமாக நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமென்னவென்பதை வெளியிடுவதே நமது முக்ய நோக்கமாகும். தர்மா தர்மங்களை நமக்கு வ்யவஸ்தை செய்து கொடுத்த நமது உத்தம பிரமாணமாகிய வேதங்கள், யாகங்களில் பசுவை ஓர் முக்ய ஹவிஸ்ஸாக விதித்து விட்டன. (பசு என்பது யாகத்தில் உபயோகிக்கப்படும் பிராணிகளுக்குப் பொதுவான பெயர்).

இது பரிசுத்தமான ஓர் உத்தம தர்மமென்றும் அந்த வேதங்கள் உத்கோஷிக்கின்றன. இப்போது நம்மால் அத்யயனம் செய்யப்படும் ப்ரத்யக்ஷ தைத்திரீயாதி ஸகல வேதங்களிலும் யாக பசு விசஸனமும், அதை ஹோமம் செய்யவேண்டிய விதமும், அதற்கான மந்த்ரங்களும் ப்ரயோகங்களும் விஸ்தாரமாகக் காணப்படுகின்றன. நித்ய, நைமித்திக, காம்ய ரூபங்களான கணக்கற்ற பசு யாகங்கள் வேதம் முழுவதும் நிறைந்திருக்கின்றன. இந்த பசு ஹிம்ஸா விதாயக வேதங்களையே நாம் ப்ராஹ்மண்ய பரிபூர்த்திக்காக அத்யயனம் செய்யவேண்டியது நித்யமாயிருப்பதுடன், பரிசுத்தி



ரூபமாயும், ப்ராயச்சித்த ரூபமாகவும் விதிக்கப்பட்டுள்ள வேத பாராயணாதிகளிலும் ஓதி வருகிறோம்.

பசு ஹிம்ஸா விதாயக வேதங்களுக்கு இவ்வளவு மஹிமை வைதிக மதஸ்தர்களால் வைக்கப்பட்டிருப்பதிலிருந்து யாக பசு ஹிம்ஸா தர்மத்தின் பாவநதமத்வம் வெளியாகிற தல்லவா ?

அந்தந்த வேதங்களுக்கு ஸூத்ரம் செய்துள்ள, ஆபஸ்தம்ப, போதாயன; காத்யாயன, ஸத்யாஷாட, பாரத்வாஜ, ஆச்வலாயன த்ராஹ்யாயண, வைகாநஸாதி அநேக மஹர்ஷிகள் தங்களுடைய ச்ரௌத கல்பஸூத்ரங்களிலும் யாக விதிகளையும், யாக பசு விசஸனம், ஆலம்பம், ஸம்ஜ்ஞபநம் என்பவையாக பசுஹிம்ஸைக்கு வைதிகமான பெயர். அதை ஹோமம் செய்யும் விதம் முதலியவைகளையும் பற்றி விஸ்தாரமாக ப்ரயோகம் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆபஸ்தம்பாதி மஹர்ஷிகள் நமக்கு சாகாஸூத்ரகாரர்களாக அமைந்து நமது நித்ய நைமித்திக வர்ணாச்ரம தர்மங்களை வ்யவஸ்தை செய்து கொடுக்கவே கல்பஸூத்ரங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த ச்ரௌதகல்பஸூத்ரங்கள் சுருதிகளைப் போல் நமக்கு உத்தம ப்ரமாணங்களென்பதும் வைதிகமத ஸித்தாந்தமாயிருக்கிறது. பூர்வமீமாம்ஸையிலும் அநேக அதிகரணங்களில்யாக பசு விஷயமாக அநேக அவாந்தர விசார நிர்ணயாதிகள் செய்யப்படுவதையும் காண்கிறோம். அதிகமேன் ? நமது தேசத்திய புராணாதிகளிலும், காவ்யங்களிலும் பொது ஜந வ்யவஹாராதிகளிலும்கூட யாக பசுவைப்பற்றிய ப்ரஸ்தாபங்கள் விசேஷமாகக் காணப்படுவதைக்கொண்டு இந்த தர்மமானது பாரத தேசத்தில் எவ்வளவு ரூடமூலமாக நிற்கிறதென்பது நன்கு விளங்கும்.

## அவச்யஹிம்ஸை அவர்ஜனீயம்.

வைதிகமதத்தில் அஹிம்ஸா தர்மமானது எவ்வளவு முக்யமோ, ஆவ்ச்யகமோ, அதுபோல் அவச்யஹிம்ஸையும் ஓர் முக்யதர்மமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை வைதஹிம்ஸை யென்று நம் சாஸ்திரங்களும் ஆசார்யர்களும் பலவிடங்களில் சொல்லுவதைக் காணலாம். யுத்தத்தில் சத்ரு வதமும், யாகங்களில் பசு ஹிம்ஸையும் வைதிகமதத்தில் தர்மமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு ஹிம்ஸைகளும் அவர்ஜனீய அவச்யஹிம்ஸைகளாக நம் ஆசார்யர்கள் பலவிடங்களில் பேசுவதை மேலே நாம் உதாஹரிக்கப் போகும் ஸ்ரீ ஸூக்திகளில் காணலாம். கீதாசாஸ்திரத்தின் அவதாரமே அவச்யஹிம்ஸையானது தர்மமென்றும், அது அவர்ஜனீய மென்பதையும் விளக்குவதற்காகத்தான் அஸ்தான காருண்யத்தால் தர்மாதர்ம வழி தவறி, யுத்த ஹிம்ஸா தர்

மத்தைக் கைவிட முயன்ற பார்த்தனுக்கு, யுத்தஹிம்ஸை பெரிய தர்மமென்றும், ஸ்வதர்மமென்றும், செய்யாவிட்டால் ப்ரத்யவாயகரமென்றும் 2வது அத்யாயத்தில் பகவான் உபதேசிப்பதைப் பார்க்கிறோம். கீதோபதேசத்தின் முடிவிலும் அர்ஜுனனுக்கு மோஹம் நீங்கி "கரிஷ்யே வசநம் தவ" என்று உறுதி காட்டி, முதலில் எந்த ஆசார்யாதிகளையும் பந்துமித்ரர்களையும் கொல்ல அஞ்சினனோ அவர்களையே கொல்லுவதற்குக் கடைசியில் அவன் துணிவு கொண்டதிலிருந்தும் அவச்யஹிம்ஸாதர்மத்தின் அவர்ஜனீயத்வம் தெளிவாகிறது.

ஆதலால் தான் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீதேசிகனும் யுத்தஹிம்ஸையையும், யாகஹிம்ஸையையும் ஒன்றுக்கொன்று உதாஹரணமாகப் பல விடங்களில் எடுத்துக் காட்டுகிறார்கள். स्वधर्ममपि चावेक्ष्य என்ற கீதாச்லோக பாஷ்யத்தில் பாஷ்யகாரர் :—

"अपि चेदं प्रारब्धं युद्धं प्राणिमारणमपि अग्नीषोमीयादिवत् स्वधर्ममवेक्ष्य न विकम्पितुमर्हसि"

என்ற வாக்யத்தில் யுத்தஹிம்ஸாதர்மத்திற்கு, யாக பசுஹிம்ஸா தர்மத்தை உதாஹரணமாகக் காட்டியுள்ளதைக் கவனிக்கவும். அந்த பாஷ்யத்திலேயே மேல் பங்க்திகளிலும் இது விசதம். "[illegible]" என்ற சுலோக தாத்பர்ய சந்த்ரிகையிலும் :—

"[illegible]"

என்பதால் யாக பசுஹிம்ஸா தர்மத்தை உதாஹரணமாகக் காட்டி யுத்தஹிம்ஸா தர்மத்தை ஸமர்த்திப்பதைக் காணலாம். இந்த இரண்டும் அவர்ஜனீயமென்பதும் இங்கு ஸ்பஷ்டமாகிறது. பரமத பங்கம் என்ற ரஹஸ்யத்திலும் ஸ்ரீதேசிகன் :—

"தர்மாதர்ம வ்யவஸ்தாபகமான சாஸ்திரத்தாலே
அக்னீஷோமீயாதி ஹிம்ஸைகளிலும், யுத்தத்
தில் வதார்ஹன் விஷயத்திலும் பாபத் வசங்கை
பண்ண வொண்ணாது"

என்ற ஸ்ரீ ஸூக்திகளால் யாக பசுஹிம்ஸை, யுத்தஹிம்ஸை இரண்டையும் தர்மமாகக் குறிப்பிடுகிறார். ஆகையால் யாக பசுஹிம்ஸையும், யுத்தஹிம்ஸையும் வைதிக மதத்தில் சிறந்த தர்மமென்பதும், அது அவர்ஜனீயமென்பதும் ஆசார்யர்களின் திருவுள்ளமாயிருக்கிறது ஸ்பஷ்டமே. இந்த



நவீந நாகரீக காலத்தில்கூட எல்லா ஜாதிகளும், எல்லா மதங்களும் யுத்தஹிம்ஸையைச் சிறந்த தர்மமாகக் கொண்டாடுவதை நாம் பார்த்து வருகிறோம்.

ஆதலால் வைதிகமதத்தை மாத்திரம் இதில் பழிக்க எவரும் முன் வர முடியாது.

இந்த யாக பசுஹிம்ஸையானது, அந்த பசுவுக்கு உன்னத கதியைக் கொடுப்பதாயும், ஸ்வர்க்காதி லோகங்களையும், ஸ்வர்ணமயமான திவ்ய சரீரத்தையும் கொடுப்பதாயும் நமது வேதங்கள் பல விடங்களில் உத்கோஷம் செய்கின்றன.

நம் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீபாஷ்ய கீதா பாஷ்யாதிகளில்

"हिरण्यशरीर ऊर्ध्वः स्वर्गं लोकमेति"

என்றும்

"न वा उ वेतन्म्रियसे न रिष्यसि देवाँ इदेषि पथिभिः सुगेभिः ।
यत्र यन्ति सुकृतो नापि दुष्कृतः तत्र त्वा देवः सविता दधातु ॥"

என்றும் சுருதிகளை உதாஹரித்து யாக பசுவுக்கு உந்நத கதி உண்டாவதைக் காட்டினர்.

இந்த மாதிரியான பல சுருதிகளை அனுஸரித்து ஸ்மிருதிகளும் யாக பசுஹிம்ஸையை ஆவச்யக தர்மமாகவும், அதனால் அந்த பசுவுக்கு உத்க்ருஷ்ட கதி ஏற்படுவதாயும் விவரித்தன. மனுஸ்மிருதியில் 5வது அத்யாயத்தில்

"यज्ञार्थं ब्राह्मणैर्वध्याः प्रशस्ता मृगपक्षिणः"

"यज्ञार्थं पशवः सृष्टाः स्वयमेव स्वयम्भुवा ।
यज्ञोऽस्य भूत्यै सर्वस्य तस्माद्यज्ञे वधोऽवधः ॥
ओषध्यः पशवो वृक्षास्तिर्यञ्चः पक्षिणस्तथा ।
यज्ञार्थं निधनं प्राप्ताः प्राप्नुवन्त्युत्सृतीः पुनः ॥
या वेदविहिता हिंसा नियतास्मिंश्चराचरे ।
अहिंसामेव तां विद्याद्वेदाद्धर्मो हि निर्बभौ ॥
एष्वर्थेषु पशून्हिंसन्वेदतत्त्वार्थविद्द्विजः ।
आत्मानं च पशुं चैव गमयत्युत्तमां गतिम् ॥

(தொடரும்)

# உலகச் செய்திகள்

## அநுசோசநம்

ஸ்ரீ. உ. வே. தில்லிவியம்பூர் சக்கிரவர்த்தியாசாரியர் ஸமீபகாலத்தில் திருநாட்டுக்கு எழுந்தருளினதாகக் கேள்விப்பட்டு மிகவும் சோகாவிஷ்டர்களாய் இருக்கிறோம். இந்த ஸ்வாமி திருக்குடந்தையில் அம்மாசத்திரம் சேஷாசார்யஸ்வாமி ஸன்னிதியில் ஸாமாந்ய சாஸ்திரங்களை க்ரஹித்து திருக்குடந்தை பெரிய தெரு அழகிய சிங்கர் ஆஸ்தாநத்தில் எழுந்தருளி இருக்கும் போது அவ்விடத்தில் ஸ்ரீபாஷ்யாதிகளை காலக்ஷேபம் செய்தவர். பால்யம் முதற்கொண்டே தீக்ஷ்ணமான மேதையாலும், எப்போதும் சாஸ்திரபரிச்ரமத்தில் இயற்கையாகவே ருசியாலும், பஹுச்ருதத்தாலும் ஓங்கினின்றவர். திருக்குடைந்தைக்கு ஸமீபமான நரஸிம்மபுரத்தில் திருக்குடந்தை ஸ்வாமியினிடம் இவர் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் செய்யும்போது இவரோடுகூட காலக்ஷேபம் செய்பவர்களில் இவருடைய தர்க்கவ்யாகரணங்களில் பாண்டித்யத்தைக்கண்டு வியக்காதவர் இல்லை. அநேக வித்வத் ஸபைகளில் உயர்ந்த ஸம்மாநம் பெற்றவர். அப்பழுக்கு இராத சாஸ்திராநுஷ்டாநம் உள்ளவர். சமதமாதி குணங்களால் ஸாதாரண ஜநங்களாலும் மதிக்கப் பெற்றவர். இவருடைய பிரிவால் நமது தக்ஷிண தேசம் பெரியதொரு ரத்நத்தை இழந்ததாகிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்திற்கு மஹத்தான நஷ்டம்.

## சென்னையில் பண்டித பரிஷத்

சென்னை த்யாஜ்ராய நகரில் சில ஆஸ்திகர்கள் கூடி, வருகிற டிசம்பர் மாசத்தில் பெரிய தொரு பண்டிபரிஷத் கூட்டப்போவதாயும் அதில் உலக முன்னேற்றத்திற்கு முக்கியமான சில தர்ம சாஸ்திர விஷயங்களைப் பற்றி விசாரித்து தீர்மானிக்கப் போவதாயும் தெரியவருகிறது. முன் இரண்டு மூன்று தடவைகளில் இம்மாதிரி சபைகள் கூடி இலௌகிகரும் வைதிகரும் ஒத்துவராமல் மிகவும் ச்ரமப்பட்டது அனைவருக்கும் ஞாபகமிருக்கும் இப்போதாவது ஆஸ்திகர் அனைவரும் ஒத்துமை வாய்ந்து பேசி உலகத்திற்கு க்ஷேமத்தை விளைவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

---



### வேறு

வாகத்த சித்திக்கு வரையா திசைச்செப்பி வையத் துளீர்
போகத்தை யுற்றுப்பொ ருந்துங்கள் கவிதார்க்கி கச்சீயனு
லாகிச்சி றந்துள்ள தாமென்று மொருசுலோக மங்கேவனைந்
தோகைப்பெ ருக்கத்தி லுதனீறி னைத்தேமு டித்தொன்றவே. 39

அம்மாமு கன்றன்னை யன்போடு தாநாளு மாராதனஞ்
செம்மாம லர்த்தேவன் செய்தென்ன வேசெய்யு மருளாளன்பா
லம்மாவி ருத்திப்பி னடைவோடு நாறம்பூ சனையாற்றியே
யெம்மா மதத்தோரு மிரிந்தோட வயமுண்டி ருந்திட்டனர். 40

ஏகச்சி னளங்கெ ழில்வேகங்க டங்காண வேழச்சிலர்
பாகத்த வன்கண்டை தாமாகை யானப்ப ரந்தாமனின்
பூகற்ற வடிகண்டி றைஞ்சங்க ருத்திற்பு றப்பட்டுடன்
மாகத்தை முடிபோழு கடிகாச லந்தன்னை மணந்தேறியே. 41

வீழாவி டைந்திட்ட விமலர்க்க கம்வீழு மவைதந்தவன்
வாழ்வி ளங்குற்ற வக்காரக் கனிதன்ம லர்த்தா டொழு
தாழாது ணர்ந்தேத்தி யுவந்தப்ப ரன்றீர்த்த முதலுண்டுபின்
றூழாவெ ழுந்தந்த வடவேங்க டப்பொற்பு தாங்கண் டனர். 42

அச்செய்ய மலையென்னு மனந்தாழு வானைக்கண் டங்கேகா
முச்சிக்க ணேறிக்கு விந்தேதொ ழுதுசொன்ன முகியுந்திவை
நச்சிப்ப டிந்தாடி யலர்மேவு மங்கைப்பொ னளினப்பதம்
மெச்சிப்ப ணிந்தன்னை யருளோடு பிரசாத மிடைந்தேகியே. 43

முன்னாளடிக்குன்றி லிலகத்தி ருப்பூதூர் முனிபுங்கவர்
பண்ணுவ ருச்சித்த வாழ்வாரா சிரியர்ப்ப தம்போற்றியே
பொன்னொரு மருமத்த கோவிந்த ராயன்றன் பொற்றுடொழு
தென்னொரு யிர்க்காய விறைவா வருள்கென் றெடுத்தேத்தினர். 44

நஞ்சினி வாசஞ்க ருணையென்னுங் கழைநின்று நனியூறிடு
மஞ்சாற தின்வைக லாகிக்கு விந்துள்ள வடிசர்க்கரை
மஞ்சாடு மலையாம லிந்துள்ள தேயென்று மறைதற்குறு
மஞ்சாரன் மணிமன்னு மழகாய மலைதன்னை யடைகிற்பனே. 45

* * * *

திவ்விய சூரி சரிதம் முற்றிற்று.

ஸ்வாசு, என்கிறபடிக்கு எல்லாம் துல்யபலமாகையாலே அநுஷ்டானத்திலே வந்தால் ஸாயிகாராநு குணமாயிருந்ததொன்றே அமையும், இந்த உபாயத்தால் செய்வது என்னென்ன, 'நம் பிறவித் துயர் மாற்றிய' நம்முடைய கர்ப்பவாஸ க்லேசங்கள் மறுவ விடாதபடி மாற்றுமாயிற்று. நம் பிறவித் துயர்-நம்முடைய ஸ்வம் என்னலாமா யிருந்தன கப்பவாஸ க்லேசங்கள். இதில் எம்பெருமானுக் கன்வயமில்லை, அவன் சுகத்திற்கு இட்டுப் பிறந்தான். நாம் க்லேசத்திற்கு இட்டுப் பிறந்தோம். "மேஸஹஜம் ஹிதுக்கம்" பிறவித்துயர் என்று இத்தனை சொல்லலா மத்தனை போக்கி தனித் தனியே துயரைச் சொல்லமுடியாது.]

'மாற்றிய' இப் பிறவித் துயரை மாற்றுவது அவன் தலையிலேயிறே. நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய், இன்னின்ற நீர்மை இனியாமுறுமை என்னென்ன யோநியுமாய் பிறந்தானாயிற்றவன். நம்முடைய பிறப்பையாயிற்று நமக்குஇல்லாதபடி பண்ணி தன்னதாகக்கொண்டு தான் பிறக்கிறது.

ஸ்வதாரணவிஸே ஸெஷாராத்ரீணாவதெஸெ:
ஸவீதிநாகஸெதீ, ஏதுவிதெதஷா வித்து ।
வ்யூஷஹஸிவரிநாயஹூஷிதெஸெந நஹநம்
ஹஜதி ஸாரணஹாஜாம்! ஹாவிதெநா ஜதீஹெஹாநு ॥

நம்முடைய க்லேசங்களுக்கு மேலே அவமதியும் கூட ஒன்று அதிகம் உண்டாயிருந்தது. கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப் பெற்றான். காடு வாழ்சாதியுமாகப் பெற்றுள் பற்றி உரவிடையாப் புண்டான். பாவிகா ளுங்களுக் கேச்சுக்கோலோ என்றுச் சுவடலறிந்தான் பாசுரமிட்டது. இப்படியாயிற்று மாற்றினது. இப்படி மாற்றினர் யாரென்ன "ஞானப் பெருந்தகவோர்" பெருத்த ஞானத்தையும் கிருபையு முடையரான ஆசார்யர், ஸர்வ ஜ்ஞனை எம்பெருமானுக்கும் உபதேசிக்கும்படியாயிறே இவர்கள் ஞானப்பெருமை இருப்பது.

"மெய் நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே." "கண்ணு நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் தானே" ஆகையாலேயிறே "அறிவு தரும் பெரிய திருமொழி" என்று பிள்ளை யருளிச் செய்தது "பெருந்தகவோர்." இவர்கள் கிருபையின் பெருமை யிருந்தபடி "ஸிஷ்யஸ்தேஹம் ஸாதிமாம் த்வாம் ப்ரபன்னம்" என்று அடிபணிந்தானை "வ்யாஜேந ஸைந்யவார்த்ய ஸ்வாத்ம் ஸோஹயஸீவதே । தஸ்மை வதிஷ்ட்ய யேநஸோ போஹஸந்தயம்" என்னும்படி அலமர்ந்து விட்ப் பண்ணி, எடுப்பும் சாய்ப்புமாக ஒரு பதினெட்டுச் சொல்லி, கடை

பிலே "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று அசக்யாரம்ப வாரணமும், த்வத்ருதாஸ்யாஸநமும் செய்து "வ்ரஜ" என்று தன்னை ஆச்ரயிக்கும்படி சொன்ன வார்த்தை "தொழுதெழென் மனனே" என்று கிடந்த ஸ்வாநுபவத்தைத் தவிர்ந்து கேட்டாருமின்றிக்கே இருக்க ஸம்ஸாரிகள் துர்கதியைக் கண்டு முதல் மடையிலேதானே—"வீடுமின் முற்றவும் வீடு செய்து உம்முயிர் வீடுடையானிடை வீடு செய்ம்மினே" என்றாரிறே, ஆகையாலிறே "அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்றது. எம்பெருமானுடைய துர்க்கதியைக் கண்டு, அவனுக்கும் கை கொடுப்பார்களாயிற்று.

க்ஷுத்ரத்ருஷ்டிகாஹ நாஶாயை நிவ்ருத்த: ஸர்வஸஹண: ।
கார்யஹாநிவிசக்ஷணோ ஜயதி ஶ்ரேயஸே நாயம் ஶாந்தி: ॥

இவர்கள் இத்தனை செய்ததற்கு நீ செய்தது என்னென்ன—"சம்பிரதாயமொன்றி" இவர்கள் கிரந்த முகத்தாலே ப்ரவர்திப்பித்த ஸம்ப்ரதாயத்திலே அவகாஹித்தேன். "ஶஸ்ஸோஸிதாஸ்ஸொபாயநா:" என்கிற கணக்கிலே நாம் ஸந்நிப்ராயராயிருக்க, தாய் முலைப்பாலுக்கு ஆர்த்தனாய் அழுதல் செய்யுமளவன்றிக்கே, கூலிகொடுப்பாரைப் போலே இருந்தது இரக்ஷிக்கவேணும் என்று அபேக்ஷிக்கை, இது ஜெஸ்ஸாரிணீ, ஐததீ ஸகாசத்திலே என்னை இரக்ஷிக்கவேணும் என்று அபேக்ஷியோடொக்கும், என்றிப்படிக்கு "தகர்வதிஷ்டாநாக" என்று கழித்த கூடயுக்திகளாலே க்ஷேஹம் பண்ணுவரன்று. இதுதான் ஶ்ரீதிவ்யவிஶேஷாஸ்வாதமாயிருக்கும். இப்படி வேத வைதிக மார்க்கங்களை விட்டு நெஞ்சுக்குத் தோற்றினபடி கலக்குவானென்று கண்டீர். "சதிர்க்கும் நெறிசார்ந்தனமே" இவர்கள் ஸம்ப்ரதாயத்தைச் சேரவே க்ஷேமவயத்திலே கால் வைக்காதே உதாரமான மஹாபதத்திலே சேர்ந்தோம். ஆத்மா பஹாரிகளான கள்ளர் கொண்டுபோம் வழி தப்பினோம். இம்மஹாபயத்திலே அவர்கள் கையில் அகப்பட்டோம். அவர்களுக்கு இங்கு இருப்பும் கூடவரியாது. இனி இத்தனை நாள்

"நிஷ்டாநீயே நிராகுலே நிஷ்ப்ரயே நிரவாஶ்ரயே ।
ஶ்ராவியஸ்ய ஶாந்தே ஶமே ஶமயஸ்ய ஸந்நிதௌ ॥"

என்று நெஞ்சாரப்படும் மார்க்கங்களை எல்லாம் தவிர்ந்து 'ஶீதிஸம்பதார் நிராயே:' என்கிற வழியிலே யாயிற்று நடக்கவேண்டியது, இதொரு பாக்யமிருந்தபடி.

ஆனாலும் ஸங்க்ரஹநவிவேசகத்வமாயிருக்கும் அதிகாரி, ஸாங்காத்யவசஜன்யாபாத ப்ரதீதியாலே ஶயீதகஶ்ரேண பூர்வ பாக விசாரத்தாலே



ஸ்வாஶ்ரயமான கேவலகைங்கர்யமுடையவனாய் தாவத்ருபாஹித ஶக்தியாலே, ஸஞ்ஜாதஶோகக்ஷாஹிரோஷனால் தானே ஶாஸ்த்ரார்த்த நிரூபணம் செய்ய மாட்டானோ? அதற்காக வோராவாய்ஸம்ப்ரதாயம் வேண்டும் என்று நிர்பந்தமுண்டோ, "தத்விஜ்ஞாநார்த்தம் ஸகுருமேவாபிகச்சேத்" என்று இருக்கையாலே நிர்பந்தம் உண்டு என்றில் இது ஶ்ருத்யநுஜ்ஞாவிதி என்னலாகாதோ, சாஸ்திர நிரூபணத்தில் சக்தியில்லாதாரைப் பற்றியன்றோ 'உபதேஶாதஸ்யோபதேஷ்டா' என்றது. கிஞ்ச ஜ்ஞாதாவாயிருப்பானுக்கும் கூட ஶாஸ்த்ரார்த்த நிரூபணம் பண்ணவேணும் என்று சொல்லத்தான் கூடுமோ "ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தேஶ்சலநகாரணம்" என்று க்லேச ஸாத்யமாய் பாதிரஹவஸம்ஹாவகை யுண்டாகையாலே சாஸ்திர நிரூபணம் வேண்டாமென்று நிஷேதிக்கவில்லையோ, இவ்வசநம் ஆதத்ருதிஶய முடையவனாய் மந்தாதி காரியாயிருப்பானுக்கு க்ருஷி பண்ணாதே உண்ண விரகுடையவன்க்ருஷிபண்ணுதலை விடுமாப்போலே ஸத்ஸம்ப்ரதாயவிதனாய் ஜ்ஞாதாவான வாவாயன் நேரிட்டால் விரிவு கற்கைக்கீடான ஶாஸ்த்ராஹ்யாஸாதிகளில் உபரதனாய் மோக்ஷோபாயத்திலே கடுக மூளப் பண்ணுகையிலே தாத்பர்யமாகையாலே அபேக்ஷமாணர்க்கு ஶாஸ்த்ரார்த்தநிரூபணம் ஆவச்யகம் என்றில் ஆனுமத்தைத் தானே நிர்ணயித்துக் கொண்டாலாகாதோ, ஶப்தவாஸ்த்ரஹவாரிஶிஷ்டஸ்ம்ருதிகளோடேதான் நிர்ணயித்துக் கொள்ளலாகாதோ, ஸத்ஸம்ப்ரதாயமில்லாதபோது துஷ்கரமென்றில் மந்த புத்திகளுக்கு துஷ்கரமானாலும், புத்திமானுக்கு ஸாகாரமாகாது என்னத்தான் கூடுமோ. கிஞ்ச ஶாஸ்த்ரஶாஸ்த்ரம் அதீந்த்ரியமாகையாலே அதுதான் பல ப்ரகாரமாகக் காண்கையாலும் அதீந்த்ரிய விஷயத்திலே சாஸ்திர மூலமில்லாதே சில ஸம்ப்ரதாயங்களும் பாஹ்யவிரோத ஶாஸ்த்ரார்த்தங்களாக காண்கையாலே அதீந்த்ரிஷ்டம் ப்ரமாணம் என்னத் தட்டென், ஆகையாலே யன்றோ ரஹஸ்யம் ஸதஸ்யமென்று பாஷ்யவிரோதமாக இரண்டும் நம் தர்சநத்திலே ஸம்ப்ரதாயமிருப்பது, ஆகையாலேயன்றோ, நம் தர்சந ப்ரவர்த்தகரான ஸ்ரீ பாஷ்யகாரர் ஓராசார்ய ஸகாசத்திலில்லாதே போதாயந விருத்தியை தாமே நேரில் கடாக்ஷித்து ஸ்ரீ பாஷ்யமிட்டருளிற்று. ரஹஸ்யார்த்தங்களுக்காக திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே பதினெட்டு பர்யாயம் எழுந்தருளிக் கேட்டது. கிஞ்ச ஶாஸ்த்ரார்த்தத்திற்கு என்று ப்ரஜாபதி ஸகாசத்திலே முப்பத்திரண்டு வருஷங்கள் அநுவர்த்தநம் பண்ணிக் கிடந்த இந்திர விரோசனர்களுக்கு தேஹமே ஆத்மாவென்று உபதேசித்து, அநந்தரம் பல தடவைகளிலே அநுவர்த்தித்த இந்திரனுக்கு அர்த்த நிர்ணயமில்லாதே ஒவ்வொரு

தடவையிலும் [illegible] ஸித்தாந்தங்களுக்கு விருத்தமாக வேறு வேறு அர்த்தங்களைச் சொல்லவில்லையோ. உபகோஸல வைஶ்வாநராதி வித்யைகளிலே ஏக தேசோபதேசம் காண்கையாலே க்ருத்ஸ்ந நிரூபணம் ஆசார்யனுக்கும் துஶ்ஶகமாயிருந்ததென்ன வேண்டாவோ, ஸர்வஜ்ஞன் தானும் அத்யாத்மஶாஸ்த்ரோபதேசம் பண்ணின விடத்தில் தனக்கும் சில அர்த்தங்கள் துர்நிரூபங்களாகையாலே யன்றோ, "உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஶிந:" என்றொரு போக்கு விடு காட்டினது. ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்மஶாஸ்த்ரார்த்த நிரூபணம் பண்ணவேண்டும் என்கிற ஸம்ப்ரதாயத்திலே தத்த்வ விஷயமாயும், அநுஷ்டாந விஷயமாயும் உபாய விஷயமாயும், பல விரோதங்கள் காணப்படவில்லையோ, மேலும், இந்த ஸம்ப்ரதாயத்திற்கு இப்போது ஆசார்யாள் காணப்பட்டாலும் ஸ்ருஷ்ட்யாரம்பத்திலே ப்ரவர்த்தகர் இல்லாமையாலே அப்போது ஜ்ஞாதாவாயிருந்தவொருத்தன் தன் புத்திக்கநுகுணமாகத் தானே ப்ரவர்த்திப்பித்தான் என்ன வேண்டாவோ. அப்படி ப்ரவர்த்திப்பித்தவன் க்ஷேத்ரஜ்ஞனாகையாலே ப்ரமவிப்ரலம்ப ப்ரமாதாஶக்திகள் உண்டாமாகையாலே இது தான் ஸம்ப்ரதாயம் என்னக் கூடுமோ? மேலும், இந்த ஸம்ப்ரதாயத்திற்கு நம்மாழ்வார் ப்ரதம ப்ரவர்த்தகர் என்று கொள்ளுகையாலே அவர் தான் சதுர்த்தவர்ணத்தில் அவதரித்தவர் ஆகையாலே அவைதிகராய் வைதிகமாயிருந்த அத்யாத்மஶாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரவர்த்தகராம்படி யெங்ஙனே? "நாஸ்ய ஶூத்ரா வாசயிதவ்யம் [illegible]" என்று சதுர்த்தவர்ணருக்கு ஆசார்யத்வம் நிஷித்தமாயன்றோ இருப்பது. ஆகையாலே யன்றோ "ஶூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோ(அ)ந்யத் வக்துமுத்ஸஹே" என்று ஸ்ரீ விதுரர் சொன்னது. ஆழ்வார் அவதார விசேஷமாகையாலே வ்யாஸாதிகளுக்குப் போலே ஜாதி நிரூபணம் பண்ணலாகாதாகையாலும் ஶூத்ரயோநாவஹம் ஜாத: என்கிறது மற்ற ஸாமாந்ய ஶூத்ர விஷயமாகையாலும் விரோதமில்லை என்றில் ஆழ்வாருக்குப் பிறகு [illegible] பகுகாலம் ப்ரவர்த்தகாள் இல்லாமலிருந்து பின்பு நாதமுனிகள் ப்ரவர்த்திப்பிக்கையாலே இவர் ஓராசார்யர் இல்லாமல் தானே ப்ரவர்த்திப்பித்தாரன்றோ? பின்பு ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரவர்த்திப்பித்த விந்த ஸம்ப்ரதாயத்திலே அர்த்த விரோதமும், அநுஷ்டாநவைஷம்யமும். காண்கையாலே இரண்டும் ஸம்ப்ரதாயம் என்னத்தான் கூடுமோ? கிஂச, ரஹஸ்யத்ரயத்திலும் அர்த்த பேதங்கள் பரஸ்பரவிருத்தங்களாகக் காணப்படவில்லையோ? இதெல்லாம் ஸம்ப்ரதாய மென்னத் தான் கூடுமோ? இத்யாதிசங்கைகளை இந்த ரஹஸ்யத்தாலே பரிஹரிக்கக் கோலி முந்துற ஸம்ப்ரதாயத்தாலே தானே அத்யாத்மஶாஸ்த்ரார்த்த நிரூபணம் ஆவச்யகம் என்று அருளிச் செய்கிறார்.



மூலம்—ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்மஶாஸ்த்ரார்த்த விசேஷ நிர்ணயம் பண்ணவேணும் என்னுமிடம் உபநிஷத்துக்களிலும் உபப்ரும்ஹணங்களிலும் ப்ரஸித்தம்

(வ்யா) ஸச்சப்தத்தாலே "அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது:" என்று ஓதின ப்ரஹ்மஜ்ஞாநவத்தையைச் சொல்லுகிறது. ஆசார்ய சப்தத்தாலே "ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி। ஸ்வயமாசரதே யஸ்மாத் ஆசார்யஸ்தேந சோச்யதே" என்கிறபடியே ஶாஸ்த்ரஜ்ஞதையும் தன்னை ஆச்ரயித்தாரை ஶாஸ்த்ரார்த்தத்திலே நிலைநிறுத்துகையும் தான் குலிங்க சகுநி விருத்தாந்தவைதேசிகனைப் ஆசார நிஷ்டனான படியையும் சொல்லித்தாகிறது. இந்த ஸதாசார்ய சப்தத்தாலே "ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்றோதின ஆசார்ய லக்ஷணம் சொல்லிற்றாயிற்று. "அத்யாத்மஶாஸ்த்ரார்த்தவிசேஷேதி" ஆத்மாநமதிக்ருத்ய ப்ரவ்ருத்தம் ஶாஸ்த்ரம் அத்யாத்மஶாஸ்த்ரம். இங்கு ஆத்ம சப்தம் ஜீவ பரஸாதாரணமாய் ஆத்மஸ்வரூப தத்ப்ராப்த்யுபாய தத்ஃபல தத்விரோதிகளை ப்ரதிபாதிக்கும் சாஸ்திரம் அத்யாத்ம சாஸ்திரம் என்னதாகிறது, இத்தால்.

ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந:। ப்ராப்த்யுபாயம் ஃபலம் ப்ராப்தே: ததா ப்ராப்திவிரோதி ச ॥ வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸ புராணகா: என்கிற அர்த்தபஞ்சக ப்ரதிபாதக ஶாஸ்த்ரம் அத்யாத்மஶாஸ்த்ரமாயிற்று. அதாகிறது. உபநிஷச்சப்தம் "ப்ரஹ்மணி உபநிஷண்ணேதி உபநிஷத், உபநிஷண்ணா அஸ்யாம் உபநிஷத்." "இதி ஹி வாக்யம்" "யஸ்மாதேந ஹீயம் வித்யா ஸந்நிவேஷ்டி தத்விஷய [illegible] பாஷ்யம். "யஸ்மாதேந ப்ரஹ்மணி உபநிஷண்ணேதி" தத்விஷயா வாசநிகா. என்று ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் அருளிச் செய்தார்.

"விசேஷ" என்றது உபநிஷத்கதமான ப்ராணவித்யா ப்ரதீகோபாஸநாதிவித்யாவ்யாவ்ருத்த்யர்த்தம்" இத்தால் அர்த்தபஞ்சக ப்ரதிபாதகங்களான சாஸ்த்ரங்களை நியமேந ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே தானே நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லிற்றாகிறது. உபநிஷத்துக்களிலும் என்றது. "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந। தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" "ஆசார்யவாந் புருஷோ வேத" "ஶௌநகோ ஹ வை மஹாஶால: அங்கிரஸம் விதிவதுபஸந்ந: பப்ரச்ச" இத்யாதிகளில் என்றபடி. அங்கிரஸ் ஸதாசார்ய ஸம்ப்ரதாய நிஷ்டர் என்றுமிடம்

“ஸம்ப்ரதாயோ நாம ஸம்ப்ரதாய தத்த்வம் ஸம்யக் ப்ரதிபாதகம் ஸம்ப்ரதாநாதி ஸாக்ஷாத்கார் ஆசார்யாணாம் ஸம்பந்தம்” இத்யாதி வ்யாக்யாயிகையிலே ப்ரசித்தம். உபப்ரும்ஹணங்களில் என்றது.

“இதம் விஷ்ணுபுராணம் ஸர்வ வேதார்த்த ஸம்ப்ரஹம் ।
விஷ்ணுநா விநிர்மிதம் ஸர்வ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகம் ॥”

“தஸ்மிந் புராணே தத்த்வம் வக்ஷ்யந்தி ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்சிந: ॥”

“வராஹம் ச நிதாநம் ச தத்வதஸ்த்வம் அதீத்ய யா ।
தேஷாம் ப்ரீத்யர்த்தம் பூர்ணிமா சாரதேவதா ॥”

“தஸ்மாத் ப்ராப்ய நிர்ணயம் தஸ்மின் ஸம்ப்ரதாயவாம் ।
நாராயணம் ப்ரபத்யே ॥” இத்யாதிகளிலே என்றபடி,

உபப்ருஹ்மணமாகிறது—தான் நிர்ணயித்த வேதார்த்தங்களை ஸம்ப்ரதாய ஸித்தமாக ஸாக்ஷாத்க்ருத வேத தத்வாவஸரான மஹர்ஷி வாக்யங்களாலே அவை ஸித்தங்களான ஸம்ப்ரதாயங்களோடே ஸமவ்யாப்தமாக்கிக் கொள்ளுகை. இத்தை. “உபப்ரும்ஹணம் நாம, விதித ஸகல வேத தத்வார்த்தானாம் ஸ்வயோக மஹிம ஸாக்ஷாத்க்ருத வேத தத்வார்த்தானாம் வாக்யை: ஸ்வாவகத வேதவாக்யார்த்த ஸ்தாபனம்” என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தார். ப்ரஸித்தம் என்றது ஸித்தாந்தமாக வருளிச்செய்து ஸத்ஸம்ப்ரதாய மொழிய ஸ்வயமேவ உபப்ரும்ஹணங்களைக்கொண்டு அர்த்த நிர்ணயம் பண்ணுமளவில் அல்பச்ருதனானவனுக்கு விப்ரதிபத்திகளும் ப்ராந்திகளும் வருமாகையாலே கூடாதென்று திருவுள்ளம். இத்தாலே ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்து வேதார்த்தம் மறுதியிடுவது. ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே என்று பக்ரமித்து நிர்ணயித்த அர்த்தங்களெல்லாம் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு ஸ்வயமேவ நிர்ணயித்த அர்த்தங்களாகையாலே ஸம்ப்ரதாய ஸித்தங்களன்று என்று திருவுள்ளம். ஆகையாலேயிறே இதிஹாஸ ச்ரேஷ்டமான ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது. மஹா பாரதத்தால் தூது போனவனேற்றம் சொல்லுகிறது. இவையிரண்டாலும் புருஷகார வைபவமும் உபாய வைபவமும் சொல்லிற்றாயிற்று. என்று பிராட்டிக்கு புருஷகாரத்வத்தையும் எம்பெருமானுக்கு உபாயத்வத்தையும் கூறுக விபஜித்து நிர்ணயித்த வர்த்தத்தை ஸ்வரூபம் ஸாததந்த்ர்யாதிகளிலே ப்ரசித்தமான ஸம்ப்ரதாய விருத்தமாகப் பண்ணுமிவ் விஷயம் ஸநாதநமென்று பெரிய ரஹஸ்யத்திலே பிள்ளை அருளிச் செய்தது. அப்படி நிர்ணயித்தவர் பிதாவும் முப்பத்தாறாயிரம் ப்ரவேசத்திலே உபாய தசையோடு ஃபல தசையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யமென்று ஸாக்ஷாத்மாக



எழுதி வைத்தார். இவர் தான் ஏகாயநன் என்றார் ஆசார்யரை. உபாயோபேய தசைகளிலே பிராட்டியை உத்தேச்யமாகக் கொள்ளாமையாலே. அப்படியே பிராட்டியை உபாய தசையிலே உத்தேச்யமாகக் கொள்ளாதாரையும் ஏகாயநன் என்னக் குறையில்லை. அயந சப்தம் உபாயோபேயங்களைச் சொல்லுமாகையாலே மிதுநமே உபாயோபேயங்கள் என்பாரையாயிற்று ஏகாயந சப்தம் விஷயமாக்காதொழிவது। ப்ராப்யப்ராபகைக்ய விவக்ஷையாலே அயநசப்தமென்றால் ஸாதாரணங்களான ப்ராப்யாதி சப்தங்களைக் கொண்டு ஏகப்ராப்யன் என்றிப்படி சொல்லலாமாயிருக்க அஸாதாரணமான அயந சப்தத்தை யிட்டு ஏகாயநன் என்றது அத்தனை ஸ்வரஸமாகாது.

இத்தாலே ஸம்ப்ரதாயத்தாலே தானே ஸமீசீநார்த்தங்கள் நெஞ்சில் படவேண்டியதால் “ஸதாசார்யோபதேசம் ச” என்கிற விடத்திலே அவதாரணத்தாலே ‘ச’ என்றது நியமவிதி என்றதாயிற்று. இத்தாலே அந்யதீயபோல சாஸ்த்ர விசாரமும் ஸ்வதந்த்ரமன்றாகையாலே அந்த விசாரந்தானும் ஸம்ப்ரதாயத்தாலே யானால்தான் ஸ்வரூபயாதாத்ம்ய பிருக்குமென்று ஸித்தமாயிற்று.

(அவ) இப்படி ஸகல சாஸ்த்ரார்த்த விசேஷ நிர்ணயம் பண்ணவேணுமென்று நிர்பந்தம் கூடுமோ? நிர்ணயம் விசார ஸாத்யமாகையாலே அதுதானும் பஹுச்ருதர்க்கொழிய அல்பஜ்ஞருக்குக் கூடாமையாலே அவர்கள் தோன்றினபடிக்கு அர்த்தம் நிர்ணயித்துக்கொள்ளலாமோ? அப்போது ஜ்ஞாதாவுக்கும் அஜ்ஞருக்கும் ஸந்தேஹம் வருமாகையாலே தத்வஸ்திதியில் ப்ரமத்தருக்கு ஸந்தேஹமாயிருக்காதோ? அஜ்ஞருக்கு மந்த நிர்ணயத்தாலே உபாயாநுஷ்டானம் பண்ணி ஃபலம்வருமானால் பஹுஜ்ஞருடைய நிர்ணயம் ஸாஸ்த்ரஃபலமாய் அகிஞ்சித்கரமாயொழியாதோ என்ன வருளிச் செய்கிறார்.

(மூலம்) சாஸ்த்ரார்த்த நிர்ணயம் பண்ணுமிடத்தில் சக்தியில்லாதவர்களுக்கு “உபதேசாதிதி பஹ்வா” என்கிறபடியே சாஸ்த்ரஜ்ஞஸம்ப்ரதாய ஸாரமும் அபேக்ஷிதார்த்த நிர்ணாயகமாம்.

(வ்யா) பண்ணுமிடத்தில் - பண்ணுவதில், “சக்தியில்லாதவர்களுக்கு” ஏதி. இவனுக்கும்கூட ஜ்ஞாதாவைப்போலே சாஸ்த்ரார்த்த நிர்ணயமாவஸ்யகமென்றால்

அநத்யயநாதேவ ஸ்யாத் ஜ்ஞாநம் நிர்ணயம் யதா ।
பஹுசாகாதிஷு சாஸ்த்ராணாம் ஜ்ஞாநகம் ஸம்ப்ரதாயகம் ॥

என்கிறபடிக்கு ஸர்வோபஜீவ்யமாகையாலே அப்படி அநாதரணீயமன்று; வேதவேதாந்தார்த்தமான ஶாஸ்த்ரம் நிர்ப்ரயோஜநமென்று திருவுள்ளம் ஆனால் இவனபேக்ஷாபூர்த்தி எத்தாலே என்ன அருளிச்செய்கிறார். "உபதேஶாத்தரிம் புத்த்வா" இத்யாதி.

"ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தேஶ்சலந காரணம் ।
உபதேஶாத்தரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு ॥"

இந்த வசநத்தில் விரிவுகற்கைக் கீடான ஶாஸ்த்ராப்யாஸாதி கர்மங்களிலே உபரதனாய் கடுக மோக்ஷோபாயத்திலே மூள ப்ராப்தம் என்று பெரிய ரஹஸ்யத்திலே அருளிச்செய்தபடிக்கு, மோக்ஷோபாயப்ரகரணத்திலே தாத்பர்யமானாலும் அந்த உபாய ப்ரவ்ருத்தி க்ஷமார்த்தநிர்ணயபூர்வகமாக வேண்டுமாகையாலே இவனுக்கு க்ஷமார்த்தநிர்ணயம் வேறவிதமாகவராதாகையாலே அதற்காக உபதேச விதியிலும் தாத்பர்யம் கொள்ளவேணுமென்று திருவுள்ளம். 'உபதேசாத்' என்றிவ்வளவு இருந்தாலும் உபதேசம் ஆசார்யன் பக்கலில் ஆகவேண்டுகையால் அவன்தானும் "ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்கிறபடிக்கு ஸதாசார்யனாக வேண்டுகையாலே ஸதாசார்யோபதேஶமே இங்கு விவக்ஷிதம். "ஹரிம்" என்றது காரண வாக்யங்களிலும் உபாஸந வாக்யங்களிலும் ப்ரதி பாத்யன் எம்பெருமானே என்று நிச்சயத்தாலே

"ஐகாத்ம்யம் தேவதைக்யம் த்ரிகஸமயிகதா தாரதம்யைகதேஶ்யம்
த்யாஜ்யாநி ।
கந்த்ரோத்ஸர்ப்பித்யாத்யநி பாணஹணிதீராதி ப்ரத்யவஸ்த: ॥
த்யக்த்வைக கல்ப்யம் தநுகுணக்ருதஸாம்யாதி
வ்யாக்ருதிஸ்து ।
ஶ்ரீமாந் நாராயணோ ந: பதிரகிலதநுர் முக்திதோ முக்த
போக்ய: ॥

ஹரிம் என்றது ஜ்ஞாதவ்யார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். ஆகையாலேயிறே 'ஸம்ஶயிதார்த்தநிர்ணாயகமாமென்றிங்ஙனே அருளிச்செய்தது. "ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்கிற விடத்திலே ஆர்த்தமாகவும் ஶாப்தமாகவும் ப்ரஹ்மதத்ஸம்பந்திகளுக்கு விசாரார்ஹஜ்ஞாந விஷயத்வம் ஸித்திக்குமாப் போலே இங்கும் எம்பெருமானுக்கும் தத்ஸம்பந்திகளுக்கும் ஆர்த்தமாகவும் உபதேஶஜ்ஞாந விஷயத்வம் ஸித்திக்கக் குறையில்லை. 'புத்த்வா' என்றது விசாரஜந்யநிர்ணயாத்மக ஜ்ஞாநமன்றிக்கே தத்போதமாம

[illegible]

இளங்குழந்தை முதல் கிழவீறாக

*சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்*

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

**ருசியில் தேனினும் இனிது.**

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

*ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.*

*சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.*

*நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக்கூடியதென்ற விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், சீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.*

**வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.**
**வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.**

*சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.*

**ஆர்யன் பார்மஸி,**
**11, ஆதியப்ப முதலித் தெரு,**
**வேப்பேரி, மதராஸ்.**

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்ருகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

# SRI VEDANTA DIPIKA

Vol. 26] SEPTEMBER 1937 [Part 3

30 OCT 1937
MADRAS

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை



ஈசுவர ௵ ஆவணி ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
வி. அனந்தாசாரியர்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார சபா லிமிடெட்

**4—5,** வாணி விலாஸ், பத்திரய்யன் தோட்டத் தெருவு,

பார்க்டவுன், **Madras.**

## விளம்பரம்

இனி, வேதாந்த தீபிகையின் சந்தா பாக்கிகளையும், தீபிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வியாசங்களையும், மற்றுமுள்ள தீபிகா ஸம்பந்தமான எல்லா கடிதங்களையும் 'மானேஜர், ' வேதாந்த தீபிகா, வாணீ விலாஸ், **4-5**, பத்திரய்யன் தோட்டத் தெருவு, சென்னை பார்க்கு டவுன். என்னும் விலாசத்திற்கே அனுப்பவேணும். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ஸபையைச் சேர்ந்த மெம்பர்களின் சந்தாத் தொகைகளையும், சபா ஸம்பந்தமான கடிதங்கள் எல்லாவற்றையும் சபையின் ஜாயிண்டு செக்ரடரி விலாசத்திற்கு அனுப்பவேணும்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
*Joint Secretaries.*

### ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய விலைப் புத்தகங்கள்

(1) *ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த ந்யாய சித்தாஞ்சநம்—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் வெளியிடப்பட்டது. ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி அருளிய வ்யாக்யானத்துடன் கூடியது.* விலை ரூ. **5—0—0**

(2) *வேதாந்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் தமிழ் உரையுடன்* **3—0—0**

(3) *ஸ்ரீ பஞ்சஸ்தவம்—(ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்) ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரின் உரையுடன்* **1—0—0**

(4) *ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது* **1—0—0**

(5) *ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ஸ்துதி,* V. *அனந்தாசாரியன் எழுதிய தமிழுரையும்* V. V. *ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதிய முகவுரையும்.* **0—8—0**

**வியாபாரிகளுக்கும் வித்தியார்த்திகளுக்கும் 25% கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.**

OCT 1937 MADRAS

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवता वाचमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "

" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம் ! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள் ! பெற்றோர்களின் களிப்பு ! !

**விலை மலிவு ! சுவை பெரிது !**

**நன்மை தரும் !**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள் !** **கொடுக்கும் பணத்திற்கு**

**நல்ல பெப்பர்மெண்டு !!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

**SRI L. N. CONFECTIONARY,**

Sales Depot :—West Chitrai St., Madura.

*MADRAS OFFICE* :—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு “ஸஹஸ்ர வேதி” என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. “வயிற்றில் வாயு சேருவதையும்‘ நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும் ; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும் ; பித்தஹரம் ; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும் ; அரோசகத்தையும் போக்கும் ; பசி தீபநம் செய்யும்” என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

“ हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ ”

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# விஷய ஸூசிகை


1. ஸ்ரீமத் அண்ணயார்ய மகா தேசிகன் வைபவம் 85
   [கூத்தப் பாக்கம். உ. வே. தி. ந. ச. நரசிம்மாசாரியார்]
2. காலானுகுண ஆஹ்நிகம் 89
   [பத்திராதிபர்கள்]
3. நீதி ரத்நங்கள் 92
   [பத்திராதிபர்கள்]
4. பத்திராதிபர் குறிப்புகள் 94
5. பம்பாயில் க்ரந்த காலக்ஷேபங்கள் 96
   [ஸ்ரீ ரங்காராஜ தாஸன்]
6. புஸ்தக விமர்சம் 100
7. வேதாந்த தீபிகையின் தத்கால ஸ்திதி 101
   [ஸ்ரீ. உப. வி. அனந்தாசார்யர்]
8. யாக பசுஹிம்ஸையைப் பற்றி ஆசார்யர்களின் ஸித்தாந்தம் 103
   [அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியன்]
9. ஓர் ஸந்தேகம் 118
   [ஸ்ரீ. உப. கே. ராகவாசார்யர், கார்குடி]
10. சௌந்தர்யம் என்பது யாது ? 120
    [ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்]
11. ஸ்ரீ வால்மீகி பிரச்னத்தில் துவைத் சப்தார்த்தம் 124
    [ஸ்ரீ. உப. டி. சுந்தராசாரி—சீயாழி]
12. வேதாந்த ஸாரம் 1—8
13. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 17—24

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

# முகவுரை

'திவ்ய ஸூரி சரிதம்' என்னும் இக் கிரந்தத்தை இயற்றிய ஆசிரியர், 'கோயில் சப்தம் வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்' என்னும் ப்ரஸித்திபெற்ற தமிழ் வித்வான். இவர் வங்கீபுரம் வம்சத்தைச் சேர்ந்த ஆசார்ய புருஷ குலத்தில் ஜநித்த ஸ்ரீ வைஷ்ணவர். இவருடைய பூர்வீகர்கள் அநேக வருஷங்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் வஸித்துவந்தார்கள் என்றும், பிறகு பெருமாள் கோயிலுக்கருகிலுள்ள மருத்தாம்பாடி என்னும் ஸ்ரீ கிராமத்தில் குடியேறி கோழியாலம் என்னும் ஸ்ரீ கிராமத்தில் பூ ரூப சொத்துக்களைப்பெற்று ஸ்ரீவரத ராஜனுடைய திருவடிவாரத்தை அலங்கரித்து வந்தார்களென்றும் நாம் கேட்டிருக்கின்றோம். இப்பொழுது பரமஹம்ஸ பரிவ்ராஜகராய்ப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமிக்குப் பூர்வாச்ரமத்தில் இக் கிரந்தாசிரியர் பித்ருவ்யர். ஜ்ஞாநாநுஷ்டாநங்களிலும் ஆபிஜாத்யத்திலும் மிக்க யஶஸ் பெற்றிருக்கும் தக்ஷிண தேசத்திய ஸ்ரீ வைஷ்ணவ குலங்களுள் இந்தக் குலமும் ஒரு பெரிய குலமே.

இந்த ஆசிரியர் பால்யத்திலேயே, 'ஸ்ரீரங்கராமாநுஜ மஹா தேசிகன்' என்று ப்ரஸித்திபெற்றிருந்த ஸ்ரீகேதாண்டிப்பட்டி ஸ்வாமியின் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி, அந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே பஞ்ச ஸம்ஸ்காராதிகளைப் பெற்று க்ரந்த காலக்ஷேபாதிகளையும் செய்து, அவருடைய அஸாதாரணமான அநுக்ரஹத்திற்கும் ஆஸ்பதமானார். ஏற்கெனவே தமிழில் சிறந்தப் பயிற்சியைப் பெற்றிருந்த இவருக்கு, இப்பொழுது இந்த ஸ்வாமியின் விசேஷித்த அநுக்ரஹ பலத்தாற்போல அந்தப் பாஷையில் அந்யாத்ருசமான கவந சக்தியும் ஆவிர்ப்பவித்தது. அதன் பயனாக இவர் அப்பொழுதே 'ஸ்ரீ ரங்கராமாநுஜ நூற்றந்தாதி' என்னும் ஒரு க்ரந்தத்தைத் தமது ஆசார்யருடைய வைபவ விஷயமாக இயற்றி, அந்த ஸ்வாமியின் திருவடியில் ஸமர்ப்பிக்க, அந்த ஸ்வாமியும், அந்த க்ரந்தத்திலுள்ள பலவித பெருமைகளைப் பார்த்து வியப்படைந்து, நமது ஆழ்வார் ஆசார்யர்களின் சரித்ரத்தை இம்மாதிரி பாடல்களால் ப்ரஸித்திபடுத்துவது இவருடைய கவந சக்திக்கு அநுரூபமாக இருக்குமென்று திருவுள்ளம்பற்றி, இவரை அம்மாதிரியான கைங்கர்யத்தில் நியமித்தார். அந்த நியமநத்தை எவ்வித விளம்பமுமின்றிக்கே அநுஷ்டிக்க வேண்டுமென்னும் ஆவல் இவருக்கு இருந்தும் அநேக விக்நங்கள்

நேரிடவே அது அப்பொழுது நிறைவேறாமல் நின்றுவிட்டது. அதற்குப் பிறகு இவர், சில வருஷகாலம் சிற் சில வித்யா சாலைகளில் தமிழ் ஆசிரியராய் இருந்து, பிறகு மைஸூர் ஸர்வ கலா வித்யாசாலையில் சற்றேறக் குறைய பத்து வருஷகாலம் தமிழ் ஸம்பத்தமான ஆதிபத்யத்தை வஹித்து, பிறகு பங்களூரிலிருக்கும் ஸென்ட்ரல் காலேஜில் மூன்று வருஷம் பாஷா ப்ரவசநத்தைச் செய்து, 1910-வது வருஷத்தில் லௌகிக வ்யாபாரங்களிலிருந்து நிவ்ருத்தரானார். மைஸூர் ராஜாங்கத்தில் இருந்த பொழுது, அந்தத் தேசத்திய மஹாராணியினுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ‘மைஸூர் அரசு’ என்னும் பெயருடன் செய்யுள் ரூபமான க்ரந்தமொன்றை எழுதினார். அதில், மைஸூர் மஹாராஜர்களின் சரித்ரம் வெளியிடப்பட்டிருப்பதுடன், அந்த ராஜ வம்சம் பூர்வ காலத்திய யது குலத்தைச் சேர்ந்ததென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த க்ரந்தத்தை முடித்தவுடன், பூர்வம் தமது ஆசார்யரால் தமக்குச் செய்யப்பட்டுள்ள நியமநத்தை நிறைவேற்றாமல் வேறு வ்யாபாரங்களில் தாம் ப்ரவர்த்தித்து அந்த நியமநத்தை அநாதரித்து விட்டதைப்பற்றி ஒரு அநுதாபம் ஜநிக்கவே, இவர் ப்ரஸ்துத திவ்ய ஸூரிசரித்ரத்தை எழுத ஆரம்பித்தார். * அது பூர்த்தியாவதற்கு முன்னதாகவே நேத்ரத்தில் ஸ்வல்ப அபாடவம் உண்டாயிற்று. அந்த அபாடவம் பலப்படுவதற்கு முன் க்ரந்தத்தைப் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்று த்வரைப்பட்டு, அதை ஒருவாறு முடித்துவிட்டு, பிறகு பெருமாள் கோயிலிலேயே ஸந்நிதித் தெருவில் ஸ்ரீ வரதராஜனுடைய திருவடி வாரத்தில் வஸித்துக் கொண்டு, அவனுடைய திவ்ய ஸேவையால் அநுக்ருஹீதராய் 1917-ம் வருஷத்தில் இந்த விபூதியைவிட்டு விலகிப் பரமபதமென்று சொல்லப்படும் ஸ்ரீ ஶரண்யனுடைய திருவடிகளை அடைந்தார். பெருமாள் கோயிலில் அசக்தியுடன் எழுந்தருளியிருக்கும் பொழுதும், ஆசார்ய கைங்கர்ய ரூபமாக ஸ்ரீ தேசிக ப்ரபந்தத்திற்கு ஒரு எளிய தமிழ் உரையைத் தெளிவான தமிழ் நடையில் எழுதி ப்ரசுரம் செய்தார். திவ்ய ஸூரி சரிதம் என்னும் இக் க்ரந்தம் மாத்ரம் அச்சுப் பதிப்பிக்கப்படாமல் தங்கிவிட்டது. இதை அச்சுப் பதிப்பித்து வெளியிடுவதைத் தமக்கு ப்ராப்தமான கைங்கர்யம் என்பதை நன்கு உணர்ந்த அவருடைய புத்ரராகிய ஸ்ரீ உ. வே. தேவநாதாசார்யரும் அவருடைய பௌத்ரர்களாகிய ஸ்ரீ ஊ. வே. கஸ்தூரிரங்காசாரியர் ஸ்ரீ உ. வே. வரதாசார்யர் இவர்களும், ஸ்ரீ வேதாந்த தீபிகையின் பத்ராதிபர்களுடைய ஸஹாயத்தை அவலம்பித்து அந்தத் தீபிகையின் வாயிலாக இதனை ப்ரசுரம் செய்வித்திருக்கிறார்கள். சென்ற ஆடி மாஸத்திய ஸஞ்சிகையுடன் இது பூர்த்திபெற்று ஒரு புஸ்தக ரூபமாய் ஸமக்ரமாக வெளி வந்தது.

தீபிகை வாயிலாக இந்த க்ரந்தம் வெளிவந்ததைப்பற்றி நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. ஸ்ரீ தேவ

* இது இந்த க்ரந்தத்தின் முதல் சர்க்கம் 4-வது பாடலில் விளங்குகின்றது.



நாதாசார்யர், தீபிகையின் அதிகாரிகளுடன் இந்த விஷயத்தைப்பற்றி முதல் முதலில் ப்ரஸ்தாவித்தபொழுது அக்காலம் தீபிகையின் நிர்வஹணமே மிக்க ச்ரமத்துடன் நடைபெற்று வந்துகொண்டிருந்த காலமாயிருந்தபடியால், இந்த க்ரந்தத்தை ப்ரசுரிப்பதன் பாரத்தை ஏற்றுக் கொள்வது தீபிகைக்குப் பாதகமாகுமென்று அவர்கள் பயந்தார்கள். பிறகு, ஸ்ரீ தேவநாதாசார்யர், இந்த க்ரந்தத்தை அச்சுப்பதிப்பிப்பதால் ஏற்படும் செலவின் பெரும்பாகத்தைத் தாம் கொடுப்பதாக ஒத்துக் கொள்ளவே, தீபிகையின் அதிகாரிகள் அதற்கு இணங்கி, ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் எவ்வெட்டுப் பக்கங்கள் விதம் இந்த க்ரந்தத்தை ப்ரகாசிப்பிக்க ஆரம்பித்தார்கள். மூன்று நான்கு வர்ஷகாலம் அம்மாதிரி ஸ்வல்பம் ஸ்வல்பமாக ப்ரசுரிக்கப்பெற்று இப்பொழுதுதான் அது பூர்த்தியை அடைந்தது. இம்மாதிரி தீபிகையுடன் ஒன்றாகவே இது வளர்ந்து வந்ததன் பயனாக இதற்கு என்ன நன்மை நேர்ந்தது என்பதை நாம் சொல்ல அசக்தராக இருக்கிறோம்; தீபிகைக்கு அப்பொழுதைக் கப்பொழுது நேர்ந்த ச்ரமத்தை இதுவும் பங்கிட்டுக்கொள்ளும்படி ஸம்பவித்தது என்பதை மாத்ரம் நாம் அறிவோம். இந்தப் புஸ்தகத்தின் அமைப்பைச் சற்று ஊன்றிப்பார்க்கு மவர்களெல்லாருக்கும் அது நன்கு விளங்கும். உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் காகிதம் முதலிய த்ரவ்யங்களின் தாழ்மையும் அச்சுப்பதிப்பிப்பதன் சீர்மைக்குறைவும் அவைகளுக்கு நிமித்தபூதர்களாயிருக்கும் எங்களுக்கே லஜ்ஜையை ஜநிப்பிக்கின்றன. பத்தரை மாத்துத் தங்கத்தில் இழைக்க வேண்டிய ரத்நத்தைப் பித்தளையில் இழைத்து விட்டோமே என்று நாம் வருந்துகின்றோம். இதற்கு முக்ய சொந்தக்காரராக இருக்கும் ஸ்ரீ தேவநாதாசார்ய ஸ்வாமி இந்தத் தோஷத்தைச்சற்றுப் பொறுத்து நிற்பாராக.

ஆனால், ஒரு அம்சத்தில் நாம் கொஞ்சம் ஸந்தோஷத்தைச் செய்துகொள்ளவும் இடம் இருக்கின்றது. இம்மாதிரி க்ரந்தங்களை எழுதும் க்ரந்த கர்த்தாக்கள், ப்ராயேண, தமது மநஸ்ஸில் தோன்றும் அர்த்தங்களுக்கு அநுரூபங்களான வாசகங்களைத்தேடி அமைக்கும்பொழுது முதலில் தோன்றும் சில சப்தங்களை எழுதியும் பிறகு அவைகளை மாற்றியும், சில சப்தாந்தரங்களை மற்றுள்ள சப்தங்களால் அநுமாநம் செய்து கொள்ளும்படி விட்டு விட்டும், சிலவிடங்களில் பௌர்வாபர்ய மாறுதலைச் சிற்சில குறிகளால் மாத்ரம் ஸூக்ஷ்மமாக ஸூசிப்பித்தும், இவ்வாறு, பிறகு அந்த க்ரந்தம் தம்மாலேயே சரியான ஸ்வரூபத்தை அடைவிக்கும்படி ஹஸ்த லிகிதங்களை அமைப்பது வழக்கம். அம்மாதிரியே இந்த க்ரந்தமும் எழுதப்பட்டிருந்தது. தமிழில் சிறந்த ஜ்ஞாநமுள்ளவர்களைத் தவிர்த்த மற்றை எவரும் இதற்குச் சரியான ஸ்வரூபத்தை ஏற்படுத்துவதற்கும் அச்சுப்பதிப்பிப்பதற்கு அபேக்ஷிதமான சீர்திருத்தத்தைச் செய்து கொடுப்பதற்கும் சக்தராக மாட்டாரென்று தோன்றினபடியால், அப்படிப்பட்ட தமிழ் வித்வானைத் தேடிப்போகும்

படி நமக்கு ஸம்பவித்தது. அப்பொழுது தீபிகையில் அந்வயம் பெற்றிருந்த சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் உரைகடல் ஸ்ரீ. உ. வே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, மிக்க க்ருபையுடன் தாம் அந்தப் பாரத்தை வஹிப்பதாக ஏற்றுக்கொண்டார். அவருடைய பராமர்சத்தால், அந்த க்ரந்தத்திற்கு இயற்கையாக இருந்த ஒளி எவ்விதம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதைத் தமிழ் ஜ்ஞாநமுள்ளவர்க ளெல்லாரும் நன்கு அறிவார்கள். ஸ்ரீ ஸுதர்சநாசார்ய ஸ்வாமியால் ஏற்பட்டுள்ள இந்த குணாதிசயத்திற்கு, தீபிகையின் ஸம்பந்தம் ஒருவாறு காரணமாகின்றது என்பதை நினைத்து நாமும் இதனால் ஒருவித த்ருப்தியை அடைகின்றோம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஆழ்வார்களென்றும், ஆசார்யர்களென்றும் சிறந்த மெய்யடியார்கள் பலருண்டு. அவர்களுக்குள், 'த்ரமிடோபநிஷத்துக்கள்' என்று சொல்லப்படும் அத்யாத்ம விஷய ப்ரபந்தங்களை அருளிச் செய்தவர்கள் ஆழ்வார்களாவார்கள். இவர்கள் பகவானுடைய மங்கள குணங்களிலே மூழ்கி அவைகளில் நன்றாக ஆழ்ந்திருப்பவராதலால் இவர்கட்கு, 'ஆழ்வார்' என்று திருநாமம். இவர்களுடைய ப்ரபந்தங்களே ஸாரதமங்கள் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கொள்கை. இப்படி அவர்கள் கொள்கையைக் கொள்வதற்கு ப்ரதாந காரணமென்னவென்றால், வேதாந்த ரஹஸ்யத்தை இவைகளே மிக்க தெளிவுடன் வெளியிடுகின்றன என்பதே. நிற்க, இந்த ப்ரபந்தங்களை ஸேவிப்பதால் பரமாத்ம விஷயமாகச் சித்தத்திற்கு அநிர்வசநீயமான ஆநந்தாதிசய மொன்று உண்டாகின்றது என்பதும் ஸகல ஜாதியருக்கும் இவை உபஜீவ்யமாக இருக்கின்றன என்பதும் அதற்குக் காரணாந்தரங்களாகும். இதை ஸ்ரீ தேசிகன், தமது ஸ்தோத்ர ரத்ந பாஷ்யத்தில் பின் வருமாறு விளக்கி இருக்கிறார்.

"வராஶரவ்யாஸஶுகாதிபி வெதாஜாஹவு)வெஶஷ்)ாதிஶய வெஹதாஹவெதிஷஷ்: வராேதநி விதாஜகதவொெஷவெதாவ ஜீவெஷ்)ாவவ்யூஹமணா:" என்று.

ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும்,

"யதுக்த்ய-த்ஸ்ரு ஶ்ருதீநாம் ஶுநிமண விஹிவெதவெஷதிஹா வெஷ: வாராவெணஷ்தாவஸஸ வக்ஷஸீதெ: ஶமெயநஶெநஷஷ்தா ஸாவஹஸீ"

என்றும் அநுக்ரஹித்திருக்கிறார். நம்மாழ்வாருடைய திவ்ய ஸூக்தி பிறந்த பிறகு, வேதாந்த ரஹஸ்யத்தை உணர்த்தும் வ்யாபாரத்தில் வேத வாக்யங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு ஏற்பட்டது போலும்.

"யஸ்ய ஸாரஸ்வதஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம்
ஶ்ருதீநாம் விஶ்ராமாயாலம்"



இவ்வாழ்வார்கள், பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகரன், விஷ்ணு சித்தர், தொண்டரடிப் பொடி, திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், எனப் பதின்மர். நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியையும் பெரியாழ்வாரது பெண்பிள்ளையான ஆண்டாளையுங் கூட்டி ஆழ்வார்கள் பன்னிருவரென்பதும் ஸம்ப்ரதாயம். இவர்களுடைய வரலாறு, ப்ரஹ்மாண்டம் பாத்மம் மார்க்கண்டேயம் என்னும் புராணங்களிலும் வேறுசில உபபுராணங்களிலும் எதிர்கால வரலாறுகளை விவரிக்குமிடத்துக் கூறப்பட்டிருக்கின்றது. திவ்ய ஸூரி சரிதம் * ப்ரபந்நாம்ருதம் என்னும் வடநூல்களிலும், குரு பரம்பரா ப்ரபாவங்களென்கிற மணிப் பிரவாள கிரந்தங்களிலும் ப்ரபந்த ஸாரம் முதலான தமிழ்ப் பிரபந்தங்களிலும் இவர்களைப் பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன. சில க்ரந்தங்களில் விரிவாகவும் மற்றும் சில க்ரந்தங்களில் சுருக்கமாகவும் இவை வர்ணிக்கப்பட்டிருக்கிறபடியால், சிற்சில விடங்களில் ஒன்றோடொன்று முரண்படும் சில அம்சங்களையும் நாம் பார்க்கின்றோம். இவைகளை விலக்கி விட்டால், ப்ரதாந அம்சங்களில் இந்த க்ரந்தங்களுள் பரஸ்பரம் பேதம் உண்டென்று சொல்வது ஸாத்யமில்லை.

வேதாந்தார்த்தங்களைத் தர்க்கம் முதலிய சாஸ்த்ரங்களை முன்னிட்டு ஸம்ஸ்க்ருத பாஷையில் விவரித்து அது வழியாக நமக்கு உபகாராதிசயங்களைச் செய்தவர்களை நாம் ஆசார்யர்களென்று சொல்லுகிறோம். அவர்களுள் ப்ரதாநர்கள் நாத முநிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானார் ஆக அறுவர். இவர்களுள் முதல்வராகப் படிக்கப்பட்டுள்ள நாதமுநிகளுக்கு ஸாக்ஷாத் நம்மாழ்வாரே யோக தசையில் ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தாரென்றும் அவருக்குப்பின் வரும் ஆசார்யரொவ்வொருவரும் தம் தமக்கு முன் வந்துள்ள ஆசார்யர்களுடைய ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்தவரென்றும் நாம் க்ரந்தங்களிலிருந்து அறிகின்றோம். எம்பெருமானாருடைய திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளும் அவர்களுக்குப்பின் வருபவர்களும் நம் ஸம்ப்ரதாயப்படி வெவ்வேறாக இருக்கிறபடியால், எல்லாருக்கும் பொதுவாகச் சொல்லவேண்டு மிடங்களில் எம்பெருமானாருடன் இந்த ஆசார்ய பரம்பரையை முடித்துப் பேசுவது வழக்கம்.

இந்த க்ரந்தத்தில் கீழ்க்கூறப்பட்டுள்ள ஆழ்வார் ஆசார்யர்களுடைய வரலாறுகளே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மதுரகவியாழ்வாரின் வைபவம் ப்ருதக்காக வர்ணிக்கப்படவில்லை; நம்மாழ்வாருடைய வைபவத்தில் 5-வது ஸர்க்கமாக அது அமைக்கப்பட்டிருக்கின்றது. உறையூர் நாச்சியார் வைபவமென்று பதினெட்டுப் பாடல்களை அடக்கியுள்ள ஒரு சிறிய ஸர்க்கமும் ப்ருதக்காகக் காணப்படுகின்றது.

---

* இப்பெயரையே இந்த ஆசிரியர் தமது க்ரந்தத்திற்கும் வைத்திருக்கின்றார் என்பது குறிக்கத்தக்கது.

ஸ்ரீ தேசிகனுடைய வைபவமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி இவர்களுடைய வரலாறு வர்ணிக்கப்படவில்லை. இந்த இரண்டு மூன்று அம்சங்களைத் தவிர்த்து மற்றை ப்ரகாரங்களெல்லாவற்றிலும் இந்நூல் பூர்வ க்ரந்தங்களை அநுஸரித்தே பேசுகின்றதென்றும், தக்க ஆதாரமின்றிக் கேவலம் கற்பனையாக யாதொரு கதையும் இதில் எழுதப்படவில்லையென்றும் நாம் த்ருடமாகச் சொல்வோம்.

இவர்களுடைய கால நிர்ணயத்தைப்பற்றி நாம் விசாரிக்கப் புகுவது இவ்விடத்தில் அவசியமில்லை யாதலால், அதில் நாம் ப்ரவர்த்திக்கவில்லை. ஆசார்யர்கள் ஸம்பந்தப்பட்டபர்யந்தம், நாதமுனிகள் சற்றேறக் குறைய ஆயிரத்து நூறுவருஷம் முன் இருந்ததாகவும் அவருடைய பௌத்ரராகிய ஆளவந்தார் அதற்கு நூறு வருஷம் பிந்தியும் [916-1040], எம்பெருமானார் என்று சொல்லப்படும் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் ஆளவந்தார் காலத்திற்குப் பிறகு நூறு வருஷத்திற்குள் இருந்ததாகவும், [1017-1137] அதற்குப் பிறகு இருநூறு வருஷத்திற்குள்ளாக ஸ்ரீ தேசிகனுடைய காலமென்றும் [1268-1369] நிர்விவாதமாக ஏற்படுகின்றது. ஆழ்வார்களுடைய காலத்தைப்பற்றி அம்மாதிரி நிர்ணயம் காணப்படவில்லை. அவர்களுடைய காலம் நாதமுனிகள் காலத்திற்கு அநேக வருஷங்கள் முன்னதாகவே இருந்திருக்க வேண்டும் என்று மாத்ரம் சொல்லக்கூடும். இவ்வளவுக்கு மேற்பட்டு இது விஷயமாக அதிக சர்ச்சையில் ப்ரவர்த்திப்பது நிஷ்ப்ரயோஜநமாக இருக்குமாதலால் நாம் இதிலிருந்து நிவ்ருத்தராகிறோம்.

இவர்களுடைய சரித்ரத்தைப் பற்றியும் நாம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளப் போவது அதிகம் இல்லை. வடகலை குருபரம்பரை தெங்கலை குருபரம்பரை ஆக இந்த இரண்டு க்ரந்தங்களுமே அந்தச் சரித்ரத்தை விஸ்தாரமாக விளக்கும் க்ரந்தங்கள். இந்நூலின் ஆசிரியரும் அந்த க்ரந்தங்களையே ப்ரதாந ஆதாரமாகக் கொண்டிருக்கிறார் என்பது இந்நூலிலிருந்தே நன்றாக விளங்குகின்றது. ஆனால், இந்தக் குரு பரம்பரா க்ரந்தங்களுள் காணப்படும் சிற்சில ஐதிஹ்யங்கள் உண்மையாக நடை பெற்றவைதாமோ என்னும் ஒரு ஸம்சயம் மாத்ரம் நமக்கு உண்டு. கேவலம் பகவத் க்ருபையால் மாத்ரம் நேரக்கூடிய அதிமாநுஷ ஸம்பவங்களை நாம் சிறிதேனும் ஆக்ஷேபார்ஹமாகச் சொல்லமாட்டோம். யோக மஹிமையாலும் சக்தி விசேஷத்தாலும் ஆச்சர்யகரங்களான கார்யங்கள் நேரக்கூடும். ஆனால் அப்படிப்பட்ட ஆச்சர்ய கரங்களான ஸம்பவங்களை வர்ணிப்பது மாத்ரமின்றிக்கே சாஸ்த்ர விருத்தமான கார்யங்களையும் அந்த ஐதிஹ்யங்கள் சிற்சில விடங்களில் வற்புறுத்துகிறபடியால், அப்படிப் பட்ட விருத்தாநுஷ்டாநங்களின் வர்ணநத்தைக் கல்பிதங்களென்றே சொல்லவேண்டுமென்பது நமது அபிப்பிராயம். ஸாதாரண மனிதர்கள் போலத் தாமாக முயன்று தத்வஜ்ஞாநத்தைப் பெறுதலின்றி எம்பெரு



மான் தானேவந்து தன்னைக் காட்டிக்கொடுக்கக் கண்டு ஜ்ஞாந வைராக்ய பக்திகளை எளிதிற் பெற்று, ப்ரபஞ்சத்தவரைப் பிறவிப் பெருங்கடலினின்று கரையேற்றவென்றே பூலோகத்தில் திருவவதரித்த அநந்த கருட விஷ்வக்ஸேநர்முதலான நித்ய ஸூரிகளும், தமது ஆயுள் நாளில் பகவதாஜ்ஞையாகிற சாஸ்த்ரத்தை அதிக்ரமித்தும், அக்ருத்ஸ்நவித்துக்களான ஸாமாந்ய ஜநங்களைத் தர்ம மார்க்கத்திலிருந்து சலிப்பிக்கும்படிக்கும் நடந்தார்களென்றால் அது எவ்விதத்தில் விச்வஸிக்கக்கூடியதாகும்? கர்ம பந்தத்திற்கு உட்பட்டிருந்த விச்வாமித்ரர் முதலானோர் மேநகை முதலியவர்களுடைய வலையில் அகப்பட்டுக்கொண்டார் என்பது உபபந்நமாகலாம்; "மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர் கற்றினமேய்த்தகழலிணைக்கீழுற்ற திருமாலை பாடுஞ் சீர்த்தொண்டர் பொடியெம்பெருமானை யெப்பொழுதும் பேசு" என்று கொண்டாடக்கூடியவரும் வைஜயந்தி என்னும் வனமாலையின் அம்சமானவருமான தொண்டரடிப் பொடியாழ்வாரும் தேவ தேவியின் வலையில் அகப்பட்டாரென்றால் அது நம்பத் தகுந்ததாகுமோ? அப்படி காமக்ரோதாதிகளுக்கு ஒரு பொழுதும் இரையாகாமல் இருப்பதன்றோ ஆழ்வார்களின் ஏற்றம்? தேவதைகளின் ப்ரபாவத்தைச் சரிவர அறியாத ஸங்குசித ஜ்ஞாநத்தை உடைய இந்த்ராதிகள் ஸத்வ குணம் குறைந்து ரஜஸ்தமஸ்ஸுக்கள் மேலிட்டிருக்கும் காலங்களில் பெரியோர்களை அவமதிப்பது ஸஹஜமாயிருக்கலாம்; குணத்ரயத்தைத் தாண்டி நிற்கும் திருவாழி யாழ்வானின் அம்சமான திருமழிசைப் பிரானும் ராகத்வேஷாதிகளுக்கு வசமாகி, பாகவதோத்தமனென்று கொண்டாடப்படும் ஈசனை அவமதிப்பது அவருக்கு அநுரூபமாகுமோ? தேவதாந்தரத்தைப் பரதேவதை யென்று கொண்டாடுவதே பாரமைகாந்த்ய விருத்தமென்பதை அவர் அறியமாட்டாரோ? 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்னும் வாக்யத்துக்குக் கட்டுப்பட்டு அந்திம திவஸாவதியாக சாஸ்த்ரீய நியமங்களை உள்ளபடி அநுஷ்டித்து வந்த பரமாசார்யன், "ஸந்ந்யாஸிந: பரிவ்ராஜகதாபஸா:' என்று இப்புடையில் நிந்திக்கப் கப்பட்டிருக்கும் ஸ்வதர்ம ப்ரம்ச ரூபமான கார்யத்தைச் செய்யத் துணிந்தாரென்றும், தமது ஆசார்யனுடைய ஸந்நிதியில் தம்மாற் செய்யப் பட்ட ப்ரதிஜ்ஞையைக் கடந்தாரென்றும் இன்னும் இவைபோன்ற வேறு அசாஸ்த்ரீய கார்யங்களைச் செய்தாரென்றும் சொல்வது ஸாஹஸமன்றோ? இவைபோன்ற அநுபபந்நங்களான ஐதிஹ்யங்களை, 'அவை கேவலம் சிஷ்ய ப்ரசிஷ்யர்களுடைய ப்ரதிபத்தி அதிசயத்தின் கார்யங்களே' என்று ஸ்துதிபரமாக எடுத்துக்கொள்வதுதான் உசிதமாகுமே தவிர்த்து அவைகளை வஸ்து ஸ்திதியாக நினைத்து அம்மாதிரியே அவைகளை நூல்களில் அமைப்பது உசிதமாகுமோ என்பது நமது அதிசங்கை. ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக இதை நாம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப் புகுந்ததைப் பெரியோர்கள் க்ஷமித்தருளவேணும்.

மற்றைப்படி இந்நூலில் சொற்செறிவு அர்த்தபுஷ்டி லாலித்யம் முதலியவைகளைப்பற்றி, தமிழ்ப் பாஷையில் எவ்வித ஜ்ஞானமுமற்று இருக்கும் நாம் பேச முயல்வது மிகவும் ஸாஹஸமாகும். ஆனாலும், பாகாதிகளில் ஜ்ஞானமற்றவர்களும் பக்வாந்நத்தின் ரஸத்தை உணர்வதுபோலும், ஸங்கீதத்தில் ஸ்வல்ப பயிற்சிக்கும் ஸம்பாவனையிராமல் இருக்கும் பசுசிசு முதலியவர்களும் கானத்தை அநுபவிப்பதுபோலும், நாம் இந்நூலின் மஹிமையை அநுபவிக்கிறோம் என்று சொல்லத் துணிவோம். பக்ஷ்யத்தின் ஸ்வாரஸ்யம் உண்பதால் தெரியுமென்று பாஷாந்தரத்தில் பழமொழி ஒன்று உண்டு. ரஸம் என்னும் விஷயத்தில் அத்யந்தம் அஜ்ஞராயிருக்கும் நம்மையும் இந்த நூல் ஆநந்திப்பிக்கின்றதென்றால் அந்த நூலின் மஹிமையை அதிலிருந்தே எல்லாரும் அநுமித்துக்கொள்ளலாம். இந்தத் திவ்ய ஸூரிசரிதம் வஸ்து ஸாமர்த்யத்தால் சாச்வதச்ரேயஸ்ஸுக்கும் உபகாரகமாகுமாதலால், இதை ஆஸ்திகர்களெல்லாரும் ஸேவிப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

மாம்பலம், மதராஸ். }
20—8—'37 }

வங்கீபுரம் வாஸுதேவாசார்யன்

Liberty Press, Madras.

# ஸ்ரீமத் அண்ணயார்ய மகா தேசிக வைபவம்

[கூத்தப்பாக்கம் உ. வே. ஸ்ரீ. ந. ச. நரசிம்மாசாரியர்]

(முன்தொடர்ச்சி)

பாஹ்யோபசாரங்களைக் காட்டிலும் மாநஸோபசாரங்களை ஸர்வேச்வரன் அதிக உகப்புடன் திருவுள்ளம் பற்றுகிறான் என்று புராணங்களிலும் ஆகமங்களிலும் சொல்லியிருக்கிறபடியால், தன்னுடைய ஹ்ருதய கமலத்தில் குடி கொண்டிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ மூர்த்தியை இரத்நங்களால் இழைக்கப்பெற்ற ஒரு மண்டபத்தில் ஆஸநத்தின் மீது வீற்றிருப்பதாக த்யானித்து, ஸ்நாநம், வஸ்திரம், உபவீதம், சந்தநம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம் முதலான ஸர்வோபசாரங்களையும் ஸமர்ப்பித்து, தன்மனோபாவனைக்கு ஏற்றபடி விசேஷச் சிறப்புடன் திருவாராதநங்களை நடத்தி வந்தார். ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை ஜபிக்கும் போது, ஜபமாலையைக் கொண்டு கணநம் செய்வதைக் காட்டிலும் விரல்களின் கணுக்களால் கணநம் செய்வது சிறந்தது என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடியாலும், ஒவ்வொரு தடவையிலும் சங்கியையை எண்ணாமல் ஜபம் செய்வதைக்காட்டிலும் எண்ணிச்செய்வது நன்று என்று, ஸ்மிருதிகளில் விதித்திருக்கிறபடியாலும் அப்போதைக்கப்போது சங்கியையை கணநம் செய்து கொண்டும், உரத்த குரலால் ஜபிப்பதைக்காட்டிலும் தனக்கு மாத்திரம் கேழ்க்கும்படி மந்திரத்தை ஜபிப்பது நல்லது. அதைக்காட்டிலும் ஓசையேயின்றி நாக்கினாலேயே மந்திரங்களை உச்சரிப்பது சிறந்தது என்றும், அதைக்காட்டிலும், உதடுகூட அசையாமல் மனதிலேயே ஆவ்ருத்திசெய்வது மிகச்சிறந்தது என்றும், விதித்திருக்கிறபடியால் அப்படியே மாநஸமாகவே மந்திராவ்ருத்தி செய்து கொண்டும் தீவ்ரதமமான வ்ரதத்தை வெகுகாலம் நடத்திவந்தார். மந்திரத்தை ஆவ்ருத்தி செய்யும்போது ஒவ்வொரு அக்ஷரத்திலும் ஒவ்வொரு பதத்திலும் கவனம் செலுத்தி மந்திர ப்ரதிபாத்யமான தேவதையை ப்ரத்யக்ஷமாய் ஸேவிப்பதுபோல் மேன்மேலும் தெளிவடைந்த த்யானத்தால் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு அந்த த்யாநதசையே அவருக்கு சுகரூபமாயிருந்தபடியால் பரமாநந்தபரிதரானார்.

இப்படி வெகுகாலம் தவம் புரிகையில் ஒரு நாள் இராத்திரி, புஷ்கரிணீ ஜலத்தின் நடுவில் நின்று மந்திராவ்ருத்தி செய்து கொண்டிருக்கும் இந்த ஸ்ரீரங்கநாத மஹாதேசிகனுக்கு கண்ணெதிரில் ஒரு புருடவடிவம்

தோன்றியது. சீதை அசோகவனத்தில் எழுந்தருளி இருந்தபோது, அவள் தன்னெதிரில் நின்ற இராக்ஷசிகளையும், செடி, மரம் முதலான பதார்த்தங்களையும் காணாமல் சக்கிரவர்த்தித் திருமகனையே இடைவிடாமல் த்யானித்து, எங்கும் அவருடைய உருவத்தைக்கண்டாள், என்று ஸ்ரீவால்மீகி பகவான் அருளிச் செய்திருப்பதுபோல் இவர் திருக்கண்களை மூடிக் கொண்டு அநவரதபாவநம் செய்து கொண்டிருந்தபடியால் இவருக்கு அது ஸ்வப்நாநுபவம் போல் இருந்தது. இப்படி அந்த புருஷன் எதிரில் தோன்றி நின்று ‘நெடுங்காலமாய் நீர் நடத்தி வந்த வ்ரதம் தலைக்கட்டிற்று. இனி வ்ரதம் புரியவேண்டாம். உம்முடைய அபிமதப்ரகாரம் உமக்கு ஸர்வசாஸ்திரங்களிலும் தட்டுத்தடையின்றி செல்லக்கூடிய நுட்பமான புத்தியைத் தந்தோம். இதற்கு மேல் நீர் ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியை அர்ச்சையாக எழுந்தருளப்பண்ணி ப்ரதிதினம் ஆராதித்து வர அவனது அநுக்ரஹத்தால் உமக்கு ஸகலவித நன்மைகளும் உண்டாகப்போகின்றன” என்று சொல்லி மறைந்தான்.

இவ்விதம் நிகழ்ந்த பின், இந்த ரங்கநாத மகாதேசிகன் மிக்க ஆச்சர்யத்தையும் குதூகலத்தையும் அடைந்தார். நான்முகனிடம் வரம் பெற்ற வால்மீகியைப் போன்றவராகத் தன்னைத் தானே மதித்துக் கொண்டார். புஷ்கரிணியில் நின்றும் கரையேறி ஒரு மரத்தடியில் வீற்றிருந்து அன்றிரவைக் கழித்தார். தனக்கு நேர்ந்த நிகழ்ச்சியை த்யானித்து த்யானித்து ஆனந்த பரவசமானார். தேஹமெங்கும் சிலுத்தது. கண்களின் நின்று ஆநந்தக் கண்ணீர் தாரை தாரையாய் வடிந்தது. இவ்விதமே உறக்கமின்றி இரவைக் கழித்து காலையில் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தனது அம்மான் வீடாகிய கொத்திமங்கலம் சென்று அவ்விடத்தில் ஜபத்திற்கு அங்கமாக விதிக்கப்பட்டிருக்கிற ஹோமங்கள், தர்ப்பணங்கள், ப்ராம்மண போஜநங்கள் இவற்றை சரிவர நடத்தி, இரண்டொரு தினங்களை அங்கே கழித்து தனது சொந்த பூமியாகிய நாவல் பாக்கத்திற்கு எழுந்தருளினார். அங்கு ஸ்ரீ ஹயக்ரீவனை அர்ச்சா மூர்த்தியாய் எழுந்தருளப் பண்ணி, பெருமாள் கோயிலில் பேரருளாளன் திருவாராதநத்தை நடத்தி வந்த வாஸுதேவ பட்டரை ஸஹாயமாய் வைத்துக்கொண்டு ஸ்ரீ பாத்ம ஸம்ஹிதையில் சொன்ன ப்ரக்ரியையாலே திருப்ரதிஷ்டை செய்து திருவாராதநம் நடத்தி வந்தார். இந்த ஸ்ரீ ஹயக்ரீவ திவ்ய மங்கள விக்ரஹத்தில் பகவதாவிர்ப்பாவம் மிக்க விசேஷமாயிருந்தது என்று சொல்லுவதற்கு அநேக காரணங்கள் உண்டு. பகவானுக்கு அஸாதாரணமாகச் சொல்லப்பட்ட ஷாட்குண்யம், அதாவது ஆறு குணங்கள் எங்கு விசேஷமாய் விளங்குகின்றனவோ அவ்விடத்தில் பகவானுடைய ஆவிர்பாவம் அதிகம் என்று ஊகிக்கலாம். இந்த சம்பவத்திற்கு முன் நாவல்பாக்கம் என்ற



க்ராமம், ஒரு ஸாதாரண க்ராமமாகவே இருந்தது. அவ்வூரில் கோயில் இருந்ததில்லை. ஊரிலும் விசேஷமாகப் படித்து ப்ரசித்தி பெற்ற வித்வான்களும் இருந்ததாகத் தெரியவில்லை. க்ராமத்தில் வசிப்பவர் வ்யவஸாயத்தையே முக்கிய ஜீவநோபாயமாய் வைத்து ஸாதாரண ரீதியில் காலக்ஷேபம் செய்து வந்ததாகவே தெரிய வருகிறது. இப்படி இருக்க இந்த ஸ்ரீ ரங்கநாத மகாதேசிகன் இங்கு ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியை திருப்ரதிஷ்டை செய்து திருவாராதநம் செய்யத்துவக்கின பின், இவ்வக்ரஹாரத்திற்கு விசேஷ சோபை உண்டாயிற்று. தேவாலயம் இல்லாமல் இருந்த அவ்வூருக்கு உடனே தேவாலயம் உண்டாயிற்று. அங்கு கலியுக ப்ரத்யக்ஷ தைவமான திருவேங்கட முடையான் ஆவிர்ப்பவித்து நித்யோத்ஸவ விசேஷோத்ஸவாதிகளை இப்போதும் கண்டருளுகிறார். க்ராமத்தில் வசிக்கும் ஸ்ரீ வைஷ்ணவரனைவரும் தங்கள் சிறுவர்களை வெகு ஊக்கத்துடன் படிப்பிக்க வாரம்பித்தார்கள். அனைவரும் ப்ராதஸ்நாநம், ஸந்த்யோபாஸநம், ப்ரும்ம யஜ்ஞம் முதலான நித்ய கர்மங்களிலும் நைமித்திக கர்மங்களிலும் விசேஷ ஆஸ்திக்ய புத்தியுடன் அநுஷ்டாநம் செய்தனர். சிறிது காலத்தில் அவ்வூரில் வசிப்பவர் அனைவருமே வித்வான்கள் என்று சொல்லக் கூடிய நிலைமைக்கு வந்தது. இதல்லாமல் காலத்தில் மழை பெய்து அவ்வூரில் விசேஷ சுபிக்ஷம் உண்டாயிற்று. இவையெல்லாம் ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருப்ரதிஷ்டை காரணமாக வந்தவை என்று சொல்லுவதற்கு ஆக்ஷேபமே இல்லை. (தத்காலம் அவ்வூரில் நடந்து கொண்டிருந்த வேதாத்யயந வைகரியையும், காவ்ய நாடகாலங்கார பாடப்ரவசந ரீதியையும், பக்தி ச்ரத்தா புரஸ்ஸரமான நித்ய கர்மாநுஷ்டாந தோரணியையும், ஒழிவுள்ள ஸமயங்களில் வித்வத்கோஷ்டி செய்து வரும் சாஸ்திரார்த்த விசார பத்ததியையும் பார்த்து மன மகிழ்ந்த பெரியோரால் அவ்வூர் விஷயமாய் அருளிச் செய்யப்பட்ட ச்லோகம் ஒன்று, இதற்கு முன் ‘வேதாந்த தீபிகை’ ஸஞ்சிகையில் 62ம் பக்கத்தில் 5வது ச்லோகமாக காட்டப்பட்டிருக்கிறது. அதை தீபிகாபிமானிகள் அனைவரும் வாசித்தால் எல்லா கிராமங்களுமே இவ்விதமிருக்குமானால் நமது பூலோகமே வைகுண்டமாகும் என்று தெரிந்துகொள்ள இடமுண்டு.)

இபபடி இவர் ஸ்ரீஹயக்ரீவனுடைய அருளால் அளவற்ற அறிவு பெற்று தர்க்கவ்யாகரணாதி ஸாமாந்ய சாஸ்திரங்களைக் கற்க வந்த சிஷ்ய வர்க்கங்களை வெகுகுதூகலத்துடன் படிப்பித்து ஸ்வல்பகாலத்தில் பலரைப் பண்டிதராக ஆக்கி வெளி அனுப்பினார். அவர் நாநாதேசங்களில் சென்று மஹாஸபைகளில் வாதங்களைச் செய்து இந்த ரங்கநாத மஹா தேசிகனுடைய புகழை நாடெங்கும் பரவச் செய்தனர். நாநாதேசத்து வித்வான்கள் இந்த ஸ்வாமியுடைய ப்ரசித்தியைக் கேட்டு இவருடன் வாதம் செய்ய

குசாஹலிகளாய் வந்து இவருடைய சாமார்த்தியத்தைக் கண்டு வியந்து, கௌதமஹர்ஷியோ, கௌதம மஹர்ஷிதானோ இப்படி அவதரித்திருப்பது என்று சொல்லிப்போந்தனர். இந்த ஸ்வாமி தன்னிடம் வித்தை கற்கவந்த வித்யார்த்திகளுக்கு ஆஹார ஸௌகர்யங்களை தமது அகத்திலேயே செய்து வைத்து வித்யாப்ரதானம் செய்து வந்ததால், துண்டீர மண்டலம் எனப் பெயர் பெற்ற இக் காஞ்சீ ப்ரதேசம் முழுவதும் வித்வான்களால் நிறைந்ததாயிற்று, எல்லா சாஸ்திரங்களிலும் தடையின்றி ப்ரவேசிக்கக் கூடிய நுண்ணறிவும், தர்க்க சாஸ்திரத்தில் விசேஷ பாண்டித்யமும் வாய்ந்த இவர், வேதாந்த வித்யையை முறைப்படி க்ரஹிக்க ஆசார்யனைத் தேட வாரம்பித்து, தற்காலம், ஸ்ரீ ரங்கம் ஸ்வாமி என்று ப்ரசித்தி பெற்று ஸ்ரீ ரங்கத்திலே எழுந்தருளி இருந்த ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி ஸன்னிதிக்கு நான்கு சிஷ்யர்களுடனே எழுந்தருளினார். இந்த ஸ்ரீ ரங்கம் ஸ்வாமி திருக்குடந்தை தேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்த மூன்று யதிகளில் ஒருவர். திருக்குடந்தைக்கு ஸமீபத்தில் வழுத்தூர் என்ற ஸ்ரீ க்ராமத்தில் நைத்ருவகாச்யப கோத்திரத்தில் அவதரித்தவர். திருக்குடந்தை தேசிகனிடத்தில் ஸகலார்த்தங்களையும் க்ரஹித்து ரைக்வரைப் போலே மஹா விரக்தராய் ப்ரும்மவித்யா நிதியாய் எழுந்தருளி இருந்தார். இந்த ரங்கநாத மஹா தேசிகன் அந்த ஸ்ரீ ரங்கம் ஸ்வாமியிடம் சென்று முறைப்படி அடி பணிந்து, வேதாந்த வித்தையை ப்ரஸாதித்தருள வேணும் என்று ப்ரார்த்தித்தார். அந்த ஸ்வாமியும் மூன்று மாஸமாவது சிஷ்யனைப் பரிசோதனை செய்து பிறகு உபதேசிக்கவேணும் என்ற சாஸ்திர விதி தவறாமல் இவரை மூன்று மாஸ காலம் வசிக்கச் சொல்லி, இவர் வித்யாப்ரதாநத்திற்கு உத்தம பாத்திரம் என நிச்சயித்து, ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் முதலானவற்றை ஸத் ஸம்பிரதாயாகதமான அர்த்தத்தோடு ப்ரஸாதித்தருளினார். அப்படியே ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணத்தையும் செய்து க்ருத க்ருத்யராக்கியருளினார். இதற்குள் ரங்கநாத மகா தேசிகனுக்கு முதிர்ந்த வயது வந்தது. வெகு காலம் குரு குலத்தில் வசிக்கவேணும் என்று ஆவல் கொண்டிருந்தும் அதற்கு இயலாத தன்னுடைய நிலைமையைக் கண்டு வருத்தமுற்று, ஆசார்யனிடம் ஸ்வக்ராமம் செல்லவநுமதி தரவேணும் என்று விண்ணப்பம் செய்தார். ஆசார்யனும் இவருடைய ஞான வைராக்யாநுஷ்டாநங்களைக் கண்டு மிகவும் உகந்து, இவருடைய அறிவை மேன்மேலும் சிறப்பிக்கக் கருதி, அதற்காக ஸ்ரீ ரங்கநாதனிடம் பரஸமர்ப்பணத்தை அநுஷ்டித்தார். வசிஷ்ட பகவான் பராசர ப்ரும்மரிஷிக்கு "देवतापारमार्थ्यञ्च यथावद्वेत्स्यते भवान्" என்று அநுக்ரஹித்தது போலே "உமக்கு வேதாந்தார்த்தங்கள் அனைத்தும் தெளிவுற விளங்கும்"



என்று அருளி அனுப்பினார். இவரும் ஸ்வக்ராமம் எழுந்தருளி ஸதாசாராநுஷ்டாநங்களாலே ஸகல ஸாது ஜநங்களால் ப்ரசம்ஸிக்கப்பட்டு அநேக சிஷ்யர்களுக்கு வேதாந்த வித்யாப்ரதாநத்தால் ஆசார்யகம் செய்து கொண்டு ஸத்வோத்தரராய் எழுந்தருளி இருந்தார்.

(தொடரும்)

---

# காலாநுகுண ஆந்ஹிகம்

பத்ராதிபர்கள்

(முன் தொடர்ச்சி)

வடமொழியில் அஹஸ் என்னும் சொல்லுக்கு ஒரு நாள் என்று பொருள். ஆன்ஹிகம் என்றால் ஒரு தினத்தைச் சேர்ந்தது, அதாவது ஒரு தினத்தில் செய்யவேண்டிய கார்யங்கள். ஒரு தினத்தில் இன்னின்ன கார்யங்கள் செய்யவேண்டியவை என்று நிர்ணயிப்பதன் பொருட்டு பல விஷயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டியதுண்டு. அதாவது தனது ஜாதிக்குரிய தர்மத்தையும் தான் ஏற்றுக்கொண்ட ஜீவனோபாயத்தையும் கவனித்து இரண்டுக்கும் விரோதமின்றி நித்யகர்மங்களை நிர்ணயம் செய்து கொள்ளவேண்டியது. இந்த ஆன்ஹிகம் என்னும் பெயர் தர்ம சாஸ்திர நிபந்தநக்காரர் ஏற்படுத்திய பெயர் என்று தோன்றுகிறது. வ்யாகரண மஹா பாஷ்யம் இயற்றிய பதஞ்ஜலி, தான் இயற்றிய நூலில், முதல் ஆன்ஹிகம், இரண்டாவது ஆன்ஹிகம் என்று உட்பிரிவுகளை பிரித்திருக்கிறார். அந்தப்பெயரை தர்ம சாஸ்திர நிபந்தநக்காரர் எடுத்துக் கொண்டனர் போலும். வைத்திய சாஸ்திரத்தில் ப்ரதி தினம் செய்யவேண்டிய கார்யங்களுக்கு தினசர்யா என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீ பாஞ்சராத்திரரக்ஷையில் இதற்கு தினசர்யா என்னும் பெயரையே வழங்குகிறார். ஆனால் ஆன்ஹிகம் என்னும் பெயரை ந்யாய பரிசுத்தியில் அத்யாயத்தின் உட்பிரிவுக்கு உபயோகப்படுத்தியிருக்கிறார். ஆனாலும் ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் திருவுள்ளம் பற்றினது என்ற காரணத்தைக் கொண்டே நாம் இந்தப் பெயரை வழங்கக்கூடும். ஒரு தினம் என்பது எதுமுதல் எதுவரை? என்று விசாரிப்போம். ஸூர்யோதயம முதல் மறு ஸூர்யோதயம் வரை ஒருதினம் என்பர் சிலர். மற்றும் சிலர் மேற்சொன்ன கால அளவு ஞாயிறு திங்கள், முதலான வாரங்களுக்கு மாத்திரம் ஏற்பட்டது மற்றதுக்குப் பொருந்தாதென்பர். சிலர் उदयादुदयं वारं अभिधत्ते समूदधी: என்று வசனத்தைக்கொண்டு வாரத்திற்குக்கூட இக்கால அளவை ஒப்புக்கொள்ளவில்லை. மஹாபாஷ்யம் இயற்றிய பதஞ்ஜலி பகவான் அத்யதந என்னும் பாணிநி ஸூத்திரத்தைச் சேர்ந்த பதத்தை வ்யாக்யா

க்கும்போது 'நேற்று இரவு பின்பகுதி தொடங்கி, வரப்போகும் இராத்திரி முன்பகுதி வரை உள்ள காலத்தை இன்று என்று உபயோகிக்கவும்' என்று சொல்லுகிறார். இந்த பரிபாஷையையே மேனாட்டாரும் அங்கீகரிக்கிறார்கள். இது தவிர மற்றொரு விதமும் உண்டு. ஜநன மரணாதிகளுக்கும் ஆசௌசங்களுக்கும் தினநிர்ணயம் செய்யுமிடத்தில், தர்ம சாஸ்திரங்களில் கூறியதாவது--இராத்திரியில் முன்னும் பின்னும் இரண்டு ஸந்தியா காலங்களுக்காக ஒரு யாமம் ஏழரை நாழிகைகள், அதாவது மூன்று மணி நேரத்தை தள்ளிவிட்டு நடுபாகத்தை இரவாக எடுத்துக்கொண்டு அந்த இருபத்திரண்டரை நாழிகைகளில் மூன்றில் இரண்டு பாகத்தை முன் தினமாயும், மூன்றாவது பாகம் தொட்டு பின்தினமாகவும் காண்க என்று. அதாவது இரவு $18\frac{3}{4}$ நாழிகைக்குள் நடந்ததை முன்தினத்தைச் சேர்ந்ததாகவும், அதற்குப்பின் நடந்ததை மறு தினத்தைச் சேர்ந்ததாகவும் கொள்க என்பது. இப்போது நாம் விசாரிக்கப்போகும் ஆன்ஹிகத்திற்கு கீழ்ச்சொன்ன கால வரைகளில் ஒன்றும் உபயோகப்படக்கூடியதல்ல. சூர்யோதயத்திற்கு முன் அருணோதயம் காண்கிறதல்லவா." அந்த அருணன் உதிக்கும் காலத்தையே தினத்திற்கு ஆரம்பமாக வைத்துக் கொள்ளவேணும். இப்படியே ஸ்மிருதிகள் கூறுகின்றன. அருணன் உதிக்கும் காலத்தை நாழிகை நிமிஷங்களுடன் சரியாகக் கண்டு பிடிப்பது ப்ரயாஸமென்று கருதி அநேக ஸ்மிருதிக்காரர் சூர்யன் உதிப்பதற்கு நாலு நாழிகைகள் முன் அதாவது ஒரு மணி முப்பத்தாறு நிமிஷங்கள் முன் அருணோதயகாலம் என்று அதை வரையறுத்து வைத்திருக்கிறார்கள். அதையே நாம் இங்கு அங்கீகரிப்பது உசிதம். கீழ்ச்சொன்ன காலத்திற்கு ப்ராம்ம முகூர்த்தம் எனப் பெயர். இது மகா புண்யகாலம். இக்காலத்தில் எந்த ஜலமும் தெளிவுற்றிருக்கும். நம்முடைய மனமும் மிகத் தெளிவாயிருப்பது அநுபவ சித்தம். சரீரத்தில் வியாதிக் கோளாறு இல்லாதவனுக்கு இக்காலத்தில் தானே கண்விழிக்கும். இராத்திரி காலத்தை நான்கு பாகமாகப்பகுத்து அதில் மூன்று பாகங்கள் கழிந்தபின் அதாவது $22\frac{1}{2}$ நாழிகை 3. A. M. ஆனவுடன் எழுந்திருக்கவேணும் என்று சில ஆன்ஹிகக்காரர் கூறுகின்றனர். வைத்திய சாஸ்திரிகளும், முன் சொன்ன நான்காவது யாமத்தில் எழுந்து முதல் நாள் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாச்சுதா, இல்லையா? என்பதை கவனிக்கவேணும் என்றும், அப்படி ஜீர்ணமாகாமல் இருந்தால் மறுபடி உறங்கவேணும் என்றனர். அந்த உறக்கமும் காலை ஸந்த்யா காலம் வரும்வரை அதாவது அருணோதய காலம் வரையிலேயே செய்யத் தக்கது. சரீரம் நமது இஷ்டப்படி கார்யங்களைச் செய்ய உபயோகப் படுகிறதில்லை என்று சரீரத்தின் மீது பழியை சுமத்தி, செய்யவேண்டிய கார்யங்களைவிட்டு விடுவது உசிதமல்ல. நமது சரீரத்தை நாம் இட்ட வழக்காம்படி செய்து கொள்ள வேண்டிய பொருப்பு நம்மைச் சேர்ந்ததே. சரீரம் போகும் வழியே நாம் போவது நமது புத்திக் குறைவைக் காட்டும்.



अनेक दोषदुष्टस्य कायस्यैको महान् गुणः ॥
यो यथा वर्तयत्येनं तं तथैवानुवर्तते ॥ என்றும்

பூர்வர்கள் அருளிச்செய்தது. அதாவது :—

நமது சரீரத்தில் அநேக தோஷங்கள் இருந்தபோதிலும் அதில் விசேஷ குணம் ஒன்றுண்டு. அதை நாம் எப்படி பழக்குகிறோமோ அப்படியே நம்முடைய வழியைப் பின் பற்றி வருகிறது. சரீரம் ஒரு அசேதநமான வஸ்து. நமது இஷ்டப்படி கார்யங்களைச் செய்யும் பொருட்டு ஈச்வரனால் அளிக்கப்பட்ட ஒரு கருவியாகும். சிறுபிராயம் முதற்கொண்டே இச்சரீரத்தை நமது இஷ்டப்படி கார்யங்களைச் செய்ய பயன்படுமாறு பழக்கிக்கொள்வது புத்திசாலிகளின் கார்யம். இந்த தினசர்யாக்ரமத்தைக் கொண்டே தேஹத்தை ஸ்வாதீநப்படுத்துவது ஸாத்யமாகும். வைத்ய சாஸ்திரம் அர்த்த சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் தர்மசாஸ்திரம் இவற்றை நன்கு ஆராய்ந்து ஒன்றோடொன்று முரண்படாமல் திநசர்யாக்ரமத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியது. ஒவ்வொரு சாஸ்திரத்திற்கு ஒவ்வொன்றில் நோக்கு. வைத்திய சாஸ்திரத்திற்கு ஆரோக்யத்திலும், தர்மசாஸ்திரத்திர்கு வர்ணாச்ரமதர்மத்திலும், வேதாந்த சாஸ்திரத்திற்கு மோக்ஷ புருஷார்த்தத்திலும், அர்த்த சாஸ்திரத்திற்கு இல்லற வாழ்க்கையிலும் நோக்காகும் மேற்சொன்ன சாஸ்திரங்களை இயற்றியவரில் ஒவ்வொருவரும் மஹா மேதாவியானதாலும், ஜனங்களை நன்மைப்படுத்துவதற்காகவே நூற்களை இயற்றியவராதலாலும், ஒன்றோடொன்று பெரும்பாலும் முரண்பாடு வராது. அப்படி வருமானால் வைத்திய சாஸ்திரத்தையும் தர்ம சாஸ்திரத்தையும் முக்கியமானதாய் எடுத்துக்கொண்டு இவற்றுக்கு விரோதமின்றி மற்றவைகளை பின்பற்ற வேணும். இவ்விஷயத்தை மநுதர்ம சாஸ்திரத்தில் விளங்கக் காணலாம்.

மாணாக்கர் விடியற்காலையில் எழுந்து தங்களது பாடங்களை படிக்க வேணும். மற்றவர் தங்களுடைய ஹிதத்தை சிந்திக்கவேணும். வழிநடப்பவனுக்கு தூர திருஷ்டியும் ஸமீப திருஷ்டியும் இரண்டும் தேவை. இன்ன இடத்திற்குப் போய் சேரவேணும் என்ற தீர்மானம் தூர திருஷ்டி. வழியில் மேடு, பள்ளம், முள்ளு கல்லு, இவையில்லாமல் பார்த்து நடப்பது ஸமீபதிருஷ்டி. இதுபோல் நமது ஆயுஷ்காலத்தை ஒரு யாத்திரையாக நினைத்து அதற்கு இந்த இரண்டு திருஷ்டிகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது. நமது மதக்கொள்கையை தூர திருஷ்டியாகவும், திந

சர்யையை ஸமீப திருஷ்டியாகவும் வைத்துக்கொள்ளலாம். தவிரவும். நமது வாழ்நாளை ஒரு சித்திரவேலையாக வைத்துக்கொள்வோம். சித்திரப் படம் எழுதுபவன் முதன்முதல் வரம்பு கோடு ஒன்றை வரைந்து கொள்வது போல் நாமும் ஒரு வரம்பு ஏற்படுத்திக்கொண்டு அதை மீறாமல் மற்ற கார்யங்களை நடத்த வேணும். நாஸ்திகருக்கு சுகாநுபவமே பரமோத்தேச்யம். பசு பக்ஷ்யாதிகளான ஜந்துக்களுக்கும் அப்படியே. ஆகையால் அவர் திநசர்யைக்காக அதிக ச்ரமம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை நமக்கு அநேக விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை உண்டு. ஆகையால் வேதவேதாந்தங்களில் ஸாராம்சமாக எடுத்து உரைக்கப்பட்ட நமது ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை ஒட்டி ஆத்மஹித சிந்தநாக்ரமத்தை நிரூபிக்கிறோம். (தொடரும்)

---

# நீதி ரத்நங்கள்

பத்திராதிபர்கள்

**अत्यार्यं मतिदातारमति शूरमति व्रतम् ।**
**अतिमेधाविनं चैव श्रीर्भयान्नोप सर्पति ॥**

மஹாபாரதத்தில் விதுரநீதி

**अत्यार्यम्** = அதிக சாதுவாயிருப்பவனையும், **अतिदातारम्** = அளவுக்கு மிஞ்சி உதாரத்தன்மை வாய்ந்தவனையும் **अतिशूरम्** = அதிசூரனையும், **अतिव्रतम्** வ்ரதாநுஷ்டானங்களில் அளவுக்கு மிஞ்சி நோக்குள்ளவனையும், **अतिमेधाविनं चैव** - மிகக் கூர்மையுள்ள அறிவு வாய்ந்தவனையும், **श्रीः** - ஸ்ரீமஹாலக்ஷ்மி அதாவது செல்வம், **भयात्** - தன்னை இவன் அலக்ஷ்யம் செய்து விடுவன், மதிக்கமாட்டான் என்னும் பீதியால் **नोपसर्पति** அணுகுவதில்லை, அடைவதில்லை.

அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷமாகும் என்னும் பழமொழியையே விரித்து உரைக்கிறது இந்தச்லோகம். தன்னை ஆதரிப்பவர்களிடத்திலேயே அனைவருக்கும் அன்பு இருப்பது உலக வழக்கம். ஐச்வர்யத்தைத் தன்னிடத்தில் தங்கவொட்டாமல் வேறு குணங்களிலேயே ஆசை கொண்டவனிடத்தில் ஐச்வர்யம் நிலைபெறுவதில்லை என்பது நியாயமே. "குழந்தையும் தைவமும் கொண்டாடுபவரிடத்தில்" என்ற பழமொழிப்ரகாரம், ஐச்வர்யத்திற்கு விசேஷமான மதிப்பு கொடுத்தால் அவ்வைச்வர்யம் நம்மிடம் அன்புவைத்து தங்கியிருக்கும். இதனால் ஈகை முதலிய நல்ல குணங்கள் நிஷேதிக்கப்படவில்லை. உசிதமான நிலைமையில் அவைகளை ஆதரிக்கவேணும் என்று கருத்து.



**उत्पाद्य पुत्राननृणांश्च कृत्वा यथोचितां वृत्तिमपि प्रदाय**
**स्थाने कुमारीः प्रतिपाद्य सर्वाः अरण्य संस्थोथ मुनिर्बुभूषेत् ।** விதுரநீதி

**पुत्रान्** = புத்திரர்களை, **उत्पाद्य** = பிறப்பித்து, **अनृणान् कृत्वा**,- அவர்களைக் கடன் இல்லாதவர்களாகச் செய்து, **यथोचितां वृत्तिमपि** - காலதேசங்களையும் அவரவருடைய யோக்யதையும் அநுசரித்து, ஜீவநோபாயத்தையும், **प्रदाय** = கொடுத்து, **सर्वाः कुमारीः** = பெண்களை = புத்திரிகளை, **स्थाने** - அவர் சுகமாய் வாழ்தற்குறிய நல்லவிடத்தில், **प्रतिपाद्य** = சேர்ப்பித்து **अथ** - அதன்மேல், **अरण्यसंस्थः** = அரண்யவாஸத்தில் ருசி பிறந்தவனாய், **मुनिः** = ரிஷியாக அதாவது ரிஷியைப்போல் விரதங்களை கைக்கொண்டு **बुभूषेत्** = இருக்கவேண்டும்.

இக்காலத்திய ஜனங்களிடத்தில், வயது நிரம்ப நிரம்ப, எண்ணங்கள் வேறு விதமாய் உண்டாகுவதைக் காண்கிறோம். அவற்றில் குடும்ப க்ஷேமத்தையும், உலக நன்மையையும் ஒத்து செய்யவேண்டிய கார்யத்தை உபதேசிக்கிறது இந்த ச்லோகம். சில அதிகாரிகள் களத்திரம் முதலான போஷ்யவர்க்கங்களில் ஆசையற்றவராய், தன் சரீரத்தை மாத்திரம் வெகு ஜாக்கிரதையாய் போஷிக்கிறார். சிலர், தர்ம ஸூக்ஷ்மம் தெரியாதவராய் நாடோடியாய் திரிந்து அங்குமிங்கும் நடைபெறும் ஸத்கால க்ஷேபங்களை அரைகுறையாய்க் கேட்டு, குடும்பத்தை இரக்ஷிக்கவேண்டிய பொறுப்பை நழுவவிட்டு, இதர தர்ம கார்யங்களை ஆதரித்து வருகின்றனர். மற்றும் சிலர், வேதாந்திகளாய் சாஸ்திரங்களில் நுட்பமான அறிவு பெற்றும், அவ்வறிவை உலக வாழ்க்கைக்குப் பயன்படுமாறு செய்யாமல் குடும்பத்தைத் திண்டாட விடுவதையும் பார்க்கிறோம். அவர்களை உத்தேசித்து ஸ்ரீ வ்யாஸ பகவான் வெகு அழகாய் உபதேசிக்கிறார். புத்திரன் என்று பன்மையால் ஒவ்வொருவனும் இரண்டுக்குமேல் புத்திரர்களைப் பெறவேணும். என்பது தர்ம சாஸ்திரத்தின் கருத்து. "ஏகபுத்திர: அபுத்திர:" என்று அதாவது ஒரே புத்திரன் புத்திரனுகான் என்றது பழமொழி. ஒரே ப்ரஸவமான ஒரு ஸ்திரீயை 'வந்த்யா' மலடி என்றே வ்யகரிக்கவேணும் என்று சாஸ்திர ஸூக்ஷ்மம். தனது காலத்திற்குப் பிறகு பித்ருக்களுக்கும், தேவதைகளுக்கும், மற்றுமுள்ள அதிதி முதலானவர்களுக்கும் பூஜை செய்து திருப்தியுண்டாக செய்யப்பலரை நியமிப்பது நன்றன்றோ. **ऋणकर्ता पिता शत्रुः** என்று புத்திரனுக்குக் கடன் ஏற்படுத்திய தகப்பன் சத்ரு என்பதில் ஸம்சயமில்லை. ஆகையால் புத்திரருக்கு கடன் வைக்காமல் அவர் சுகமாய் ஜீவிக்கும்படி தொழிலைக் கற்பித்தும், புத்திரிகளை சுகமாய் வாழக்கூடிய நிலைமையில் வைத்து பிறகு தன்னுடைய ஆத்மகார்யத்தை கவனிக்கவேணும். இங்கு ஒவ்வொரு அம்சத்திலும் விதி உண்டு. குடும்பத்திற்கோ உலகத்திற்கோ தான் செய்யவேண்டிய கார்யங்களை செய்து முடித்த பிறகு பின்னையும் அவற்றில் பற்று இருக்கக்கூடாது. மோக்ஷமார்க்கத்தில் புத்தியை செலுத்தவேணும்.

# பத்திராதிபர் குறிப்புகள்

## தேவாலயங்களின் பரிஷ்காரங்கள்

உலகத்தில் தோஷம், குணம் இவ்விரண்டும் சேராத வஸ்துக்களோ, காரியங்களோ, இடங்களோ இல்லை என்பது அநுபவசித்தம். ஆனாலும் தோஷங்களைக் குறைக்கவும், குணங்களை வளர்க்கவும், நாம் ப்ரயத்நப்பட வேண்டியது. மநுஷ்யர்களால் அவ்வளவே ஸாத்யம். தைவங்களும் மநுஷ்ய யத்நங்களை நாடியே நிற்கின்றன. ப்ரஜைகள் அனைவரும் சேர்ந்து, தங்களுக்குள் ஒருவனை அரசனாக நியமித்தால் அவ்வரசன் ஸாதாரண ப்ரஜையைவிட அதிக வல்லமை வாய்ந்தவனாகிறான். அதன் தத்துவத்தை ஆராயுமளவில், அரசனுக்கு ஏற்படும் வல்லமைகள் அனைத்தும் ப்ரஜைகளுடையதே. ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒவ்வொரு சக்தியோ, ஸாமர்த்தியமோ இருக்கும். பலவிதமான அந்த சக்திகள் எல்லாவற்றையும் ஒருவனிடத்தில் வைத்தால் அவன் அரசன் ஆகிறான். அதுபோலவே, நம்மவர்களுடைய சக்திகள் எல்லாவற்றையும் ஒரு தைவத்துக்குக் கொடுத்து, ஒரு வீட்டையோ, ஒரு கிராமத்தையோ, ஒரு தேசத்தையோ அல்லது உலகத்தையோ காப்பாற்றும்படி நாம் வேண்டுகிறோம். கோயில்களில் ப்ரதிஷ்டை செய்யும்போது ஓதப்படும் மந்திரங்களை அர்த்தத்துடன் கவனித்தால் மேற் சொன்ன விஷயம் நன்கு விளங்கும். இப்போது புதிய மந்திரிகள் இராஜ்ய கார்ய நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்ட பிறகு முதன் முதல் தேவாலய கார்ய நிர்வாஹத்தைப் பற்றி கவனிக்கப்போவதாய் எதிர் பார்க்கப் படுகிறது. இதன் விஷயமாய் அநேக ப்ரமுகர்களும் பத்திரிகைகள் மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும், தங்கள் தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவிக்கிறதாகவும் அறிகிறோம். இச் சந்தர்ப்பத்தில் மேற் சொன்ன விஷயத்தைப் பற்றி 'வேதாந்த தீபிகையின்' நண்பர்கள் அனைவரும் தங்கள் அபிப்ராயத்தை வெளிப்படுத்தவேண்டுவது அவச்யம் எனத் தோன்றுகிறது. பரிஷ்கார ரீதியில் சட்டம் செய்பவர், ஏற்கனவே நடந்துவரும் கார்ய நிர்வாஹத்தில் காணப்படும் குண தோஷங்களை நன்கு கவனித்தல் வேண்டும். அதன்மேல், குணங்களைக் குறைக்காமல் குற்றங்களை மாத்திரம் நீக்க முயலவேண்டும். குணங்களை உண்டாக்கவேண்டியதற்கு குற்றங்களை அகற்றுவது அடிப்படையாகும். மரத்தின் மேல் வர்ணம் பூசுகிறவன் முதன் முதல் அழுக்குகளைத் துலக்கி சுத்தம் செய்து பிறகு தன் வேலையை தொடங்குகிறதை நாம் பார்க்கிறோமல்லவா? குற்றங்களை நீக்க ப்ரத்யனிக்கும்போது அந்தக் குற்றங்களுக்கு மூல காரணம்



இன்னதென்பதைக் கண்டு பிடித்து அதை வேரறுத்து ஒழிக்கவேணும். இப்போது தேவாலய கார்ய நிர்வாஹங்களில் காணப்படும் குற்றங்களுக்கு அங்கு வேலை செய்யுமவர்களே ஜவாப்தாரியாகிறார்கள். இன்னமும் உள் புகுந்து விசாரிக்கப் போனால், தொழிலாளிகளின் அறிவின்மையே இதற்கு மூல காரணம் என்று கொள்வது உசிதம். பலவிதமான அறிவுகளும் மலிந்து கிடக்கும் இக் காலத்தில், நம்முடைய தேவாலயங்கள் மாத்திரம் அறிவீனர்களால் நிறைந்திருப்பது மிகவும் சோகிக்கத் தக்கது. எவரெவர் எந்தெந்தத் தொழிலைச் செய்யவேண்டியவரோ அவரவர் அந்தந்தத் தொழிலில் தேர்ச்சியடைந்திருப்பது அவச்யமன்றோ? ஒரு படிப்பிலும் பழக்கமில்லாதவருக்கே தேவஸ்தானங்கள் சரணமாக கருதப்படுகின்றன. அர்ச்சகர், பரிசாரகர் முதலிய அதிகாரிகள் கோயில்களில் உத்யோகம் செய்யும் உரிமையை வம்ச பரம்பரைக்கு சொந்தமாக்கக் கருதுகிறார்கள். இந்த உரிமையை ஆயிரக் கணக்கான திரவ்யங்களை சிலவு செய்து ஸ்தாபித்துக் கொள்ளுகிறார்கள். நீதிபதிகள் அவர்களுக்கு பாத்தியதையை கொடுக்கும்போது, கேவலம் புத்திரன் என்ற நிலைமையை மாத்திரம் பார்த்து கொடுத்து விடுகிறார்களேயன்றி, பாத்தியதையை கொண்டாடுபவர் தகுந்த யோக்யதையை அடைந்திருக்கிறாரா? என்பதை கவனிப்பதாகத் தெரியவில்லை. இப்போது வம்ச பரம்பரா பாத்தியதையை இதனால் தூஷிப்பதாகக் கொள்ளவேண்டாம். வம்ச பரம்பரா பாத்தியதை மிகவும் நல்லது என்று சொல்வதே உசிதம் ஆனாலும் வம்ச பரம்பரா ஸம்பந்தத்தோடு தொழிலுக்கேற்ற திறமையும் வேணுமல்லவா? ஒரு கிராம முனிசிபின் மகன் தகப்பன் பார்த்து வந்த வேலையைப் பார்க்க உரிமை வாய்ந்தவன். ஆனாலும் கிராம முன்சிப் வேலைக்கு வேண்டிய படிப்பில் அவனுக்கு பயிற்சி வந்த பிறகல்லவோ அந்த உரிமை அநுஷ்டானத்திற்கு வருகிறது. அதுபோல் தேவாலயங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு உத்யோகஸ்தருக்கும் (தர்ம கர்த்தாக்கள் உள்பட) ஸாதாரணப் படிப்பும் சில விசேஷ வகைகளில் படிப்பும் மிக்க அவச்யமானவை. ஆனால் அந்தப் படிப்பு இன்னின்ன விதம் என்றும் இவ்வளவு என்றும் ஒரு ஏற்பாடு செய்யப்படவில்லை. இதை தேவஸ்தான நிர்வாஹ கமிட்டிகளே செய்யவேண்டியது. கோயில்களுக்கென்று பிறந்த ஆகமங்களுடைய பெயரே இக் காலத்தில் குறிக்கப்படுகிறதில்லை. உலகத்தில் பலவிதமான க்ஷோபங்கள் அதாவது உபத்திரவங்கள் உண்டாகுவதற்கு காரணங்கள் அநேகம் உண்டு. அவைகளில் தேவாலயங்களை சரிவர கவனிக்காதது முக்கிய காரணமாகும் என்று ஆகமங்களில் முறையிடப் படுகின்றது. ஹிந்து தர்ம பரிபாலந சட்டம் அமுலுக்கு வந்து அநேக வருஷங்கள் ஆயின. ஆயினும் மேற்சொன்ன குறை

கள் தீர்க்கப் படவில்லை. அதில் அதிகாரிகளுக்கு கவலை இருப்பதாகவும் தெரியவில்லை. தேவாலய கைங்கர்யங்கள் எல்லாம் பக்திமான்களாலேயே நிறைவேற வேண்டியது. அப்படிப்பட்ட விடங்களில் Service rule செலுத்தப்படுகிறது. யோக்யதை இல்லாதவரை நியமித்து அவர்களிடத்தில் சர்க்கார் ஆபீஸில் இருக்கும் ரூல்களை செலுத்தினால் பொய், பிரட்டு, திருட்டு இவை அதிகமாகின்றனவே தவிர நல்ல மார்க்கம் காணப்படவில்லை. அநேக கோயில்களில் அர்ச்சகர் தேவஸ்தான ஊழியக்காரரில் ஒருவரென்றும் அவர் தர்மகர்த்தா முதலான அதிகாரிகளுக்குக் கீழ் படிந்து நடக்க வேணும் என்று அமுல் செய்யப்படுகிறது. இந்த ந்யாயத்தை சில விடங்களில் இரு தரத்தாரும் ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள். இது முற்றும் தவறு. அர்ச்சகன் அனைவருக்கும் ஆசார்ய ஸ்தானத்தில் இருக்கவேண்டியவன். ஆகம சாஸ்திரங்கள் அர்ச்சகனை ஆசார்யன் என்றே வ்யவஹரிக்கின்றன. அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தின் ஸ்வரூபம் இன்னதென்று ஆராய்ந்து பாராமையே இக் குறைகளுக்குக் காரணம். ஆனால் அர்ச்சகன் பூர்ணமான மந்திர சக்தியும் ஆசாராநுஷ்டானமும் வாய்ந்துவர்த்திக்கவேணும். அவனை மற்றவர் பஹுமதிக்கவும் வேணும். மேற்சொன்ன விஷயங்களுக்கு ஆவச்யகமான சாஸ்திரப் படிப்பு அதப்பாதாளத்தில் தள்ளப்பட்டு மறைந்து கிடைப்பதும், வேறு விதமான படிப்பு மலிந்து கூத்தாடுவதுமே இக் குறைகளுக்கு மூல காரணம். இனியாவது நம்மவர்கள் விழித்துக்கொண்டு தேவாலயங்களை முறைப்படி சீர்திருத்தி உலகத்தை க்ஷேமப்படுத்துவர்களா ?

---

# பம்பாயில் க்ரந்த காலக்ஷேபங்கள்

## (ஸ்ரீரங்கராஜ தாஸன்)

சென்ற நான்கு மாஸகாலமும் பம்பாயில் வஸிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு மஹத்தான ஸுக்ருத பரிபாக காலமென்று சொல்லுவதற்கு எந்த ஆஸ்திகரும் பின் தங்கார். ஏனெனில் இந்த ஸமயத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடைய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரமென்ன, ஸ்ரீ கண்ணபிரானுடைய கீதையென்ன, ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்தோத்ர ரத்னமென்ன இந்த அருமையான மூன்று க்ரந்தங்களுடைய காலக்ஷேபத்தையும் பம்பாயைச்சார்ந்த மாடுங்காவிலுள்ள ஸாதகாச்ரமத்திலும் ஆஸ்திக ஸமாஜத்திலும் ஸர்வேச்வரன் நிர்விக்னமாக நடத்திக் கொண்டான். சென்னையில் இம்மாதிரி காலக்ஷேபங்கள் ஸ்ரீ. உப. வே சேட்லூர் ஸ்வாமியினுடைய



அநுக்ரஹத்தினால் பன்முறை நடந்திருந்தாலும் பம்பாயில் நடந்தது இதுவே முதல் தடவை. இது கடைத்தடவையாக இல்லாமலிருக்குமாறு சரண்யன் அருளவேணும்.

பம்பாயில் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் இருந்தும் இவர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்ய அவஸரப்ரதீக்ஷனான பகவான் ஈச்வர ௵ சித்திரை ௴ முதல் தேதியைத்தான் நன்னாளாகக் கருதினான் போலும். அன்று தான் இந்த காலக்ஷேபத்தை நடத்தின ஸ்ரீ உப. வே. வித்வான் நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி முத்தி தரு நகரேழில் முக்கியமாங்கச்சி தன்னில் தயாஸமுத்ரமான தேரெழுந்தூர் ஆண்டவனுடையவும் பேரருளாளனுடையவும் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு பம்பாய்க்குப் புறப்பட்டார். பகவானுடைய திருவுள்ளத்தை நேரே அறிய முடியாத தசையிலிருக்கும் நமக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட நிமித்தங்களைக் கொண்டு கவனிக்குங்கால், அந்த கார்யம் ஆசார்யர்களின் திருவுள்ளத்தில் இரக்கமடியாக பெருமானும் தாயாரும் நடத்திவைத்ததென்றே தோன்றுகிறது. ஸ்ரீ உப. வே. நெடுந்தெரு ஸ்வாமி பம்பாய்க்கு எழுந்தருளின தினத்தன்று நம் தர்சன ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரருடைய வருஷ திருநக்ஷத்திரம். காலக்ஷேபம் ஆரம்பித்த தினம் ஜகத்தில் ஞான பக்தி தயா வைராக்ய சேவதியென்று ப்ரஸித்திபெற்ற பெரியாண்டவனுடையவும், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுக்குப் பட்டாபிஷேகம் நடந்ததுமான ஸர்வார்த்தங்களும் பலிக்கக் கூடிய புஷ்ய நக்ஷத்திரம். நடுவில் ஸேவை சாற்று முறைகளுடன் ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வாருடையவும் சூடிக் கொடுத்த நாச்சியாருடையவும் வருஷ திரு நக்ஷத்திரங்கள் நடந்தன. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேப சாற்று முறை விசாகத்திலும், ஸ்ரீஸ்தோத்ரரத்ன காலக்ஷேபாரம்பம் ஸ்ரீ ஆளவந்தார் வருஷ திரு நக்ஷத்திர தினத்திலும், அதன் சாற்று முறை (பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய என்று சொல்லும் பொழுது) ஸ்ரீ நாதமுனிகளின் திரு நக்ஷத்திரமான அனுஷத்திலும் நேர்ந்தது ஆச்சர்யமான ஸம்பவம். ஸ்ரீ கீதை முடிந்ததும் ருக்மிணீ கல்யாண விஷயமாகவும் யாத்திரையாக வடக்கே எழுந்தருளுவதற்கு முன் ஸீதா கல்யாண விஷயமாகவும் காதின் தினவுகெட அத்யத்புதமாக ஸ்வாமி உபந்யஸித்தார்.

அந்த ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்கள் இங்குள்ள எல்லாருடைய மனதையும் கவர்ந்து குணைர் தாஸ்யமுபாகத: என்னும்படி செய்தன. தனக்குள்ள பல அஸௌகர்யங்களையும் பாராட்டாமல் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆண்டவனுடைய நியமனத்தை சிரஸாவஹித்து அந்த ஸ்வாமி இங்கே எழுந்தருளினார். சிறு குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் கூட புரியக்கூடிய எளிய தமிழ் நடையில் ப்ர

வசனங்கள் நடந்தன. லௌகிக த்ருஷ்டாந்தங்களுடன் தத்துவங்களை விளக்கும் பொழுது ப்ரஹ்மவித்யை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக ப்ரகாசிப்பதை நினைத்து எல்லாரும் ஆச்சர்யபட்டார்கள். உபயவேதாந்தத்திலும் ஸ்வாமியினுடைய பாண்டித்யம் வியப்பையளித்தது. ச்லோகங்களும் பாசுரங்களும் அவர் திருமுகத்திலிருந்து அம்ருத வர்ஷம் போல் பொழிந்தன. பக்தி பரவசராய் கண்ண நீர்சோர உபந்யஸித்த படியால் ச்ரோதாக்களின் மனதில் ஹேதுவாதத்தினால் ஏற்படும் ஸம்சயங்கள் சமனமடைந்து, சேதனா சேதனங்களுக்கு நியந்தாவான ஸ்ரீமந் நாராயணனிடத்திலும், திவ்ய தம்பதிகளையடைய அந்தணாரந்திய நெல்லையுள் நின்றவனைத்தலகும் ஸுலபமாக அவலம்பிக்க கூடிய சரணாகதி மார்க்கத்திலும், அனைவருக்கும் ச்ரத்தை பிறந்தது. நம் ஸம்ப்ரதாயத்தில் இவ்வளவு உயர்ந்த மார்க்கமிருந்தும் இதை ஸ்ரீ பாஷ்யகாரர் போல் கோபுரத்திலிருந்து நாடெல்லாம் நன்கறிய வெளிப்படுத்த வேண்டாமா என்று கேட்டவர் பலர். ஸ்வாமி ஆசார்ய பரதந்த்ரராய் இந்தக் கார்யத்தை ஒரு கைங்கர்யமாக நினைத்துக்கொண்டு கேவலம் தயையினால் இங்கே எழுந்தருளினாரேயன்றி ஒரு ப்ரதிப்ரயோஜனத்தையும் அபேக்ஷித்து வந்தவரன்று. ப்ரஹ்ம வித்யைக்கு மாயனும் கைம்மாறு காணகில்லானாகையால் ப்ரீதிக்குப் போக்கு வீடாக இங்குள்ளார் சேகரித்து ஸமர்ப்பிக்கப் போகிற த்ரவ்யம் எவ்வளவென்று கடைசிக்ஷணபர்யந்தம் ஸ்வாமிக்குத் தெரியாது. அதைப் பற்றி அவர் கேட்கவுமில்லை. செல்வம் வேண்டா. தான் தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் ஸ்வாமிக்குக் கடைசியாகக் கிடைத்த த்ரவியமும் ஸாமான்யமாக எதிர்பாக்கக்கூடியதைக்காட்டிலும் அதிகமாகவேயிருந்தது. ஒருவரிடத்திலும் ஒரு ப்ரதிப்ரயோஜனத்தையும் அபேக்ஷிக்காமல் வைராக்ய ஸம்பன்னராய், தயாபரராய், ஸர்வபூத ஸுஹ்ருத்துக்களாயுள்ள பரமைகாந்திகள் விரளமான இக்காலத்தில் இந்த மாதிரி ஆத்மகுண பூர்த்தியுள்ள ஸ்வாமி நிதராம் விரளம். அந்த ஸ்வாமி தன் பரத்வத்தை வெளிப்படுத்தாமல் ஸௌலப்ய ஸௌசீல்யாதிகளுடன் இங்குள்ளவர்களுடன் பழகினது மிகவும் மெச்சத்தகுந்தது.

இம்மாதிரி ஸ்வாமிகளை சேதனர்கள் உஜ்ஜீவிப்பதின் பொருட்டுத் தான் சரண்யன் இவ்வுலகில் வைத்திருக்கிறான். நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தார் தற்காலம் உத்தியோகத்திற்காக டில்லி, கல்கத்தா முதலிய பட்டணங்களில் இருக்கிறபடியாலும், உத்தியோகத்தை விட்டு விட்டு ஆத்ம விஷயமான க்ரந்த காலக்ஷேபத்திற்காக ஆழ்வார் ஆசார்யாள் உகந்தருளிய தமிழ் நாட்டில் நீடித்திருப்பது பலருக்கு முடியாத கார்யமான படியாலும், மின்னின்னிலையில் மன்னுயிராக்கைகள் என்பதால் பேற்றுக்குரிய துறையில் இன்றே இன்னே த்வரிக்க ப்ராப்தமாகையாலும் இம்மாதிரி மஹான்



களை அந்தந்த ஊர்களில் எழுந்தருளப் பண்ணி நல்ல விஷயங்களை ச்ரவணம் செய்து, ஆபாத சூடமனபாயமானவும் ஸர்வலோக ஹிதைஷியுமான நம் ஸம்ப்ரதாயத்தின் மஹிமையை நன்குணர்ந்து தாங்களும் நல்வழியில் இழிந்து ஸம்ப்ரதாயத்தை ப்ரவ்ருத்திப்பதற்கும் கைங்கர்யத்திலும் ஈடுபடும்படி அக்ரகாரங்களிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவாகளுக்கு சரண்யன் நன் மதியளிக்கும்படி மஹான்கள் அனுக்ரஹிக்கவேணும்.

சரணாகதியென்னும் வழியை கிறிஸ்தவர்களும் துலுக்கர்களும் கூட ஒருவாறு பின் பற்றியிருக்கிறார்கள். நம் தேசத்திலோ இந்த வழியொன்றுண்டு என்பதுகூடத் தெரியாத ஜீவன்கள் கணக்கில்லாமலிருக்கிறார்கள். வடநாட்டிலுள்ள உத்தராதி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இந்த வழியைக் காதில் போட்டவர்கள் கிடையாது. கேவலம் ஸமாச்ரயணத்துடன் சரணாகதியின்றி அவ்வாத்மாக்கள் தபிக்கின்றன. அவர்களின் நன்மைக்காகவும், இதரர்களுக்கும் உபதேசிப்பதற்காகவும், முக்கியமாக ஸம்ப்ரதாயததை அபிவ்ருத்தியாக்கி திகந்தவ்யாபியாகச் செய்வதற்காகவும் ஸ்வாமிபோன்ற பரமைகாந்திகளுக்கு ஹிந்தி பாஷை சொல்லிக்கொடுத்து பல ப்ராந்தங்களுக்கு மனுப்பி அங்கேயுள்ள சேதனர்கள் மோக்ஷோபாயமான சரணாகதி யென்னும் ராஜமார்க்கத்தில் சேரும்படி மடாதிபதிகளும் ஆசார்ய ஸ்தானங்களிலிருப்பவர்களும் லௌகிகத்தில் உயர்ந்த பதவிகளிலுள்ள ஆஸ்திகர்களும் ஏற்பாடு செய்யும்படி சரண்யன் ஸங்கல்பிக்கவேணும். வெகுகாலமாக இந்த மனோரதம் நெஞ்சில் உலாவுகிறது. இந்த ஆசை பூர்ணமாகும் தினம் எஞ்ஞான்று கொலோ! குழந்தை படிக்க புஸ்தகம் வேண்டுமென்றால் தகப்பன் உடனே வாங்கிக்கொடுக்கிறான். விளையாட்டு ஸாமான் வேண்டுமென்றால் வாங்கிக்கொடுப்பதில்லை. வாங்கினாலும் கேட்டவுடனே வாங்கிக்கொடுப்பதில்லை. அந்தமாதிரி ஸ்வயநலம் கலந்த ஆசைகளை அஹிதமானபடியால் ஈச்வரன் நிறைவேற்றி வைப்பதில்லை. பாகவத ஸம்ருத்தி ஸம்ப்ரதாயாபிவ்ருத்தி போன்ற ப்ரார்த்தனைகளை அவச்யம் சீக்கிரம் பூர்த்தி செய்து வைப்பான். இம்மாதிரி பலர் ஆசைப்பட்டால் ஆசார்யாளுக்கும் தாயாருக்கும் பெருமாளுக்கும் தயை சீக்கிரம் உத்தம்பிக்கும். அவர்கள்தான் இந்தக் கார்யத்தை தலைக்கட்டி வைக்கவேணும்.

## புஸ்தக விமர்சம்

### 1. ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த கோதாஸ்துதி

இப்புத்தகம் பலவிடங்களில் பலவிதமாய் ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த போதிலும் இப்போது இந்த வருஷம், திருவாடிப்பூர தினத்தில் ஸ்ரீ ஆண்டாளுடைய திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தின் அறிகுறியாக நமது நண்பர் ஸ்ரீ. உ. வே. சின்னமு ஸ்ரீநிவாஸபாட்டராசாரியர் அச்சிட்டு வெளியிட்டிருக்கும் கோதாஸ்துதி புஸ்தகத்தை கொண்டாடாமல் இருக்க முடியாது. தேவநாகராக்ஷரத்தில் மிகவும் அழகாய் சிறிய சைஸில் 8 பக்கம் கொண்டதாய் காணப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர்களுக்கும் விசேஷித்து சிறுமிகளுக்கும் இது முக்கிய உபயோகமானது. இத்தோத்திரத்தைக் கொண்டு ஸ்ரீ-ஆண்டாளை ப்ரதிதினம் வணங்குபவருக்கு, நுட்மான புத்தியும், ஸபைகளில் நான்ருய்ப் பேசுந்திறமையும் உண்டாகும் என்பது இந்நூலாசிரியரின் கருத்து.

### 2. வரதராஜபஞ்சாசத் ந்யாஸதசகம்

மேற்கண்ட இரண்டு தோத்திரங்களும் அடங்கியது இது ஒரு சிறிய புஸ்தகம். விபவாவதாரத்திற்குள் ஒரோ அவ்தாரத்தில் அதிக பக்தி வாய்ந்த சில பரம்பாகவதரைக் கண்டிருப்பதுபோல் அர்ச்சாவதாரத்திலும் ஒரோ திருமூர்த்தியில் அதிக ஈடுபாடு சிலருக்கு இருக்கக்கூடும். அப்படிப்பட்ட பக்தர்களில் வரதனிடத்தில் அதிக இடுபாடு வாய்ந்தவர் வரதராஜ பஞ்சாசத்தோடு கூட ந்யாஸதசகத்தையும் சேர்த்து அநுஸந்திப்பது மிகப்பொருத்த முள்ளதாகும். இவ்வநுஸந்தாநத்தின் ஸௌகர்யத்தின் பொருட்டு இவ்விரண்டையும் சேர்த்து, நமது நண்பர் ஸ்ரீ உ. வே. சின்னமு ஸ்ரீநிவாஸபாட்டராசாரியர் தேவநாகரம் பெரிய அக்ஷரத்தில் பதிப்பித்திருக்கிறார். இது சிறுவர் பெரியோர் அனைவருக்கும் முக்கிய உபயோகமானது.

விலை அணா 2.

கிடைக்குமிடம் :—

சி. ர. ஸ்ரீநிவாஸபாட்டராசாரியர்
16, பாட்டராசாரியர் தெரு, கும்பகோணம்

---

## வேதாந்த தீபிகையின் தத்கால ஸ்திதி

[ஸ்ரீ. உ. உப. வி. அனந்தார்யர்]

சந்தாதாரர்களுடைய அபிமானமே, பத்திரிகைளுக்கு வன்மை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் மிகவும் கேவலமான நிலைமையில் இருந்த இந்த தீபிகை இப்போது தனது ஸகோதரிகள் நடுவில் தானும் ஒரு பத்திரிகை என்ற உருவத்துடன் உலாவி வருவதற்கு முக்கியகாரணம் நமது தீபிகாநேயர்களுடைய அபிமானமே. ஆனாலும் மேன்மேலும் க்ஷேமத்தைப் பெறுவதில் எவனுக்கு ஆசை இராது. என்றுமாக கவி சொன்ன ந்யாயத்தைப் பின்பற்றி பேசுகிறேன். உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவிலும் வளர்தல், அல்லது குன்றுதல், இவ்விரண்டில் ஒன்று இருந்தே தீரும். இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லையானால் மற்றொன்று நிச்சயமாய் வந்துவிடும். அதற்காக வளர்தலை எப்போதும் விரும்பவேணும். கோடிக்கணக்கான ஜனங்கள் வாழும் இவ்வுலகில் பற்பல ஆங்கில பத்திரிகைகளும், தேச பாஷாபத்திரிகைகளும் உன்னதமான ஸௌபாக்ய பதவியைப்பெற்று வாழும்போது இப்பத்திரிகை மாத்திரம் ஸாதாரணமான நிலைமையிலேயே தங்கியிருப்பது நமது நேயர்களுக்கு மனோவிசாரத்தைத் தருகிறது. இப்பத்திரிகையை இனியும் ஓங்கி வளரச்செய்தால் இதைக்கொண்டு நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு எவ்வளவோ உபகாரம் செய்ய ஸாத்யமாகும். தங்களுடைய ஸமூக முன்னேற்றத்திற்காகவோ, மத ஸித்தாந்தத்திற்காகவோ மிகவும் குறைந்த நிலைமையில் பாடுபடும் வகுப்பினரை கணநம் செய்யும்போது நமது ஸ்ரீ வைஷ்ணவ இனத்தார் சுண்டு விரலிலேயே நிற்கின்றனர். பண்டிதர்களுடைய மனதை மாத்திரம் களிக்கச்செய்து அத்தால் தன்னை க்ருத க்ருத்யையாக எண்ணிக் கொண்டிருக்கும் இந்த தீபிகைக்கு இந்த நிலை உசிதமே. என்று கூறுகின்றனர் சிலர். ஈச்வர ஸ்ருஷ்டியில் இந்த நிலை ஸஹஜமென்றே நினைக்கக்கூடும். ஆடை ஆபரணம் தொடக்கமான மேல் ஆடம்பரங்களைக்கண்டு மயங்குகிறவர் பலர். உள்புகுந்து குணங்களைக்கண்டு கொண்டாடுகிறவர் சிலரே. பலபேருடைய திருஷ்டியில் படுவதே பத்திரிகைக்கு ஸௌபாக்யமாகும். அதற்கு வெளியாடம்பரங்களைக் கொள்வதைத் தவிர்த்து வேறு கதியைக் காணேம். ஆகையால் நமது தீபிகா நேயர்களை நாம் வணங்கி வேண்டுவது என்னவென்றால், இனி ஸம்ஸ்கிருதப் படிப்பில் பயிற்சியில்லாத ஸாதாரண ஜநங்களுக்குக்கூட பயன்படக் கூடியவையும், ருசிகரங்களுமான வியாஸங்களை எழுதி அனுப்பவேணுமாயும் தீபிகையில் ஒன்று



158713

அல்லது இரண்டு பாரங்களை அவற்றிற்கென்று ஒதுக்கி வைத்து அதில் ப்ரசுரிக்கும்படி அநுமதிக்கவேணும் என்பது. இப்போதும் பெரும்பான்மையில் வடமொழிச் சொற்கள் கலந்தது காரணமாக அநேக சந்தாதாரர், தங்களை சந்தாரர்களின் பட்டிகையிலிருந்து விலக்கிக் கொள்கிறார்கள். "லோகாநுஸாரோ பலவான்" என்று பழமொழி; महाजनो येनगतस्स पन्थाः என்றார் வ்யாஸர். வேதத்தில் காணப்படும் த்ரைகுண்ய விஷய பாகங்களைப்போல் தீபிகையில் ஸாதாரண விஷயங்களையும் நினைத்திருக்க வேணுமாய் வித்வான்களை வேண்டுகிறேன்.

## ஸநாதந தர்மத்திற்கு ஓர் பெரிய நஷ்டம்

கள்ளிக் கோட்டையில் மானவேதன் மகாராஜா காலம் சென்று விட்டதாக செய்தி வந்திருக்கிறது. இவர் நமது ஸநாதந தர்மத்திற்கு திடமுள்ள ஆதாரமாக விருந்தார். இவருக்கு இப்போது வயது 82 இவர் நமது பரத கண்டத்தினுடையவும், ஸநாதந தர்மத்தினுடையவும், வடமொழிக் கல்வியினுடையவும் க்ஷேமத்தில் மிகவும் ஊக்கம் கொண்டவர். மிகவும் மநோதைர்யம் வாய்ந்தவர். உத்தம புருஷன் என்றும், மஹா புருஷன் என்றும் இவரைக் கொண்டாடுவது பொருந்தும். சில வருஷங்களுக்கு முன் குருவாயூரில் நடந்த ஸநாதந தர்ம மஹாநாட்டில் இவருடைய உத்தம குணங்கள் ப்ரசம் ஸிக்கப்பட்டன. நடுங்கும் பரமிக்கும்படியாக நடந்த கலவரத்தில் கலக்கமின்றி தன்னுடைய மனோ வன்மையைக் கை விடாமல், ஸநாதந தர்மத்தைக் காப்பாற்றின இம் மஹா புருஷனை நாம் ச்லாகிக்காமல் இருக்க முடியுமா? ஆங்கில வித்யையில் தேர்ச்சி யடைந்து ஜில்லா கலெக்டர், ஜில்லா ஜட்ஜ் பதவிகளில் அமர்ந்து, நவீந நாகரீகத்தோடு நெருங்கிப் பழகும்படியான ஸந்தர்ப்பங்கள் வாய்ந்திருந்தும் அந்நிய நாகரீகத்தில் ஈடுபடாமல் நமது தாய் நாட்டு நாகரீகத்திலேயே ஈடுபட்டிருந்தவர் என்றதனால் இவருடைய திருடாத்யவஸாயம் இப்படிப்பட்டது என்று தெரியவில்லையா? ஆகையால் இவருடைய பிரிவால் நமது ஸநாதந தர்மமும், புராதநக் கல்விகளும் அநுசோகிக்கின்றன.

---

# யாகபசு ஹிம்ஸையைப்பற்றி ஆசார்யர்களின் ஸித்தாந்தம்

(அக்னிஹோத்ரம் ஸ்ரீராமாநுஜ தாதாசாரியன்)

(8?-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்யாதி வசனங்களால் பிர்ம்மாவினால் பசுக்கள் யாகத்திற்காகவே ஸிருஷ்டி செய்யபட்டிருப்பதாலும், யாகம் உலகக்ஷேம கரமான கார்யமாகையாலும் யாகத்தில் செய்யப்படும் வதம், வதமே அல்லவென்றும், யாகத்திற்காக ஹிம்ஸை செய்யப்பட்ட பிராணிகள் உயர்ந்த கதியை அடைகின்றனவென்றும், வேதத்திலிருந்து தர்மமே வெளிப்பட்டதாகையால், வேத விஹிதையான ஹிம்ஸை யாகாதிகளில் பசு ஹிம்ஸை செய்யும் வேதார்த்த தத்வஜ்ஞனான த்விஜன், தன்னையும் அந்தப் பசுக்களையும் உத்தம கதி அடையும்படி செய்கிறானென்றும், வெகு ஸ்பஷ்டமாக யாக பசு விசஸனம் உத்க்ருஷ்ட தர்மமென்பது சொல்லப்பட்டது.

இந்த வசனங்களில் "[illegible]" "[illegible]" "[illegible]" [illegible] "[illegible]" இத்யாதிகளான உறுதியான பதப்ரயோகங்களும், ஸூத்ருடமான ஸித்தாந்த நிஷ்கர்ஷமும் நன்கு கவனிக்கத்தக்கவை.

## ஸாங்க்யாதிகளின் ஆக்ஷேபம்.

இவ்வாறு வைதிக மதம் யாக பசு ஹிம்ஸையை தர்மமாக ஒத்துக்கொண்டதை ஸாங்க்ய, ஜைந, பௌத்தாதிகள் ஆக்ஷேபித்தார்கள். யாகங்களில் பசுவானது ஹவிஸ்ஸாக விதிக்கப்பட்டு விட்டதால் பசு ஹிம்ஸை செய்து தீரவேண்டுமென்பதும் அதனால் யாகம் பூர்த்தியடையவேண்டியிருப்பதால், அந்த ஹிம்ஸை, யாகத்திற்கு உபகாரகமென்பதையும் பூர்வ பக்ஷிகள் கூட ஒத்துக்கொண்டு விட்டார்கள். பசு ஹிம்ஸையில்லாமலே யாகம் செய்யலாமென்று அவர்கள்கூடச்சொல்லத் துணியவில்லை. ஆயினும் அவர்கள் சொன்ன ஆக்ஷேபமென்னவென்றால், பசு ஹிம்ஸா ஸாத்யமாகையால் யாகாதிகள் அசுத்தங்களென்றும் அந்த ஹிம்ஸையால் யாகத்திற்கு உபகாரமிருந்தபோதிலும், யஜமானனுக்கு அந்த ஹிம்ஸா ஜன்யமான ஸ்வல்பமோக்ஷம் உண்டென்றும், அதை யஜமானன் அநுபவிக்க வேண்டியதென்றும் அவர்கள் பூர்வபக்ஷம் செய்தார்கள். ஆகையால் "ஒரு ப்ராணியையும் வதிக்கக் கூடாது" என்கிற 'நஹிம் ஸ்யாத்

सर्वा भूतानि" என்கிற நிஷேதம் யாக பசுவுக்கும் வருமென்றும் அவர்கள் வாதாடினார்கள்.

"स्वल्पः सङ्करः सपरिहारः सप्रत्यवमर्षः" என்றும், "हिंसा हि पुरुषस्य दोषमावहति क्रतोस्तु उपकरिष्यति" என்றும் அவர்களுடைய ஸூத்ரங்கள் இதை விவரிக்கின்றன. இவ்வாறு பூர்வ பக்ஷிகள் சொன்ன ஆக்ஷேபத்தை, வைதிக மதத்திற்கு சிரஸ் ஸ்தானமாயுள்ள பிரஹ்ம ஸூத்திரத்தில் ஸ்ரீ வியாஸ பகவான் எடுத்து விசாரித்து அதை நிரஸனம் செய்து

अशुद्धमिति चेन्न शब्दात् ।

என்கிற ஸூத்ரத்தால் ஸித்தாந்தம் சொன்னார். ஸாங்க்யாதிகள் யாகம் அசுத்தம், அதாவது பாப மிச்ரம் என்று சொன்னதை வேதப் பிரமாணத்தால் நிரஸனம் செய்து அது சுத்தமே என்று சொன்னார்.

இந்த ஸூத்திரத்தில், வைதிக மதானுஸாரிகளான அத்வைத, த்வைத, விசிஷ்டாத்வைத, பாஷ்யகாரர் மூன்றுபேரும் ஏகமதிகளாக ஒரே மாதிரியான ஸித்தாந்தத்தை வெளியிட்டு யாக ஹிம்ஸை பாபமென்ற ஆக்ஷேபத்தை உடைத்து விட்டிருப்பது முக்யமாக கவனிக்கத் தக்கது.

இங்கு ஸ்ரீ சங்கராசாரியர் பாஷ்யமாவது :—

यत्पुनरुक्तम्, पश्वादिहिंसायोगात् अशुद्धमाध्वरिकं कर्म...... इति तत्परिह्रियते । न । शास्त्रहेतुत्वात् धर्माधर्मविज्ञानस्य । अयं धर्मोऽयमधर्म इति शास्त्रमेव विज्ञाने कारणम् । अतीन्द्रियत्वात् तयोः । अनियतदेशकालनिमित्तत्वाच्च । यस्मिन् देशे काले निमित्ते च यो धर्मोऽनुष्ठीयते, स एव देशकालनिमित्तान्तरेष्वधर्मो भवति । तेन न शास्त्रादृते धर्माधर्मयोर्विज्ञानं कस्यचिदस्ति ? शास्त्राच्च हिंसानुग्रहाद्यात्मको ज्योतिष्टोमो धर्म इत्यवधारितः । स कथमशुद्ध इति शक्यते वक्तुम् ?

ननु "न हिंस्यात् सर्वा भूतानि" इति शास्त्रमेव भूतविषयां हिंसामधर्म इत्यवगमयति । बाढम् । उत्सर्गस्तु सः । अपवादोऽयम् "अग्नीषोमीयं पशुमालभेत" इति । उत्सर्गापवादयोश्च व्यवस्थितविषयत्वम् ।

तस्माद्विशुद्धं वैदिकं कर्म । शिष्टैरनुष्ठीयमानत्वात्, अनिन्द्यमानत्वाच्च ।



இந்த பாஷ்யத்தால், தர்மா தர்மங்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு சாஸ்திரமே காரணமாகையாலும், அந்த சாஸ்திரமானது ஹிம்ஸையுடன் கூடிய ஜ்யோதிஷ்டோமாதி யாகங்கள் தர்மங்களென்றே நிச்சயமாகக் கூறுவதாலும், "ஹிம்ஸை செய்யக் கூடாது" என்பது பொது விதியென்றும், யாக பசு ஹிம்ஸையை விதிப்பது விலக்கு விதியென்றும், ஆகையால் வைதிக யாகங்கள் பரிசுத்தமானவைகளென்று ஸ்ரீ சங்கராசாரியர் ஸித்தாந்தம் செய்தார். த்வைதபாஷ்யத்திலும் :—

हिंसा रागप्राप्तत्वात्, पापस्यापि सम्भवात् ऊर्ध्वं च भवतु इति चेन्न । शब्दविहितत्वात् । हिंसा तु वैदिकी या तु तया न दोषलेशः प्राप्यते । वेदोक्तया हिंसया तु नैवानर्थः कथञ्चन । इति वाराहे ।

என்கிற வாக்யங்களால் ஸ்ரீ வராஹ புராண வசனத்தைக் காட்டி வேதோக்தமான ஹிம்ஸையால் எவ்வித அனர்த்தமும் கிடையாதாகையால் அது ஹிம்ஸையல்லவென்று ஸ்ரீ ஆனந்த தீர்த்தாசாரியர் நிர்ணயம் செய்தார்.

## விசிஷ்டாத்வைதிகளின் விசேஷ ஆதரவு. ஹிம்ஸையல்ல, ரக்ஷணமே.

இவ்விஷயத்தில், விசிஷ்டாத்வைதிகளான நம் பூர்வாசார்யர்கள், மற்ற பாஷ்யகாரர்களை விட வெகுதூரம் முன்னேறி இந்த யாக பசு ஹிம்ஸையை ஹிம்ஸையென்றே வ்யவஹரிக்ககூடாதென்றும், அது ரக்ஷணரூபமென்றும் ஸித்தாந்தம் செய்வதை நிரூபிப்போம்.

மேற்படி பிரஹ்மஸூத்திரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் நம் ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதிப்பதைக் கவனிக்கவும் :

ஸ்வர்க்கார்த்தமாகவும், நித்யகர்மாவாகவும் செய்யப்படுகிற யாகாதிகள் பசு ஹிம்ஸா மிச்ரமாயிருப்பதால் பாபமிச்ரங்களே என்று பூர்வபக்ஷம் செய்து கொண்டு ஸ்ரீபாஷ்யகாரர் நிர்ணயம் ஸாதிப்பதாவது :—

तन्न । कुतः ? शब्दात् । अग्नीषोमीयादेश्च पशोः स्वर्गलोकप्राप्तिहेतुतया हिंसात्वाभावः शब्दात् । पशोर्हि संज्ञपननिमित्तां स्वर्गलोकप्राप्तिं वदति शब्दः "हिरण्यशरीर ऊर्ध्वः स्वर्गं लोकमेति" इत्यादिकः । अतिशयिताभ्युदयसाधनहेतुः व्यापारः अल्पदुःखोदर्कोऽपि न हिंसा । प्रत्युत रक्षणमेव । तथा च मन्त्रवर्णः—"न वा उ एतन्म्रियसे

...ஐதி । விகித்ஸகம் ச தாத்காலிக து:க்கம் குர்வாணமபி ரக்ஷகமேவ வத³ந்தி । ச யஜ்ஞ பஶவ தத்³வத் ॥

மேற்கண்ட வாக்யங்களில் "யாக பசு ஹிம்ஸையால் அந்த பசுவுக்கு ஸ்வர்ண சரீரமும், ஸ்வர்க்காதி லோகமும் கிடைத்து உன்னத கதி ஏற்படுவதாக வேதம் சொல்லுவதால் அது ஹிம்ஸையே யல்லவென்றும், பசுக்கு ரக்ஷணமென்றும், உயர்ந்த க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய ஹிம்ஸையானது, தத் காலத்தில் கொஞ்சம் சிரமத்தைக் கொடுத்தபோதிலும் சஸ்திர சிகித்ஸை செய்யும் வைத்யனின் கார்யத்தைப் போல் ரக்ஷணமே யல்லாது ஹிம்ஸையே யாகாது" என்றும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்தார்.

ஸ்வயமஸம்பவாபேக்ஷ என்ற கீதா ச்லோக பாஷ்யத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரர் யாக பசு ஹிம்ஸை பசுவுக்கு ரக்ஷணமென்றும் அது ஹிம்ஸை யல்லவென்றும் ஸாதிப்பதை காணலாம் :—

அபி செயம் ப்ராஸம் யாஸம் ப்ராணிமாரணமபி, அக்³நீஷோமீயாதி³ வத் ஸ்வயம் உபேக்ஷ நவிகம்பிதும் அர்ஹஸி ।......அக்³நீஷோமீயாதி³ஷு ச நஹிம்ஸா பஶோ: । நிஹீநதர ஶரீராதி³தேஹ பரித்யாக ப³லாத் கல்யாணதர தேஹ ப்ராபகத்வ ஶ்ருதேஸ்ஸம்ஜ்ஞபநஸ்ய । ந வா உவேத ம்ரியஸே......இதி ஶ்ருதேஸ்ச ।......அதஸ்சிகித்ஸக ஶஸ்த்ராதி³ கர்ம ஆதுரஸ்யேவ ரக்ஷணமேவ அக்³நீஷோமீயாதி³ஷு ஸம்ஜ்ஞபநம் ।

இந்த பங்க்திகளால் "யாக பசு ஹிம்ஸையானது ஹிம்ஸையே யல்லவென்றும், அந்த பசுவுக்கு, மிகக் கீழ்த் தரமான ஆடு முதலிய தேகம் போய், மிகவும் மங்களகரமான உயர்ந்த தேஹம் ஏற்படுவதாக சுருதி சொல்லுவதால், வியாதிஸ்தனுக்கு சஸ்திர சிகித்ஸை எப்படி ரக்ஷணமாகிறதோ அது போல் யாக பசு ஹிம்ஸையும் ரக்ஷணமேயாகு" மென்றும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தம் சொன்னார்.

## உத்ஸர்க்காபவாத நியாயம் வராது.

இந்த விஷயத்தில் அத்வைதிகளுக்கும் விசிஷ்டாத் வைதிகளுக்குமுள்ள முக்யமான வித்யாஸம் கவனிக்கத்தக்கது. "ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்கக் கூடாது" என்பது உத்ஸர்க்கம் அல்லது பொது விதி. "அக்³நீஷோமீயம் பஶுமாலபே⁴த" என்ற யாக பசு ஹிம்ஸா விதியானது அபவாதம் அல்லது விலக்கு விதி என்பது ஸ்ரீ சங்கராசாரியரின் ஸித்தாந்தம். அவருடைய பாஷ்யத்தில் "உத்ஸர்க்³காபவாத³ஸ்ஸ்வயம்ச அபவாத³:— அக்³நீஷோமீயமிதி" என்பதால் இதை அவர் வ்யக்தமாக ஒப்புகொள்ளுகிறார். இதனால் அவர் யாக பசு ஹிம்ஸையைத் தவிர மற்ற ஹிம்ஸை பாப



கரமென்று சொல்லுவதாக ஆகிறது. ஆதலால் யாக பசு ஹிம்ஸையும் ஹிம்ஸையில் சேர்ந்ததென்றும், ஆனால் அது சாஸ்திர விஹித ஹிம்ஸையாகையால் தோஷ மற்றதென்றும் நிர்ணயம் சொல்லுவதாக ஆகிறது.

விசிஷ்டாத்வைதிகளோ அநுவாதத்தில்கூட யாக பசு ஹிம்ஸையை ஹிம்ஸையென்று சொல்ல ஸம்மதிக்கவில்லை. சாஸ்திர பலத்தால் அது அஹிம்ஸையே என்றும். ரக்ஷணமென்றும் மேற்கண்ட ஸ்ரீ பாஷ்யாதி வாக்யங்களால் வெளியிட்டார்கள்.

ஆதலால் விசிஷ்டாத்வைதிகளின், அபிப்பிராயப்படி, நஹிம்ஸ்யாத் என்ற நிஷேத விதிக்கும், அக்³நீஷோமீயம் என்ற விசேஷ விதிக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. ஏனெனில் நஹிம்ஸ்யாத் என்பது ஹிம்ஸையைத் தடுக்கிறது. அக்³நீஷோமீயம் என்பதோ ரக்ஷணத்தைச் சொல்லுகிறது. ஆதலால் உத்ஸர்க்காபவாத நியாயம் இங்கு வாராதென்பதை ஸ்ரீ தேசிகனும் ஸ்பஷ்டமாக்கி யுள்ளார்.

ஸ்வயமஸம்பவாபேக்ஷ என்ற கீதா ச்லோக பாஷ்யத்தில் "அக்³நீஷோமீயாதி³ஷு ச ந ஹிம்ஸா பஶோ:" என்ற வாக்யத்திற்கு ஸ்ரீதேசிகன் விவரணம் செய்கையில்

அயமர்த²: ஸாமாந்யதோ ஹிம்ஸாத்வேந ப்ராப்தஸ்ய । உபாயஸ்ய நிஷேத⁴ ப்ராபக: । பக்ஷஸ்ய அஹிம்ஸா ரூபத்வாத் । தத்பரத்வ நிஷேத⁴ ஶாஸ்த்ர விஷய: ॥

என்பதால் இதை ஸ்பஷ்டமாக்கியிருக்கிறார். மேற்படி சுலோக தாத்பர்ய சந்திரிகையிலேயே யாக பசு ஹிம்ஸைக்கு ஹிம்ஸாத்வம் கிடையாதென்பதை நிச்சயிக்கையில் அதற்கு ஸாதகமாக இரண்டு கக்ஷிகளை ஸ்ரீ தேசிகன் எடுக்கிறார். அதாவது:—

ரக்ஷணமேவ அக்³நீஷோமீயாதி³ஷு ஸம்ஜ்ஞபநம் ॥

என்று ஒரு கக்ஷியையும்,

நிஷேத⁴ஸ்ய அப்ரஸக்திர்வா......

என்று மற்றொரு கக்ஷியையும் ஸாதித்தார். முதல் கக்ஷியில் நஹிம்ஸ்யாத் என்ற ஸாமான்ய சாஸ்திரத்தைவிட, அக்³நீஷோமீயம் என்ற விசேஷ சாஸ்திரம் பிரபல மாகையால் அந்த நியாயத்தைக் கொண்டு யாக பசு ஹிம்ஸை தோஷமுள்ளதல்ல வென்று ஒரு வழி சொல்லப்பட்டது. இது அத்வைதிகளுடைய அபிப்பிராயப்படி சொன்னதாகும்.

இரண்டாவது கக்ஷியில், விசிஷ்டாத்வைதிகளின் அபிப்பிராயப்படி அது ஹிம்ஸையே யல்லவாகையால், நஹிம்ஸ்யாத் என்ற நிஷேதம் யாக பசு விஷயத்தில் பிரவிருத்திக்க ப்ரஸக்தியே இல்லையென்பதை நிஷேத்யஸ்ய அப்ரஸக்தேர்வா என்பதால் ஸ்ரீ தேசிகன் காட்டியருளினர். இந்த ஸித்தாந்தத்தை யஜ்ஞஸம்ரக்ஷணம் என்ற கீதா ச்லோக தாத்பர்ய சந்திரிகையில் வெகு தெளிவாக ஸாதிப்பதை காணலாம். அங்கு

ஸாமான்ய விசேஷ ந்யாயாத், ஹிம்ஸாத்வேந விஹித சரீரவியோக காரணஸ்ய, பசுசாஸ்த்ர ப்ரஜ்ஞப்தி நிஷித்த த்வேந ஹிம்ஸாத்வமேவ நாஸ்தீதி பாவ: ।

என்ற வாக்யங்களால், யாக பசு விஷயத்தில் உத்ஸர்க்காபவாத ந்யாய மான பிறமதஸ்தர்களுடைய அபிப்பிராயப்படி சொல்லப்பட்டதென்றும், ஹிம்ஸாத்வமேவ, என்பதால் ஸ்ரீ பாஷ்யகார மதத்தில் பசு ஹிம்ஸையும், யுத்தத்தில் சத்ரு ஹிம்ஸையும் அவைகளுக்கு ஹிதமமாகையால் ஹிம்ஸையே யல்லவாதலால் உத்ஸர்க்காபவாத நியாயத்திற்கு பிரசக்தி யில்லையென்று ஸ்ரீதேசிகன் ஸாதிக்கிருர். இங்கு ஸ்ரீ தேசிகன் "ஹிம்ஸாத்வமேவ" என்பதால் யாக பசு விஷயம் அஹிம்ஸை யென்பதும், ரக்ஷணமென்பதும் ஸ்ரீ பாஷ்யகார மதமென்பதை ஸ்பஷ்டமாக்கியிருப்பதை ஸ்ரீ பாஷ்யகார சிஷ்யர்களாகிய நாம் மறந்து விடக்கூடாது.

## ஹிம்ஸை என்றல் என்ன ?

ப்ரத்யக்ஷத்தில் ஹிம்ஸையாயிருப்பதை அஹிம்ஸை யென்றும் ரக்ஷணமென்றும் நம் ஆசார்யர்கள் ஸித்தாந்தம் செய்தது எப்படித் தகு மென்ற சங்கை பலருக்கு உதிக்கக் கூடியது. ஸஹஜம். இதை நிவ்ருத்தி செய்வதற்காகவே நம் ஆசாரியர்கள் சில சர்ச்சைகளைச் செய்திருக்கிருர் கள். அவற்றில் ஹிம்ஸை என்ருல் என்ன ? அதன் லக்ஷணமென்ன வென்பதை ஸ்ரீதேசிகன் விசாரிக்கிருர். சுருத ப்ரகாசிகையில்

அல்பது:கோத்பாதநேபி அதிசயிதஸுகாவஹ: ஸாதகோ வ்யாபார: ரக்ஷணம் । அநர்த்தாவஹ: தாத்காலிக துக்காவஹோ வ்யாபாரோ ஹிம்ஸேத்யர்த்த:

என்பதால், ரக்ஷணத்திற்கும், ஹிம்ஸைக்கும் லக்ஷணமும் வித்யாஸமும் சொல்லப்பட்டது. ஸ்வல்ப துக்கத்தைக் கொடுத்த போதிலும் மிகுந்த க்ஷேமத்தைப் பின்னல் கொடுக்கக் கூடிய பசு ஹிம்ஸாதி கார்யம் ரக்ஷண மெனப்படும். அனர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய கார்யம் ஹிம்ஸை யெனப்படும் என்று மேற்படி வாக்யங்களில் கூறப்படுகிறது.

இதை ஸ்ரீ தேசிகன் "ஹிம்ஸாநிவ்ருத்திவைசக்ஷ்ய" என்ற சுலோக தாத்பர்ய சந்திரிகையில் விஸ்தாரமாக விசாரித்து நிர்ணயிப்பதாவது :—



ந தாவதிஹ து:கோத்பாதந மாத்ரம் ஹிம்ஸா, ரக்ஷண ரூபௌஷத சிகித்ஸா சஸ்த்ரப்ரயோகாதிஷ்வபி ப்ரஸங்காத் । நாபி ப்ராணவியோக மாத்ரம், ஸர்வஸ்வ ஹரண நரகபீடாதிஷு ஹிம்ஸா சப்த ப்ரயோக தர்சநாத் । அத: அநர்த்தாவஹ தாத்காலிக து:கோத்பாதநகோ வ்யாபாரோ ஹிம்ஸேத்யேவ தத்வம் ॥

அதாவது :—ஒருவனுக்கு துக்கத்தைக் கொடுப்பது மாத்திரம் ஹிம்ஸை யென்று சொல்ல முடியாது. ஏனெனில் வைத்யன் சஸ்திர சிகித்ஸை செய்வதும் ஹிம்ஸையென்று ஆகிடும். சஸ்திர சிகித்ஸை உபத்திரவத் தைக் கொடுக்கிறதல்லவா ? உண்மையில் அது சிறிது துக்கத்தைக் கொடுத் தாலும் முடிவில் அதன் பலன் வியாதிஸ்தனை ரக்ஷிப்பதன்ருே? ஆகையால் துக்கத்தை உண்டு பண்ணும் கார்யம் ஹிம்ஸை என்று லக்ஷணம் சொல்லு வதும் தகாது. ப்ராணனை விட்டுப் பிரிப்பது ஹிம்ஸை என்றவும் கூடாது. ஸர்வஸ்வஹரணம், நரகபீடை முதலிய இவைகளில் உயிருடன் படும் துன்பத்தைக்கூட ஹிம்ஸையென்று வியவஹார மிருக்கிறதல் லவா ? ஆகையால் இந்த லக்ஷணமும் ஒவ்வாது. பின்பு ஹிம்ஸா லக்ஷண மென்ன வென்ருல்

"முடிவில் அனர்த்தத்தை விளைவிக்கக் கூடியதும் தத்காலத்தில் துக் கத்தைக் கொடுக்கக் கூடியதுமான கார்யமே ஹிம்ஸை"

என்று ஸ்ரீ தேசிகன் ஹிம்ஸா லக்ஷணத்தை நிஷ்கர்ஷித்தார். இந்த ஹிம்ஸா லக்ஷணமானது யாக பசு விஷயத்தில் ஒத்துக் கொள்ளா தென் பது ஸ்ரீபாஷ்யகார தேசிகாதிகளின் திருவுள்ளம். பசுவுக்கு தாத்காலிகமாக உபத்திரவம் ஏற்பட்டாலும் அந்த ஹிம்ஸையால் அனர்த்தம் ஏற்படு கிறதில்லையென்றும். க்ஷேமமே ஏற்படுவதாயும் நமது சுருதி உத்கோஷிப் பதால் அனர்த்தபர்யவஸானம் கிடையாது. ஆகையால் ஹிம்ஸா லக்ஷணம் இங்கு ஒவ்வாது என்பது திருவுள்ளம்.

அதிசயிதஸுகஸ்ய ஸாதந: சிகித்ஸா வ்யாபாரோऽல்பது:கோத்பாதநேபி ந ஹிம்ஸா, ப்ரத்யுத ரக்ஷணமேவ ॥

என்பதால் ஸ்ரீபாஷ்யகாரர் இதை வ்யக்தமாக்கினர்.

ப்ரத்யக்ஷத்தில் ஹிம்ஸையாகத் தோன்றுகிறதே என்ற சங்கைக்கு ஸமாதானமாகவே வைத்யனுடைய சஸ்திர சிகித்ஸையை ஸ்ரீ பாஷ்யகாரர் உதாஹரணமாகக் காட்டினர்.

வியாதிஸ்தன் கதறும்படி வைத்யன் சஸ்திரத்தினல் அவனுடைய சரீரத்தைக் கிறிக் குளறி ஹிம்ஸித்தாலும் அதை ஹிம்ஸையென்று

லோகம் சொல்லுகிறதா ? அந்த வைத்யனை ஹிம்ஸகனென்று நாம் பேசுகின்றோமா ? இல்லை. ப்ரயுத அவனை ரக்ஷகனென்றும், அவனுடைய சஸ்திர கார்யம் ரக்ஷணமென்றுமே நினைக்கிறோம். அதுவே யாக பசு விஷயத்திலும் ஸரியான உதாஹரணமென்று நம் ஆசாரியர்களின் திருவுள்ளம் ஆதலால் தான் ஸ்ரீபாஷ்யகாரர்

சிகித்ஸகம் ச தாத்ராதிக ஸுகோதர்க்கே காரிணம் வைத்யம் ரக்ஷகமேவ ப்ரதி நந்தி ||

என்றும் ஸ்ரீபாஷ்யத்திலும்,

சிகித்ஸக ஹஸ்தாதிக சஸ்த்ர க்ஷதாபாதவதேவ ।

என்று ஸ்ரீ கீதா பாஷ்யத்திலும் ஸாதிக்கிறார். அதிகரண ஸாராவளியிலும் தேசிகன்

உக்தா ச ஹிம்ஸா ஸ்வர்கஹேதோ: பசோர் ஹிதத்வாத் ஸா ந ஹிம்ஸாவதேஷா: ।
ப்ரத்யக்ஷ ஹேயோபாதாவய ஜதி ச நாஸ்தி நிஹ்ராஸவிஹாநஸ்ய ॥

எனபதால் சஸ்திர சிகித்ஸை உதாஹரணத்தைக் காட்டி ஹிம்ஸையானது அந்த பசுவுக்கு ஹிதமென்று ஸாதித்தார்.

பரமதபங்கத்திலும் ஸ்ரீதேசிகன் கீழ் சொல்லிய ஸகல விஷயங்களையும் ஸங்கிரகித்து ஜைநமத பங்காதிகாரத்தில் ஸாதிப்பதாவது :—

> " தர்மாதர்ம வ்யவஸ்தாபகமான சாஸ்திரத்தினால்
> அக்நீஷோமீயாதிஹிம்ஸைகளிலும் யுத்தத்தில்
> வதார்ஹன் விஷயத்திலும்......பாபத்வசங்கை
> பண்ணவொண்ணாது. வைதஹிம்ஸை பசுவுக்கு
> ஹிததமமென்று சாஸ்திரமாகையால் அனர்த்த
> ஹேதுவன்று. அது சிகித்ஸகசல்ய ப்ரயோகாதி
> நியாயத்தால் ஹிததமமாம். ஆகையால் ஸாங்
> க்யாதிகள் சொன்ன ஸ்வல்பதோஷ ஸங்கரத்
> திற்கும் அவகாசமில்லை. இவ்வார்த்தை
> அசுத்தமிதி சேந்ந சப்தாத் என்று வேதாந்த
> ஸூத்ரகாரர் அருளிச் செய்தார்."

என்று இந்த வாக்யங்களால் ஸ்ரீதேசிகன் பசு ஹிம்ஸா விஷயமான ஸகல துர்க்கக்ஷிகளையும் உறுதியாக நிரஸனம் பண்ணியிருப்பது நன்கு விளங்கும்.

## ஹிம்ஸை என்று சோல்லுவது பாமர புத்தி அநுவாதமே.



இவ்வாறு யாக பசு ஹிம்ஸை அஹிம்ஸையென்றும், ரக்ஷணமென்றும், ஆதலால் விசிஷ்டாத்வைதிகளுக்கு இதில் உத்ஸர்க்காபவாத நியாயம் கிடையாதென்றும் ஸ்ரீதேசிகன் ஸித்தாந்தம் செய்தாராயினும் சுருதி, ஸ்மிருதி புராணாதிகளில் சில விடங்களில் இதை ஹிம்ஸையென்று ஒப்புக் கொள்ளுவதுபோல் அனுவாதம் செய்வதும், பசு ஹிம்ஸா நிந்தையும் காணப்படுவதால் விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தம் நிலைத்திருக்காதென சிலர் சங்கிக்கக் கூடுமென்பதை ஸ்ரீதேசிகன் திருவுள்ளம்பற்றி அத்தகைய இடங்களுக்கெல்லாம் வாஸ்தவமான தாத்பர்யமென்னவென்பதை, தாத்பர்ய சந்திரிகையிலும் அதிகரணஸாராவளியிலும் அருளிச் செய்கிறார்.

பக்த, ப்ரபந்நாதி முமுக்ஷுக்களுக்கு யாவதாயுஷம் செய்ய வேண்டிய தர்மங்களையும், அபுனராவிர்த்தியையும் சொல்லுகிற சாந்தோக்ய சுருதியில்

அஹிம்ஸந் ஸர்வபூதாந்யந்யத்ர தீர்த்தேப்ய:

என்று ஒரு வாக்யம் இருக்கிறதல்லவா ? இதில் " யாகாதி சாஸ்திரீய ஹிம்ஸைகளைத் தவிர வேறு ஹிம்ஸைகளை முமுக்ஷு செய்யக்கூடாது " என்று சொல்லப்படுகிறது. " தீர்த்தம் சாஸ்த்ராத்வரக்ஷேத்ரோபாயோபாத்யாய மந்த்ரிஷு " என்ற கோசத்தினால் இங்குள்ள தீர்த்த, பதமானது யாக வாசகமென்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம். ஆதலால் இங்கு முமுக்ஷுவுக்கு யாக ஹிம்ஸை அப்ராமாணம் நியதமாகி விட்டதால் அதைச் செய்யும்படியும், மற்ற ஹிம்ஸைகளை வர்ஜிக்கும்படியும் இந்த சுருதி விதிக்கிறது.

இந்த சுருதியானது " யாக ஹிம்ஸையைத் தவிர மற்ற ஹிம்ஸைகளை விலக்கவேண்டு " மென்று சொல்லுவதில் " அஹிம்ஸந் " என்று காணப்படுவதால் யாக பசு ஹிம்ஸையையும் ஹிம்ஸையை போல் அநுவாதம் செய்கிறது. ஆகையால் அஹிம்ஸை என்ற விசிஷ்டாத்வைதி கக்ஷி பாதிக்கப்படாதாவென்று ஸ்ரீதேசிகன் ஸ்வதர்ம மபிசாவேக்ஷ்ய என்ற கீதா தாத்பர்ய சந்திரிகையில் சங்கித்து ஸமாதானம் ஸாதிப்பதாவது :—

நநு அஹிம்ஸந் ஸர்வ பூதாந்யந்யத்ர தீர்த்தேப்ய இத்யாதிநா, அக்நீஷோமீயாதேரந்யஸ்ய ஹிம்ஸாத்வம் ப்ரதீயதே । அந்யதா தத்வையர்த்த்யாபத்தே: ।

என்று பூர்வபக்ஷம் செய்து கொண்டு ஸித்தாந்தம் சொல்லுகையில் " அயஹிம்ஸாயா: " என்று ஆரம்பித்து ஹிம்ஸா லக்ஷணம் யாக பசு விஷயத்தில் பொருந்தாதென்று காட்டி

ததஶ்ச அஹிம்ஸந் இத்யத்ர வைதவ்யதிரிக்த ஹிம்ஸாவிஷய விசே-
ஷாநபிஜ்ஞபாமர ப்ரஸித்த்யனுவாத: ஹிம்ஸாஶப்த: நாஸ்தி
தத்வதாத்பர்யம் ।

என்பதால் அஹிம்ஸந் ஸர்வபூதாநி என்ற சுருதியில் யாக பசு விசஸனத்தை ஹிம்ஸை என்று வ்யவஹரித்திருப்பதானது "யாக பசுவுக்குக் கிடைக்கிற உயர்ந்த கதி முதலிய விசேஷத்தை அறியாதவர்களான பாமரர்களுடைய அபிப்பிராயத்தை அநுவாதம் செய்து சொல்லப்பட்டதென்றும, அந்த வாக்யத்திலும், ஹிம்ஸாத்வம் கிடையாதென்பதே தாத்பரிய,' மென்றும் ஸ்ரீதேசிகன் ஸாதித்தார் இதை மநுஸ்மிருதி வசனத்தைக் கொண்டும் ஸ்திரப்படுத்தினார்.

உக்தம் ச மநுநா — யஜ்ஞேஷு பஶவோ(அ)வத: இதி ததாபி வத
இதி வாதிப்ரஸித்த்யா । அவத இதி தத்த்வகதநம் ।

என்று. அதாவது மநுஸ்மிருதியில் "யாக பசுவதமானது, வதமல்ல" என்ற வாக்யத்தில் வதமென்று ஒப்புக் கொள்ளுவது போல் காணப்படுவதும் ஸமாதானம் ஸ்ரீ தேசிகனால் மேற்கண்ட வாக்யத்தில் காட்டப்பட்டது. வதம் என்று சொல்லுவது பாமரர்களுடைய அபிப்பிராயத்தை அநுஸரித்து அநுவாதம் செய்யப்பட்டதாகும். அவதம் என்பதே தத்வத்தைச் சொன்னதாகுமென்று ஸாதிக்கிறார். யாக பசு ஹிம்ஸையை ஹிம்ஸையென்று ஒப்புக் கொண்டால் விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தம் குலைந்துவிடும். அது ஹிம்ஸையென்றும், ரக்ஷணமென்றும். ஆதலால் உத்ஸர்க்காபவாத நியாயம் கூட இங்கு வாராதென்பதுமல்லவோ அவர்களது நிர்ணயம்? ஆதலால் எங்கெங்கு அதை ஹிம்ஸையென்று சொல்லப்படுகிறதோ, அங்கெல்லாம் பாமர புத்தியை அது அநுவாதம் செய்வதாக நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமேயல்லது ஹிம்ஸையென்று நினைத்துவிடக் கூடாதென்று ஸ்ரீ தேசிகன் வழி காட்டியதாயிற்று.

## நிந்தைகளுக்கு ஸமாதானம்

ஸ்ரீ தேசிகன் அதிகரணஸாராவளியில் மற்றொரு முக்ய விஷயத்தையும் நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறார். அதாவது. நமது புராணாதிகளிலும் வேறு இடங்களிலும் யாக பசு ஹிம்ஸையை நிந்திக்கும் வாக்யங்களும், சரித்ரங்களும் சில காணப்படுகின்றன. விசிஷ்டாத்வைதிகள் அஹிம்ஸையென்று நிர்ணயித்தது இதற்கு விருத்த மாகுமல்லவா? அந்த புராணங்களின் தாத்பர்யமென்ன ? இதற்கும் ஸ்ரீ தேசிகன் ஸமாதானம் ஸாதிக்கிறார். அதிகரணஸாராவளியில் :—



[illegible] ஸ்வர்க்கம் ப்ராப்நோதி இதி [illegible] யஸ்யாஹிம்ஸ்ரதி ஸாதஶ்விதாவதேஷா
ப்ர[illegible] யஜ்ஞாவயோ(அ)ஸாவஸ்ய இதி உக்த: ஶ்லோகஶ்தி நிந்தாஶலீ
ஸாந்யா: ॥

என்பதால் "யாக பசு ஹிம்ஸையானது, அந்த பசுவுக்கு ஹிதகரமென்று வேதங்கள் சொல்லுவதாயும், அது சஸ்திர சிகித்ஸை போன்றதென்றும், யாக பசுவதம் வதமே அல்லவென்று மநு சொல்லுவதாயும் ஸாதித்துவிட்டு

ஶ்லோகஶ்தி நிந்தாஶலீ ஸாந்யா:

என்பதால், இந்த பசு ஹிம்ஸாவிஷயமாக எங்கேயாவது நிந்தை காணப்பட்டால் அது "ந ஹி நிந்தா, ந்யாயத்தால் மற்றொன்றை ப்ரசம்ஸிக்க வந்ததேயல்லது வஸ்துஸ்திதியில் இதை நிந்திக்க வந்ததில்லையென்று நினைக்க வேணுமென்று வ்யவஸ்தை ஸாதித்தார். இதிலிருந்து, ஏதாவது நிந்தாச்லோகங்களைக் காட்டி யாக பசு ஹிம்ஸா தூஷணம் செய்கிறவர்களையும் ஸ்ரீ தேசிகன் அடக்கி விட்டார். ஆகையால் புராணாதிகளில் வெவ்வேறு உத்தேசத்துடன் எங்காவது பசு ஹிம்ஸாநிந்தை காணப்பட்டால் அதை மேற்கண்ட வழியில் ஸமாதானம் செய்து கொள்ள வேண்டுமேயல்லது அந்தச் லோகங்களைக்கொண்டு வைதிக மதத்திற்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் மிக முக்யமானஸித்தாந்தத்தைக் கலக்கிவிட முற்படுவது அதர்மமாகுமென்பது தெளிவாகும்.

ஸ்ரீ பாகவதத்தில், ப்ராசீனபர்ஹிஸ் என்றவர் மோக்ஷத்தின் மகிமையைக் கவனியாமல் காம்யயாகங்களை ஓயாமல் செய்து வந்ததற்காக யாக பசு ஹிம்ஸையைக்காட்டி ப்ராசீனபர்ஹிஸ்ஸை பயமுறுத்தியதாக

போ போ ப்ரஜாபதே ராஜந் பஶூந் பஶ்ய த்வயாத்வரே ।
ஸம்ஜ்ஞாபிதாந் ஜீவஸங்காந் நிர்க்ருணேந ஸஹஸ்ரஶ: ॥

இத்யாதிகளில் சொல்லப்பட்டதும் இதனால் ஸமாதானம் செய்யப்பட்டதாயிற்று. அந்த சுலோகங்கள் யாக பசு ஹிம்ஸையை நிந்திக்கும் நோக்கத்தோடு வந்தவையல்ல. ப்ராசீனபர்ஹிஸ்ஸை மோக்ஷருசி பெறும்படி செய்யும் நோக்கத்தோடு சொல்லப்பட்டவைகளே அவை.

இதை ஸ்ரீ வீரராகவீய வ்யாக்யானத்தில் காணலாம். இங்கு அந்த வ்யாக்யானத்தில் கூறப்படுவதாவது :—

நநு "நவா உவேதந்ம்ரியஸே" இதி யாஜ்ஞீய பஶூநாம் ஹநநஸ்யாஹிம்-
ஸாத்வாவஸ்ரவணாத், தத்ராப்ரவிக்ஷேபவஜநகத்வாபி நிஷிதத்வ

ஶாஸ்த்ரநிவதந்நயாராஷ்ட்ரமேவ ஹோத்ரு ஸந்த்யஜ்ய ஶரீரஸம்பா தக்ஷிணேந, தாத்ரா(அ)பி ச யஜ்ஞேந ஔஷதயாந, கர்மதோ ஹ்ருத, க்ஷௌராதிகர்ம ஸாரயித்ரு பித்ராதிபஶு ஹிதகாரிணி ஸம்ஜ்ஞபிதஸ்ய பஶோ நாம தே ப்ரயாஸம்ஹவர்த்த ஸம்ஸ்வேதஸம்வ்யூத உதிதேஷு । கர்ம ஷட்வேஷு தேவராஜ்ஞநநாமந்தேந ஸாதீபாரமாஸ தத்தேஷு ॥

இந்த வாக்யங்களால், பசு ஹிம்ஸைக்கு ஹிம்ஸாத்வமே இல்லாமலிருக்கையிலும், அந்த பசுவுக்கும் உயர்ந்த கதி கிடைப்பதாக எல்லா சாஸ்திரங்களும் சொல்லுகையிலும்; இம்மாதிரி நாரதர் நிந்தித்துப் பேசுவது அசாஸ்த்ரீயமல்லவாவென்று ஆசங்கித்துக் கொண்டு, "ப்ராசீன பர்ஹிஸ் அரசனுக்கு காம்ய கர்ம பலங்களில் வைராக்ய முண்டு பண்ணும் நோக்கத்துடன் நாரதர் பேசவில்லை" என்று அந்த வ்யாக்யாதா, ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளத்தையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த தத்வத்தையும் அனுஸரித்து வ்யவஸ்தை செய்திருப்பதைக் காணலாம். இது போல் புராணாதிகளில் வேறு எங்கு யாக பசு ஹிம்ஸாநிந்தை காணப்பட்டாலும் அவ்விடமெல்லாம் இப்படியே வ்யவஸ்தை செய்ய வேண்டும்.

யாக பசு ஹிம்ஸை அஹிம்ஸையென்பதும், பரிசுத்தமென்பதும் வைதிகமதத்தின் அடிப்படையான ஸித்தாந்தம். இது பூர்வபக்ஷ, ஸித்தாந்த ரீதியில் விவாதிக்கப்பட்டு நிர்ணயிக்கபபட்ட விஷயம். இந்த ஸித்தாந்தத்தைப் புராணங்களில் வேறு நோக்கத்துடன் சொல்லப்பட்ட சுலோகங்களைக் கொண்டு வ்யாகுலம் செய்யக்கூடாதென்பதே ஸ்ரீ தேசிகனின் திருவுள்ளமாகிறது.

மேலும், மஹாபாரதாதிகளில். சில விடங்களில் பசுஹிம்ஸாநிந்தை காணப்படுவது, பசுஹிம்ஸாஸ் துதியும் பல விடங்களில் காணப்படுகின்றன. இம்மாதிரி ஒரே கிரந்தத்தில், நிந்தையும் ஸ்துதியும் காணப்பட்டால் அதற்கு எப்படி வ்யவஸ்தை செய்வது? இதில் வைதிக மதஸ்தர்கள் எதைஆதரிப்பது? இந்த ஸந்தேஹத்தையே ஸ்ரீ தேசிகன் "ஶ்ரௌதி நிந்தா ஸ்விஹாந்யஸ்" என்பதால் நிவிர்த்தி செய்து வைதிகமதஸ்தர்களாகிய நமக்கு யாக பசு நிந்தா வாக்யங்கள் ஆதரணீயங்களல்லவென்றும், அந்த நிந்தைகளுக்கு கீழே காட்டிய வழிகளில் வியவஸ்தை செய்து கொள்ளவேண்டுமென்றும் நிர்ணயித்தார். அதாவது ஸ்ரீ தாத்பர்ய சந்திக்கையில் ஸாதித்தபடி, யாக பசு நிந்தைகள், பாமர புத்தியை அநுவாதம் செய்கிறவை என்பது ஒரு ஸமாதானம். அதிகரண ஸாராவளியில் ஸாதித்தபடி அந்த நிந்தைகள் வேறு ஒன்றை ஸ்துதிக்க வந்தவைகளே யல்லது, உண்மையில் யாக பசு ஹிம்ஸையை நிந்திக்கும் நோக்கமுள்ளவையல்ல வென்பது மற்



றொரு ஸமாதானம். ஆகையால் புராணாதிகளில் காணப்படும் நிந்தைகளை உண்மைகளாகவோ, வைதிக மத ஸித்தாந்தமாகவோ ஒருவரும் நினைத்துவிடக்கூடாதென்று ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளம். அப்படி நினைத்தால் அஹிம்ஸை, அவதம், ரக்ஷணம், என்ற நமது பூர்வாசார்ய நிர்ணயங்கள் வீணாகி விடுமல்லவா? அப்போது ஸாங்க்ய பௌத்தாதிகளுக்கும் நமக்கும் வ்யத்யாஸமில்லாமல் போய் விடுமல்லவா? புராணாதிகளில் நிந்தா சுலோகங்களைக் காட்டி தூஷிப்பவர்கள் அதே புராணங்களில் காணப்படும் பசு ஹிம்ஸாப்ர சம்ஸா ச்லோகங்களையும் கவனிக்கவேண்டாமா? மஹாபாரதத்தில் அநுசாஸன பர்வாவில் 13 வது அத்யாயத்தில்

பஶவ꞉ பஶுபாலேஷு யே ஹந்யந்தே(அ)த்⁴வரேஷு ச ।
உத்க்ராந்தி வர்ஜிதா ஸ்வர்க³ம் யாந்தி பஶவஸ்து தே ॥

என்று யாக பசுக்களுக்கு உயர்ந்தகதி சொல்லப்படுகிறது. இதுபோல் ஆச்வமேதிக பர்வாவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவதர்ம பர்வாவில் 11.வது அத்யாயத்தில் யாக பசு விஷயமாகச் சொல்லப்படுவது விசேஷமாகக் கவனிக்கத்தக்கது. அங்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே ஸ்ரீ வைஷ்ணவ தர்மங்களைச் சொல்லி வருகையில் யாக மகிமையைப பற்றிக் கூறுவதாவது :—

நாவஜாநந்தி யே விப்ரா꞉ நிந்த³ந்தி ச பஶோர்வத⁴ம் ।
தே யாந்தி நரகம் கோ⁴ரம் ரௌரவம் தமஸாவ்ருதம் ॥
ஸ்தாவரே ஸர்வபூ⁴தாநி தத்ர ஸ்தி²தா நராதி⁴பா꞉ ।
க்ருமிகீடபதங்கா³ஶ்ச திர்யக்³யோநிக³தாஶ்ச யே ।
யஜ்ஞார்த²ம் பஶவ꞉ ஸ்ருஷ்டா꞉ ஸ்வயமேவ ஸ்வயம்பு⁴வா ।
யஜ்ஞார்த²ம் பஶவோ ஹிம்ஸா நாஸ்தி யஜ்ஞேஷு பாண்ட³வ ।
அஹிம்ஸா வைதி³கம் கர்ம ப்⁴ருக³வே கதி²தம் மயா ।
வேதோ³க்தாந் யே ந குர்வந்தி ஹிம்ஸா பா³ஹ்யாஸ் ஸ்ம்ருதா த்³விஜா꞉ ।
ஸர்வஸ்வம் அபி யே யாந்தி வைஷ்ணவாஸ் தாத்த்விகா꞉ ।
யஜ்ஞகர்மஸு ஹிம்ஸாம் யே ஜல்பந்தே விஜிதேந்த்³ரியா꞉ ।
தே யாந்தி ஸர்வநாஶம் வ்ருத்திம் விஹாய ஸமுத்³ப⁴வம் ॥
உத்தமம் லோகம் ஸம்ப்ராப்தா꞉ யஜ்ஞே நிஹதா꞉ பஶவோ ஹி ॥

இந்த ச்லோகங்களில், யாக பசு ஹிம்ஸைக்கு அஹிம்ஸாத்வம் சொல்லியும், அதை நிந்திப்பவர்களுக்கு ப்ரபலமான ப்ரத்யவாயங்களைக் காட்டியும், சாஸ்த்ரீயமாக யாகாதிகளை அநுஷ்டிப்பவர்களுக்கு புனராவ்ருத்தி வர்ஜித

மான பகவானுடைய லோக ப்ராப்தி ஏற்படுவதைக் குறிப்பிட்டும், எம்பெருமானே நேரில் அருளிச் செய்வதை ஸ்ரீ வைஷ்ணவர்கள் கவனிக்கவேணும்.

இங்கு "நிரயஶ்சைவ ஶாஶ்வதம்" என்பதால் யாக பசு ஹிம்ஸையை நிந்திப்பவர்களுக்கு நரகாதி ப்ரத்யவாயங்களைச் சொல்லுவதால் அந்த நிந்தை கூடாதென்பது ஸ்பஷ்டமாகிறது. இப்படியிருக்க இந்த மஹாபாரதத்திலேயோ வேறு இடங்களிலோ பசு ஹிம்ஸா நிந்தையும் இருக்குமானல் அதற்கு வ்யவஸ்தை சொல்லவேண்டாமா? இதையே தௌஷி நிராகஸி ஹாநாத் என்ற ஸ்ரீ ஸூக்தி வ்யவஸ்தை செய்து கொடுக்கிறது. பசு ஹிம்ஸா நிந்தா வாக்யங்கள் யாவற்றும் நமக்கு ஆதரணீயங்கள். பசு ஹிம்ஸாஸ்தோத்ராதிகளெல்லாம் நமது ஸித்தாந்தத்தை உபப்ரும்ஹணம் செய்கிறவை என்பதே ஸ்ரீ தேசிகனின் நிஷ்கர்ஷமாகும். இதை "உதி³தவிதி⁴ரஹஸ்யா: ஸ்வயமுத் ஸாத⁴யந்தம் ।" இத்யாதி ஸ்ரீ ஸூக்திகள் ஸ்பஷ்டமாக்குவதை ப்ராமாணிகர்கள் மறுக்கமுடியுமா? ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்திலும் ஸ்ரீ தேசிகன் :—

ஶ்ருதிஶிரஸி நிமக்³நம் கர்மணாம் ஶோதி⁴தாநாம் ஸக்ருத³பி விநிவ்ருத்தம் நாபி ஶக்தம் க்ஷமாணாம் ॥ ப⁴ஜதி ஶுபா⁴ரோ: பாது³கே பாஷி ஸ்தா²நம் பஶூநாம் பரிஶேஷாத் பஶ்யதோ நார்யஜ்ஞா: ॥

என்கிற சுலோகத்தில், யாகாதி வைதிக கர்மங்களுக்கு, உபநிஷத்துக்களில் பகவத்பர்யந்தமாகச் செல்லும்படி அநுஷ்டானம் விகிதமாயிருப்பதை அறியாமல் செய்யும் பாலிசர்களுடைய யாகாதிகள், பசு வதமாத்ர பலமேயன்றி விசேஷ நன்மையைக் கொடுக்காது என்று ஸாதித்திருப்பதில் வ்யதிரேகமுகமாக ஸ்ரீ தேசிகன் யாக பசு ஹிம்ஸா தர்மத்தையும் மற்ற சாஸ்திரீய விஷயத்தையும் அந்த ச்லோகத்தில் திருவுள்ளம் பற்றியிருப்பதை அபிஜ்ஞர்கள் ஆழ்ந்து விமர்சிக்கவேணும். உபநிஷத்துக்களின் அபிப்பிராயப்படி ஜ்யோதிஷ்டோமாதிகளை பல ஸங்கத்யாக புரஸ்ஸரமாக பகவதர்ப்பணம் செய்து அநுஷ்டிக்கும் விசிஷ்டர்களுக்கும் அதில் பசு வதம் அவர் ஜநீயமென்பதை ஸ்ரீ தேசிகன் இந்த ச்லோகத்தில் தெளிவாக ஸாதிக்கவில்லையா? ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் ஸ்தான விசேஷாதிகாரத்திலும் ஸ்ரீ தேசிகன், ப்ரபந்நர்களுக்கு வாஸயோக்யமான ஸ்தலங்களைச் சொல்லுமிடத்தில் :—

யத்ர வேதா³ஶ்ச யஜ்ஞாஶ்ச தபஸ்ஸத்யம் த்⁴ருதி: க்ஷமா ॥
ஹிம்ஸாஶ்ச யஜ்ஞஸம்யுக்தா: ப்ரசரேயு: ஸுரோத்தமா: ॥

என்ற மஹாபாரதம் திருநாராயணீயத்தில் பகவானால் சொல்லப்பட்ட சுலோகத்தை எடுத்திருக்கிறார். "எங்கு வேதங்களும், யஜ்ஞங்களும், தபஸ்



முதலியவைகளும், தர்ம ஸம்யுக்தமான ஹிம்ஸைகளும் பிரசாரத்தில் இருக்கின்றனவோ அந்த தேசம் வாஸயோக்யமென்று இதில் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அதிலும் ஶகவாஹஸ்ஸிதே யஜ்ஞ" என்பதால் கலியுகத்தில் பிரபந்நர் வஸிக்கவேண்டிய இடத்தைப் பற்றி இது சொல்லுகிறதென்பது விசேஷமாய் கவனிக்கத் தக்கது.

இங்கு ஸ்ரீ ஸாராஸ்வாதினீயில் "ஹிம்ஸாஶ்ச யஜ்ஞஸம்யுக்தா:" என்பதற்கு வ்யாக்யானம் செய்கையில் :—

யஜ்ஞஸம்யுக்தா: கர்மாநிஷேதீ⁴ய ஹிம்ஸாதி³ விஶேஷண ஸாஹ்யஜ்யோதிஷ்டோமாதி³யஜ்ஞா: ॥

என்று சொல்லப்படுகிறது. அதாவது "தர்ம யுக்தமான பசு ஹிம்ஸையுடன் கூடிய ஜ்யோதிஷ்டோமாதி யாகங்கள்" எங்கு நடக்கின்றனவோ அந்த இடம் பிரபந்நனுக்கு வஸிக்க ஏற்றதென்று தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் எங்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் பசு ஹிம்ஸா தர்ம மிச்ரமான யாகங்களை அனுஷ்டிக்கிறார்களோ அந்த பரிசுத்த தேசத்தில் ப்ரபந்நன் வஸிக்கவேண்டுமென்றதாயிற்று. யே த்ரஸாநா ஹாஸநேந, என்ற நிலையிலுள்ள அதிகாரிகள் யாகம் செய்யுமிடத்தைப் பற்றியதாக இது ஆகாதன்றோ? தர்சன, ஸம்பாஷண ஸஹவாஸாதிகளுக்கு அநர்ஹர்களாக நிச்சயிக்கப் பட்டவர்களுடன் பிரபந்நன் வஸிக்கும்படி இந்த சுலோகம் சொல்ல நியாயமில்லை. ஸ்ரீ தேசிகனும் அத்தகைய சுலோகத்தை நமக்கு ப்ரமாணமாகக் காட்ட நியாயமில்லையன்றோ?

ஸுபாஷித நீவியில் கூட ஸ்ரீ தேசிகன் ஒவ்வொரு கார்யமும் ஒரு சேர்க்கையால் பரிசுத்தமாகிறதாகச் சொல்லும் ச்லோகமொன்றில் "ஜந்து ஹிம்ஸையானது யாகத்தினால் பரிசுத்தமாகிறது" என்று ஜந்துஹிம்ஸா ஶுத்⁴யேத ॥ என்பதால் ஸாதிக்கிறார்.

இவ்வாறு இன்னும் பல விடங்களில் ஸ்ரீ தேசிகாதிகளான நம் பூர்வாசார்யர்கள் இவ்விஷயமாக ஸாதித்துள்ளவைகளை விஸ்தார பயத்தால் இங்கு நாம் எடுக்காமல் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறோம். இதுவரையில் நாம் கீழே காட்டியுள்ள நம்பூர்வாசார்ய ஸித்தாந்தங்களால், யாக பசு ஹிம்ஸை ஹிம்ஸையே அல்லவென்றும், அது ரக்ஷணமென்றும் நிந்தைகள் அந்யபரங்களென்றும் வெகு உறுதியாக நிர்ணயம் செய்திருப்பதைக் கவனியாமல் வைஷ்ணவர்களுக்கு யாக பசு ஹிம்ஸை தோஷமென்று ஸாதிக்கப் புறப்படுவது எவ்வளவு ஸாஹஸமென்பது புலப்படவில்லையா? ஹிம்ஸையென்று சொல்லிவிட்டால் நமது வைதிகமத ஸித்

தாந்தமும், ஆசார்ய நிர்ணயங்களும் நாசமாகி ஸாங்க்ய பௌத்தாதி ஸித்தாந்தமே மேலிட்டு நிற்குமென்பதை இவர்கள் உணரவேண்டாமா?

மேலும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு; சுருதி, ஸ்மிருதிகள் பூர்ணமான பிரமாணங்களல்லவென்று ஒரு ஸ்வாமி ஸாதித்தார். யாக பசு ஹிம்ஸையை ஒப்புக்கொள்ளவேண்டி வருமே என்ற பயம் தான் அதற்குக் காரணம். ஆயினும் எந்த பயத்திற்காக இவர் சுருதி ஸ்மிருதிகளையே தள்ளத் துணிந்தாரோ, அந்த பசு ஹிம்ஸை பரம தர்மமென்றும், பரம பாவனமென்றும் அவர் ஜஜநீயமென்றும் அந்த சுருதி ஸ்மிருதி ப்ரமாணங்களுக்கு கட்டுப்பட்டு நிச்சயித்து அவைகளின் மஹிமையையும் ப்ராமாண்யத்தையும் எவ்வளவு பொறுப்புடன் நம் ஆசார்யகள் ஸ்தாபித்திருக்கிறார்களென்பதை இந்த விபரீத வாதிகள் கவனிப்பது நலம். மற்ற விஷயங்களை அடுத்த பிஷ்ட பசு வியாஸத்தில் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீ:

# ஓர் ஸந்தேகம்

[ஸ்ரீ. உப. வே. கே. ராகவாசார்யர், கார்குடி]

'ஸ்ரீ வேதாந்த தீபிகை'யில் சுமார் ஒரு வருஷமாய் "ப்ரம்ம விசாராதிகார நிர்ணயம்" வந்து கொண்டிருக்கிறது. அதில் ஸ்வசாகாத்யயனம் அவசியமில்லை என்றும், உபநிஷத் அத்யயனம் போதுமென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. அது சரியன்று :—

(1) தர்ம சாஸ்திர க்ரந்தங்களில் ஸ்வசாகாத்யயனம் நித்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) ஹவ்ய கவ்ய கர்மாக்களில் கர்ம பாகம் பெரும்பாலும் உபயோகப்படுகிறது.

(3) சாகாதீசன் துர்பலனாயிருக்கும்பொழுது உபநயநம் தலையாவணி யவிட்டம் செய்யக்கூடாதென்று தர்ம சாஸ்த்ரம் இதிலிருந்து ஸ்வசாகாத்யயநத்துக்காகவே இவைகள் என்று ஏற்படுகிறது.

(4) உபநயனம், உபாகர்மம் இவைகள் ஸ்வசாகாத்யயநத்துக்கு அங்கமாகச் சொல்லப்படுகின்றன.

(5) உபாகர்மத்தில் கர்மகாண்டத்தை ஆரம்பிக்கிறோம். இது மேலே அத்யயநம் செய்வதற்காகவே.



(6) அபிவாதந வாக்யத்தில் அந்தந்த சாகையை அத்யயநம் செய்பவன் என்று சொல்லி வருகிறோம்.

(7) இப்பொழுதும் சிலர் ஸ்வசாகாத்யயநம் செய்து வருகிறார்கள்.

(8) ஸ்வசாகாத்யயநம் இல்லாதவர்களுக்கு மீமாம்ஸையில் அதிகாரமில்லை என்று பூர்வோத்தர மீமாம்ஸா க்ரந்தங்களிலிருந்து ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

(9) விதியை மீறியோ, ஆபத்திலோ செய்த உபநிஷன் மாத்ராத்யயனம் விசாரத்துக்கு பூர்வ வ்ருத்தமாகாது என்று ஸ்ரீ பாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, பாவப்ரகாசிகை, தத்வடீகை, சததூஷணி, சண்டமாருதம், மீமாம்ஸாபாதுகை அதிகரண ஸாராவளி ஸேச்வர மீமாம்ஸை முதலிய க்ரந்தங்களில் ஸ்பஷ்டம்.

(10) ஸ்வசாகை என்பது கர்மபாகம், ப்ரம்மபாகம் இரண்டுமே, உபநிஷன் மாத்ரமன்று என்று எல்லாசாஸ்த்ரகாரர்களுடையவும் ஸித்தாந்தம்.

(11) ஏகதேச அத்யயந விதியிருப்பதாக பூர்வோத்ர மீமாம்ஸா க்ரந்தகாரர்கள் ஒருவரும் சொல்லவில்லை.

(12) விஷயவாக்யதீபிகை என்னும் கிரந்தத்தில் எடுக்கப்பட்ட விஷயங்களை மட்டுமே அத்யயநம் செய்து ப்ரம்ம விசாரம் செய்யலாம். அல்லது ஆசாரியன் ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவித்த பிறகு, சிஷ்யன் அநுச்சாரணம் செய்வதால் தனியாக அத்யயநம் வேண்டியதில்லை.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ப்ரம்ம விசாரம் ராகப்ராப்தமென்றும், சாப்பிடாமல்போனால் தேக புஷ்டியில்லாததுபோல் விசாரம் செய்யாதபோனால் புத்தி வ்ருத்தி ஏற்படாதென்பதே '[illegible]' என்கிற ச்ருதிக்கு தாத்பர்யமென்றும் ஆசார்யர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ப்ரம்ம விசாரம் செய்யவேண்டிய நிர்ப்பந்தமில்லை. ஆகைபால்தான் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் வெகு சிலரே செய்கிறார்கள். ப்ரம்ம விசாரம் செய்யாதவர்களுக்கு உபநிஷத்தின் அத்யயனமும் வேண்டியதில்லை என்று ஏற்படுவதால் ஸ்வசாகாத்யயநம் அவச்யமன்று என்று ஏற்பட்டது. இப்படி நித்யமான ஸ்வசாகாத்யயனம் வேண்டியதில்லை என்றால் மற்ற நித்யநைமித்திகங்கள் அவசியம் அநுஷ்டிக்க வேணுமா? நித்யமே அனுவச்யமானால் அநிஷித்த காம்யங்களான தேவாலயத்தில் பகவத்ஸேவை, வேதபாராயணம், திவ்ய ப்ரபந்த பாராயணம், வேதாந்த காலக்ஷேபம் ப்ரவசனம் முதலியது அவச்யமா? ஸ்ரீவைஷ்ணவனுக்கு இனி அவச்யகர்தவ்யம் என்ன வென்பதை வித்வான்கள் வ்யவஸ்தை செய்துவிட்டால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும்.

# சௌந்தர்யம் என்பது யாது?

[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்]

சென்ற சஞ்சிகையில் 'சௌந்தர்ய கலாசாஸ்திரம்' என்பதைப்பற்றி பொதுவாய் எழுதியிருந்தேன். அதில் சாஸ்திரம் என்றால் என்ன, கலை என்பது யாது என்று விசாரித்து, மற்ற சாஸ்திரங்களின் சமூகத்தில் சௌந்தர்ய கலா சாஸ்திரத்தின் ஸ்தானத்தைக் குறித்து விவரித்திருக்கிறேன். மேற்சொன்ன கலாசாஸ்திரம் சௌந்தர்யத்தை பொறுத்ததாகையாலே, சௌந்தர்யம் என்பது யாதென்று முதலில் கண்டறிவது அவசியமாகிறது. பூலோகத்தில் சௌந்தர்ய முள்ளவை, இவை இவையென்று ப்ரக்ருதியில் அநேக வஸ்துக்களையும் காக்ஷிகளையும் எல்லோரும் தாங்களே தெரிந்துகொண்டிராவிட்டாலும், சொன்னபிறகாவது ஒப்புக் கொள்ளக்கூடியவை. அவைகளில் அநேகம் முன் சஞ்சிகையில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் சௌந்தர்யமுள்ளவைகளென்று அநேகராலும் ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும் அவைகளில் ஒவ்வொன்றும் எந்தக் காரணம்பற்றி சௌந்தர்யமுள்ளதென்று சொல்லப்படுவதற்கு காரணம் கேட்போமாகில், அதற்கு சரியாயும் திருப்தியாயுமான காரணம் சொல்வது கஷ்டம்.

தாமரைப் பூவை ஏன் அழகானதென்று சொல்லுகிறோம்? எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது? என்று கேட்போமாகில், அநேகர் அது அழகாயிருப்பதால் அழகாயிருக்கிறதென்று சொல்லுகிறோமென்பார்கள். மற்றும் சிலர், அதைப் பார்த்தால் நமக்கு ஒரு ஆநந்தமுண்டாகிறதாகையால் அதை அழகாயிருக்கிறதென்று சொல்லுகிறோமென்பார்கள். ஆனாலோ இவ்விரு திறத்தாரும் அழகு அல்லது சௌந்தர்யமெனப்படுவதின் நிஜமான தத்துவத்தை சொல்பவர்களல்ல. அழகாயிருப்பதே அழகென்றால், அது வேறு பதங்களால் குறித்து விவரிக்க முடியாதது. அது சொல்லி தெரிந்துகொள்வதல்ல. அது ஓர் அனுபவமேயாகையால் அந்த விஜாதீயமான குணத்தை பாஷையினால் தெரியப்படுத்த முடியாது என்று அர்த்தமாகும். அழகு என்பது ஆநந்த முண்டாக்குவது என்றால் அதனாலுண்டாகும் காரியத்தைத் தெரிவித்ததாகுமேயன்றி அதனுடைய தத்வத்தன்மையை நிர்த்தாரணம் செய்ததாகாது.

பதங்களால் அழகின் தன்மையை, தத்வத்தை, விவரித்துக்காட்ட முடியாதென்பதில் ஒரு ஸ்வாரஸ்ய ரகஸ்யம் உண்டு. அதாவது அழ



கென்பது ஒரு ப்ரத்யேகமானதும், மனுஷ்யனுடைய மனஸ்ஸுக்கு வேறுபட்டதாயும், சாபேக்ஷம் இல்லாததுமான குணமன்று. அழகாயிருக்கிறதென்றால், ஒருவனுடைய கண்ணுக்கும் மனஸ்ஸுக்கும் அழகாகத் தோன்றுவதேயாகும். ஒருவன் அழகென்று கொண்டாடும் ஸ்திரீயை மற்றொருவன் குரூபியென்று கருதலாம். ஒருவனுக்கு ஒரு பாட்டு ரொம்ப பிடித்திருக்கலாம். மற்றொருவனுக்கு அதே பாட்டு கர்ணகடூரமாயிருக்கக்கூடும். அவ்விதமே ஒரு சித்திரப் படத்தைக்கண்டு ஒருவன் அத்யாச்சரியப்படக்கூடும். மற்றொருவனுக்கு அது ஒரு வர்ணக் குவியலாகத்தான் தென்படக்கூடும். இவையாவெல்லாம் நாம் நிர்த்தாரணம் செய்ய வேண்டுவது யாதெனில், அழகென்பது ஒரு வஸ்துவினுடையவோ, அல்லது ஸ்திதியினுடையவோ குணமாக நாம் விவகரித்தபோதிலும் அது மனுஷ்யனுடைய மனவில் அவ்வித அநுபவத்தை உண்டாக்கும்பொழுதே அது அழகெனப்படும். ஆதலாலே அழகென்பது யாவும் மனிதர்களுடைய மனஸை சாபேக்ஷமாக உடையதாகும்.

அதுவுமன்றி, இந்த சாஸ்திரம் மனிதர்களுடைய மனவில் உண்டாகும் ஆநந்தத்தைப் பற்றிய சாஸ்திரமென்று முன்னாலேயே தெரிவித்திருக்கிறோம். ஆதலாலும் அழகென்பது மனுஷ்யனுடைய இந்திரியங்கள் மனஸு முதலானவைகளுக்கு அப்புறப்பட்டதன்று. தனியே ஸ்வதந்திரமாயிருக்கும் குணமென்று விவகரிப்பது அசாத்தியம். ஆதலால் சௌந்தர்யமென்பதை நாம் குணவிசேஷமாக விவரித்தபோதிலும் அது நிஜமாய் மநுஷ்யனுடைய மனதால் அழகென்று அனுபவிக்கப்படும் அந்த சேர்க்கையின் ஸ்திதியையே குறித்ததாகும்.

அப்படியாயினும் மனுஷ்யனுடைய இந்திரியங்களும் மனஸும் சௌந்தர்யானுபவத்திற்கு இன்றியமையாத காரணமாக ஏற்படினும் அவை போதுமான காரணமாக ஏற்படாது, ஏனெனில் வெளிப்புறத்துள்ளதையே கண்டு கேட்டு ஒருவன் சௌந்தர்ய ரஸானுபவம் பெறுகிறான். அவனுடைய மனதிலுண்டான யோசனையின் அழகையே கண்டு அவன் ஆநந்தப்படும் காலத்திலும், தான் வேறு, யோஜனை வேறு என்று அப்புறம் வைத்தே, வெளிப்புறத் துள்ளதுபோலே பாவித்து ஆநந்திக்கிறான். ஆதலால் சௌந்தர்யம் என்பது ஒரு ரஸானுபவம், அதாவது மனுஷ்யனுடைய மனதில், ஆனால் அந்த ரஸானுபவத்திற்கு பஹிர் பூதமான காரணம் அவசியம். ஏனெனில் சௌந்தர்யம் என்னும் குணமானது அந்த பஹிர் பூதமான வஸ்துவினுடையதாகவே ஆரோபணம் செய்யப்படுகிறது. சூர்யாஸ்தமனத்தின் அழகு கண்ணில்லாத குருடனுக்கு உண்டாகாது. எப்பொழுதும் மூக்குக்கு சிறிது தூரம் முன்

னாலேயே பார்த்துக்கொண்டு, கண்களை ஆகாசத்தைப் பார்க்க செலுத்தாத மூடனுக்கும் உண்டாகாது. சரி, சூர்யாஸ்தமனமாய் விட்டது. இனிமேல் வீட்டுக்குப் போகவேண்டும், படுக்கப் போகவேண்டும் என்கிற ஆவலே யதிகரித்து, சூர்யாஸ்தமனத்தின் அழகேயின்னதென்று எப்பொழுதும் அனுபவியாத மிருகப்ராயமான மனுஷ்யனுக்கும் உண்டாகாது. இவ்விதமெல்லாம் இருப்பினும் சூர்யாஸ்தமனம் என்பது ஒன்று சம்பவிக்கிற காலத்தில் தானே சௌந்தர்ய ரஸானுபவம் கிடைக்கக் கூடும். ஆதலால் இதனால் நாம் அறியவேண்டுவது யாதெனில், சௌந்தர்ய ரஸானுபவத்திற்கு அனுபவிக்கும் கர்த்தாவும் அனுபவிப்பதற்கு ஒரு வஸ்து, அல்லது ஸ்திதி விசேஷமும், இவ்விரண்டும் இன்றியமையாத ஆவச்யகங்களாகும். இதனால் பின்னும் ஏற்படுவது யாதெனில், அழகு வேறு, அதைப் பார்க்கும் மனிதன் வேறு என்கிற த்வைத வேதாந்தம் சரியல்ல. சௌந்தர்ய ரஸானுபவம் மனதையே பொறுத்தது. மனுஷ்ய புத்தியினாலேயே வஸ்துக்களில் குணாரோபணம் செய்யப்படுகிறது. அல்லது வஸ்துக்களில் அந்த குணம் இல்லாமலேயே மனஸு தன்னிடத்தில் ஒரு வியாமோகத்தை உண்டாக்கிக் கொள்ளுகிறது, என்று இவ்விதமாயெல்லாம் சொல்லும் அத்வைத வேதாந்தமும் சரியல்ல. ஆனாலோ ஒன்றில்லாமல் மற்றொன்றிருக்க முடியாது. இரண்டும் ஒரே அங்கிக்கு அங்கங்கள் போலும் என்கிற விசிஷ்டாத்வைதமே ஸத்யமாகும். இதைத் தான் நம்மவர்கள் ஆத்ம பரமாத்மா விஷயத்தில் சாரீரக சாஸ்திர மென்பர். அவ்விதமே நாமும் ப்ரக்ருத விஷயமான சௌந்தர்ய ரஸானுபவத்திற்கு அப்புறத்துள்ள வஸ்து, ஸ்திதி விசேஷங்கள் சரீரமாயும், கர்த்தாவின் மனஸு ஆத்மாவாயும் ஸித்தாந்தம் செய்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் உண்மையையும் ஒருவாறு ஸ்தாபிக்கலாமென்று தோன்றுகிறது.

---

ஸ்ரீ:

# ஸ்ரீவால்மீகி ப்ரச்னத்தில் குணவத்சப்தார்த்தம்

[ஸ்ரீ உப. டி சுந்தராசாரி-ஸ்வாமி

குணங்கள் பல: அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்குத்தான், ஒரு காலத்தில், ஒரு தேசத்தில், விசேஷ மஹிமை உண்டாகிறது. அந்நாட்டில், அவ்வேளையில், 'குணம்' என்று சொல்லிய மாத்திரத்திலேயே, அந்த ஒன்றுதான் யாவர் மனத்திலும் உதயமாகின்றது. இந்நாளில், இவ்விந்தியாவில், அந்நியர் ஆளுகையிலிருந்து மீளும் விருப்பமே, யாவரும் கொண்டாடும் முக்கிய குணமாகும். அதை விசேஷித்து தனக்கோர் விருதமெனக் கொண்டவரை, மகாத்மா என்று அழைக்கிறார்கள். ஆனால் இத்தகைய குணங்கள் கேவலம் காலாத்மகத்தை (Time-spirit) பின்பற்றி ஏற்படும் பொழுது, அவற்றிற்குக் குணத்வமே நியதமானதல்ல. அவற்றின் மகிமை காலம், தேசம், வியக்தி முதலியவற்றால் பரிச்சேதிக்கப்பட்டு மத்தாப்பு வெளிச்சமெனத் தோன்றி மறைந்து விடுகின்றது. ஸ்ரீ வால்மீகி ஸ்ரீ நாரதரைப்பார்த்து "யார் இக்காலத்தில் இவ்வுலகில் குணவான்"? என்று கேட்டபோது, அக்கால தேச இயல்புக்குத் தக்கவாறு பெருமை பெற்ற குணமோ, அப்படி அல்ல. அது பகவதாத்மத்வத்தில் (Divine spirit) ப்ரதிஷ்டை பெற்றதாகையால், சாச்வதமானது, சர்வலோகங்களிலேயும், சர்வ காலங்களிலேயும், சர்வமதாபிமானி ஜனங்களாலும், ஈசுவரத்தன்மைக்கு இன்றியமையாததென போற்றப்படுவதாகும். கால தேச வியக்திகளுக்கு அந்த குணவிசேஷத்தினால் ஓர் பரிஷ்காரம் ஏற்படுமே தவிர, அதை அவைகள் ஒரு விதத்திலும் பரிச்சேதிக்கக் கூடியவை அல்ல. வால்மீகியின் ப்ரச்னகாலத்தில், உலகம் யாவும் இராக்ஷஸாக்ராந்தமாய்க் கிடந்தது. ராக்ஷஸர்கள் என்றால் தன்னை காப்பாற்றி கொள்வதிலேயே முயற்சியுடையவர்கள் என்று பொருள்.

ரக்ஷை கேவலம் ஸ்வவிஷயமாகும்போது அதிலிருந்து ஜனிப்பது பாஹிம்ஸை. இதற்குப் ப்ரதிபடமாயுள்ள தன்மையான 'பிறரைக் காப்பாற்றல்' என்பதே, அப்போதுள்ள இயல்புக்குத் தக்கவாறு, 'குணம்' என்பதாகும். இக் குணத்தின் உத்தம ரூபங்களைத்தான், 'சரணாகத ஸம்ரக்ஷணம்', 'ப்ரபன்ன பரணம்', எனப் பல பெயரிட்டு அழைக்கிறோம். அத்தகைய தன்மையை (एतत् व्रतं मम) தனக்கோர் விரதமெனக் கொண்டவர் எவர்' என்பதைத்தான் गुणवान् कः என்று வால்மீகி வினவுகிறார். ஆகவே இங்கு குண சப்தத்தால் விவக்ஷிக்கப்படுவது இந்த சரணாகத ஸம்ரக்ஷணம் என்பதேதான். இந்த குணத்திற்குரிய அங்கங்களாகவேதான் வீர்யமுடைமை, தர்மம் அறிதல் முதலிய யாவும், கேட்கப்படுகின்றன. இவ்விதம் அங்கியாயுள்ளதும், குண சப்தத்திற்கு இங்கு முக்கிய வாச்யமாய் நிற்பதுமான, சரணாகத ஸம்ரக்ஷணம் என்பது, தனக்குத் தக்க

தோர் அங்கங்களான வீர்யாதிகளுடன், யாரிடத்தில் பரிபூர்த்தியை அடையுமோ அவர் நாராயணன் ஆனாலும் சரி நரன் ஆனாலும் சரி. அவருடைய கோபப்பிரசாதங்களுக்குத்தான் தேவர்களும் தாழ்ந்திருப்பார்கள். ஆனால் வால்மீகி பிரச்னத்தில் **ज्ञातुमेव विधं नरम्** என்று நரபக்ஷபாதம் இருப்பதில்ஒரு ஸ்வாரஸ்யம் இருக்கிறது. நாராயணனிடத்தில் விட அவர் அவதாரமான நரனிடத்தில் இக்குணம் மூர்த்திகரத்தை அடையும்போது அதற்கேற்படும் சௌலப்பியாதிசயத்தால் 'சர்வஜனாச்ரயார்ஹம்' என்றஒரு அசாதாரண மகிமை அதற்கு உண்டாகிறது. இதை நன்கறிந்த நாரதர் **मुनेवक्ष्यास्यहम् बुध्वा** என்று ஆரம்பித்து **रामोनाम जनैः श्रुतः** என்று பதில் உரைத்தார். அதாவது தான் ஆய்ந்தறிந்த சித்தாந்தத்திற்கு சாமான்ய ஜன சுருதியே பிரமாணம் என்பது அவர் கொண்ட கருத்து. ஸ்ரீ விபீஷணர் அடைக்கலம்புக வந்த சந்தர்ப்பத்தில் **राघवाय महात्मने सर्वलोक शरण्याय** என்று சொல்லியது இங்கு ஸ்மரிக்கத்தக்கது. எல்லா உலகங்களுக்கும் அபயமளிப்பதே மகாத்மா என்னும் உயர் பதத்தைச் சித்திக்கச் செய்யும் என்பது இதன் ஸாராம்சம். ஆனது பற்றியே காயத்ரி மந்திரத்தைக் கண்டவரான விச்வாமித்ர மஹரிஷியும் **अहम् वेद्मि महात्मानम् रामम्** என்று சித்தாந்தம் கூறினார். சர்வலோக சரண்யனை ஸீதாபதியைத் தவிர மற்றவரிடத்தில் 'மஹாத்மா' என்ற சப்தத்தைப் பிரயோகிக்கும்போது அந்தச் சப்தம் கேவலம் உபசாரமாகவோ அல்லது விடம்பனமாகவோ தான் வர்த்திக்கக் கூடுவது. இந்த உண்மையை, முக்கியமாய் இக்காலத்தில், நாம் ஒருவரும் மறக்கலாகாது. மறப்போமானால் **करोत्य संस्कार हतामिवोक्ति** என்றபடி சொல்லுக்குள்ள அழகையே அழிப்பவர்களாவோம். இம்மகாத்மாவை அக்காலத்தில் சர்வப்ரஜைகளும் **रामो रामो रामः** என்று வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து அவர்கள் வசித்த தேசத்தை மட்டும் அல்ல; ஜகத்தையே ராம மயமாக்கி விட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே தேசத்தில் வசிப்பவர்களும் அம்மஹாப் பிரஜைகளுடைய சந்ததிகளுமான நாமும் அதே பிரகாரம் வர்த்தித்தாலன்றி உள்ளபடி தேசத் தொண்டர்கள் ஆகமாட்டோம். இக்காலத்தில் எங்கும் பிரசங்கங்களில் விசேஷமாகக் கேட்கப்படுகிற அஹிம்ஸை என்பதும் அம்மகாத்மாவின் சம்மந்தாதிசயம் பெற்றாலொழிய நிலைபெறத்தக்கதல்ல. ஆனது பற்றியே தான் **राममेवानुपश्यन्तः नाभ्यहिंसन् परस्परम्** என்று மஹரிஷியும் ஏவகாரப்பிரயோகம் செய்திருப்பது, ஆனால் அம்மகாத்மா இக்காலத்தில் இல்லையே, நாம் அவரை வழிபடுவதெப்படி என்னலாம். அக்காலத்தில்போல இக்காலத்திலும் அவர் இருக்கிறார். ஆனால் அவர் இருக்கும் இடம் ஸ்ரீ காளிதாஸர் கூறியபடி ஸத்துக்களுடைய ஹ்ருதயம் **सतां मनः** ஸ்ரீ ராமாயணத்தை அனவரதம் சிரத்தையுடன் சேவித்தால் நம் மனத்திலும் அவர் உடனே ஒரு குறைவுமின்றி பிரசன்னமாகிறார். அப் அவரைச் சரணம் அடைவதில் நமக்கென்ன இடையூறு. ஆகையால் நாம் எல்லோரும் ஸ்ரீ விச்வாமித்ர சித்தாந்த சாரசர்வஸ்வரான மகாத்மாவையே சரணமடைந்து அவரால் ரக்ஷிக்கப்பட்டு குணவத் சப்தார்த்த ஸாக்ஷாத்கார ஸாம்ராஜ்யத்தைப் பெறுவோமாக.

---

श्रीः

श्रीमते रामानुजाय नमः ॥

# श्रीभगवद्रामानुजमुनिभिः विरचितः वेदान्तसारः ।

---

**मू—समस्त चिदचिद्वस्तु शरीरायाखिलात्मने ।**
**श्रीमते निर्मलानन्दो दन्वते विष्णवे नमः ॥**

(ப-ரை) ஸமஸ்த = ஸமஸ்தமான, சித் = அறிவுள்ளதும், அசித் = அறிவில்லாததுமான, வஸ்து = வஸ்துவை, சரீராய = தனக்குடலாகப்பெற்ற அகிலாத்மனே = உலகனைத்தும் தானேயாகி நிற்கிற, ஸ்ரீமதே = என்றைக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மியை விட்டுப் பிரியாத, நிர்மல = தோஷ ஸம்பந்தமில்லாத, ஆநந்த = ஆநந்தத்திற்கு, உதந்வதே = கடல்போல் இருப்பிடமான, விஷ்ணவே = விஷ்ணுவின் பொருட்டு, நம: = நமஸ்காரம் செய்கிறேன்.

**मू—परमपुरुष प्रसादात् वेदान्तसारः उद्ध्रियते ।**

பரமபுருஷனுடைய அநுக்ரஹத்தாலே, வேதாந்தங்களில் இருந்து ஸாரம் எடுத்து உரைக்கப்படுகிறது.

**मू—ओम् । अथातो ब्रह्मजिज्ञासा १. १. १.**

अत्रायमथशब्द आनन्तर्ये वर्तते । अतश्शब्द शिरस्कत्वात् ; अतश्शब्दश्च पूर्ववृत्तस्य हेतुभावे ; पूर्ववृत्तश्च कर्मज्ञानमिति विज्ञायते । आरिप्सितस्य ब्रह्मज्ञानस्य वेदार्थविचारैकदेशत्वात् , अधीत वेदस्य हि पुरुषस्य कर्मप्रतिपादनोपक्रमत्वात् । वेदानां कर्मविचारः प्रथमं कार्यः इति " अथातो धर्मजिज्ञासा " इत्युक्तम् । कर्मणांच प्रकृतिविकृतिरूपाणां धर्मार्थकामरूप पुरुषार्थसाधनतानिश्चयः " प्रभुत्वादार्त्विज्यम् " इत्यन्तेन सूत्रकलापेन संकर्षणेन कृतः ॥

இந்த முதல் சூத்திரத்தில், **अथ** என்னும் பதம் பிறகு என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. **अतः** என்னும் சொல் மேல் வருவதால் **अतः** என்னும் சொல், முன் நடந்த செய்தியை காரணமாகக் காட்டுகிறது. கர்மங்

களின் விசாரம் முன் நடந்ததாகவும் தெரியவருகிறது. இப்போது தொடங்கியிருக்கும் ப்ரும்ம விசாரம் வேதார்த்த விசாரத்தின் ஒரு பாகமாதலால் வேதங்களை ஓதினவன் முதன்முதல் கர்ம விசாரத்தையே தொடங்கினதைக் கண்டிருப்பதால், வேதங்களின் கர்மபாகத்தைப்பற்றி விசாரிப்பதே முதலில் செய்யத்தக்கது எனக்கருதி, பூர்வ மீமாம்ஸையில் "अथातो धर्मजिज्ञासा" என்று கூறப்பட்டது. ஸங்கர்ஷணன் என்னும் ரிஷி "प्रभुत्वादार्त्विज्यम्" என்று முடிகிற பூர்வ மீமாம்ஸா ஸூத்திரத் தொகுதியைக்கொண்டு, ப்ரக்ருதி என்னும், விக்ருதி என்னும், இருவகையான கர்மங்கள் எல்லாம், தர்மம், அர்த்தம், காமம் என்ற புருஷார்த்தங்களுக்கு ஸாதநம் என்பதை நிச்சயித்திருக்கிறார்.

एवं वेदस्यार्थपरत्वे, कर्मणाञ्च तदर्थत्वे, तेषाञ्च केवलानां त्रिवर्गफलत्वे निश्चिते सति, वेदैकदेशभूत वेदान्तभागे, केवलकर्मणामल्पास्थिरफलत्वं, ब्रह्मज्ञानस्य च अनन्तस्थिरफलत्वम् आपाततो दृष्ट्वा अनन्तरं मुमुक्षोः अवधारित परिनिष्पन्नवस्तुबोध जननशब्दशक्तेः पुरुषस्य ब्रह्मबुभुत्सा जायते इति "अथातो ब्रह्मजिज्ञासा" इति कर्मविचारानन्तरं तत एव हेतोः ब्रह्मविचारः कर्तव्यः इत्युक्तं भवति ।

இப்படி, வேதங்கள் அர்த்தத்தை போதிக்கவேண்டியது அவச்யமாகையாலும், அவ்வேதங்களால் அறிவிக்கப்பட்டவை கர்மங்கள் ஆகையாலும், பலம், ஸங்கம், கர்த்ருத்வம், இம்மூன்றையும் விடுகை என்ற ஸாத்விக த்யாக மன்றியில் செய்யப்பட்ட கர்மங்களால் தர்மம், அர்த்தம், காமம், என்ற த்ரிவர்கமே லபிக்கும் என்று நிச்சயிக்கப்பட்டிருப்பதாலும் அந்த வேதங்களின் ஏகதேசமாகிய உபநிஷத்துக்களால், ப்ரும்மஞானம் இல்லாத கேவல கர்மம், மிகச் சிறியதும், நிலையற்றதுமான பயனைத்தரும் என்றும், ப்ரும்மஞானம் அளவற்றதும் அழிவற்றதுமான பயனைத்தரும் என்றும் உள் ஊன்றாத உணர்வால் கண்டறிந்து, அதன்மேல் இன்னின்ன சொல்லுக்கு இப்படி இப்படி பொருள் கொள்ளவேணும் என்று தீர்மானிக்க வல்லமை வாய்ந்த புத்திகூர்மையுள்ளவனும், மோக்ஷத்தைப் பெற விருப்பமுள்ளவனுமான ஒரு புருடனுக்கு, ப்ரும்மத்தை அறியவேணும் என்ற எண்ணம் உண்டாகும் என்னும் பொருளை மனதில் வைத்துக்கொண்டு 'அதாதோ ப்ரும்ம ஜிஜ்ஞாஸா' என்று, கர்மங்களை விசா



ரித்த பிறகு அதே காரணம் கொண்டு, ப்ரும்ம விசாரத்தைச் செய்ய வேணும் என்று சொல்லப்பட்டதாகிறது.

मू——तदिदमाह श्रुतिः "परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात् । नास्त्यकृतः कृतेन तद्विज्ञानार्थं सगुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठं तस्मै सविद्वानुपसन्नाय सम्यक् प्रशान्तचित्ताय शमान्विताय येनाक्षरं पुरुषं वेदसत्यं प्रोवाच तां तत्वतो ब्रह्म विद्याम्" इति । ब्राह्मणः=वेदाभ्यासरतः कर्मचितान्=कर्मणा संपादितान्, लोकान्, आराध्यक्षयिष्णुत्वेन क्षयस्वभावान् कर्ममीमांसया परीक्ष्य, अकृतः नित्यः परमपुरुषः कृतेन=कर्मणा, न संपाद्य इति यो निर्वेद मायात्, सः, तद्विज्ञानार्थं गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियम् । वेदान्तवेदिनम् । ब्रह्मनिष्ठम् साक्षात्कृतपरमपुरुषस्वरूपम् । सः गुरुः सम्यगुपसन्नाय तस्मै येन विद्याविशेषेण अक्षरं सत्यं परमपुरुषं विद्यात्, तां ब्रह्मविद्यां प्रोवाच प्रब्रूयादित्यर्थः- सगुरु मेवाभिगच्छेत् तस्मै सविद्वान् प्रोवाच इत्यन्वयात्, अप्राप्तत्वाच्च, विधावपि लिटो विधानात्, "छन्दसि लुङ्लङ्लिटः" इति ।

**इति जिज्ञासाधिकरणम् ।**

——————

மேற்சொன்ன விஷயத்தையே சுருதி கூறுகிறது. "பரீக்ஷ்யலோகான்" என்று தொடங்கி, "ப்ரும்ம வித்யாம்" என்றிறுதியால் ப்ராம்மணன் என்னும் சொல்லுக்கு வேதாப்யாஸத்தில் ஊற்றமுடையவன் என்று பொருள். 'கர்மசிதாந்=கர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட, லோகாந்=சுவர்க்கம் முதலான உலகங்களை, பரீக்ஷ்ய=கர்மங்களால் ஆராதிக்கப்படும் தேவர்கள் அழிவுற்றவராதலால், அக்கர்மங்களால் லபிக்கும் லோகங்களும் அழிவுற்றவை என்று கர்ம மீமாம்ஸையைக்கொண்டு நன்கு அறிந்து, "அக்ருத:=நித்யனை பரமபுருடன், க்ருதேந=கர்மத்தால், 'நஸம்

பாத்ய: = அடையத்தகுந்தவனல்லன். இதி = என்று 'யோநிர்வேதமாயாத்' எவன்ஒருவன் மன விசாரத்தை அடைகிறானோ, ஸ: = அவன் "தத்விஜ்ஞாநார்த்தம்" அந்த பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தை அறியும் பொருட்டு, 'குருமேவ அபிகச்சேத்' ஆசார்யனை ஆச்ரயிக்கவே வேணும். 'ஸமித்பாணி:' கூப்பின கைகளுடையவனாய், 'ச்ரோத்ரியம்' அவ்வாசிரியர் வேதாந்த சாஸ்திரத்தில் பூர்ணமான அறிவு வாய்ந்தவராகவேணும். 'ப்ரும்மநிஷ்டம்—ப்ரும்மத்தினிடம் நிஷ்டையை அடைந்திருக்கவேண்டும். அதாவது—ப்ரும்ம ஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷமாய் கண்டறிந்தவராயிருத்தல் வேண்டும். 'ஸகுரு:' அப்படிப்பட்ட குரு, 'ஸம்யக் உபஸந்நாய தஸ்மை'—சாஸ்திரத்தில் சொன்ன விதிப்படி வந்து ஆச்ரயித்த, அந்த சிஷ்யனுக்கு, 'யேந வித்யா விசேஷேண' எந்த வித்யா பாகத்தைக் கொண்டு, 'அக்ஷரம், ஸத்யம், பரமபுருஷம்' அழிவற்றவரும், உருவமாற்றமின்றி என்றைக்கும் ஏகரூபமாயிருப்பவருமான பரமபுருஷனை 'வித்யாத்' அறிந்துகொள்ளுவனோ, 'தாம் ப்ரும்ம வித்யாம்' அந்த ப்ரும்ம வித்யையை 'ப்ரோவாச' போதிக்கவேணும். 'இத்யர்த்த:' என்று பொருள். இங்கு 'ப்ரோவாச' என்பது இறந்த காலக்குறிப்பாயினும், விதியாகக் கூறுவதற்கு ந்யாயமுண்டு. முன் 'ஸகுருமேவாபிகச்சேத்' என்று விதியாகவே கூறி பின்னே 'தஸ்மை ஸவித்வாந் ப்ரோவாச' என்று ஒரே வாக்யமாய் சேர்ந்திருப்பதாலும், முன் ஏற்படாத பொருளைக் கூறுவதாலும், வியாகரண சாஸ்திரத்தில் விதியிலும்கூட வேதத்தில் 'லிட்' அதாவது இறந்த காலக்குறி வருமென்று சொல்லியிருப்பதாலும் இங்கு 'ப்ரோவாச' என்றதற்கு போதிக்கவேணும் என்று பொருள் சொன்னது யுக்தமாகும்.

ஜிஜ்ஞாஸாதிகரணம் முடிந்தது.

## जन्माद्यधिकरणम् ।

---

### सू—जन्माद्यस्य यतः (१. १. २.)

अस्य—विचित्र चिदचिन्मिश्रस्य, व्यवस्थित सुखदुःखोपभोगस्य, जगतः, जन्मस्थितिलयाः यतः, तत् ब्रह्मेति प्रतिपादयति श्रुतिरित्यर्थः "यतो वा इमानि भूतानि जायन्ते ··· तद्ब्रह्म" इति ।



ஜந்மாதி, அஸ்ய, யத:, ॥ அஸ்ய = விசித்திரமான சேதநா சேதநங்களோடு கலந்ததும், ஸுகம், துக்கம் இவைகளை அநுபவிப்பதில் வ்யவஸ்தை—அதாவது ஒரு ஒழுங்கான ஏற்பாடு செய்யப்பட்டதுமான, ஜகத := இவ்வுலகத்திற்கு, பிறப்பு, இருப்பு, இறப்பு இவை, யத: = எந்த பரமாத்மாவினிடமிருந்து உண்டாகின்றனவோ, 'தத் ப்ரும்ம' அதுவே ப்ரும்மம் 'இதி' என்று ச்ருதி := வேதமானது ப்ரதிபாதயதி = நிரூபணம் செய்கிறது. "யதோவை" எந்த பரமாத்மாவிடமிருந்து, 'இமாநி பூதாநி' இவ்வுலகங்கள் எல்லாம், "ஜாயந்தே" பிறக்கின்றனவோ என்று துடங்கி "தத்ப்ரும்மேதி" அதுவே ப்ரும்மம் என்று.

सूत्रे यतः इति हेतौ पञ्चमी । जनिस्थितिलयानां साधारणत्वात् । जनिहेतुत्वञ्च निमित्तोपादानरूपं विवक्षितम् ॥ यत इति हि श्रुतिः ॥ इह उभयविषया कथमिति चेत् "यतोवा इमानी" ति प्रसिद्धवन्निर्देशात् । प्रसिद्धेश्च उभयविषयत्वात् । "सदेवसोम्येदमग्र आसीत् । एक मेवाद्वितीयम् । तदैक्षत बहुस्यां प्रजायेय इति, तत्तेजोसृजत," इत्यत्र सदेव इदम् अग्रे एकमेव आसीत्, इति उपादानतां प्रतिपाद्य, अद्वितीयम् इति अधिष्ठात्रन्तर निवारणात् सच्छब्दवाच्यं ब्रह्मैव निमित्तमुपादानञ्चेति विज्ञायते । तथा "तदैक्षत बहुस्यां प्रजायेय" इत्यात्मन एव विचित्रस्थिरत्रसरूपेण बहुभवनं संकल्प्य, तथैव सृष्टिवचनाच्च । अतः श्रुतावपि यतः इति हेतौ पञ्चमो । अत्रैव, ब्रह्मणो जगन्निमित्तत्वमुपादानत्वञ्च प्रतिपादितम्, अर्थविरोधात् "अस्मान्मायीसृजते विश्वमेतत्" इति विशेषश्रुत्याचाक्षिप्य, "प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात्, अभिध्योपदेशाच्च, साक्षाच्चोभयाम्नानात्, आत्मकृतेः" इत्यादिभिः सूत्रैः परिहरिष्यते ॥

இந்த சூத்திரத்தில் யத: என்னும் பதத்தில் ஐந்தாம் வேற்றுமை காரணம் என்னும் பொருளைக் காட்டுகிறது. ஏனெனில் படைத்தல், இரக்ஷித்தல், அழித்தல் இம் மூன்றுக்கும் பொதுவாக சொல்லியிருப்பதால் வேறு பொருள் பொருந்தாது. உலகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு

எது காரணமாகிறதோ என்று அர்த்தம். இல்லாவிட்டால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஸம்பந்தத்தால் அந்வயிக்கவேண்டி வரும். அதில் ஜன்மத்திற்குக் காரணம் என்று சொல்லும்போது, நிமித்த காரணம், உபாதான காரணம் என்று இரண்டையும் கொள்ளவேணும். நிமித்த காரணமாவது ஒரு மண் குடத்தை உண்டாக்குவதில் குயவன் முதலானவர்களைப் போல் உண்டாக்கப்படும் வஸ்துவைக் காட்டிலும் எவ்விதத்திலும் தனிப்பட்டு நிற்கும் ஒரு காரணம். உபாதான காரணமாவது, குடம் உண்டாகுவதற்கு மண் காரணமாகுவதுபோல் உண்டாக்கப்படும் வஸ்துவின் முன் நிலை. இங்கு ஈச்வரன் உலகங்களை ஸ்ருஷ்டிக்கும்போது உபாதான காரணமாகவும், நிமித்த காரணமாகவும் நிற்கிறான் என்பது வேதாந்திகளின் அபிப்ராயம்.

ஆனால் இங்கே உபநிஷத்தில் ஐந்தாம் வேற்றுமையால் பொதுவான காரணம் சொல்லப்படுமேயன்றி, கீழ்ச் சொன்ன மாதிரி, நிமித்தம், உபாதானம் என்று பிரித்து இவ்விரண்டும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லையே என்று கேழ்க்கக்கூடும். அதற்கு ஸமாதானம்—இந்த ச்ருதியைக் கொண்டே இந்த வர்த்தம் கிடைப்பதில்லையானாலும், வேறு ச்ருதியாலே லபிக்கலாம். 'யதோவை' என்று ஏற்கனவே ப்ரசித்தமான விஷயத்தைச் சொல்லுவதுபோல் சொல்லியிருப்பதால் வேறு இடத்தில் சொன்ன க்ரமத்திற்கு அநுஸரணையாகவே இங்கு பொருள் கொள்ளவேணும். அதாவது—சாந்தோக்யோபநிஷத்தில் ஸத்வித்யை என்னும் ப்ரகரணத்தில் "ஸதேவ ஸோம்ய" என்று தொடங்கி ஆதி காலத்தில் அதாவது ஸ்ருஷ்டி காலத்திற்கு முன் இவ்வுலகம் பரமாத்ம ஸ்வரூபமாகவே இருந்தது. அது ஒன்றே இருந்தது—அத்தோடு இரண்டாவது வஸ்து ஒன்றும் இருந்ததில்லை. அந்த ஸத் என்னும் பரப்ருஹ்மம், நாநாவித உலக வடிவமாக ஆகுவேன் என்று ஸங்கல்பம் செய்தது. அதன்மேல் அக்நியை ஸ்ருஷ்டித்தது, என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ப்ருஹ்மம் ஜகத்துக்கு உபாதான காரணம் என்று தெளிவாய் உரைத்ததாகிறது. இதல்லாமல் "அத்விதீயம்" தன்னைப் போன்ற இரண்டாவது பொருள் இல்லாதது என்று சொல்லுவதால் ஜகத்துக்கு நிமித்த காரணமாகக் கருதக் கூடிய வேறு வஸ்து இல்லை என்றும் சொன்னதாகிறது. ஆகையால் இந்த ச்ருதி வாக்யத்தை அநுஸரித்து, "யதோவா இமாநி" என்ற விடத்தில் யத: என்னும் ஐந்தாம் வேற்றுமைக்கு ஹேது என்றே பொருள் கொள்ள வேணும்.

இது தவிர :—இந்த ப்ருஹ்ம ஸூத்திரத்திலும் ப்ருஹ்மம் ஒன்றே ஜகத்துக்கு நிமித்தகாரணமாகவும், உபாதான காரணமாகவும் இருப்பதை இரண்டு விதமான காரணங்களைக் கொண்டு ஆக்ஷேபித்து அதற்கு ஸமா



தானமும் சொல்லப்படப்போகிறது. அர்த்த விரோதம் என்பது ஒரு காரணம். அதாவது :— உலகத்தில் ப்ரத்யக்ஷமாய் காணப்படும் ரீதிக்கு விரோதமாயிருப்பது. குயவன், தட்டான், தச்சன். கருமான் முதலியவர் நிமித்தகாரணமாகவும், மண், பொன், மரம், இரும்பு முதலியன உபாதான காரணமாகவும் காணப்படுகின்றன.

அது போல் ஈச்வரன் நிமித்த காரணமாகவும் ப்ரக்ருதி உபாதான காரணமாகவும் இருப்பது ந்யாயமாகும் என்பது.

மற்றொரு ஆக்ஷேபம் ச்வேதாச்வதாரம் என்னும் உபநிஷத்தில் " अस्मान्मायी सृजते विश्वमेतत् " என்ற வாக்யம் இருக்கிறது. அஸ்மாத் = மாயை என்று சொல்லப்படுகிற ப்ரக்ருதியிலிருந்து, மாயீ = அந்த ப்ரக்ருதிக்கு இறைவனான ஈச்வரன், ஏதத்விச்வம் இவ்வுலகத்தை, ஸ்ருஜதே = ஸ்ருஷ்டிக்கிறான். என்று ஸந்தேகமின்றி, ஈச்வரன் நிமித்த காரணம் என்றும், ப்ரக்ருதி உபாதான காரணம் என்றும், கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இரண்டு காரணங்களும் வெவ்வேறு, ஒரு வஸ்துவல்ல, என்பது நன்கு விளங்கும் என்பது. இப்படி இரண்டு கேள்விகளுக்கும் ஸூத்திரகாரர் ஸமாதானம் சொல்லியிருக்கிறார். அதாவது—பரமாத்மாவினுடைய தத்துவத்தை விசாரிக்கும்போது உலக ந்யாயத்தை உதாஹரணமாகக் காட்டுவது உசிதமாகாது. அந்த ச்ருதியிலேயே உதாஹரணம் காட்டியிருப்பதை கவனிக்கவும். அதாவது—ச்வேதகெது என்ற ரிஷிகுமாரன் அத்யயநம் செய்யாமல் திரிந்துகொண்டிருந்தான். தகப்பனார் அவனைப்பார்த்து 'ஓ ச்வேதகேது' நம்முடைய குலத்தில் பிறந்தவன் அத்யயநம் செய்யாமல் ஆபாஸ ப்ராம்மணனாகை இருப்பது தகுதியல்ல என்று புத்தி கூறினார். அதைக் கேட்டு ச்வேதகேது, பன்னிரண்டாவது வயதில் வீட்டை விட்டுப் புறப்பட்டு இருபத்திநாலு வயதுவரையில் ஒரு ஆசார்யனிடத்தில் சென்று அத்யயநம் செய்து திரும்பி வந்தார். இவனுடைய தகப்பனார் நல்ல பருஹ்மவித் ஆகவிருக்க அவரை விட்டு தனது குமாரன் வேறு ஆசார்யனைத் தேடிச் சென்றது அவருக்கு இஷ்டமில்லை. ஆனாலும் புத்திரனுடைய ப்ரயத்தினத்தைத் தடுக்காமல் அநுமதி கொடுத்துவிட்டார். திரும்பி வரும்போது ச்வேதகேது, அதிக கர்வம் வாய்ந்து, விநயமில்லாதவனாய் இருப்பதைக் கண்டு அவனது தகப்பனார், "நான் ஒரு கேள்வி கேட்கிறேன் அதற்கு ஸமாதானம் கூறுக" என்று சொல்லி, எந்த ஒரு பொருளை அறிந்தால் மற்ற எல்லாப் பொருளும் அறிந்ததாக ஆகுமோ, அப்படிப்பட்ட பொருள் இன்னது என்று தெரிந்துகொண்டிருக்கிறாயா' என்றார். ச்வேதகேது இந்தக் கேள்வியை ஒப்புக்கொள்ளவில்லை. கேள்வியே தப்பானது அஸங்கதமானது என்றான். தகப்பனார் கேள்வி யுக்தமானது என்பதை நிரூபிப்பதற்

காக திருஷ்டாந்தம் கூறுகிறார். "புத்திரனே! குயவன் வீட்டு வாயிலில் மண் குவியல் இருப்பதும், அது சிறிது நேரத்தில் குடம் தோண்டி, மடக்கு முதலிய பல வஸ்துக்களாய் மாறியிருப்பதையும் ப்ரத்யக்ஷமாய் காண்கிறோமல்லவா? அதுபோல் இவ்வுலகத்திற்கு மூலகாரணம் பரமாத்மா. அதை அறிந்துவிட்டால் உலகங்கள் அனைத்தும் அறியப்பட்டதாகுமல்லவா?" என்றார். இது கேட்டு ச்வேதகேது "எங்கள் உபாத்தியாயருக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருக்குமானால் எனக்குச் சொல்லாமல் இருந்திருக்கமாட்டார்" என்று சொல்லி, நீங்களே "எனக்குச் சொல்லவேணும், என்று வணங்கிக் கேட்டான்.

அப்போது தகப்பனார் ஸத்வித்யையை புத்திரனுக்கு உபதேசிக்கிறார்.

இங்கே பரமாத்ம ஸ்வரூபத்திற்கு திருஷ்டாந்தம் சொல்லும்போது மண், பொன், இரும்பு இவற்றைக் காட்டுகிறார். ஆகையால் ப்ரும்மம் ஜகத்துக்கு உபாதாந காரணம் என்று நன்கு புலப்படுகிறது.

தைத்திரீயோபநிஷத்தில் ஆநந்தவல்லியில் அந்த பரமாத்மாவே, தனக்குத்தானே, பற்பலபொருட்களாக ஆகுவேன் என்று ஸங்கல்பம் செய்துகொண்டது. "பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" என்று கூறியிருப்பதாலும், தைத்திரீய ப்ராம்மணத்தில் இரண்டாவது ப்ரச்நம், எட்டாவது அநுவாகத்தில், உலகத்தைப்படைக்குகிற பரமாத்மாவுக்கு உபாதாநகாரணம் யாது, கருவிகள் எவை என்று உலகரீதி ப்ரகாரத்திற்கு கேள்வி கேட்டு, உத்தரம் சொல்லும் போது, தன்னை ஒழித்து மற்ற வஸ்துக்கள் எல்லாவற்றைக் காட்டிலும் நிகரற்று விளங்கும் பரமாத்மாவுக்கு ஸர்வசக்தி இருப்பது விரோதமாகாது. ப்ரும்மம் ஒன்றே உபாதாநகாரணமும் மற்ற உபகரணங்களுமாய் நிற்கும் என்று விளங்க உரைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தைத்திரீயோபநிஷத்தில் "ததாத்மாநம் ஸ்வயமகுருத" என்று பரமாத்மாவுக்கே ஸ்ருஷ்டியில் கர்மத்வம், கர்த்துருத்துவம், இரண்டும் ஸந்தேஹமறச்சொல்லப்பட்டது.

ननुच, सर्वज्ञं सर्वशक्ति सत्यसङ्कल्पं निरवद्यतया निरस्तसमस्तापुरुषार्थ गन्धं ब्रह्मैवात्मानं विचित्रचिदचिन्मिश्रं जगद्रूपमिदं सर्वमसृजतेति कथमुपपद्यते ?

நநுச—என்பது ஆக்ஷேபத்தைக் காட்டுகிறது. எல்லாவற்றையும் எப்போதும் அறிய வல்லமை வாய்ந்ததும், ஸர்வசக்தி அதாவது எல்லாம் செய்ய திறமை கொண்டதும், ஸத்யஸங்கல்பம் அதாவது தான் எண்ணின



க்ஷேமமான உபதேஶாத்ருத்யஜ்ஞானத்தைச் சொல்லுகிறது. ஶாஸ்த்ரஜ்ஞ ஸம்ப்ரதாயமென்றதால் உபதேஷ்டா வானவாசார்யன் ஶாஸ்த்ரஜ்ஞனாய் ஸம்ப்ரதாயாகத ஜ்ஞானவானாக வேண்டுமென்றதாகிறது. உபதேஷ்டா ஶாஸ்த்ரஜ்ஞனாகவேண்டுவது, தான் கலங்காமைக்கும், கலங்கின சிஷ்யாதிகளைத் தெளிவிக்கைக்காகவும். இத்தால் ஜ்ஞாதாவாயிருப்பவனுக்கே ஆசார்ய க்ருத்யத்தில் அதிகாரம் என்று திருவுள்ளம் தோன்றுகிறது. "ஶாஸ்த்ரம்" என்றது பரமாஸ்திகராயிருப்பார்க்கு இவ்வுபதேசம் ஒன்றுமே போதும் விசாரம் வேண்டாவென்றபடி. அபேக்ஷிதார்த்த நிர்ணாயகமாமென்றது கலங்குவாரைத் தெளிவிக்கும்படியான ஜ்ஞானமில்லாதே போனாலும் த்ருடவிஶ்வாஸத்தாலே தான் கலங்காமைக்கும கூட சில வசனங்கள் வேண்டியிருக்கையால் அதிலே நிர்ணயமுண்டாகக் குறையில்லை என்றபடி.

(அவ) ஆனாலும் "ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தேஶ்சலந காரணம். பஹுஶாகாஶ்ச ஶாஸ்த்ராணாம் ஜ்ஞாநதத்வம் ஸுதுர்லபம் ||" என்று சாஸ்திரத்தைக்கொண்டு நிர்ணயிக்குமிடத்தில் க்லேஶபாஹுள்யமாயும், புத்திசலந ஸம்பாவனை உண்டாகையாலும், பஹுக்களாயிருக்கையாலும் புத்திமானுக்கு முள்பட உபதேசமே அபேக்ஷிதார்த்த நிர்ணாயகமென்ற வேண்டியிருக்க, சக்தி யில்லாதார்க்குத் தான் "உபதேஶாத்தரிம் புத்வா" என்கிறது என்னக்கூடுமோ; அப்படியானால் சக்திமான், தானே ஓராசார்யனில்லாதே அர்த்த நிர்ணயம் பண்ணிக்கொள்ளலாம் என்னதாகிறதாகையாலே முதலிலே ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்மஶாஸ்த்ரார்த்த விஶேஷ நிர்ணயம் பண்ணவேணும் என்னுமிடம் உபநிஷத்துக்களிலும் உபப்ரும்மணங்களிலும் ப்ரசித்தமென்று நிர்ணயித்தது விரோதியாதோ வென்ன வருளிச்செய்கிறார்.

மூ—ஸம்ப்ரதாய ரஹிதமான ஶாஸ்த்ரத்தாலே அர்த்த நிர்ணயம் து:ஷ்கரம் ||

(வ்யா) ஶாஸ்த்ரம்—அத்யாத்ம சாஸ்திரம் என்றபடி.

"இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம்"
கதயாமி யதாபூர்வம் தக்ஷாத்யைர்முநிஸத்தமை: |
ப்ருஷ்ட: ப்ரோவாச பகவாநப்ஜயோநி: பிதாமஹ: ||
தைஶ்சோக்தம் புருகுத்ஸாய பூபுஜே நர்மதாதடே |
ஸாரஸ்வதாய தேநோக்தம் மம ஸாரஸ்வதேந ச" ||

இத்யாதிப்படியே முறை முறையே முன்னுள்ளார் பின்னுள்ளார்க்குச் சொன்ன ஸம்ப்ரதாய மொழிய வேறு வழியால் வந்த சாஸ்திரத்தால் என்றபடி. அர்த்தநிர்ணயோ து:ஷ்கரம்—அர்த்தோ ஸந்திக்தமாயோ, விபரீதமாயோ

முடியுமொழிய, ஸமீசீநமாய் முன்புள்ளார் சொல்லி வந்த அர்த்தங்களை நிர்ணயித்துச் சொல்லமுடியாதென்றபடி. இத்தால் சாஸ்திரம் வல்லார்க்களானாலும் ந்யாய ஸஞ்சாரம் பண்ணி பூர்வர்கள் நிர்ணயித்து வைத்திருக்கும் அர்த்தங்களையே சொல்லிவருகையாலே ஒரு க்லேசமின்றிக்கே அர்த்தம் ஸயுக்திகமாய் நிச்சலமாக ப்ரதிஷ்டிதமாயிருக்கக் குறையில்லை என்றதாகிறது. ஆகையாலேயிறே.

> கர்மயோகஸ்தபஸ்தீர்த்ததாநயஜ்ஞாதிஸேவநம் ।
> ஜ்ஞாநயோகோ ஜிதஸ்வாந்தை: பரிஸுத்தாத்மநிஷ்டிதி: ॥
> பக்தியோக: பரைகாந்த ப்ரீத்யா த்யாநாதிஷு ஸ்திதி: ।
> த்ரயாணாமபி யோகாநாம் த்ரிபிரந்யோந்ய ஸங்கம: ॥

என்று கர்ம ஜ்ஞாந பக்தியோக ஸ்வரூபங்களை பெரிய முதலியார் நிஷ்கர்ஷியாநிற்க, ஸ்ரீ பாஷ்யகாரரும் இத்தை அடியொற்றியே "தைவமேவாபரே யஜ்ஞம்" இத்யாதியான ஸ்ரீ பகவத் கீதா ச்லோகங்களுக்கு பாஷ்யமிட்டருள, இவற்றிற்கு நேரே விருத்தமாக, அர்த்த பஞ்சகத்திலே உபாயங்களில் கர்மயோகமாவது, யஜ்ஞ தாந தபோ த்யாந ஸந்த்யாவந்தந பஞ்சமஹா யஜ்ஞாக்நிஹோத்ர தீர்த்த யாத்ரா புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்ச்ர சாந்த்ராயண புண்யநதீ ஸ்நாந வ்ரத சாதுர்மாஸ்ய பலமூலாஸந ஸாஸ்த்ராப்யாஸ ஸமாராதந ஜபதபஸ்தர்ப்பணாதி கர்மாநுஷ்டாநத்தால் வந்த காய சோஷணத்தாலே பாபநாசம் பிறந்து, அத்தாலே இந்திரிய த்வாரா ப்ரஸரிக்கிற தர்ம பூதஜ்ஞாநத்திற்கு சப்தாதிகள் விஷயமல்லாமையாலே விஷயாபேக்ஷை பிறந்து, யமநியமாஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாநதாரணா ஸமாதிரூபமான அஷ்டாங்க யோகக்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும் ஜ்ஞாநத்திற்கு ஆத்மாவை விஷயமாக்குகை என்று பரிசுத்தாத்ம ஸ்திதி ரூபமான ஜ்ஞாநயோகத்தை கர்மயோகமென்றும், ஜ்ஞாநயோகமாவது, இப்படி யோகஜந்யமான ஜ்ஞாநத்துக்கு, ஹ்ருதய கமலம், ஆதித்ய மண்டலம் தொடக்கமான ஸ்தல விசேஷங்களில் எழுந்தருளி இருக்கிற ஸர்வேச்வரனை விஷயமாக்கி, அவ்விஷயம் தன்னை சங்க சக்ர கதாதரமாய், பீதாம்பர யுக்தமாய் கிரீடாதி நூபுராந்த திவ்யபூஷணாலங்க்ருதமாய் லக்ஷ்மீ ஸஹிதமாகவும் அநுபவித்து யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவ காலத்தைப் பெருக்கி, அநவரதபாவநா ரூபமாக்குகை என்று, பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைத் தொடாதே, கேவல பகவத் த்யாநத்தை ஜ்ஞாநயோகமாகவும், ஸ்வபுத்த்யா நிர்ணயித்துச் சொன்ன வசநங்களெல்லாம் ஆழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரருள்ளிட்ட பரமாசார்ய பரம்பரா ப்ராப்தங்களன்றுகையாலே ஸமீசீநார்த்தங்களன்ன வொன்றது.



(அவ) இப்படி துஷ்கரமென்னப் போமோ? இவன் தான் சாஸ்த்ரார்த்தங்களில் நிபுணனாயிருந்து வைத்து, கர்ம மீமாம்ஸா விசாரமும் பண்ணினவனாயிருந்து, ஸாவதாநமாக நிர்ணயிக்கத் தொடங்கினால் துஷ்கரமாம்படியென்னே? மற்ற, சாஸ்திரங்களில் யதாவஸ்தித வ்யுத்பத்தியிருக்கையாலே, இதனும் பாஷாந்தர மன்றுகையாலும், பூர்வ மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு விருத்த மன்றுகையாலும், ஸுகரமாயிருக்கத் தட்டென்? என்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஸுகரந்தானாகிலும் உபயுக்தமாகாது.

வ்யா—ஸுகரந் தானாகிலும் என்கையாலே துஷ்கரமென்றே திருவுள்ளம். "ஆசார்யவாந் புருஷோ வேத" என்றிறே. ஜ்ஞாநஸாத்ய ஷவஸாக, ஸ்வித் ஸுகரமானாலுமாகலாமென்றபடி. உபயுக்தமாகாது என்றது, இம்மாதிரியான விசாரத்திலும் தத்யோக்நமானவநுஷ்டாநத்திலும், அத்ருஷ்டாபாதகமாகாதென்றபடி. ஆகையாலேயிறே ஜ்ஞாநவிஜ்ஞாநரான ஸ்ரீ பாஷ்யகாரர் பெரிய நம்பி ஸ்ரீ பாதத்தில் ஆஸ்ரயிப்பதற்கு முன்னமே, தானே யாதவப்ரகாசன் கோஷ்டியிலே வேதாந்த வாக்யங்களுக்கு யதாவஸ்திதார்த்தங்களை வெளியிடச் செய்தேயுமாயிற்று பெரிய நம்பி முதலானார் ஸ்ரீ பாதத்திலாச்ரயித்தது. பெரிய முதலியாரும் ராஜ ஸதஸ்ஸிலே சாஸ்த்ரார்த்தங்களை வெளியிட்டு பாஹ்ய குத்ருஷ்டிகளை ஜயித்த பின்பாயிற்று மணக்கால் நம்பி ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்தது. இப்படி ஜ்ஞாநவிஜ்ஞாநிகளுக்கும் ஆசார்ய ஸமாச்ரயணத்தாலே தானே சாஸ்த்ரார்த்த மறிகை ஆவச்யகமானால் நம்போலிகளான மிதப்ரஜ்ஞருக்கு ஆசார்ய ஸமாச்ரயணமில்லாதே சாஸ்த்ரார்த்தங்களை நிர்ணயிக்கப்புக்கால் தெளிவு வாராதென்று கீழ் வாக்யத்தாலும் இவ்வாக்யத்தாலுமருளிச் செய்தாராயிற்று. இத்தால் "அபிகச்சேத்" என்றது, நியம விதியாய் நியமார்த்தமெல்லாருக்கும் ஆசார்யாபிகமநம் வேணுமென்னதாகிறது.

அவ—ஆனாலும் அத்யாத்ம சாஸ்த்ரமே ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலேயோ உபதேசமாத்திரத்திலேயோ அபேக்ஷிதார்த்த நிர்ணயகமென்னக் கூடுமோ? இவைகளிலே ஸ்வாத்மாநுஸந்தாந ஸ்வார்த்தகைங்கர்யார்த்தமேவ சரீர க்ஷேத்ரஜ்ஞ யநத்வ ப்ரவ்ருத்த்யாதிகளைச் சொல்லுகையாலே தத்தாத்பர்யத்ருஷ்டி சோக்ஷமான பாரார்த்த்ய கைங்கர்ய தத்ஜ்ஞாந ஸஹித ஸம்பாவ்ய வீக்ஷணாபேக்ஷிகளுக்கு அபேக்ஷிதார்த்தங்கள் இதிலே காணாமையாலே வேதாந்த சாஸ்த்ரஸித்தமாய் கேவல ஸம்ப்ரதாயத்தாலே தானே உத்தார்த்த ப்ரதிபாதகங்களான "அசாச்சோக்ஷ்யாமி மாச்சுச: ப்ரபத்ய" "அதோஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:" "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:"

ந்யாஸ இதி ப்ரோக்தா" இத்யாதிகளும் தத்த்வ ஹித புருஷார்த்தங்களான ரஹஸ்யத்ரயங்களும் அவச்யம் ஜ்ஞாதவ்யங்களாகையாலே உபதேச மாத்திரத்தாலேயன்றோ இவை ஜ்ஞாதவ்யங்களாகவேண்டுவது.

மேலும் பக்திப்ரபத்திகளுக்கு ஸாத்யவைலக்ஷண்யம் ப்ரதி ஸாதநத்வம் நிஷித்தமென்றன்றோ ஸம்பரதாயமிருப்பது. ஸாத்ய வைலக்ஷண்யத்திற்கு ஸாதநமென்றாலும் இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்கு புத்திரன் எழுத்து வாங்குமாப்போலே இருப்பதொன்றாயிற்று. அதாவது— உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய் தானறியாத தசையிலும் தன்னை ரக்ஷித்துக்கொண்டு போரும் தகப்பனுக்கு புத்திரனானவன் தானறிந்த தசையிலே என்னை நீ ரக்ஷிக்கவேணுமென்று எழுத்து வாங்கினால் இரண்டு தலைக்கு முண்டான உறவுக்கு கொத்தையாமாப்போலே ஸத்தா காரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க்கொண்டு போருகிற ஸர்வேச்வரனுக்கும் சேஷபூதனான இவனுக்குமுண்டான ஸம்பந்தத்திற்கு அவத்யகரம். அன்றிக்கே—ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்தி தானும் அபராத கோடியிலேயாய் க்ஷாபணம் பண்ணவேண்டும்படி நில்லாநின்றது. கெடுவாள் அந்ய பரையாய்ப் போந்த பார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே பர்த்ரு ஸகாசத்திலே நின்று என்னை அங்கீகரிக்க வேணும் என்று அபேக்ஷிக்குமாப்போலே இருப்பதொன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி, கிஞ்ச—அஷ்டாங்க ஷடங்கயோகாதிரிக்தமாய் ஸர்வதர்ம த்யாகாங்கமாய் ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபார நிவ்ருத்திரூபமான ப்ரபத்தி ஸர்வமோக்ஷ ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக அதிகாரி விசேஷணமென்றன்றோ ஸம்ப்ரதாயமென்னவருளிச் செய்கிறார்.

மூ—அத்யந்தாதீந்த்ரிய விஷயத்திலே சாஸ்த்ரைகஸமதிகம்யமல்லாத ஸம்ப்ரதாயமும் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ர விருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரமாத விப்ரலம்ப ஸம்பாவனையுண்டாகையால் பாஹ்ய துல்யமாகையாலே அவிச்வஸநீயம்.

வ்யா—அத்யந்தாதீந்த்ரிய விஷயத்திலே என்றது, சாஸ்த்ரமே கொண்டறியவேண்டும் விஷயத்திலே யென்றபடி. ஸாத்யஸாதநங்களும் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அறியவொண்ணாது. ஆகையாலே யிறே ஸூத்ரகாரரும் சாஸ்த்ரயோநித்வாதி கரணத்திலே இவற்றுக்கு சாஸ்த்ரமே ப்ரமாணமென்று நிர்ணயித்தது. அதீந்த்ரிய என்னாதே அத்யந்தாதீந்த்ரிய என்ன வேண்டிற்று ப்ரத்யக்ஷ யோக்யதையுண்டாயிருக்கச் செய்தே ஜநகதஃ விப்ரகர்ஷாதிகளும், தபஸா ஸித்தர்களும், யோகிகளும், சித்ரௌஷத்யாதிகளாலே சில ஸாக்ஷாத்காரரும் ப்ரத்யக்ஷமாகக் காண்கையாலே தத்வ்யாவ்ருத்த்யர்த்தம், ஆகையாலேயிறே "சாஸ்த்ர



ப்ரமாணம்"."ஸம்ப்ரதாய ப்ரமாணம் தேசகாலாதிகளால் வ்யவஸ்தித ... த்யாதி ப்ரோக்தாயி ... பஜதி" என்று சொன்னது.

சாஸ்த்ர ஸித்தமல்லாத ஸம்ப்ரதாயமென்றது கைங்கர்யத்திலே ஸாத்ய ஸாதநத்வத்தையும் தத்ஸாதநத்வத்தையும் இவை சாஸ்த்ர ஸித்தமல்லாதவை என்றுமிடம் இவற்றிற்கு மூலமாக இவர்கள் உதாஹரிக்கும் "ஸ்ருதி ... ஸாதநம் ப்ரபத்யே" இத்யாதி ப்ரமாணங்கள் வேதாந்த வாக்யங்களாகையாலே வேதாந்தோதித ஸாதநாதி ஸாதநத்திற்கு ஸாதநமாகமாட்டாமையாலே ஸித்தம் ... வேதாந்தங்களிலே ஸாதநதயா சொன்ன கைங்கர்யம் ஸாத்யமாகையாலும் கிங்கரவ்ருத்திஃ கைங்கர்யம் என்கிற வ்யுத்பத்தியாலே ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கை கைங்கர்யமாக சித்திக்கையால் இது ஸாத்ய ப்ரயோஜனமாய் ஆநுஷங்கிகமாக ஸாதநத்வம் கலசியிருக்கக் குறையில்லை இவன் வேதனனாகையாலே இல்லையென்ன வொண்ணாது. ஆகையாலேயிறே "காமம் ... " என்று பெருமாள் கைங்கர்யத்திலே ஆசைப்பட்டு பின் தொடர்ந்த இளையபெருமாள் "க்ருதாஞ்ஜலிஃ ஸர்வம் ... " என்றது. "மற்று நம் காமங்கள் மாற்று" என்ற வாண்டாளும் "உன் தன்னைப்பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம்" என்றருளிச் செய்தது. ஆகையாலே கைங்கர்யத்திலே ஸாத்யத்வஸாதநத்வ விதானமும், சாஸ்த்ரமூல மல்லாதது. கிஞ்ச—பக்தி ப்ரபத்திகள் இரண்டும் க்ரமேண ஸாத்யஸாதந கைங்கர்யங்களுக்கு ஸாதநங்கள் என்கைக்கு மொரு பிரமாணமும் கண்டிலோம்.

"ஸக்ருத்வா பக்தியோகாத்வா ப்ரபத்யா வா உபாஸநே ।
ப்ராப்யோஹம் நான்யயா ப்ராப்ய: கைங்கர்ய ... "

என்னுமிடத்திலே அதிகாரி பேதத்திலே "கைங்கர்ய ... " என்று பக்திப்ரபத்திகளுக்கு ஸாத்ய கைங்கர்ய ஸாதநத்வமே ... தமென்று தோற்றுகையாலே ஸாத்ய ஸாதந கைங்கர்யம் சாஸ்த்ர ஸித்தமன்று. ஷடங்காதிரிக்தமாய் நிரங்கமாகவொரு ப்ரபத்தி உண்டென்று மதிலும் சாஸ்திரமில்லை. ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ரமென்றது ப்ரபத்திக்கு உபாயத்வ போதகங்களான சாஸ்திரங்கள். இவை ஸம்ப்ரதிபந்நங்களானபடி எங்ஙனே என்னில் ப்ரபத்திக்கு உபாயத்வம் இல்லை என்று சொல்லுமிவர், ப்ரபத்திக்கு தேச நியமமும், கால நியமமும், ப்ரகார நியமமும், அதிகாரி நியமமும், பல நியமமும் இல்லை என்று, சொல்லிவைத்து இவற்றை அதிகாரி நியமாபாவ விவரண ப்ரகரணத்திலே அதிகாரி விவரிக்குமிடத்திலே

நியமமின்றிக்கே யொழிந்தபடி எங்ஙனே என்றில், தர்மபுத்திராதிகளும், திரௌபதியும், காகமும், காளீயனும், ஸ்ரீ கஜேந்த்ராழ்வானும், ஸ்ரீ விபீஷணாழ்வானும், பெருமாளும் இளையபெருமாள் தொடக்கமானவர்கள் சரணம் புகுருகையாலே அதிகாரி நியமமில்லை. என்று எழுதிவைத்து, இதற்கு மேலே ஷஷ்டிய ஶாஸ்த்ரோபதேச ப்ரகரணத்தில் தர்ம புத்திராதிகளுக்கு ஃபலம் ராஜ்யம். இத்யாதியாலே இவர்கள் பண்ணின ப்ரபத்திக்கு ஃபலாபிதாநத்தைச் சொல்லுகையாலே இதன் ஸாதநபாவத்தை இசைந்தார்கள் என்னத்தட்டில்லை. வ்யாக்யாதாவும் இது தன்னைப் பார்த்தால் பிதாவுக் கித்யாதி வாக்யாவதாரிகையிலே இப்ரபத்திக்கு தர்மபுத்திராதிகளும் என்று தொடங்கி கீழ் உக்தமான அதிகாரிகள் பக்கலிலே ஸாதநதயா நுஷ்டாநம் காண்கையாலும் கர்மஜ்ஞாந பக்திப்ரபத்தி என்று உபாயங்களோடு ஸஹபடிதமாய் போருகையாலும்,

"யஸ்ய ந கார்கார்த்தே ந நவஸாய்யம் ஸாதநாந்தரை: ।
உபேக்ஷணா பக்ஷோர்வ்யாநயோர்மந ந வ ஸக்தித: ॥
ப்ராப்யே வரம் யாச யதா நாவதாந்தே ய ஸ்ரீ: ।
தேந தேநா ப்யதே தத்தந் ந்யாஸே நைவ மஹாமுநே ॥
ஸாத்ரீய தேநைவ ஸாத்யதே ஸர்வேஷாத்மந: " ॥

என்றும் "இஷ்டம் ஶரணமஜ்ஞாநாம்" என்றும் இப்படி இத்தை ஶாஸ்த்ரங்கள் ஸாதநமாகச் சொல்லுகையாலும் என்றெழுதுகையாலே அநுஷ்டாநங்களிலும் ப்ரபத்தி விதாயக வாக்யங்களிலும் இதன் ஸாதநபாவத்தை இசைந்தார்களாயிற்று.

"ஸர்வவித்யுக்த ஸம்பாவனை யுண்டாகையாலே ஜதி "அங்க தபேஸ்ய ஷஷ்டாந்:" இத்யாதிகளும் ரஹஸ்யத்ரயமும் வேதாந்ததப்ரும்ஹணார்த்தங்களாயிருக்க, வேதாந்த பஹிர்பூதம் என்பது ஸர்வஜ்ஞக்ருதம் அல்லது விப்ரலம்பக்ருதமென்றுவது சொல்லவேண்டியிருக்கிறதன்றி வேறு சொல்லவொண்ணாது. கிஞ்ச "உபேக்ஷாதேவ ஶரணமஹம் ப்ரபத்யே" இத்யாதிகள் ஸாத்யோபாய விஷயமாயிருக்க ஸித்தோபாய விஷயமென்று சொல்லுவதும் ஸர்வவிப்ரலம்ப மூலமென்னத் தட்டில்லை. கிஞ்ச — "யஜ்ஜைவைஷ வ்ருணுதே" என்ற ச்ருதியை ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாத்யோபாயபரமாக பஹுஸம்ஹ்ருத்தோடு ஜிஜ்ஞாஸாதிகரணமுதல் விஸாதத்திலும், மற்றுமிந்த ச்ருதிப்ரஸக்தி வந்த பஹுஸூத்திர பாஷ்யங்களிலும் தீபஸார வேதார்த்த ஸங்க்ரஹ ஸ்ரீ கீதா பாஷ்யங்களிலும் வ்யாக்யானம் செய்தருளுகையாலே, தத்விருத்தார்த்தவர்ணனம் விப்ரலிப்ஸாமூலமேயாம். தத்பரவாதத்திலே—பக்தியாகிறது, "ஸத்யாகாநந்த்யா" "யமே



வைஷ வ்ருணுதே" "ஜதாம் ப்ரீதிபூர்வகம்" "ப்ரியோ ஹி ஜ்ஞாநிந:" என்கிறபடியே ஸதர்வ்ய விஷயம் ப்ரீதமாகையாலே தானும் மத்யமே ப்ரீயாத்வமாய் என்று ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளமான அர்த்தத்தையே இவரும் அங்கீகரித்து எழுதினாராயிற்று, கிஞ்ச—ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவித்து, ஈச்வர ஸ்வாதந்த்ரிய பயத்தாலே ப்ரபத்தி நழுவித்து என்றிப்படி நிஷ்கர்ஷித்தது "ஸத்யா வரயோ வாலி ப்ரபத்யா வா மஹாமுநே ப்ராப்யோஹம் நாந்யயா ப்ராப்யோ வர்ஷகோடியை: " என்று எம்பெருமான் ஸ்வப்ராப்திக்கென்று விதித்த உபாயங்களுக்குக் கொத்தை செல்லுமதாய் விப்ரலம்பகாயமாம். இவர்கள் தான் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும், அஸ்மதாதிகளையும் ப்ரபந்நரென்று கொண்டு அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள், ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர். பக்திபாரவஶ்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள் என்று எழுதியிருக்கையாலே ப்ரபத்தியை தூஷித்தால் ஆழ்வாரா சாரியர்கள் அநுஷ்டித்த ப்ரபத்தியும் தூஷிதமாகையாலே விப்ரலம்பகரென்னக் குறையில்லை. ஆழ்வார்கள் பல விடங்களிலும் ப்ரபத்தி பண்ணித்தும் அர்ச்சாவதாரத்திலே என்றும், ப்ரபத்திக்கு அபேக்ஷிதமான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்கு போலே ப்ரகாசிப்பதிங்கே என்னும் இப்படி ஸௌலப்யாதிகுண பூர்ணமான அர்ச்சாவதாரத்திலே ஆழ்வார்கள் ப்ரபத்தி பண்ணினதாக அங்கீகரித்த விவர் ஈச்வர ஸ்வாதந்த்ரிய பயத்தாலே ப்ரபத்தி நழுவித்து என்றால் ஆழ்வார் ப்ரபத்தியும் கூட நழுவினதாகக் கொள்ள வேண்டுகையாலே இவரை ஸர்வஜ்ஞரென்றுவது விப்ரலம்பகரென்றுவது சொல்லக் குறையென்? ஆசார்யனைத் தான் பற்றும் வேறு காலம் கொண்டு மோதிரமிடு மோபாதி உபாயாந்தரமே உத்தாரகமென்றிவர் பேற்றுக்குறுப்பாக அறுதியிட்டதும் பக்திப்ரபத்த்யந்தரங்களை இடையிடாதே உபாயாந்தரம் காரணமாகாதென்று "ஸத்யா வரயோ வாலி ப்ரபத்யா வா ப்ராப்ய:" "நாந்யயா ப்ராப்ய:" இத்யாதி ப்ரமாணங்களாலே கொள்ள வேண்டியதால் பக்திப்ரபத்திகளை கழித்து, உபாயாந்தரத்துக்கு உத்தாரகத்வம் சொன்னது ஶாஸ்த்ர மூலமல்லாததுமாய் விருத்தமுமான ஸம்ப்ரதாயமாம். அநுபல கைங்கர்யங்கள் ஜாயம் போலே ஸ்வத: ப்ராப்தமாய் "ப்ரஸந்நே த்வய்யேக ப்ரபதந நிதிப்யாஸந ஶதீ" என்று பக்திப்ரபத்திகள் ஸநாதநவாயஜநித நிக்ரஹ நிவ்ருத்திமாத்ரத்தில் உபக்ஷீணமாய் ஸதவஶ ப்ராயஶ்சித்தாதிவங்களாய் ஸ்வர்கத்திற்கு ஜ்யோதிஷ்டோமாதிகள் போல பேற்றுக்கு உபோத்காதயா உருப்பென்று ஶாஸ்த்ரங்கள் இசையாமையாலே ஃபலத்திற்கு ஸாக்ஷாத் ஸாதநமென்று கொள்ளாமலிருக்க, ரத்தினத்திற்குப் பல்கரைபோலேயும், ராஜ்யத்திற்கு

எலுமிச்சம்பழம் போலேயும் ஹஸ்தத்துக்கு ஸத்ருசமன்று என்றதும், அகிஞ்சநனுக்கே, பரஸமர்ப்பணத்தை சாஸ்திரம் விதிக்கையாலும், "க்ஷிபிநிஹித ஹரோஸி ஸோஹம் யத:" என்று ஆழ்வான் ஸ்வரக்ஷண பரத்தை ஸந்நித்ததாக வருளிச் செய்கையாலும் ஸமர்ப்பணீயமாகத் தன்னிடத்தில் பரமொன்றுண்டாயிருக்க, தான் அகிஞ்சநனாகையாலே தனக்குக் கொடுக்கலாவதொன்றில்லை என்றதும்,

"விவித்ராதேஹ ஸம்பத்திர் ஈச்வராய நிவேதிதும் ।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" ॥

"அந்நாள் நீ தந்த வாக்கை" என்கிறபடி அவன் கொடுத்த கரணகளேபரங்களைக்கொண்டு, "உத்திஷ்ட நா பவ" "சரணம் வ்ரஜ" என்று ஸர்வேச்வரன் தானே உபாயமாக வநுஷ்டிக்கச் சொன்ன பக்தி ப்ரபத்திகளுக்கு அவன் தந்ததைக்கொடுக்குமிடத்தில் அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம் என்று உபாயத்வநிஷேதம் பண்ணினதும் பரஸ்பர விரோதமாயிருக்கும்.

"சரணவரணவாச்யா யாச்ஞைவ வாத்ர ததீயகம் நகிஞ்சித் ।
ஸம்ருத்தி ததாய ஸாதநம் ததயவேஷாரோ ஹ்யுபாயாஸ்வ" ॥

என்று ஸாதநதயாநுஷ்டாநத்ரம் யாசைக்கு அவசரமென்றாயிற்று ஆழ்வானருளிச்செய்தது. தான் அகிஞ்சநனாகையாலே கொடுக்கலாவது ஒன்றில்லை என்று வசநபூஷணத்தில் சொன்னவிவர் தானே முமுக்ஷுப்படியிலே ப்ரபத்தியை உபாயமாக இசைந்து ஆதக்ஷத்ரு விசாரம் பண்ணி ப்ரபத்தி நிரூபணத்திலே உபாயத்தில் ஸ்வபரங்களையும் அவன் தலையிலே போகட்டு நிர்பரனாயிருக்கை என்று தனக்கான உபாய பரத்தை அவன் பக்கலிலே ஸமர்ப்பிப்பதாக இசைந்தெழுதினாராயிற்று. அப்படி ஆசார்யாபிமானத்தை ஸ்வதந்த்ரோபாயமாகச் சொன்னவிவர், முமுக்ஷுப்படியிலே—ஆசார்யாபிமானமாவது—இவை யொன்றுக்கும் சக்தனன்றிக்கே யிருப்பான் ஒருவனைக் குறித்து இவனுடைய இழவையும் இவனைப்பெற்றால் ஈச்வரனுக்குண்டான ப்ரீதியையும், அநுஸந்தித்து ஸ்தந்ய ப்ரஜைக்கு வ்யாதி உண்டானால் அதுதன் குறையாக நினைத்து ஔஷத ஸேவையைப்பண்ணும் மாதாவைப்போலே இவனுக்காகத்தான் உபாயாநுஷ்டாநம் பண்ணி ரக்ஷிக்கவல்ல பரம தயாளுவான மஹா பாகவதனபிமாநத்திலே யொதுங்கி, "வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டும்" என்று சொல்லுகிறபடியே ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் அவனிட்ட வழக்காக்குகை என்று எழுதி யிருக்கையாலே கேவலாசார்யாபிமானம் தனியே உபாயமன்றென்று இசைந்தாராயிற்று. இப்படி உபாய புருஷார்த்தங்களிலே சாஸ்திர மூலமில்லாத ஸம்பரதாயமும் ஸம்ப்ரதிபன்ன சாஸ்திரவிருத்தமான

158713

இளங்குழந்தை முதல் கிழவீறாக

*சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்*

# *ஆயுஷ்ய ரஸாயனம்*

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

**சுவையில் தேனினும் இனிது.**

**வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,**

*ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயாரிசெய்யப் பட்டது.*

*சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீகந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.*

*நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.*

**வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.**
**வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.**

*சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.*

**ஆர்யன் பார்மஸி,**
**11, ஆதியப்ப முதலித் தெரு,**
**வேப்பேரி, மதராஸ்**

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

**வைர நகையே.**

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள்



குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."

உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் **கம்பெனியாரே.**



SURAJMAL'S
The Jewellers
343 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.